இதோ ஒரு
சீதாபபிராட்டி

புலவை எஸ் ஆறுமுகம்

தொ.பேசி எண்: 8279765, 8230145
ஈஸ்வரி
வாடகை நூல் நிலையம்
250, அவ்வை சண்முகம் சாலை,
சென்னை - 600 086.

இதோ,
ஒரு
சீதாப்பிராட்டி!...

பூவை எஸ். ஆறுமுகம்

பொதிகைப் பதிப்பகம்
2, எட்டாவது டிரஸ்ட் குறுக்குத் தெரு,
சென்னை - 600 028.

முதற் பதிப்பு: அக்டோபர், 1977

(C) பூவை எஸ். ஆறுமுகம்
ஏலக்காய் வாரியம்
2, கன்னையா நாயுடு தெரு,
சென்னை - 600 017.

பொதிகை: தென்றல் 2.

விலை ரூ. 9.

அச்சிட்டோர்:
ஆஷா அச்சகம்,
சென்னை - 600 005.

பதிப்புரை

உலக நடையைத் திறந்த கண்களோடு காண்கிறவர்களுக்கு ஒவ்வொரு நிகழ்ச்சியும் தன் ஸ்வரூபத்தைக் காட்டும். ஒவ்வொரு பொருளும் அவனை நாடிப் பேசும்—அதன் நாடி அவன் ஒருவனிடம் மட்டுமே பேசும்.

அந்தப் பொருள்கள்—

சிகரங்கள் அடுக்கிய மலையாக இருந்தாலும் சரி;

கூழாங் கல்லாயினும் சரி;

குப்பை கூளமானாலும் சரி;

சமுதாயமாகச் சலித்தாலும்

சமயமாக ஜொலித்தாலும்

கனவாகப் பலித்தாலும்

இறைவனாக இயங்கினாலும்

ஏழையாக மயங்கினாலும் சரியே!—

அவை அவனுடைய மூளையின் மடிப்புகளுக்குள் கிளு கிளுப்பு அக்னியை மூட்டிப் பேனாவின் வழியாக அக்னிப் பிரவாகமாகப் பொங்கி வருகின்றன.

அத்தகையதொரு அக்னிப் பிரவாகமே—பூவையின் 'இதோ ஒரு சீதாப்பிராட்டி!'—இது வொரு பிரத்தியேக அக்னிப் பிரவேசமன்று; பிரத்தட்சிய அக்னிப் பிரவேசம்.

அக்னிப் பிரவேசத்தைத் தாங்கி நிற்கும் சரித்திர ஏடுகள் எத்தனை எத்தனையோ! ஆனால், அவை எரிந்து சாம்பலாகவில்லை. மிகச் சாவதானமாக அக்னிப் பிர

வேசத்தைப் படம் பிடித்துக் காட்டிவிட்டு அமைதியாகக் கிடக்கின்ற அந்தச் சரித்திர ஏடுகளுக்கு... அந்தச் சரித்திர ஏடுகளின் தீயின் நாவுகளுக்குள்ளே ஜோதியாய் மின்ன விடுவோர் சீதாப்பிராட்டியார், நந்தனர், வடலூர் வள்ள லார், ஜோன் ஆப் ஆர்க்.........

பூவையின் மீனாட்சி—அவள்தான் பிரத்தட்சிய அக்னிப் பிரவேசம் செய்யும் கற்பூரஜோதி. 'சீதை விதியின் நாயகி'. இந்த மீனாட்சியோ விதிக்கு நாயகி. தெய்வத்தை விதிக்கும்—அதாவது, ஆணையிடும் நாயகி. இதில் உலவும் பாத்திரங்களைத் தேடி நீங்கள் நெடுந்தூரம் பயணப்பட வேண்டாம். தெருவில், ஊரில், சேரியை நோக்கி உங்கள் பார்வையைத் திருப்பினால் போதும். ஒப்புக்குப் பேசும் வசனங்கள் அல்ல இவை. உயிர்ப்புடன் உள்ள உண்மைப் பேச்சுக்கள்.

பெண் வர்க்கத்தின் அக நெருப்புப் புற நெருப்பாக மலர்ந்து அக்னிப்பிரவாகமாகப் பிரவகிக்கும் நிலை காட்டும் இந்த நூலை நாடகமாக வெளியிடுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்ளுகிறோம்.

கஞ்சிக் கலயத்தைத் தலையில் சுமந்து மகுடியைக் கையிலெடுத்த பூவை (எஸ். ஆறுமுகம்) சீதாப்பிராட்டியைக் கொழுமுனையில்—தொழும் நிலையில் கண்டெடுத்த மற்றுமொரு சனகன். அவரை வாழ்த்துகிறோம்.

சிற்சபேசன்
பொதிகைப் பதிப்பகம்.

விதிக்கும்

ஒரு நாயகி!

அலகிலா விளையாட்டுடைய ஆண்டவன்தான் தனித் தன்மை வாய்ந்த நாடகாசிரியன்!—நாடகத்தை ஆக்கும் ஐயனே நாடகத்தைக் கொண்டுசெலுத்தும் இயக்குனனாகவும் அமைகிறான். அதுவே, ஒப்பிலாமணியின் ஒப்பில்லாத் தனிப்பண்பு ஆகும். அந்த ஒற்றைத் தனிப் பண்பாட்டிலேதான் விதி கள்ளத்தனமான நயத்தோடும், வினைபட்டவர்த்தனமான விநயத்தோடும் புன்னகை செய்கின்றது!— படைப்பின் புதிர்வடிவான மாயச் சிரிப்பின் விளைவாகவே, மனிதனுக்குப் பொய்யானதொரு வாழ்க்கை கிடைக்கிறது; அவ் வாழ்க்கைக்கு மெய்யானதொரு விளையாட்டும் கிட்டுகிறது!—ஆனால், வாழ்க்கை விளையாட்டின் வெற்றி—தோல்வியினை அறுதியிட்டு இறுதிப் படுத்தும் ஏக போக உரிமையை அந்த ஆண்டவனே நடுநிலையாளன் என்ற பேரால் எடுத்துக் கொண்டும் விடுகிறான்! அந்த நீதியின் நியதியேதான் இங்கே மனிதனின் விதியாகவும், மனித ஜாதியின் வினையாகவும் விளையாடுகிறது; விளையாட்டுக் காட்டுகிறது!—இதுதானே பிரச்சினைகளும் புதிர்களும் நிரம்பிய மனிதப் பிறவியின் நடைமுறை வாழ்க்கை?

உண்மை: வாழ்க்கை ஆட்டத்திலே ஆண்டவனுக்கு உள்ள சொந்த பந்தம் எழுத்தாளனுக்கும் உண்டு; வாழ்க்கைச் சிக்கலில் விதிக்கு இருக்கும் உரிமையும் உறவும் எழுத்தாளனுக்கும் இருக்கிறது. அதனால்தான், அந்த ஆண்டவனைப் போலே, இந்த எழுத்தாளனும் தலைசிறந்த நாடகாசிரியனாக விளங்கவும் முடிகிறது.

இன்னொரு சித்திர விசித்திரத்தையும் நான் எண்ணிப் பார்க்கின்றேன் : ஆண்டவன் படைத்த மனிதனின் விளையாட்டை ரசித்து அனுபவிக்கும் பார்வையாளனாக அதே ஆண்டவன் அமைகிறானென்றால், எழுத்தாளனோ, தான் படைத்த மனித நாடகத்தின் பங்குதாரனாகவே அமர்ந்து விடுகிறான் !—ஆகவே, எழுத்தாளனுக்குத்தான் படைப்புச் சக்தியைப் பார்க்கிலும் கூடுதலான பொறுமையும் பொறுப்பும் தேவைப்படுகின்றன. இல்லையேல், மனிதனின் மகா வாழ்க்கை வெறும் கூத்தாகவும் நையாண்டி நாடகமாகவும் உருமாறி, உருக்குலைந்து போய்விடாதா, என்ன?

கிராமப்புறச் சூழல் கொண்ட 'கஞ்சிக் கலயம்' என்ற என்னுடைய முழு நீள நாடகத்தில் நான் இவ்வாறு குறித்திருந்தேன் : இலக்கியத்திலே சிறு கதையோ, கவிதையோ, நவீனமோ சாதித்துக் காட்டாத—சாதித்துக் காட்ட முடியாத ஒரு திடீர்ப் பலனை அல்லது திடீர் விளைவை உண்டு பண்ணிக் கொடுக்கும் அல்லது, உண்டு பண்ணிக் காட்டும் ஓர் அபூர்வ சக்தி நாடகத் துறைக்கே இருக்கிறது. மேடைக்கும் மேடையை ரசிக்கும் பொது மக்களுக்கும் ஊடாக. ஊடும் பாவுமாகவும் பசியும் வயிறுமாகவும் இருந்து வருகின்ற நெருங்கிய பிணைப்பையும் நெருக்கமான இணைப்பையும் சிந்தித்துப் பார்த்தால், மேற்கண்ட நியதியின் உண்மைநிலை புலனாகக் கூடும். அதனால்தான், உலக அரங்கத்திலே, நாடக இலக்கியம் ஈடு எடுப்பற்றதோர் இலக்கிய அந்தஸ்துடன் என்றென்றும் விளங்கியும் வருகிறது !—இப் பெருமைக்குப் பெருமை சேர்க்க வல்லது தமிழ் நாடக இலக்கியம் !

'எழுதுவது எப்படி?' என்ற தொகுப்பு நூலில் நாடகத்தின் இலக்கணத்தை நான் வரம்பறுத்துக் காட்டிய விதம் இப்படி அமைந்தது !—வாழ்க்கை என்னும் விதியை அதற்குகந்த நெறிமுறையோடு வாழ்ந்து காட்டும் ஓர் உன்னதத்

திற்கு—ஒரு கடமைக்கு—ஓர் உணர்வுக்கு—ஓர் ஆதரிசத்துக்குப் பெயர்தான் நாடகம் !

ஆம்; நாடகம் இல்லையேல், வாழ்க்கை இல்லைதான் ! அதனால்தான் உலகத்தையே ஒரு நாடக மேடையாக ஆக்கி விட்டார் ஷேக்ஸ்பியர் !

இதோ, ஒரு சீதாப்பிராட்டி !...

உயிரும் உயிர்ப்பும் கொண்ட மகுடம்தான் !—நான் மட்டும் சொல்லவில்லை! தலைப்பைக் கேட்டவர்கள்—சொல்லக் கேட்டவர்கள் இவ்வாறு பாராட்டினர். உண்மை ஆளும் போது, வெற்றி அணைத்துக் கொள்ளும் என்பது காந்தி வாக்கு. சத்தியமும் தருமமும் வெல்லும் ஒவ்வொரு மகத்தான வேளையிலும் ஒவ்வொரு சீதாப்பிராட்டி மாண்புடன் பிரகாசிக்கவே செய்வாள் !—இதுவே சீதாப்பிராட்டியின் பாக்கியம் !—தத்துவம் !

கவிச் சக்கரவர்த்தி படைத்த மிதிலைச் செல்வி சீதை, 'விதியின் நாயகி' யாக விளங்குகிறாள் !

நான் படைத்த நாடகத் தலைவி மீனாட்சியோ 'விதிக்கு நாயகி'யாக விளங்குகிறாள் ! ஏன், தெரியுமா?—அவளுடைய வாழ்க்கை அப்படி !—வாழ்க்கைப் பிரச்சினையும் அப்படி ! ஆனால் ஒன்று—அவளுடைய வாழ்வும் வாழ்வின் சிக்கலும் அவளை மட்டுமா சார்ந்திருந்தன?—இல்லை, இல்லவே இல்லையே?—'உலகமெவற்றினும் நிறைந்த அருள் உமை' காளியையும் அல்லவா சார்ந்து விட்டன !...

மீனாட்சி பட்டிக்காட்டுப் பதுமை; அவளும் ஒரு 'புனையா ஓவியமே' தான். அன்பைக் கடவுளாக நம்பினாள்; அது மட்டுமல்ல; கல்லையும் காளியாக நம்பினாள் ! அந்த நம்பிக்கைக்காக, அவள் சந்திக்க நேர்ந்த பிரச்சினைகள் ஒன்றா, இரண்டா?—'என்னோட தீயை—என்மேலே இதோ, பற்றி

எரிஞ்சுக்கிட்டிருக்கிற இந்தத் தீயை இனி உங்களிலே யாராலேயும் அணைக்க முடியாது; அணைக்கவும் விட மாட்டேன்!...சீதாப்பிராட்டி அண்ணைக்கு ராமபிரானுக்காகவும் ஊர் உலகத்துக்காகவும் தீக்குளிச்சு, தான் கற்பின் கொழுந்து என்கிற சத்தியத்தை—தருமத்தை—உண்மையை —நீதியை மெய்ப்பிச்சுக் காட்டினுள்!—நான் இண்ணைக்கு இந்த ஊர்ச் சமுதாயத்துக்கு மட்டுமில்லாமல், எனக்காகவும் அக்கினிப், பிரவேசம் செஞ்சுக்கிட்டு இருக்கேன்!'...என்று மீனுட்சி தீயின் வடிவாகச் சிரிக்கிருள்; சிரித்துக் கொண்டேயிருக்கிருள்!

மீனுட்சியின் திருமகள் புதுமைப்பெண் பூரணி, "மானப் பிரச்னை ஆத்தாளுக்கும் மகளுக்கும் மட்டுந்தாஞ?—தெய்வமான ஒனக்கும் உண்டுதானே?...ம்...பேசு, ஆத்தா பேசு!" என்று கற்சிலை வடிவெடுத்த காளியைப் பார்த்துக் கேட்கிருள்!

காளிக்கு 'ரோசம்' வராதா?—பேசுகிருள்!—வாய் திறந்து பேசுகிருள்; மனம் திறந்து பேசுகிருள்!...

ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா?

சற்றே பொறுங்கள்!

காற்றினிலே மிதந்துவரும் நாதசுரப் பின்னணியுடன் அதோ, பாவேந்தர் பாடுகின்ருர்:

'எங்கள் தமிழும் எங்கள் வளமும்,
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!'

இனி, கொட்டு முழக்கோடு நாடகத்தை ரசியுங்கள்; சுவையுங்கள்!...

சென்னை-600 017
22—10—1977

பூவை எஸ். ஆறுமுகம்

காட்சி: 1

பொங்கு விரி காவிரியின் வளம் கொழிக்கும் மாங்குடி கிராமம் ; மண மகனின் திருமண வீட்டில் நாதசுர ஓசை யும் மேளச்சத்தமும் இரண்டறக் கலந்து ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

காலை வேளை .

மணவறையிலே, மணமகள் செண்பக மும் மணமகன் மாணிக்கமும் கல்யாணக் கோலத்தில் வீற்றிருக்க, மந்திரங்கள் ஒலிக்கின்றன.

அருணசலம் : *ஊம் !... ஆறு தலைக் கட்டுக்காரவுங்க சாடாப் பேரும் வந்தாச்சு !... மாப்பிள்ளே, காளி ஆத் தாளை நேந்துக்கிட்டுத் தாலியைக் கட்டுங்க... ! முகூர்த்த வேளை வந்திடுச்சு!... கெட்டிமேளம்! கெட்டிமேளம்!...*

திருப்பூட்டி முடிகிறது. மணப் பந்த லைக் கடந்து உள்ளே வந்து நிற்கிறுள்

பூரணி; கையில் திருமணப் பரிசான குங்குமச் சிமிழுடன் உள்ளே நுழைந்ததும், சொல்லி வைத்த மாதிரி, மேளச் சத்தமும் நாதசுர ஓசையும் 'டக்'கென்று நிற்க, கூடியிருந்த ஆண்—பெண் மத்தியில், அதிசயமான சலசலப்பும் பயங்கரமான பரபரப்பும் ஏற்பட, அவர்கள் எழுந்து நிற்கிறார்கள்!...

பூரணி, எதிர்பாராத இந்த அவமானத்தின் அதிர்ச்சியைத் தாங்கமாட்டாமல், தலை சுழல, தட்டித்தடுமாறி நிற்கிறாள். விளக்கொளி சுழன்றுநிற்கையில், அவள் முகம் வேர்த்துக் கொட்டுகிறது.

எல்லாத் திருக்கூத்தையும் அதிசயத்தோடும் ஆத்திரத்தோடும் கவனித்துச் சிந்தனைவசப்படுகிறான் புரட்சி இளைஞன் முத்து. மெதுவாக எழுந்து நிற்கிறான். அதற்குள், புறப்படத் தயாராகிவிட்ட தன் தந்தையான அருணாசல சேர்வையையும் கவனிக்கிறான். மனத் தவிப்பு அடங்கிச் சமநிலை அடைந்து, அவன் தன் தந்தையை நோக்கிப் பேசத் தொடங்குகிறான்:

முத்து: (பதட்டத்துடன்) அப்பா! மணப்பந்தலிலே இந்தப் பொண்ணு வந்து நின்னடியும், 'டும் டும்'

மேளச்சத்தம் நின்னு போச்சு ; ' பீப்பீ ' நாத சுரமும் வாயடைச்சிடுச்சு ; 'ஓம் ஓம் ' மந்திரங்க ளும் ஓஞ்சிடுச்சு ! — இவ்வளவும் பத்தாமல், கல்யாணத்துக்கு வந்திருந்த ஊர்ச்சனங்க வேறே ஏந்திருச்சிட்டாக ! — இதெல்லாம் என்ன தீவினைக் கூத்து, அப்பா ?

அருணசலம்: (கேலியுடன்) முத்து, கூத்து ஒண்ணுமில்லே ! இதான் அந்தக் குட்டியோட சுழி !— வெறுஞ் சுழி இல்லே !— தலைச்சுழியாக்கும் !

குடுமியைத் தட்டி முடிந்துகொள்கிருர் சேர்வை.

முத்து : (எரிச்சலுடன்) சுழியாவது, பழியாவது ? யார் அப்பா அந்தப் பொண்ணு? முதலிலே அந்தத் துப்பைச் செப்புங்களேன் !

அருணசலம் : (ஏளனமாக) அட, பாவமே !... பொண் ணுடா தம்பி இது ? படு ராங்கிக்காரியாச் சேப்பா ! இந்தப் பாவிமக பூரணி இருக்காளே பூரணி, இவ நம்ம மாங்குடி மண்ணுக்கே ஒரு அவமானச் சின்னமாக்கும் !

பூரணி துடிக்கிருள் ; தவிக்கிருள் ; தடுமாறுகிருள் !

முத்து : (பரபரப்புடன்) அவமானச் சின்னமா ? ஐயோ, பாவம் !... புதுக்கதையா இருக்குதுங்களே, அப்பா ?

அருணாசலம் : (நையாண்டியாக) இந்தக் கதை காரணத்தைப் பத்தி ஒனக்கு ஒண்ணுமே மட்டுப் படவாய்க்காது !— முத்து, இதெல்லாம் பதினாறு வருசத்துப் பழங்கதையாச்சேப்பா ? ம் !...

முத்து : (தவிப்புடன்) என்னப்பா சொல்றீங்க ?

அருணாசலம் : (நகைப்புடன்) ஊர் நடப்பைச் சொல்றேன், தம்பி !

முத்து : (எரிச்சலுடன்) சொல்லுறதைப் புரியும் படியாய்த்தான் சொல்லித் தொலையுங்களேன், அப்பா !

அருணாசலம் : அதுவும் சரியான பேச்சுத்தான். சொல்லிட்டே தொலைஞ்சிட்றேன் !...தம்பீ ! படிப்பு— படிப்புன்னு பட்டணமே சதம்னு ஒண்டிகிடந்த உனக்கு இந்த ஊரோட நடப்பு எப்படிப் புரியும் ?

முத்து : (இரக்கத்துடன்) சரி, சரி . கதைக்கு வாங்கப்பா'

அருணாசலம் : கதை இல்லேடா முத்து, கதை இல்லே ! நடந்த நடப்பு இதுதான். கேட்டுக்க : ஒத்தைக் கடை அய்யனார் குதிரையாட்டாம் அந்தாலே நிற்கிறாளே பூரணி, அவள் நம்ம மாங்குடி மண்ணுக்கே ஒரு அவமானச் சின்னம்னு சொன்னேன். ஏன் தெரியுமா, முத்து ? இந்தப் பாவி மகளுக்கு அப்பன் யார் என்கிற துப்பு இந்தப் பதினாறு வருசமா ஊர்ச்சனங்க யாருக்குமே தெரியாத மூடு மந்திரமாவே இருந்து வருது, தம்பீ !...

முத்து : (கலவரத்துடன்) அப்படீங்களா ?

அருணாசலம் : (கேலியுடன்) பின்னே ?... கதை இப்பத்தான் சூடுபிடிக்கப் போகுது. இந்தப் பூரணிச் சனியனைப் பெற்றாளே மூதேவி மீனாட்சி, அந்த நாறச்சிறுக்கியும் தனக்குத் தாலி கொடுத்த பாவி யார் என்கிற ரகசியத்தை வெளிக்காட்டாமல் அழும்பு பண்ணிக்கிட்டே வர்ரா !

முத்து : (வேதனையுடன்) ஏனாம் ?...

அருணாசலம் : யாருக்குத் தெரியும் ?... காளி ஆத்தாளோட சந்நதியிலே தாலி கட்டிக்கிட்டதாகச் சொல்லுறா மீனாட்சி. அவ பேச்சு பொய்க் கலப்பு இல்லாத சுத்தமான பேச்சானால், அதுக்குச் சாட்சி சொல்ல வேண்டியவள் ஆத்தா காளிதான் !—ஆனா, அவதான் பாவம், வெறும் கல்லாகச் சமைஞ்சிட்டாளே ? முத்து, வெறும் தாலியை நம்பி, இன்னம் எத்தனை காலத்துக்கு அவளை இந்த ஊர் நம்பும்? அம்மன் காசுக்குக் கூட பெறுமதிஇல்லாத வெறும் தாலியைக் காட்டி அவள் இன்னும் எத்தனை காலத்துக்குதான் இந்த ஊரை ஏமாத்த முடியும் ? ஆனதாலே, பாவி பழிகாரி மீனாட்சியையும், அவ பெற்ற இந்தக் குட்டி பூரணியையும் நம்ம கிராமத்திலே சாதிக் கட்டுப்பாடு போட்டு 'சாதி முறி' வச்சு, ஊரை விட்டே விலக்கி வைச்சிட்டாங்க நம்ப ஊர்ச் சனங்க !

முத்து : (மனிதாபிமானத்துடன் குறுக்கிட்டு) அப்பா, பூரணியோட ஆத்தா மீனாட்சி சொல்லுற சொல்லும், பேசுற பேச்சும் மெய்யாகவே இருக்கக் கூடாதுங்களா ?

பூரணி மெள்ள மெள்ள முத்துவை ஏறிட்டுப் பார்க்கிறாள்.

அருணாசலம்: முத்து! உனக்கு எப்பவுமே இரக்க மனசு; அதனாலேதான், புறம்போக்குக் கழுதைங்களோட சுயரூபம் தெரியாமல், பதட்டப்படுறே; பச்சாதாபப்படுறே! ஆனா, உன்னோட இந்த வெறும் அனுதாபத்துக்குள்ளே, இந்த மாங்குடி கிராமமோ, இல்லாட்டி இந்த ஊர்ச் சமுதாயமோ கட்டுப்பட்டு அடங்கிமுடங்கிக் கிடந்திடும்னு நீ மனப்பால் குடிக்கிறியாடா தம்பி, முத்து?—அப்படி இருந்தால், நான் சொல்லப் போற இந்தத் தாக்கல் தகவலை மட்டும் மனசிலே முடிச்சுப்போட்டு வச்சுக்க; உன்னோட வெறும் அனுதாபம் செல்லாக்காசுக்குச் சமம்! —ஆமா, நினைப்பு வச்சுக்க, முத்து!

செல்லாக் காசு ஒன்றைத் தூக்கி வீசுகிறார் சேர்வை.

முத்து: (ஆவேசமாக) அப்பா! செல்லாக் காசு உப்புப் புளிக்கு உதவாமல் இருக்கலாம். ஆனா, என்னோட அனுதாபம் நியாயமானதின்னு என் மனச்சாட்சி சொல்லுது. பூரணியைப் பெற்ற அபலை மீனாட்சி பேரிலே நீங்க வீண் பழி சுமத்தி ஊரோடே ஒத்து வாழத் துணிஞ்சிட்டீங்களா? சொல்லுங்கப்பா, சொல்லுங்க!

அருணாசலம்: (கேலியுடன்) அப்பனே முத்து! நான் சொல்றது இருக்கட்டும். முதலிலே நீ சொல்லு: அந்தப் பழிகாரி மீனாட்சி நாலு குண்டுமணித் தாலியைக் காட்டி இந்த ஊர்ச் சனங்களையெல்லாம் காலம் காலமாய் ஏய்ச்சுக்கிட்டே இருப்பாளாம்! அவ பேச்சை வேதவாக்காய் மதிச்சு நாங்களெல்லாம் வாயைக் கட்டிக்கிட்டு இருக்க வேணுமாக்கும்?

முத்து : (ஆத்திரத்துடன்) அப்படீன்னு, மீனாட்சி சொல்லு றது அம்புட்டும் பொய் - புனைசுருட்டு என்கிற துக்குச் சாட்சி என்ன இருக்குதுங்க, அப்பா?

அருணாசலம் : (ஏளனச் சிரிப்புடன்) மீனாட்சி சொல்லுறது அத்தனையும் மெய் என்கிறதுக்கு நீ என்னப்பா சாட்சிவைச்சிருக்கே, முத்து? இல்லே, அந்தத் துப்புக் கெட்ட மீனாட்சிதான் தன்னோட தூய் மையை மெய்ப்பிச்சுக் காட்ட என்ன சாட்சி வச்சிருக்காளாம்?...ஊம்...சொல்லு, முத்து!

சேர்வை அட்டகாசமாகச் சிரிக்கிறார்.

முத்து : (குரல் துடிக்க) அப்பா! ஊர் உலகத்தில் வெறும் சாட்சிக்கு அப்பாலேயும்கூட சில புனிதமான தர்மங்களும் சில நேர்மையான சத்தியங்களும் உயிர்தரிக்க முடியும் என்கிற உண்மையை உங்களாலே மறுக்க முடியுங்களா, அப்பா? ஊம், சொல்லுங்களேன், அப்பா!

அருணாசலச் சேர்வை திணறித் தடு மாறுகிறார்; முத்து இப்போது அட்ட காசமாகச் சிரிக்கிறான்.

அருணாசலம் : அடடா! எல்லாரும் புறப்பட்டுப் போறாங் களே?... அட முத்து! வாப்பா, நாமும் போயி டலாம்! ஊர் வம்பு நமக்கு எதுக்கு? ஊம்' புறப்படு, தம்பி!...

முத்து வைராக்கியத்துடன் தலையை உலுக்கி, தன் தந்தையோடு புறப்பட மறுக்கிறான்.

பூரணி சிலை நிலையினின்றும் விடுதலை பெறுகிருள். வெள்ளம் மடை உடைத்து வழிகிறது.

முத்துவின் மனத்தை அந்தக் கண்ணீர் மேலும் நெகிழச் செய்து விடுகிறது.

பூரணி : (அலைகடல் துரும்பாகத் தவித்தபடி) ஐயோ, ஆத்தா !...ஐயையோ, காளி ஆத்தா !...

வீரிட்டு அலறிக்கொண்டே பூரணி ஓடத் தலைப்படுகிருள்.

செண்பகம் : பூரணி, நில்லு !...

முத்து , (குரல் கம்ம) பூரணி! நியாயம் எங்கேயும் ஓடிடாது; அதனலே நீயும் ஓடிடாதே !... பூரணி!... பூரணி !...

பூரணி ஓடுகிருள் !...

பயங்கரப் பின்னணி ஒலிக்கிறது.

திரை

காட்சி: 2

தெரு; பகல்.

பூரணி கிராமத்தின் தெரு வழியே, அநியாயப் பழிக்கு அஞ்சியவளாக ஓடிக் கொண்டேயிருக்கிருள் !...

நியாயத்தை — தருமத்தை — சத்தியத் தைத் தேடி ஓடுபவனுகப் புரட்சி முத்து அவளைப் பின்தொடர்ந்து ஓடிக்கொண் டிருக்கிருன் !...

பயங்கரப் பின்னணி இசை ஒலிக் கிறது ; எதிரொலிக்கிறது.

காட்சி: 3

குடிசை : பகல் :

தாய் மீனுட்சி தூக்கமுடியாத தலைச் சுமையுடன் குடிசையின் வாசலில் வந்து நின்று, சுமையை இறக்கி வைக்க முடியாமல் திண்டாடுகிருள். பூவும் பொட்டும் பொலிகின்றன. அப்போது, கண்ணீரும் கம்பலையுமாக வரும் பூரணி தாய்க்கு உதவி செய்கிருள்.

பூரணியைப் பின்தொடரும் முத்து குடிசையின் ஓர் ஓரத்தில் மறைந்து நிற்கிருன் !

மீனுட்சி : (ஆர்வத்தோடு) பூரணி! உன் சிநேகிதி செண்பகத்தோட கண்ணலம் காட்சி நல்லபடியா முடிஞ்சிருச்சில்ல! உன்னோடகண்ணலப் பரிசை செண்பகப் பொண்ணு கையிலேயே ஒப்படைச்சிட்டியா, பூரணி ?

பூரணியின் கண்களினின்றும் கண்ணீர்த் துளிகள் சிந்திச் சிதற, அவளது கையிலிருந்த திருமணப் பரிசான குங்குமச் சிமிழ் நழுவி விழுகிறது.

பூரணி : (தேம்பலுடன்) ஆத்தா ! ...

பேச்சைத் தொடரமுடியாமல் தவிக்கிருள் பூரணி.

மீனுட்சி ; (ஆவேசம் பொங்க) பூரணி ! என்ன நடந்துச்சு ? ... சொல்லு, சீக்கிரம் !

தலைமுடி அவிழ்ந்து தொங்குகிறது.

பூரணி : என்ன நடக்கக் கூடாதோ, அது நடந்திடுச்சு' ஆத்தா !

பூரணி செருமுகிருள்.

மீனுட்சி ; அதுதானே பூரணி, இந்தப் பதினறு வருச காலமாக நம்மோட வாழ்க்கையின் விதியாக, விளையாடிக்கிட்டு இருக்குது ! இதுக்காகவா நீ விம்மி வெடிக்கிறே ?... நீ அழுதால், அப்பாலே என்னுலே தாங்க முடியுமா, ஆத்தா ?... நீயும் நானும் அழுதுக்கிட்டே இருந்தால், நம்மோட கண்ணீரைத் துடைக்க இந்த மண்ணிலே நமக்கு நாதி ஏது ? நமக்கு இந்தப் பதினறு வருசமாய் இருந்து வருகிற ஒரேயொரு ஆறுதல் ஆத்தா மூத்தவள் காளிதான் ! ஆனு, அவதான் அநீதியைப்பேசவிட்டுப்புட்டு,

தன் வாயை அடைச்சுக்கினு வேடிக்கை பார்க் கிறளே, பூரணி!... சரி, சரி. நடந்ததைத் தான் சொல்லேன் !

மகளின் கண்ணீரைத் துடைத்து விடு கிருள் தாய்.

பூரணி ; ஆத்தா ! நான் செண்பகம் குந்தியிருந்த மணவறைப் பந்தலிலே அடியெடுத்து வச்சது தான் தாமதம், உடனே மேளமும் பீப்பீயும் நின்னிடுச்சு ; அய்யர்சாமி ஓதின மந்திரமும் ஓய்ஞ்சிடுச்சு ; கூடியிருந்தவங்க எல்லாரும் ஏந்திருச்சிட்டாங்க !... என் ஒருத்தியாலே செண்பகப் பொண்ணு கண்ணாலம் தடைப்படப் படாதேன்னு ஓடியாந்திட்டேன். செண்பகம் கெஞ்சிச்சு; அப்பாலே, யாரோ ஒரு நல்ல இளவட்டமும் என்னைத் தடுத்துச்சு !... ஆனு, நான் ஓடியாந்திட்டேன், ஆத்தா ! அந்த இளவட்டத்தோட அப்பன் வாய்க்கு வந்தபடி நம்பளை ஏசிப் பேசிப்புட்டாரே, ஆத்தா ?

மீனுட்சி : (விசிட்டு) காளி ஆத்தா !... காளி ஆத்தா !...

தாயின் கண்ணீரை மகள் இப்போது துடைத்து விடுகின்ருள்.

பூரணி : (எரிச்சலுடன்) அவதான் பாவம், கல்லாகிப் போயிட்டாளே, ஆத்தா ?

மீனுட்சி : ஊம் !...

பெருமூச்செறிகிருள் மீனுட்சி.

பூரணி ; ஊர்ச்சனங்க ஒட்டுக்கும் நம்பளைப் பள்ளுப் பறைக்கும் கேடாய் மதிச்சு, நம்மளைக் கண்டடியும் பேயைக் கண்டது கணக்கிலே அரண்டு மிரளும்படி, அப்படி நாம் என்னதான் பொல்லாத பாவத்தைப் பண்ணிப் பூட்டோமாம் ?

மீனாட்சி : ஈரம் இல்லாத இந்த மண்ணிலே—இதயம் இல்லாத சனங்களுக்கு மத்தியிலே, நாம ஏழை பாழைங்களாய்ப் பிறந்த அந்த ஒரேயொரு பாவத்தைத் தவிர, வேறே எந்தப் பாவத்தையும் நாம மனசறிஞ்சு செய்யலையே, பூரணி ?

பூரணி ; மெய்தான், ஆத்தா ! இந்தச் சத்தியமும் தருமமும் உனக்கும் புரியும்; எனக்கும் புரியும் !

மீனாட்சி : (குறுக்கிட்டு) காளி ஆத்தாளுக்கும் புரியுமேடி, பூரணி !

பூரணி : (எரிச்சலுடன்) காளி ஆத்தாளுக்குப் புரிஞ்சு என்ன புண்ணியம் ? காளி ஆத்தாளைச் சாட்சி வச்சு நீ தாலி கட்டிக்கிட்டே. ஆனால், இந்தக் காளி, தான் எங்கே சாட்சி சொல்ல நேருமோ என்னமோன்னு பயந்து, பேசாத ஊமையாகிப் போயிட்டாளே, பாவம் ?... ஆத்தா பேசியிருந்தால், ஈவிரக்கமில்லாத இந்தச் சமுதாயம் நம்பளை நாக்கிலே நரம்பில்லாமல் இப்படி நாளும் பொழுதும் ஏசிப்பேசிக் கைகொட்டிச் சிரிச்சுக்கிணு இருக்குமா ?...

மீனாட்சி : (வேதனையுடன்) வாஸ்தவம்தான் மகளே, வாஸ்தவம்தான் !

பூரணி : (செருமலுடன்) புண்ணியவதியான நீ நாறச் சிறுக்கியாம் !... நான், அப்பன் பேர் தெரியாத அவமானச் சின்னமாம் !... இப்படிப்பட்ட

ஏச்சையும் பேச்சையும் கேட்டதும் என் நெஞ்சே வெடிச்சிடும் போலிருந்திச்சு. அங்கிட்டாலே ஓடிப்போய் பாதாளக் கேணியிலே குதிச்சு உசிரைப் போக்கிக் கிடலாமான்னுகூட ஓடுச்சு! ஆனா, என்னைச் சுமந்து பெற்ற உன்னோட நினைப்பு வந்தடியும் ஓடியாந்திட்டேன், ஆத்தா! நான் செத்துச்சிவலோகம் பறிஞ்சிட்டேன்னா, அப்பாலே உனக்கு இந்த ஊர் நாட்டிலே வேறே நாதியே இல்லையே, ஆத்தா ?

விம்முகிறாள் பூரணி.

மீனாட்சி : (பதறியவாறு)பூரணி, மெய்யாலுமே நல்லவங்க நம்பளை ஆண்டுக்கிட்டு இருக்கிற இந்த நல்ல நேரத்திலே, நீ சாகிறதைப்பத்தி இனிமேல் கனவிலே கூட எண்ணப்புடாது; ஆமா, சொல்லிட்டேன்! காளியை நம்பி, அவளைச் சாட்சியும் வச்சு, நான் தாலி ஏந்திட்டேன். தாலி கொடுத்தவனுக்கு முந்தானையும் விரிச்சேன். ஆனா, அந்தப் புண்ணியவானோ ராவோடு ராவாய் எங்கிட்டோ மாயமாய் மறைஞ்சிட்டான். (தாலியை எடுத்துக்காட்டி) பூரணி! இந்தச் சமுதாயம் என் தலைமேலே அநியாயமாய்ச் சுமத்தியிருக்கிற பழிபாவச் சுமையையும் இந்தப் பதினாறு வருசமாய் சுமக்க முடியாமல் சுமந்துக்கிட்டு இருக்கேனே—ஏன் தெரியுமாடி, ராசாத்தி ?...

பூரணி : நல்லாத் தெரியும்!... ஊர் உலகத்துக்காக சிலுவையைச் சுமந்தாராம் ஏசுநாதர். அதொப்ப, நீ எனக்கோசரம் எல்லாச்சுமையையும் உன்னோட தங்கமான நெஞ்சிலே சுமந்துக்கிட்டு இருக்கே! ஆமா, ஆத்தா, ஆமாம்!...

மீனாட்சி ; நீ மட்டும் அண்ணைக்கு இந்தப் பாவியோட வயித்திலே வளராமல் இருந்திருந்தால், நான் செத்து மடிஞ்ச இடத்திலே இந்நேரம் புல் மண்டியிருக்குமே ? (பெருமூச்சு விடுகிருள்)... பூரணி ! வாழ்க்கை என்கிறது வாழுறதுக்குத் தான்; வாழ்ந்து காட்டுறதுக்குத்தான் !—மூத்த வங்க சொல்ருங்க; புரியாமல் இல்லேதான் ! ஆனாலும், சுமக்கிறதுக்கும் கெடு வேண் டாமா ? கையகலத்துக்கும் கம்மியான இந்த நெஞ்சு எத்தனை சுமையைத்தான்—எத்தனை காலத்துக்குத்தான் சுமந்துக்கிட்டிருக்க ஏலும்?...

விம்முகிருள் மீனாட்சி.

பூரணி ; ஆத்தா, நீ கண் கலங்கினால், அப்பாலே நான் எந்தக் கோயிலிலே போய் அடிச்சு விழுவேன் ? அழாதே, ஆத்தா, அழாதே !... ஒரு பாவமும் அறியாத நம்பளுக்கு ஏன் ஆத்தா, இம்மாங் கொத்த பயங்கரச் சோதனைகளெல்லாம் ஏற் பட்டுத் தொலையுது ?

மீனாட்சி : அதுதான் பூரணி, நம்மோட விதி !...

பூரணி ; (ஆத்திரம்) விதியா ?... (ஆவேசமாகச் சிரித்தபடி) விதியாவது மண்ணாங்கட்டியா யாவது !... அந்தப் பாழாய்ப்போன விதியின் எழுத்தைக் கிழிச்சு வீசிக் காட்டுப்பிடுறேன் நான் !... ஆத்தா !... லோகநாயகி காளி யோட கண்ணிலேயும் மண்ணைத் தூவிப் பிட்டு, உன்னையும் நம்பிக்கை மோசம் பண் ணிட்டு, பேடி மாதிரி ராத்திரியோட ராத்திரி யாய் ஓடி, இந்தப் பதினறு வருசமாக மறைஞ் சுக்கிட்டு இருக்கிற அந்தத் துரோகி — அந்தச்

சமுதாயத்துரோகி யார் ஆத்தா ?... இப்ப வாச்சும் சொல்லேன் ! இனியாச்சும் சொல் லேன், தாயே !...

துடிக்கிருள் பூரணி.

மீனுட்சி ; (வைராக்கிய அமைதியுடன்) பூ...ர...ணி !

பூரணி ; (கனல்தெறிக்க) ஊம், பேசு ஆத்தா ! என் னேட அப்பன் யார் ? உன்னேட புருசன் யார் ?... என்னையும் உன்னையும் இந்தப்பதி ருறு யுகமாய் இந்தப் பாழும் சமுதாயத்தின் நடுவிலே சந்தி சிரிக்க வச்சிட்ட அந்தச் சமு தாயக் குற்றவாளி யார், ஆத்தா ?... ஊம், சொல்லு சீக்கிரம் !... அந்தப் பழிகாரப்பாவியை எந்தத் தில்லியிலே இருந்தாலும் வலை வீசித் தேடிப்பிடிச்சு, நீ எந்தக் காளியை நம்பிச்சாட்சி வச்சு தாலி கட்டிக்கிட்டியோ அதே காளி சந் நிதியிலே நிறுத்திவச்சு, இந்தப் பாழும் சமூகம் உன் மேலே அநியாயமாய் சுமத்தியிருக்கிற வீண் பழியை, அந்தப்பழிபாவத்துக்குக் காரண மான அந்தப் பாவியைக் கொண்டே துடைச்சு வீசிப்பிடச் செஞ்சிடுறேன் ! யார் என் அப்பன்? யார் உன் புருசன் ? ஊம், பேசு, ஆத்தா, பேசு !...

அன்னையை நோக்கிக் கைகூப்புகிருள் மகள்.

மீனுட்சி மகளின் அந்தக் கைகளை எடுத்துக் கண்களிலே ஒற்றிக்கொண்டு தலையை நிமிர்த்துகிருள். முடிகள் பறக்க, தலையைக் கம்பீரமாக நிமிர்த்து கிருள்.

மீனாட்சி : பூரணி ! அந்தப் புண்ணியவான் இந்தச் சுற்றுவட்டத்திலே இருந்திருந்தால், அந்த ஆளை இத்தனை காலத்துக்கும் சும்மாவா விட்டு வச்சிருப்பேன் ? எனக்குத் தாலி கொடுத்த என் ஆசை மச்சான் எங்கே இருக்கார், என்ன ஆனார் என்கிற துப்பு ஆத்தா மூத்தவ ஒருத்திக்கு மட்டிலும்தான் வெளிச்சம் !...

பூரணி : அவள்தான் இதயமில்லாப்பாவி ஆகிட்டாளே? இல்லாட்டி, அந்தக்காளி கல்லாகச் சமைஞ்சிருப்பாளா ?... அவள் பேசாமல் ஊமையாகியிருப்பாளா ? ஐயோ, பாழும் தெய்வமே !

மீனாட்சி : (உறுதியுடன்) ஆத்தா பூரணி ! இந்தப்பாழும் சமூகம் என் பேரிலே அநியாயமாய்ச் சுமத்தியிருக்கிற வீண் அபவாதத்தை—சூதுக்களங்கத்தை இதே சமூகத்தின் முன்னிலையிலேயே எப்ப நான் துடைச்சு வீசுறேனோ, அப்பத்தான் நான் நல்ல மூச்சு கொண்டு, என்னோட இந்தத் தலைமுடியை முடிஞ்சிக்கிடுவேன் !... கல்லாக இருக்கிற ஆத்தா, காளியாக மாறிப் பேசத்தான் போறான் ! மாயமாய் மறைஞ்ச என் மகராசனை காளி மாயமாய்க் கொண்டாந்து சேர்த்து, என் மேலே உள்ள பழிபாவமெல்லாம் தொலைஞ்சு, அப்பாலே ஊர் உலகத்தை ஒத்து, உன்னை உன் மனசுக்கொத்த நல்ல பிள்ளைகிட்டே ஒப்படைச்சிட்டேன்னு, அப்பத்தான் நான் பழைய மீனாட்சியாக ஆவேன் !... ஆமா, ஆத்தா !...

மீனாட்சி தாலியை எடுத்துக் கண்களிலே ஒற்றிக் கொள்கிறாள்.

பூரணி ; (கை கூப்பியபடி) ஆத்தா !...

எல்லா நடப்பையும் மறைந்து நின்று கேட்கும் முத்து, கண்ணீரைத்துடைத்த படி, திரும்பிப் பார்த்தவாறு, மெல்ல நழுவும் சத்தம் கேட்கிறது.

மீனாட்சி : (திரும்பிப் பார்த்துப் பதட்டத்துடன்) பூரணி! யார் அந்த இளவட்டம் ?

பூரணி : (பார்வையை மீட்டவாறு) பாவங்களுக்கு ஊடாலே முளைச்ச புண்ணியத்தைப்போலே, நம்பளைப் புரிஞ்சுக்கிட்டு நம்பளுக்காக மெய்யாலுமே மனிதாபிமானத்தோடே அனுதாபப் பட்ட ஒரேயொரு புண்ணியவான் அவர் ! அம்புட்டுத்தான் எனக்குத் தெரியும், ஆத்தா!...

மீனாட்சி ; (அதிசயத்தோடு) அப்படியா, பூரணி ?...

கன்றின் குரல் கனிந்து வருகிறது.

திரை

காட்சி: 4

காளிகோயில் ; பகல்.

சிந்தனை வயப்பட்ட நிலையிலே, முத்து கோயில் சந்நிதியில் வந்து நிற்கின்றான்.

முத்து: (உணர்ச்சிப் பெருக்குடன்) தாயே! முக்காலமும் உணர்ந்திட்ட தயாபரி நீ!... ஆனால், இந்த உண்மையை உணர்ந்துக்கிட இந்த மாங்குடி மகாசனங்களுக்குத்தான் மனசு இல்லாமல் போயிட்டுது. அதனாலேதான், நிரபராதியான அபலை மீனாட்சி மேலே அநியாயமாய்ப் பழி சுமத்திக்கிட்டு இருக்காங்க ஊர்க்காரங்க! ...அவங்களோட மனசெல்லாம் கல்லாகிப் போயிடுச்சே என்கிற ஆத்திரத்தினாலேதான், நீயும் கல்லாகவே நின்னுக்கிட்டிருக்கியா, ஆத்தா? அவங்க மனுசங்க: வெறும் மனுசங்க!—ஆனா, நீ தெய்வமாச்சே, தாயே? உனக்கு உண்டான தெய்வ தர்மம், சமுதாய நீதியைப் பிழைக்கச் செய்ய வேணுமா?... காளி ஆத்தா, உன்னைச் சாட்சிவச்சு மீனாட்சிக்குத் தாலி பூட்டிட்டு, அப்பறம் மீனாட்சியை மட்டுமல்லாமல், உன்னையும் கூட ஏமாத்திட்டு பதினாறு வருஷமாய் எங்கிட்டோ மாயமாய் மறைஞ்சிருக்கிற அந்தச் சமுதாயப் புல்லுரு

வியை எப்படியாச்சும் இந்த மண்ணுக்குக் கொண்டாந்து சேர்த்து, அந்தப் பாவியின் முகமூடியைக் கிழிச்சு அவன் சுயரூபத்தை அம்பலப்படுத்திடு. அப்பத்தான், மீனாட்சி பேரிலே இந்த ஊர் சுமத்தியிருக்கிற அநியாயப் பழி விலகும்! அப்பத்தான் நீ வெறும் கல் இல்லே என்கிற உண்மையும் இந்த ஊருக்கு விளங்கும்! சத்தியத்தையும் நீதியையும் தர்மத்தையும் பிழைக்க வைக்க வேண்டியது உன் சமுதாயக் கடமை என்கிற உண்மையை மறந்துப்புடாதே, ஆத்தா!...இந்த உண்மையை நீ மறந்தாயோ, அப்பாலே இந்த ஊரே உன்னை மறந்துப்பிடும்! ஆமா. சொல்லிப்பிட்டேன், தாயே!...

உணர்ச்சி வசப்பட்டுப் பேசி முடித்த முத்து, கைகுவித்து, வணங்குகிறான்.

ஆலய மணிச் சத்தம் கேட்கிறது. திரும்பிப் பார்க்கிறான் முத்து.

அங்கே, மீனாட்சியும் பூரணியும் அம்மனைச் சேவித்த வண்ணம் நிற்கிறார்கள். பூரணியை ஏக்கமும் அன்பும் சூழ்ந்திட ஒருகணம் ஊடுருவிப் பார்த்தபின், புறப்படுகிறான் முத்து.

திரை

காட்சி: 5

நடுவீதி ; பகல்.

பட்டணத்து நவநாகரிக வாலிபனுன 'டைமண்ட்' என்கிற வைரம் கிராமப் புறக் காட்சிகளை ரசித்த வண்ணம் நடந்து வருகிறுன்.

வைரம் : (பூரிப்புடன்) பாரதத்திருநாட்டின் ஜீவனே கிரா மங்களிலேதான் இருக்குதின்னு மகாத்மா சொன்னது சத்தியவாக்குத்தான் ! சத்திய சோதனை செஞ்சு காட்டின அண்ணலாச்சே அந்த மகான் ?—ஆகா !...நட்பைத்தேடி — நண்பன் முத்துவைத் தேடி, பட்டணத்திலே ருந்து பட்டிக்காட்டுக்கு வந்த எனக்கு கிராமப் புறத்தின் பசுமை என்னுடை ரசிகத் தன்மைக்கு அருமையான விடுத்து வச்சிட்டுது !......மெய் யாகவே பசுமைப் புரட்சிதான் நம்ப நாட்டிலே நடந்துக்கிட்டு இருக்குது !...

வைரம் தனக்குத் தானே பேசி முடித்து, நடக்கிறுன். மறுகணம் பயந்து ஒதுங்கு கிறுன்.

அப்போது முத்து வருகிறான்

முத்து : அடடே, டைமண்டா ?

வைரம் : டைமண்ட் இல்லே, முத்து!-வைரம் ! வைரம்னு தமிழிலே சொல்றது எவ்வளவு அழகாக இருக்குது ?

முத்து : (சிரித்தபடி) ம்...சரி, என்ன தடுமாறி நின்னிட்டே, வைரம் ?

வைரம் : (பயத்துடன்) தோழரே, அங்கே பாருங்க, ப்ரேக் இன்ஸ்பெக்டர் வர்ருரு !

முத்து : 'ப்ரேக் இன்ஸ்பெக்டர்' இங்கே, இந்தப் பட்டிக் காட்டிலே எங்கே வந்தாரப்பா, வைரம் ?

எருமை கத்துகிறது.

(சிரித்தபடி) ஓகோ !...எருமையைச் சொல்றியா ?...சரி, வா, வீட்டுக்குப் போகலாம் !... ஓ ! ட்ரான்ஸிஸ்டர் புதுசா ?

வைரம் : ஆமா, புதிசிலேயும் புதிசு, புத்தம் புதுசு !... பாட்டுக் கேட்கிறியா ?

ட்ரான்ஸிஸ்ட்டரை முடுக்குகிறான். அப்போது, அவ் வழியே கஞ்சிக்கலயம் சுமந்து கொண்டு ராக்கம்மா என்ற நாட்டுப்புற அழகி நடக்கிறாள். தொடர்கிறான் வைரம்.

'என்னடி ராக்கம்மா !' என்ற பாட்டின் முதல் வரி ஒலிக்கிறது.

ராக்கம்மா : (கோபத்துடன்) ஏய், எப்படி இருக்கு உடம்பு?

வைரம் : (உடம்பைத் தடவியபடி) உடம்புக்கு என்ன கேடு ?...

ராக்கம்மா : என்ன, தாலி கட்டின பெண்டாட்டியை அழைக்கிறதாட்டம், 'என்னடி ராக்கம்மா' அப்படின்னு 'டீ' போடுறியே ? நீ 'டீ' போட்டால், நான் 'டா' போட மாட்டேனுக்கும் !...

வைரம் : எனக்கு 'டீ' போட்டுப் பழக்கமில்லே ! (கைகளை 'டாடா'காட்டியபடி) டா...டாடா போட்டுத்தான் பழக்கம். ஆனா, உனக்கு'டாடா' போட்டுட மாட்டேன் !

ட்ரான்ஸிஸ்டரைக் காட்டுகிறான் வைரம். பாட்டு தொடர்கிறது.

ராக்கம்மா : 'டீ' போட்டது இந்தப் பொட்டி தானே ?

வைரம் : ஊம்...! ஆனா, இது 'டீ' போடாதாக்கும் !

வியப்புடன் நிற்கும் அவளை மெல்ல நெருங்குகிறான்.

ராக்கம்மா : நின்ன இடத்திலேயே நின்னுக்கிட்டு பாடுதே ?

வைரம் : உட்கார்ந்த இடத்திலேயே உட்கார்ந்திட்டும் பாடும் !...

ராக்கம்மா : நையாண்டியா பண்ணுறீங்க, ஐயா ?

வைரம் : நான் ஐயா இல்லே. டைமண்ட் ! ஊகூம், அதுவும் இல்லே ! நான் வைரம் !

ராக்கம்மா : வைரமா ?

வைரம் : ஐயய்ய ! எம் பேரைச் சொல்லிட்டியே !

ராக்கம்மா : (நாணத்துடன்) சரி, சரி, போங்கய்யா !

வைரம் : போறேன் !... ஆனா, பசி எடுக்குதே ?

அவளை ஓரக் கண்ணால் பார்க்கிறான்.

ராக்கம்மா : பசிச்சால் சாப்பிடுங்களேன் !

வைரம் : அருமையான யோசனை !... இது வெறும் பசி இல்லே ! வெறும் பசியாய் இருந்திருந்தால் தான், உன்னையே—இல்லை, இல்லை—உன் கஞ்சிக் கலயத்தையே காலி பண்ணியிருப் பேனே, மிஸ் ராக்கம்மா ! இந்தப் பசி... (அவள் காதுகளில் ரகசியமாக) காதல் பசி !...

ராக்கம்மா அவனை அடிக்க கையை ஓங்க, முத்து தடுத்து, வைரத்தை இழுத்துச் செல்கிறான்.

முத்து : தோழரே ! இது பட்டணம் இல்லே ! அங்கே தான் காதலுக்கும் கத்தரிக்காய்க்கும் பஞ்சமே இருக்கிறதில்லே ! ஆனா, இது பட்டிக்காடு ஆனா, இங்கே பொண்ணுங்ககிட்டே வாயை வசம் தப்பிக் கொடுத்தாயோ, அப்பாலே, அவங்க உன் பல்லை உன் கையிலேயே எண்ணிக் கொடுத்திடுவாங்க !... உஷார் !

வைரம் : (பற்களைத் தடவியபடி) பூ !... இவ்வளவு தானே ? பொய்ப் பல் கட்டிக்கிட்டால், பிரச்னை தீர்ந்திடுமே, முத்து ?... சரி, சரி. புறப்படு, முத்து ! பசிக்குது !...

முத்து : பசிக்குதா ?

வைரம் : (வயிற்றைத் தடவியபடி) ஆமா, இது அசல் பசி...உண்மையான பசி!...சோற்றுப் பசி!...

முத்து : நம்மோட நாட்டின் தீராத இந்தப் பசிப் பிரச்னையைப் பற்றி அந்த நாளையிலேயே நேருஜி வருத்தப்பட்டாங்க! — வரலாற்றுப் பெருமை படைச்ச இந்தப் பாழும் பசி அன்றும் சரி, இன்றும் சரி, ஒரு சோதனையாகவே தான் இருந்துக்கிட்டு வருது!...இந்த நிலைமையிலே, பாவம், நீ மட்டும் எப்படித் தப்ப முடியும்?

வைரம் : (தள்ளாடியவாறு) பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்கிறது சரிதான் போலே!...

முத்து : பத்தும் பறந்து போகுமோ, என்னவோ?— ஆனா, நீ பறந்து போயிட மாட்டே!

வைரம் : உண்மையாகவா?

முத்து : சரி, சரி. நட! பாதையைப் பார்த்து நட!...

இருவரும் நடக்கிறார்கள்.

திரை

காட்சி: 6

முத்துவின் வீடு ; காலை.

முத்துவின் தந்தையான அருணாசலச் சேர்வை, குடுமியைத் தட்டி முடிந்து கொண்டு வயலுக்குப் புறப்பட ஏர்க் கலப்பையை எடுத்துத் தோளில் வைக்கிறார்.

அருணாசலம் : டேய் சப்பாணி !...அடியாத மாடு படியாதுடா ! செவலையை அடிச்சு விரட்டுடாலே !...அறுவடைக்குக் கூலி ஆளுங்களைக் கண்டு தண்டி அச்சாரம் கொடுத்து வைச்சிடுடா !...ம்...ஓடுடா ! அடடே, நீ ஓட வேண்டாம்டா; மாட்டை ஓட விடுடாலே !

அருணாசலம் புறப்பட ஆயத்தப்படும் போது, அவர் பக்கத்தில் வந்து நெருங்கி நிற்கிறாள் அவரது மனைவி பொன்னம்மா.

பொன்னம்மா : ஏங்க, ஜோடிப் பொருத்தம் எப்படி ?

அருணாசலம் : (வெட்கம்) ஜோடிப் பொருத்தத்துக்கு என்னவாம் கேடு ?...ஜாடியும் மூடியும் கணக்கிலேதான் ஜோடிப் பொருத்தம் அமைஞ்

சிட்டுதே ? அது சரி, ஜோடிப் பொருத்தம் பார்க்கிறதுக்கு இப்ப ஏன் உனக்கு திடுதிப்னு ஆசை வந்திருக்கு ? ஓகோ ! அறுபதுக் கறுபது கண்ணாலத்துக்கு நீயும் நானும் மறு படியும் மணவறையிலே குந்தவேணுமில்லையா? பலே, சபாசு !

சிரிக்கிறார் அவர்.

பொன்னம்மா : (தலையில் அடித்துக் கொண்டு) அத்தான், மூதலிலே உங்களோட திருவாயை மூடுங்க. நம்ப ரெண்டுபேரோட ஜோடிப் பொருத்தத் தையா நான் உங்ககிட்டே கேட்டேன் ?

அருணாசலம் : பின்னே ?

கையிலிருந்த இரண்டு படங்களையும் ஜோடி சேர்த்துக் காட்டுகிறாள் அவள்.

பொன்னம்மா : அக்கரைச் சீமையிலே இருக்கிற என் தம்பி மகள் பவளக் கொடிக்கும் நம்ப மகன் முத்துவுக் கும் ஜோடிப் பொருத்தம் எப்படின்னு கேட் டேன். நீங்க என்னடான்னா, என்னென் னமோ உளறுறீங்க !

அருணாசலம் : ஓகோ ! அப்படியா சங்கதி ? (படங்களை ஜோடி இணைத்துப் பார்த்தவாறு) இந்த ரெண்டு படங்களையும் சும்மா சும்மா ஜோடி சேர்த்துப் பார்க்காதேடி, மக்கு ! திருஷ்டி விழுந்திடப் போவுது !...

பொன்னம்மா : திருஷ்டி இருந்தால் தானே விழுறதுக்கு ?... சரி, சரி. கேட்டதுக்குச் சொல்லுங்க !

அருணுசலம் : நீ என்ன கேட்டே ? நான் என்ன சொல்ல ? சொல்லேன், பொன்னம்மா ?

பொன்னம்மா : (மண்டையில் அடித்துக் கொண்டே) ஐய... இருந்திருந்து உங்களைப் போய் ஜோடிப் பொருத்தம் கேட்டேனே ! நான் சுத்தப் பைத்தியக்காரி !

அருணுசலம் : சொன்னலும், சொன்னே, நல்லாச்சொன்னே, போ ! ஏலே பொண்ணு ! போயிடாதே !... இந்தாப்பாரு, பொன்னம்மா ! நம்ப தவப் புதல்வன் முத்து வந்ததும், இந்த ரெண்டு படத்தையும் காட்டி ஜோடிப் பொருத்தத்தை அவன் கிட்டேயே கேட்டுப்பிடு. வேலே முடிஞ்சிடும் !

அப்போது முத்து வந்து நிற்கிருன்.

பொன்னம்மா : வாப்பா முத்து ! உனக்கு ஆயுசு நூறு !

முத்து : ஆமா, ஆமா—எமன் ஏமாந்து இருந்தால் ! அது போகட்டும் !...அடடே ! கையிலெ என்னமோ படம் வச்சிருக்கியே ஆத்தா ?—இப்படி கொடேன் !...

பொன்னம்மா வெட்கப்பட்டு அந்தப் படங்களைக் கொடுக்கப் பின் வாங்கும் போது, முத்து ஜோடிப் படங்கள் ஒட்டப்பட்டிருந்த அட்டையைப் பறித்துக் கொள்கிருன். பிறகு, படங்களைப் பார்த்ததும், அவனது முகம் மாறிச் சலனம் அடைகிறது.

பொன்னம்மா : (ஆர்வத்துடன்) பொருத்தம் பிரமாதமாக இருக்குதில்ல ?

முத்து : (ஏளனம்) படுபிரமாதம் !

அருணாசலம் : பலே பாண்டியா ! அப்படிச் சொல்லுடா !

பொன்னம்மா : அக்கரைச் சீமையிலே இருக்கிற அம்மான் மகள் பவளத்தை நீ இன்னம் ஒருவாட்டி கூட நேருக்கு நேர் பார்த்தது கிடையாது ! ஆத்தா காளி தயவிலே, தம்பி வையாபுரியும் தம்பி மகள் பவளமும் ஊர் மண்ணை மிதிச்சிட்டால், அப்பவே கொட்டு மேளம் கொட்டிப்புட வேண்டியதுதான் !

முத்து : ஏன் ? அம்மானையும் அம்மான் மகளையும் வர வேற்கவா, ஆத்தா ?

அருணாசலம் : நல்லாச் சொன்னேடா, தம்பி !

கோபமாகத் தன் கணவரைப் பார்க்கிறாள் பொன்னம்மா. மறுகணம், வாயைப் பொத்திக் கொள்கிறார் அருணாசலச்சேர்வை.

பொன்னம்மா : இல்லேப்பா, முத்து. உனக்கும் பவளத்துக்கும் கண்ணாலம் கட்டி வைக்கத்தான் கொட்டு மேளம் கொட்ட வேணுமாக்கும் !...

சிந்தனை வசப்பட்டு நிற்கின்றான் முத்து. தன்னை மறந்த லயத்தில் அவன் மெள்ள முணுமுணுக்க நேர்கிறது.

முத்து : (மெல்லியதொனியில்) பூரணி !

பொன்னம்மா : பூரணியா ? பூரணிதான் வெள்ளனவே வயல்காட்டுக்கு வண்டியிலே பூட்டிப் போயிடுச்சே, முத்து ?

முத்து வினயமாகச் சிரிக்கிறான்.

அப்போது, தபாற்காரரின் குரல் ஓடி வருகிறது.

தபால்காரர் : (மறைவில்) இந்தாங்க, தபால்!

அருணாசலச் சேர்வையை முந்திக் கொண்டு ஓடும் பொன்னம்மா தபாலை வாங்கிக் கொண்டு திரும்பி, தபாலை முன்னும் பின்னும் பார்த்து விட்டு, உறையைக் கிழிக்கிறாள். கடிதத்தையும் முன்னும் பின்னும், மேலும் கீழுமாகப் பார்த்து விட்டு, மௌனமாகத் தலையைத் தொங்கப் போட்டபடி, அதைத் தன் கணவரிடம் நீட்டுகிறாள்.

அருணாசலம் குதிக்கிறார்.

அருணாசலம் : ஏலே பொன்னம்மா, என்னோட்டம் நீயும் குதி! முத்து, நீயும் குதிப்பா!

பொன்னம்மா : என்னுங்க சொல்லுது காகிதம்?

முத்து : (குறுக்கிட்டு) சுரக்காய்க்கு உப்பு இல்லேன்னு செப்புது!

அருணாசலம் : அடியே பொன்னம்மா! உன் மகன் பொய் சொல்லுறான்!... அடுப்படிச் சங்கதி இல்லே இது! அக்கரைச் சீமைச் சங்கதி! உன்னோட தம்பி சீமான் வையாபுரிச் சேர்வையும் தம்பி மகள் பவளக் கொடியும் பதினறு வருசம்

கழிச்சு, வார வெள்ளிக்கிழமைக் கெடுவுக்கு நம்ப மாங்குடி மண்ணை மிதிக்கப் போறாங்க !

பொன்னம்மா : அப்படியா ? அடி, சக்கை !

அருணாசலச் சேர்வை தன் மனைவியின் தலையில் அடிக்கிறார்.

பொன்னம்மா தன் கணவரை முறைத்துப் பார்த்ததும், அவர் பெட்டிப் பாம்பாக அடங்குகிறார்.

முத்து : (உதட்டைப் பிதுக்கி) ப்பூ... இம்புட்டுத்தானா சங்கதி ?

அருணாசலம் : மகனே, முத்து !...

பொன்னம்மா : ராசாவே, முத்து !...

முத்து : (சோகமாக) உங்க முத்துதான் இந்தாலே இருக்கேனே ?...சரி, சரி. நீங்க உங்க சந்தோஷத்தைக் கொண்டாடுங்க ! நான் வர்ரேன் !...

பெற்றோர்கள் மலைக்கின்றனர்.

முத்து அங்கிருந்து நகரும் போது, அவனது இதழ்கள் பெருமூச்சுடன் பூரணியின் பெயரை உச்சரிக்கின்றன !

திரை

காட்சி: 7

காளிகோயில் ; பகல்.

மணியோசை முழங்கிட, தீபாராதனை நடக்கிறது.

காளி புதிர்ச்சிரிப்புடன் தரிசனம் தருகிறாள் !

சேரிப் பெண்களோடு குளித்து விட்டு' காளிகோயிலின் சந்நிதியில் வந்து நின்று வணங்குகிறாள் பூரணி.

அப்போது, தலையில் முண்டாசுடனும் தோளில் ஏர்க் கலப்பையுடனும் முத்துவும் வந்து கும்பிடுகிறான்.

முத்துவும் பூரணியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளுகின்றனர். ஆனால், பூரணியோ வேதனையோடு முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள். அவளது அன்புப் பார்வைக்காக ஏங்குகிறான் முத்து.

பூசாரி விபூதி குங்குமத்தை முத்துவுக்கு மட்டும் கொடுக்கிறார். ஆனால், பூரணி முதலிய பெண்களை ஒதுக்கி விடுகிறார். இந்த வித்தியாசத்தைக் கவனித்த முத்து மனம் கொதிக்கிறான். அவனே விபூதி மடலை எடுத்து பூரணி முதலியவர்களுக்குக் கொடுக்க எண்ணும் போது, அவனை முந்திக்கொண்டு பூரணி கோயிலின் உள்ளே நுழைந்து, விபூதி பிரசாதத்தை எடுத்து, தானும் பூசிக் கொண்டு, தன் தோழிகளுக்கும் கொடுத்துக் கொண்டு வரும் போது, முத்துவின் நீட்டிய கரங்களிலே, அவள் —பூரணி கொடுத்த விபூதி குங்குமம் சிதறுகிறது.

முத்து மகிழ்வுடன பூரணியை நோக்கிய படியே விபூதி குங்குமத்தை நெற்றியில் இட்டுக் கொள்கிறான்.

பூசாரிக்கு அழகு காட்டி விட்டு, பூரணி தோழிகளுடன் புறப்படுகிறாள்.

திரை

காட்சி: 8

தெரு; காலை.

அக்கரைச் சீமையிலிருந்து வெள்ளி யன்று ஊர் திரும்பவிருக்கும் சீமான் வையாபுரிச் சேர்வையைப் பற்றியும் அவருடன்வரவிருக்கும் அவரது மகள்—தாயில்லாப் பெண் பவளக் கொடியைப் பற்றியும் இருவர் பேசிக் கொள் கிறார்கள்.

இடுப்பில் கூடையைச் சுமந்து வரும் பூரணி, அவர்களின் பேச்சை ஒதுங்கி நின்று கேட்கிறாள்.

வேலன் : ஏலே, பொன்னையா! உனக்குச் சேதி தெரியுமா ?

பொன்னையா: கேப்பையிலே நெய் வடியிற சேதியாடா, வேலா ?

வேலன் : வெண்ணெயிலே நெய் வழிகிற சேதிடா இது !

பொன்னையா: ஆத்தாடி ! அதிசயமாயிருக்குதேடா ! ஊம்ஃ.. சொல்லுடா, வேலா !

வேலன் : நம்ப மாடிவீட்டு ச் சீமான் வையாபுரிச் சேர்வை இருக்கிருர், இல்லேயா ? ...

பொன்னேயா : (குறுக்கிட்டு) அந்தச் சீமான்தான் இப்ப நம்ப ஊரிலேயே இல்லேயே ? சீமான் வையாபுரிச் சேர்வைதான் அக்கரைச் சீமைக்குப் பதிஞ்சு ரொம்ப ரொம்பக் காலமாயிடுச்சாமே ?

வேலன் : வாஸ்தவம்தான். அந்த நாளேயிலே ராம பிரானேட வனவாசத்துக்கு எண்ணிப் பதிஞறு வருசம்தான் தேவைப்பட்டுச்சாம் ! ஆனு, இப்ப நம்ப ஊர்ச் சீமான் வையாபுரிச் சேர்வைக்கு அக்கரைச் சீமையிலே யிருந்து பிறந்த மண்ணே மிதிக்கப் பதிஞறு வருசம் தேவைப் பட்டிருக்குது !

பொன்னேயா : அடே, அதிசயக் கூத்தா இருக்கே ?

வேலன் : மெய்தான், பொன்னேயா ; வையாபுரிச் சேர்வை தன் அருமை மகளோடே வார வெள்ளிக் கிழமை நம்ப ஊருக்கு வந்து சேர்ந்திடுவாராம் !

பொன்னேயா : ஆமா, சேர்வையேட சம்சாரம் வரல்லியா ? அவங்களுக்கு மட்டும் ‘விசா’ கிடைக்கலேயாமா?

வேலன் : பாவம், சேர்வையோட பெண்சாதி மங்களம் அக்கரைச் சீமையிலேயே அப்பவே மண்டை யைப் போட்டுப்புட்டாங்களாம் !

பொன்னேயா : அட, பாவமே !

வேலன் : பாவ புண்ணியத்தோட ஐந்தொகைக் கணக் கைப் பார்க்கிறதுக்கு அற்ப மனுசங்களான நமக்கு வயசு காணுதுடா, பொன்னேயா!

அங்கிட்டு மேற்காலே கேணியடிப்பக்கம் பாரேன்! பெண்டுகளும் ஆம்பிள்ளைங்களும் கூடிக் கூடி வையாபுரிச் சேர்வைகாரரோட வருகையைப் பற்றித்தான் பேசிக்கிட்டு இருக்காங்க ... வெள்ளிக் கிழமை விடிஞ்சதும் நம்ப மாங்குடிக் கிராமமே தேர்த் திருவிழா பட்ட பாடாய் திமிலோகப்படப் போகுது, பாரேன், பொன்னையா !

பொன்னையா: அது சரிடா, வேலா ! சீமான் வையாபுரிச் சேர்வை பதினறு வருசமாய் அக்கரைச் சீமையிலேயே, பிறந்த ஊரைப் பற்றி ஞாபகமே இல்லாமல் எப்படி இருந்திட்டாராம் ?

வேலன்: ரிஷி மூலம் நதி மூலம் பார்க்கப் படாதின்னு சொல்லுவாங்க. அது மாதிரிதாண்டா பணக்காரங்க சங்கதியும் !...பதினறு வருசம் தாண்டி சீமான் வையாபுரி நம்ப ஊர்மண்ணை மிதிக்கப் போருர். அந்த அளவிலே நமக்கும் பொழுது போக—பொழுதைப் போக்க ஒரு சந்தர்ப்பம் வந்திடுச்சிடா ! வாடா, போவோம் !

பூரணி அந்தப் பக்கம் போகிருள். சலங்கை மணிச் சத்தம் கேட்கிறது.

பொன்னையா: (திரையை நீக்கியபடி) வேலா, வேலா ! அங்கே பாருடா ! பூரணி சலங்கை குலுங்கக் குலுங்க நடந்து போவது ! — அது மேயப் போவுதோ?

வேலன்: (சிரிப்புடன்) அட, பைத்தியக்காரா ! அந்தப் பூரணிதான் மேயப் போவுது ! ஆறு, இந்தப் பூரணி குளியலுக்குப் பறியுது !...

பொன்னையா: ஒங்கோ !......யானை வரும் பின்னே, மணி யோசை வரும் முன்னே என்கிற கதை இந்த ரெண்டு பூரணிக்குமே பொருந்துதாங் காட்டி?...பலே, பலே !...

வேலன் : ஆமா, இந்தப் பூரணிக் குட்டியோட கதையும் காரணமுமே அலாதியாக்கும் !...

பொன்னையா: சுத்தமான தாக்கல்தான் !

வேலன் : எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்குமின்னே மட்டுப்படலேயே ?...

பொன்னையா: ஆமா, விதி எல்லாத்தையும் ஒரு நாளைக்கு மட்டுப்பட வச்சேதான் தீரும், வேலா !

வேலன் : ஆமா, நம்ம முத்து விதியையும் மிஞ்சிடுவான் போலத் தோணுதுடா, பொன்னையா ! சரி, சரி. வா, போகலாம் !

இருவரும் நடக்கின்றனர்.

திரை

காட்சி: 9

மீனாட்சியின் குடிசை : அந்தி.

மீனாட்சி அரிசி புடைக்கிறாள். பாத்திரங்கள் உருளும் சத்தம் கேட்டு, உள்ளே போய்ப் பூனையை விரட்டி விட்டு மீள்கிறாள். அது சமயம், பூரணி வந்து கூடையை இறக்கி வைக்கிறாள். ஒரு குவளை தண்ணீரைப் பானையினின்றும் எடுத்துக் குடிக்கிறாள்.

மீனாட்சி : (ஆர்வமாக) ஆத்தாடி! விசாழச் சந்தை லாவாரம் நாம போட்ட புள்ளிக் கணக்குப்படி வசமாய் நடந்திச்சா?

பூரணி : (புன்சிரிப்பு) ஓ! மகமைக் காசு குடுத்திட்டு ஆலமரத்துத் தூரடியிலே குந்தினேனோ இல்லையோ, அம்புட்டுத் தக்காளிக் கூறுங்களும் ஆலாய்ப் பறந்திடுச்சு, ஆத்தா!

காசுப் பையை உலுக்குகிறாள்.

மீனாட்சி : (சிரிப்புடன்) ஆத்தாடியோ! எல்லாத் தக்காளியும் பறந்திடுச்சின்னு, அப்பாலே உன்

ஞேட சுருக்குப்பையிலே எப்படி இம்புட்டுக் காசு பணம் குலுங்குதாம் ?

கைகொட்டிச் சிரிக்கிருள் மீனுட்சி.

பூரணி : (வெட்கம்) போ, ஆத்தா !

மீனுட்சி : ஊம்...!

மீனுட்சி புறப்பட முயல்கிருள்.

பூரணி : விளையாடுறே நீ !

தாயைக் கரம் பற்றி உட்கார வைத்து, அவிழ்ந்து பறந்து கொண்டிருக்கும் தலை முடிகளைக் கோதி விடுகிருள்.

மீனுட்சி : ஆமா, பூரணி. விதி என்னேடே விளையாடுது! நான் உன்னேடே விளையாடுறேன் ! நமக்கும் வேறே விதி இல்லை ! விதிக்கும் வேறே நாதி இல்லை !

பூரணி : (ஆசையுடன்) ஆத்தா, ஆத்தா ! இந்த ஊரைச் சேர்ந்த பெரிய புள்ளி ஒண்ணு அக் கரைச் சீமையிலேருந்து வார வெள்ளிக் கிழமைக்கு இங்கிட்டாலே வந்து குதிக்கப் போகுதாம் ! அந்தச் சீமானும் அவர் பொண்ணு பவளக் கொடியும் வரப் போருங் களாம் !

மீனுட்சி : யார் வந்தா, யார் போறு, நமக்கென்ன ? இதைக் கேளு, பூரணி : இந்த ஊரிலே இருந்து பொழைக்கறதுக்கு எத்தனையோ பேர் வெளிநாட்டுக்குப் போவங்க, வருவாங்க

இது சகஜம் தான்! சரி, விசயத்தைச் சொல்லு.

பூரணி: ஊம்... இது சொல்லித் தெரிய வேண்டிய விசயந்தான். அந்தப் பெருந்தனக்காரர் அக்கரைச் சீமையிலேயே பதினறு வருசம் குந்தியிருந்திட்டு, இப்பதான் ஏத்திருக்க மனசு வந்து, புறப்பட்டு வாராராம்! பாவம், அவரோட பொண்டாட்டி அங்கேயே காலாவதி ஆயிடுச்சாம்!

மீனுட்சி: (அதிர்ச்சியும் அனுதாபமுமாக) பாவம்!...

பூரணி: எதுக்கு ஆத்தா பாவம்? அந்தச் சீமான் இம்புட்டுக் காலம் கழிஞ்சு வாரதுக்காவா?

மீனுட்சி: போடி, குறும்புக்காரி! அந்தச் சீமானுடை பெண்சாதி செத்துப் போயிட்டதாகச் சொன்னியே, அதுக்காகத்தான் பாவம்னு அனுதாபப் பட்டேன்! நல்லவங்களைத்தான் காளி சோதிப்பா போலே!

பூரணி: அது சரி. வரப்போற சீமான் பேர் என்னுன்னு நான் சொன்னேன்?

மீனுட்சி: நீ சொன்னுல்தானே நான் திருப்பிச் சொல்ல?

பூரணி: (நெற்றியைப் பற்றிச் சிந்தித்தபடி) கந்தசாமி· கோவிந்தசாமி, மன்னர்சாமி, மாரிசாமி...

மீனுட்சி: (அசட்டையுடன்) என்ன, வெறும் சாமி மயமாய் அடுக்கிக்கினே போறே, பூரணி?

பூரணி: (கிண்டல்) சாமிங்களெல்லாம் தான் கோயிலை விட்டு ஓடி, இது மாதிரி மனுசங்களோடே

கூட்டுச் சேர்ந்திறிச்சில்லே, அதான் வெறும் சாமிமயமாய்ப் போச்சு பேரெல்லாம்!

மீனாட்சி : (துடிப்பு) அது தொலையுது. நீ பேரைச் சொல்லேன்!

பூரணி : ஆமா!...வையாபுரி சேர்வை!...

மீனாட்சி : (திகைப்புடன்) ஆ!..வையாபுரி சேர்வையா...?

பயங்கரப் பின்னணி இசை ஒலிக்கிறது. அன்னையின் அதிர்ச்சி கண்டு புதல்வி குழம்புகிறாள்.

ஆனால், மீனாட்சி சமாளித்துக் கொள் கிறாள்.

பூரணி : வையாபுரி—அப்படின்னு அந்தப் பேரைச் சொன்னதும், ஏன் ஆத்தா நீ மலைச்சிட்டே?... சீமான் வையாபுரியைத் தெரியுமா உனக்கு?

மீனாட்சி : (பதைப்புடன் கைகளை விரித்து) எனக்கு எப் படித் தெரியும், பூரணி?...

பரிதாபமாக மகளை ஏறிட்டுப் பார்க் கிறாள் மீனாட்சி.

பூரணி : ஊரிலே எந்தப் பக்கம் திரும்பினாலும் அந்த ஆளைப் பற்றித்தான் பேசிக்கிடுறாங்க! எந்த ஆளைப் பற்றி?...

மீனாட்சி : அந்த ஆளைப்பற்றி!...

பூரணி : (சிரிப்புடன்) அந்த ஆள் பேர் என்னான்னு சொன்னேன்? அதுக்குள்ளாற மறந்து பூடுச்சே உனக்கு?

மீனாட்சி : (அறுப்புடன்) என்னவோ ஒரு பேரு!

வெட்கம் காட்டுகின்றாள் மீனாட்சி.

பூரணி : என்னமோ, புருசன் பேரைச் சொல்லப்போற தாட்டம் வெட்கப்பட்டு, பிரமாதமாய் மலுக்கிக் க்டுறியே, ஆத்தா! வந்து...என்னவோ ஒரு பேரு!...நல்ல காலம் பதினெட்டாம் பேர் இல்லே!... ஆ...நினைப்பு வந்தாச்சு! வையா புரி! சும்மா வையாபுரி இல்லே! சீமான் வையாபுரியாம்!

மீனாட்சி : (அடக்குகிறாள்) ஊஸ்... பெரிய இடத்து விவ காரம் நமக்கெதுக்கு, ராசாத்திக்குட்டி!

சிரிக்கிறாள் மீனாட்சி.

பூரணி : என்ன ஆத்தா, நீ பாட்டுக்குச் சிரிக்கிறே?

மீனாட்சி : ஏழைங்களுக்கு அழ மட்டும் தான் உரிமை யுண்டா, என்ன? ஏழைகளோட சிரிப்பிலே தெய்வத்தைக் காணுற நம்மோட ராசாங்கத் திலே, சிரிக்கிறதுக்கு என்ன தடை பூரணி? சரி, சரி; வா, கஞ்சி குடிப்போம்!

பூரணி : இந்தா வந்திடுறேன், அது சரி. சீமான் வையா புரி பதினாறு வருசம் கழிஞ்சு திடுதிப்னு இந்த ஊருக்கு முன்னே வெள்ளிக்கிழமை குதிக்கப் போறதாட்டம், என்னோட அப்பாவும் ஒரு சனிக்கிழமையிலே யாச்சும் தொபுகடீர்னு வந்து குதிச்சிடுவாரில்லையா?

குழந்தைத்தனமான குதூகலத்துடன் கேட்கிறாள் பூரணி.

மீனாட்சி : (கலக்கத்துடன்) ஓ! கட்டாயம் உன் அப்பா என்னிக்காச்சும் ஒரு நாளைக்கு வந்து குதிச்சிடு வார், ஆத்தா!

அப்போது, செவ்வானத்தில் ஒரு நட் சத்திரம் மின்னுகிறது!—பூரணி சின்னப் பெண்ணெனக் குதித்து மகிழ் கிறாள்.

பூரணி : பலே, பலே! எனக்கும் ஒரு அப்பா வந்திடு வாங்க! ஊர் நாட்டிலே ஈரமில்லாமல் ஏசிப் பேசுறதாட்டம், அப்பாலே, நான் அப்பன் பேர் தெரியாத சென்மமாக இருக்கமாட்டேன்! எனக் குள்ள என் அப்பன் என்னைத் தேடி ஒரு நாளைக்குக் கட்டாயம் வந்து சேர்ந்திடு வாங்க!...என்னைப் பெற்ற அப்பன் வந்து சேர்ந்தாச்சின்னாத்தான், காளியம்மன் வெறும் கல் இல்லேன்னு அர்த்தம்! ஆமா, ஆத்தா!

மீனாட்சி : (குரல் கம்ம) ஆமா, உண்மை தான், பூரணி. மெய்யாலுமே நாம நம்பிக் கும்பிட்டு வருற காளி இனி கல்லே இல்லே, பூரணி...நமக் குள்ள மான ரோசம் ஆத்தாளுக்கும் இருக் காதா, என்ன? இனி நீ அப்பன் பேர் தெரி யாத பூரணியாக இருக்க வேண்டியதில்லேடி, கண்ணே!

பூரணி : (ஆர்வம் பொங்க) அப்படியா, ஆத்தா?... அப்படியானால், என்னோட அப்பா பேர் என்ன வாம்? சல்தியாச் சொல்லு, ஆத்தா!...

ஆர்வத் துடிப்போடு தாயின் கன்னங் களைச் செல்லமாகத் தடவி விடுகிறாள் பூரணி.

மீனாட்சி : (நாணம்பூக்க) அந்தப் பேரை நான் சொல்ல லாமா, பூரணி?

பூரணி : (காகிதம், பென்சிலை நீட்டி) நீ உன் வாயாலே உன் புருசன் பேரை—என் அப்பன் பேரைச் சொல்லவேணும். இந்தா, பென்சல்! இந்தா கடுதாசி! எழுதிக் காட்டு!

மீனாட்சி : (பதட்டத்துடன்) பூரணி, உன் அப்பாபேரை நானே உன் கிட்டே தெரிவிக்கக் கூடிய காலம் சீக்கிரத்திலேயே வரும். அது மட்டுக்கும் என் பேச்சை நம்பிக்கிட்டுப் பொறுமையா இருடி, ராசாத்திக்குட்டி!

பூரணி : (ஏமாற்றத்துடன்) விடுகதை போடுறியே, ஆத்தா?

மீனாட்சி : (ஏக்கத்துடன்) விதிதான் விடுகதை போடுது, மகளே!

பூரணி : (ஆத்திரத்தோடு) விதியாவது மண்ணாங்கட்டி யாவது!...

கையிலிருந்த காகிதத்தைச் சுக்கல் சுக்க லாகக் கிழித்து வீசுகிறாள் பூரணி.

'விதியின் எழுத்தைக் கிழித்தாச்சு' எனப் பின்னணி இசைக்கிறது!

திரை

காட்சி: 10

கிராமத்தின் முச்சந்திப் பகுதி ៖ மாலை வேளை.

புரட்சி வாலிபன் முத்துவும், அவனுடைய பட்டணத்துத் தோழனை 'டைமண்ட்' என்கிற வைரமும் கழைக் கூத்தைப் பார்த்து ரசித்து விட்டு, நிலக் கடலையைக் கொரித்துக்கொண்டே திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

வைரம் ៖ தோழரே! கம்பின் உச்சியிலே நின்னுக்கினு உயிரைத் திருணமா மதிச்சு, எப்படி எப்படியெல்லாம் ஜாலக் செஞ்சான் அந்தக் கழைக் கூத்தாடி! படா தமாஷா இருந்திச்சில்ல?...

முத்து ៖ அந்த ஜீவமரண விளையாட்டு உனக்குத் தமாஷாகவா இருந்திச்சு? சாண் வயிற்றுக்காக அந்தக் கழைக் கூத்தாடி உயிர்க் கழுவிலே நின்று விளையாடிக் காட்டினதைப் பார்க்கப் பார்க்க, எனக்கு மூச்சே நின்னிடும் போல ஆயிடுச்சப்பா, வைரம்!

உடனே முத்துவின் இருதயத்தில் வைரம் கையை வைத்துப் பார்க்கிறான்.

வைரம் : ஐயையோ! இப்பத்தான் உன் மூச்சு வேலை நிறுத்தம் செய்யாமல் படுதமாஷா ஓடிக்கிணே இருக்குதேப்பா, முத்து?...தோழரே, உங் கையிலே 'ரெட்லைட்—அதாகப்பட்டது, சிவப்பு விளக்கு இருக்குதா? (தன் பாண்ட் பையி லிருந்த டார்ச் லைட்டை எடுத்துப் பொருத்தி வெளிச்சத்தைப் பரவச் செய்து விட்டு) எங் கையிலே வெள்ளை விளக்குத்தான் இருக்கு!...

முத்து : சிவப்பு விளக்கு எதுக்கு அப்பனே வைரம்?

முத்து : உனக்கு ஒரு அபாய அறிவிப்பு சொல்லிக்காட்ட வேணும். அதுக்கோசரம் தான் சிவப்பு விளக் கைத் தேடினேன். காம்ரேட்! நீங்க எப்பப் பார்த்தாலும் எதுக்கெடுத்தாலும் யார் பேரிலே வேணும்னாலும் இரக்கப்படுறீங்க! ...... இரக் கம் ஒரு விலங்காக்கும்! ஜாக்கிரதை!...

முத்து : இரக்கம் ஒரு பூவிலங்கு அப்படின்னு நீ சொல் லியிருக்கவேணும். பூவின் மணத்திலே விலங் கின் சுமையை மறக்கப் பழக்கிடுகிறது தான் மனிதாபிமானத்தின் கடமை. அதுவே மனிதத் தன்மைக்குரிய லட்சணமாக்கும்! சரி, சரி, சீக்கிரம் வா, போகலாம்! அந்திக் கட்டிலே மாடுங்களெல்லாம் வீடு திரும்பி எனக்காகக் காத்துக் கிட்டிருக்கும்!

வைரம் : ஈவினிங் டி.·.பனுக்காகவா ?

சிரித்தபடி பாடத் தொடங்குகிறான் :

'மேரா தில்ரூபா!...'

வைரம் பாடிக் கொண்டிருக்கும் போதே, தண்ணீர்க் குடம் ஏந்தி, பூரணி தனி வழியே நடந்து வருவதைக் கண்டதும், விக்கல் எடுப்பதாக நடிக்கிறான்.

முத்து : கொஞ்சமுந்தி நல்லாத்தானே இருந்தே? இப்ப திடுதிப்னு என்ன வந்திடுச்சு?

வைரம் : விக்கல் வந்திடுச்சு விக்கல்!

கண்கள் செருகிக் கொள்வது மாதிரி நடிக்கிறான் முத்து.

இக் காட்சியைக் கண்டும், காணாதது மாதிரி நடக்கிறாள் பூரணி.

முத்து : வைரம்! வைர நெஞ்சம் வேணும், வைரம்!

வைரம் : இப்போ எனக்குத் தண்ணி வேணும், முத்து!

முத்து : தண்ணி! தண்ணி!...

பூரணி நடந்து செல்வதைக் காணும் முத்து அவளுக்குக் குறுக்கே மறித்து நிற்கிறான்.

பூரணி : (கோபமான துடுக்குடன்) உங்களை மாதிரி பணக்காரச் செல்லங்கள் எங்களை மாதிரி நாதியற்ற ஏழைக் கன்னிப் பொண்ணுங்க கிட்டே முதலிலே, தண்ணி கேட்பீங்க! அப்பாலே, காதல் பண்ணுவீங்க! ஆசையும் காட்டுவீங்க! நம்பினால், டபார்னு மோசம் பண்ணிட்டு, பேயாட்டம் மாயமாய் மறைஞ்சிடுவீங்க, இந்தக் கண்ணாவிக் கதையை எல்லாம் நான் பயாஸ்

கோப்பிலே ஆயிரம் வாட்டி பார்த்துப் புட்டே ருக்கும்! சரி, சரி! வழியை விடுங்கய்யா!

முத்து திகைக்கிருன். வைரம் வாயைப் பிளக்கிருன்.

வைரம் : யாரப்பா அந்தப் பட்டிக் காட்டுக் குட்டி ?

முத்து : ஊஸ் !... அது நெருப்பு ! சத்தம் போடாதே!

வாயை மூடிக் கொண்டு, வைரம் நெருப் பைத் தீண்டின மாதிரி நடுங்கித் தவிக் கிருன். வாயைத் திறக்க முயற்சி செய் தும், பலனில்லை !

திடீரென்று சைக்கிள் மணிச் சத்தத் தைத் தொடர்ந்து, "ஆ!" என்னும் அலறல் சத்தம் எதிரொலிக்கிறது.

திரும்பிப் பார்க்கிருர்கள் தோழர்கள்.

பூரணியின் இடுப்புக்குடம் நழுவி விழு கிறது.

வைரம் அந்தக் குடத்தை எடுத்து இடுப் பில் வைத்துப் பார்க்கிருன்.

அப்போது, குடிப்போதையில் தன் மீது சைக்கிளை மோதி விட்டுத் தடுமாறி நின்ற முரடன் ஒருவனைக் கன்னத்தில் அறைந்து விடுகிருள் பூரணி.

முத்து : சபாஷ் பூரணி, சபாஷ் !...

(கைதட்டியபடி) அமரகவி பாரதியாரோட புதுமைப் பெண்ணேயும் புரட்சிக்கவி பாரதி தாசனுரோட தமிழச்சியையும் உன் வடிவத் திலே காண்கிறேன், பூரணி ! ஆகா !...

பூரணி நாணம் பேணுகின்ருள் !

வைரம் தன் தோழன் முத்துவையும், பூரணியையும் மாறி மாறிப் பார்த்து விழிக்கிருன்.

பூரணியை முரடன் செங்கோடன் தாக்க முனேயவே, முத்து குறுக்கிட்டு அவனேத் தாக்குகிருன்.

முத்து : நெருப்பு சுட்டுமா உனக்குப் புத்தி திரும் பல்லே ?

செங்கோடன் : என்னமோ, கட்டின பொண்டாட்டி யைக் கையைப் பிடிச்சு இழுத்ததாட்டம்தான், துரை ஊர்பேர் தெரியாத அனுமத்துக் குட்டிக் காகப் பரிஞ்சுக்கிட்டு வர்ருரு !...

முத்து : (குடத்தை நண்பனிடமிருந்து வாங்கி பூரணி யின் கையில் ஒப்படைத்து.) பூரணி, நீ புறப் படு !...அடிபட்ட நாய் குலேச்சுக்கிட்டுத்தான் இருக்கும் !

நாய் குரைக்கும் சத்தம் கேட்கிறது.

பூரணி திரும்பி முத்துவை அன்புடன் பார்த்துக் கொண்டே, குடத்துடன்

திரும்ப முனைந்தவள் டக்கென்று நின்று விடுகிறாள்.

பூரணி : தண்ணி !...தண்ணி கேட்டீங்களே? ... இந் தாங்க !...

முத்து அன்புடன் அவளை ஊடுருவிப் பார்த்து, அவள் சாய்த்த குடத்தி னின்றும் வழிந்த தண்ணீரை கையேந்தி வாங்கிக் குடிக்கிறான்.

பூரணியும் முத்துவும் ஒருவரையொருவர் ஆழமாகப் பார்த்துக் கொள்கின்றனர்.

முத்துவும் வைரமும் நடந்து செல் கிறார்கள்.

முத்து : போயிட்டு வாரேன், பூரணி !

பூரணி : (வெட்கம்) ஊம் !...(அவர்கள் மறைந்ததும்) மு...த்...து !...

மெல்லிய குரலில் சொல்கிறாள். உடனே வெட்கம் வந்து, நாக்கைக் கடித்தபடி நடக்கிறாள் பூரணி.

திரை

காட்சி: 11

மற்ஒெருரு தெரு : அந்தி மாலை.

ஏற்றப்பாட்டின் ஒலி கேட்கிறது.

" மண்ணை நம்பி—ஏலேலோ !
    மரம் இருக்கு—ஐலேசா !"

இந்தப் பாட்டின் ஒலி வாத்திய இசை களின் மூலம் கேட்கிற நல்லது.

நடந்து வந்து நிற்கிறார்கள் முத்துவும் வைரமும் ! டக்கென்று நின்று, எங் கேயோ எதையோ பார்க்கிறான் முத்து. பிறகு திரும்பிப் பார்க்கிறான்.

முத்து : என்ன தோழரே ! என்ன அங்கேயே அப்படிப் பார்க்கிறே?

வைரம் : ஒண்ணுமில்லே அண்ணாச்சி !...அந்த நெருப்பு போயிடுச்சான்னு பார்த்தேன். நெருப்பு பாட்டுக்கு நடந்து, அக்கம் பக்கத்திலே தீ பிடிச்சாச்சின்னா, இந்தப் பட்டிக் காட்டிலே தீயை அணைக்கக் கூட வழி இல்லையே?

முத்து: ஏன் இல்லே வைரம்? நாடெங்கும் பசுமைப் புரட்சி கொழிச்சுக்கிட்டு இருக்கிற இந்த நல்ல நேரத்திலேயா நீ இப்படிக் கேட்கிறே? நெருப்புப் பிடிச்சால் கேணி குளத்திலே தண்ணி நிரம்பிக் கிடக்குதப்பா!

வைரம்: அப்படியா? சந்தோஷம்! ஆமா, அந்தப் பொண்ணு பூரணி யார்?

முத்து: அநதப் பொண்ணுதான் பூரணி! பூரணி ஒரு பொண்ணு!

வைரம்: (அசட்டுச் சிரிப்புடன்) பூரணி அம்மா இருக்குதா, முத்து?

முத்து: (பெரிய தொனியில்) ஒ!

வைரம்: பேரு?

முத்து: மீனாட்சி!

வைரம்: ஆல்ரைட்! அதோட அப்பா பேர் என்ன?

முத்து விழிக்கிறான்.

முத்து: (திணறுலுடன்) வந்து...

வைரம்: வந்தும் ஆச்சு; போயும் ஆச்சு. குட்டி பட்டா இல்லாத வயலா?

முத்து: சே! அப்படியெல்லாம் இரக்கமில்லாமல் சொல்லாதே!

அப்போது சேரிச் சிறுவன் குறுக்கிட்டுக் கண்டிக்கிறான்.

சேரிப்பையன் கறுப்பன் : இந்த ஊரிலே எங்க அக்கா ளுக்குக் காணியாட்சிப்பட்டா இருக்குது. எங்க அக்காளோட அப்பா அக்கரைச் சீமைக்குப் போயிருக்காங்க ! வந்திடு வாங்க !

வைரம் : ஓகோ, நாளைக்குக் கப்பலேறி வரப் போகும் திருவாளர் வையாபுரிச் சேர்வையோடே வந் திடுவார் போலிருக்கு பூரணியின தகப்பனர் ! வரட்டும், வரட்டும் !

திடீரென்று பேச்சை நிறுத்தி விட்டு வட புறம் பார்வையைச் செலுத்தி, கை விரலைக் கொண்டு ஒவ்வொன்ருக எண்ணுகிருன் வைரம் :

ஒண்ணு, ரெண்டு, மூணு, நாலு, ஐந்து, ஆறு......அட கடவுளே ! மிச் சத்தை எண்ணி முடிக்கிறதுக்குள்ளாற அந்தப் பட்டாளம் மறைஞ்சிருச்சே !

முத்து : என்னப்பா அது?

வைரம் : பட்டாளம் ஒண்ணு !

முத்து : பட்டாளமா? சமீபத்திலெ பாகிஸ்தான்காரன் களை ஓட ஓட விரட்டி அடிச்சுச்சே நம்மோட பட்டாளம் !—அதுவாப்பா?

வைரம் : அது இல்லே. ஆனா, இந்தப் பட்டாளத்தைக் கண்டிருந்தால், எப்பவோ பாகிஸ்தான்காரன் விழுந்தடிச்சிட்டு ஓடி மறைஞ்சிருப்பானுக்கும் !.,

முத்து : (எட்டிப் பார்த்தபடி) அவ்வளவு பயங்கரமான பட்டாளமா? நானும் தான் பார்க்கிறேனே !...

(எட்டிப் பார்த்து விட்டுச் சிரிக்கிருன்) ஓகோ... குளமங்கலம் குசேலரோட தம்பி பிள்ளேங்க தான் அந்தப் பட்டாளம் !

வைரம் : உனக்குத் தெரிஞ்ச பட்டாளம் தாளு? அப்படி யாளுல், ஒரு ஸ்மால் உதவி செய்யேன், முத்து !

முத்து : சொல்லேன் வைரம் !

வைரம் : இதைக் கொடுத்திடேன் !

சொல்லி விட்டு, கால் சட்டைப் பையி னின்றும் ஓர் அட்டையை எடுத்துக் காட்டுகிருன்.

அதில் சிவப்பு முக்கோணப் படம் காணப் படுகிறது.

முத்து : யூ ஆர் டு லேட் காம்ரேட், டயமண்ட் !

திரை

காட்சி: 12

குடிசை : வெளிப்பகுதி—நிலவு.

குடிசைக்கு வெளியே வாசலில் நிலவிலே குந்தியபடி தாய் மீனாட்சியும் மகள் பூரணியும் சாப்பிட்டு முடித்து, தட்டுக் களைக் கழுவிக் கொண்டிருக்கிறார்கள். பலமாக ஏப்பம் விடுகிறார்கள். உள்ளே வந்து பாய்களை உதறிப் போடு கிறார்கள்.

உள்ளே அகல் விளக்கு எரிகிறது.

மீனாட்சி : (எச்சரிக்கைக் குரலில்) ஆத்தா பூரணி! ஊர் உலகம் வர வர தடம் புரண்ட பாதையிலே நடக்கத் துணிஞ்சிடுச்சு. ஒரு வேளை, தெய்வம் மனுசங்களாட்டம் நடமாட ஆரம்பிச்சால், மனு சங்க தெய்வமாக மாற எத்தனிப்பாங்களோ, என்னமோ?

பூரணி : மனுசங்க தெய்வமாகலாம், ஆத்தா! ஆனா, தெய்வங்க மனுசங்களாக ஆக வேண்டாம்! ஏன் தெரியுமா, பூரணி...? அப்பாலே, தெய்வங்களுக்கும் மனுசங்களோட அற்பப் புத்திங்களெல்லாம் படிஞ்சிடுமே ?...

மீனாட்சி : பூரணி, இந்தச் சமுதாயத்திலே. ஆண்களுக்கு எத்தனைக்கெத்தனை சலுகைகள் அதிகமாக இருக்குதோ, அத்தனைக்கத்தனை நம்ப மாதிரி பொண்ணாய்ப் பொறந்த பாவச் சென்மங்களுக்குக் கட்டுத் திட்டங்கள் அதிகமாக இருக்குது !

பூரணி : நூற்றிலே ஒரு சேதி, ஆத்தா !

மீனாட்சி : ஆகச்சே, பொண்ணாய்ப் பொறந்தவங்க நெருப்பாய் விளங்கினால் மட்டும் போதாது !

பூரணி : பின்னே ?

மீனாட்சி : வயிற்றிலே நெருப்பையும் கட்டிக்கிட்டு இருக்க வேணுமாக்கும் !

பூரணி : சுத்தமான பேச்சு, ஆத்தா ! அந்தியிலே அந்தக் குடிகாரன் என்கிட்டே வசம் தப்பி நடந்துக்கிட்டான். நானும் ஆத்திரப்பட்டு அறைஞ்சுப்பிட்டேன். அந்த ஆள்...அது தான் ஆத்தா, அண்ணைக்குக் கூட நம்ப குடிசை வாசல் மறைவிலேருந்து வெளிக் கிளம்பிப் பறிஞ்சாரோ ஒரு வாட்ட சாட்டமான விடலை, அந்த ஆள் மட்டும் இல்லேன்னு, அந்தக் குடிகாரன் என்னை வம்புக்கு இழுத்திருப்பானாக்கும் !...

மீனாட்சி : போறான் குடிகாரப்பய மகன் !...பதினாறு வருசமாய் இந்த மாங்குடியையே ஒட்டுமொத்தமாய் கச்சை கட்டி எதிர்த்துப் போராடிக்கிட்டிருக்கிற இந்த மீனாட்சியோட அருமை மகள் நீ என்கிற துப்பு அந்தக் குடிகாரப் பயலுக்குத் தெரியாது போலே !...நம்ப ராசாங்கத்திலே

பூரண மது விலக்கு அமுலிலே இருந்துக் கிட்டிருக்குது! சட்டத்தின் பிடியிலே சிக்கின துக்கு அப்பாலேதான், இந்தக் குடிகாரன் களுக்கெல்லாம் சுயபுத்தி திரும்பும்!'' ஆமா, உனக்கு உதவி ஒத்தாசை செஞ்ச அந்தப் பிள்ளையோட பேர் என்னவாம், பூரணி?

பூரணி : (நாணம்) மு...

உடனே வெட்கம் வரவே, அந்த 'மு' என்ற முதல் எழுத்துடன் நிறுத்திக் கொண்டு விடுகிறாள் பூரணி. மகளின் காதல் வயப்பட்ட மனநிலை தாய்க்கு விளங்கி விடுகிறது!

மீனாட்சி : (கடுமை) பூரணி! இத்தப் பாழும் சமூகத் துக்கு முன்னே நான் ஒருத்தி கேள்விக் குறி யாக நிற்கிறது போதும்! ஆனா, நீ இதே சமூகத்தின் முன் நிலையிலே ஆச்சரியக் குறி யாக ஆக வேண்டியவள்! மறந்திட மாட்டியே, ஆத்தா?

பூரணி : (தழு தழுக்க) ஊஹூம்!...

மீனாட்சி : நம்ப பேரிலே அனுதாபம் காட்டியும் உனக்கு உதவி செஞ்சும் வந்த அந்த இளவட்டம் யாராய் வேணுமானாலும் இருக்கட்டும். அந்தப் பிள்ளைக்கு என்ன பேராய் வேணுமானாலும் இருக்கட்டும்! அதைப்பற்றி உனக்கோ, இல் லாங்காட்டி, எனக்கோ ஒண்ணும் அக்கறை கிடையாது! புரியுதா, மகளே?

பூரணி : (கம்மிய குரலில்) புரியுது, ஆத்தா, நல்லாய்ப் புரியுது!..

எனனவோ சொல்ல வாயெடுத்துத் தயங்குகிறாள் பூரணி.

மீனுட்சி : (அதட்டும் தொனியில்) என்ன, பூரணி?

பூரணி : அண்ணைக்குக் கண்ணுலம் கட்டிக்கிட்டுச்சே என் சிநேகிதி செண்பகம் அது, மதியத்திலே நீ தோட்டக் காட்டுப் பக்கம் கால் பாவினப்போ, இங்கிட்டு கால் கோலி வத்திச்சு. எனக்கு நேர்ந்த சங்கடத்துக்காக ரொம்ப ரொம்ப கிலேசப்பட்டுச்சு. அதுக்காக வாங்கியிருந்த கல்யாணப் பரிசான குங்குமச் சிமிழை அது கையிலே கொடுத்திட்டேன் !

மீனுட்சி : அப்பாலே என்னவாம்?

பூரணி : (தடுமாற்றம்) அப்பாலே... அப்பாலே...!

மீனுட்சி : (அதிகார தோரணை) ஊம், சீக்கிரம் சொல்லு, பூரணி !

பூரணி : நான் செண்பகத்துக்குப் பரிசு கொடுத்தாப் பிலே செண்பகம் எனக்குப் பரிசு கொடுக்கத் துடிக்குதாம் !

மகளை ஆதரவுடன் நெருங்குகிருள் மீனுட்சி.

மீனுட்சி : (பாசத்துடன்) உன்னை மாலையும் கழுத்து மாய் பார்க்கவேணும்னு எம்மாம் தொலைவுக்கு இந்தப் பாவி துடியாய்த் துடிச்சிக்கிட்டு இருக் கேன்னு உனக்கு எப்படி ஆத்தா தெரியும் ? அந்த அந்தரங்கம் அந்தக் காளிக்குத்தான் புரியும் !

பூரணி : காளி தான் கல்லாகிட்டாளே, ஆத்தா !

மீனாட்சி : ஊகூம்! காளி கல் ஆகல்லே! கல்தான் காளி யாகிட்டா!...

பின்னணி இசை முழக்கம்.

பூரணி கொட்டாவி விடுகிறாள்.

பூரணி : உனக்குத் தூக்கம் வந்திடுச்சா, ஆத்தா! சரி, சரி தூங்கு. அக்கரைச் சீமைச் சீமான் காலம்பற ஊருக்கு வரப் போறாராம்! வேடிக்கை பார்க்க வேணும்!

மறுபடி கொட்டாவி விடுகிறாள்.

மீனாட்சி : (சிரித்தபடி) நீ கொட்டாவி விடுறே. அதனாலே, உனக்குத் தூக்கம் வந்தாச்சின்னு அர்த்தம்! எனக்குத் தூக்கத்துக்கென்ன கேடு? ராவு படிச்சுப் பாதியிலே நிறுத்திட்ட கதைப் புஸ்தகத்தை வேணும்னா படி. கேட்டுக்கிடுறேன்!

பூரணி : ஆகட்டும்!

பூரணி 'புலந்திரன் களவு மாலை'யை எடுத்துப் புரட்டிப் படிக்கிறாள்—ராகம் போட்டவாறு:

" முத்திரை மோதிரத்தை
முருகுழலாள் தானெடுத்து,
கட்டழகன் மோதிரத்தைக்
கண்களிலே தானும் ஒத்தி,

பவித்திர மோதிரத்தைப்
    பைங்கிளியாள் தானெடுத்து,
கண்மணி நாயகரைக்
    காணேன் ஒருகாலும்!
மாது மணவாளன்
    வந்ததைப் பாரேனே!
பாராமல் போனேனே!
    பாவிநாள் ஆனேனே!"

பூரணி படித்துக் கொண்டிருந்த பாட்டு தடைப்படவே, மீனாட்சி திரும்பிப் பார்க்கிறாள். பூரணி அப்படியே பாயில் தலைசாயத்துப் படுத்து விடுவதை அறிகிறாள். உடனே மீனாட்சியும் படுத்துக் கொள்ளுகின்றாள்—கைகுவித்துத் தெய்வத்தை வணங்கிய பிறகு.

திரை

காட்சி: 13

குடிசை : உள்பகுதி; இருட்டு.

உட்புறப்பகுதியில் அகல் விளக்கு சன்னமாக எரிந்து கொண்டிருக்கிறது. பக்கத்திற்குப் பக்கத்தில் தாய் மீனாட்சி யும் மகள் பூரணியும் படுத்துறங்கு கிறார்கள்.

அப்போது புரண்டு படுக்கும் மீனாட்சி மெள்ள எழுகிறாள். மகள் குறட்டை விடும் சத்தம் கேட்டு, மெதுவாக நகர் கிறாள். உள்ளே ஓர் ஓரத்தில் இருந்த அடுக்குப் பானைகளை ஒவ்வொன்றாக இறக்கிக் கீழே வைக்கிறாள். பிறகு அடிப்பானையிலிருந்து புகைப்படம் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து, அகல் வெளிச்சத்திலே அதைப் பார்க் கிறாள். கண்ணீர் வழிகிறது.

மீனாட்சி : (தனக்குத்தானே) ராமர் வனவாசத்துக்குக்கூட பதினாலு வருசம் தான் தேவைப்பட்டுச்சு. ஆனா, உங்க மனசு இளகி மனம் திரும்பி ஊர்

திரும்புறத்துக்குப் பதினறு வருசம் ஆயிடுச் சுங்களே!... காளி ஆத்தா இனிமே கல் இல்லே! நீங்களும் அப்படித்தான்!... விடிஞ்சதும் நீங்க வந்திடுவீங்க. நீங்க வந்தாச்சின்னு, எனக்கும் நல்ல பொழுது விடிஞ்சிடும்! காளி ஆத்தா ளைச் சாட்சி வச்சு நீங்க பதினறு வருசம் முந்தி என் கழுத்திலே கட்டின தாலியோட தழும்பு உங்களோட ஆசைமுகத்தையும் நேச நினை வையும் சொல்லிச் சொல்லிக் கேட்டு, அந்த இன்ப நினைப்பிலேயேதான் நான் இந்தப் பதினறு யுகத்தையும் கழிச்சேன் என்கிற கசப்பான தகவலை நீங்க எப்படி அறிய ஏலு முங்க?... என் நெஞ்சைத் தொட்ட நீங்க என்னைத் தொட்டுத் திருப்பூட்டினீங்க, இல்லையா, மச்சானே? அதுக்கு ஆத்தா காளி சாட்சி இருக்காதானுங்களே? ஆனு, பாழாய்ப் போன இந்த ஊர்ச் சனங்க காளியையும் நம்பாமல், என்னையும் நம்பாமல், என்னோட தாலிக்குச் சாட்சி கேட்கிறுங்களே?—நீங்க இல்லாமல், சாட்சிக்கு எங்கிட்டுப் போவேன் நான்? காளியும் கல்லாகிட்டா இதுவரை! ஆனதாலே ஈவிரக்கமில்லாத ஊரோட ஏச்சுக் கும் பேச்சுக்கும் ஆளாகிட்டேன் நான் என்கிற துப்பை நீங்க அறிவீங்களா?...

என்னவோ சத்தம் கேட்கவே, பதறிப் போய்த் திரும்புகிருள் மீனுட்சி. பூரணி படுக்கையில் எழுந்து உட்கார்ந் திருப் பதை அறிந்ததும், திடுக்கிடுகின்றுள். உடனே அந்தப் புகைப் படத்தை மறைக்க முயற்சி செய்கிருள் மீனுட்சி

பூரணி : இன்னம் நீ தூங்கலேயா ஆத்தா? ஆத்தா, யார் படம் அது?

மீனாட்சி மௌனம் சாதிக்கிறாள். பெரு மூச்சு விட்டபடி விளக்கை நிறுத்து கிறாள்.

பூரணி : (ஆத்திரத்துடன்) ஏற்கனவே உன் தலை மேலே அநியாயமாய் விழுந்திட்ட பழிச் சுமையை உன்னாலே சுமக்கவும் முடியல்லே; இறக்கி வைக்கவும் வாய்க்கல்லே! சத்தியச் சோதனை பதினாறு வருசமாய் விதியாகவும் வினையாகவும் உனைனத் துரத்திக்கிட்டு இருக் கிற இந்த நேரத்திலே, இது என்ன ஆத்தா புதுக் கதை? அது யாரோட படம் ஆத்தா?

மீனாட்சி : (சீறியபடி) அடி பாவி! இது உன்னோடை அப்பன் படமடி! என்னோடை புருசனோடை படமடி இது!...

கையிலிருந்த நிழற் படத்தை ஆத்திரத் துடன் வீசி எறிகிறாள் மீனாட்சி. அந்தப் படம் அகல் விளக்கில் விழுந்து விடு கிறது!

பூரணி : அப்பா! அப்பா!...

பாசம் பெருக்கெடுக்கக் கூவியபடி அந்தப் படத்தை ஆவலோடு எடுக்கத் தாவுகிறாள். எடுத்த படத்தைப் பார்க் கிறாள். அந்தப் படத்தின் முகப் பகுதி எரிந்து போயிருக்கிறது.

மீனாட்சி : ஐயோ, மச்சான்!

பூரணி : ஐயோ அப்பா !...

மீனாட்சி : (படத்தை எடுத்தவாறு) என்னோட நம்பிக்கை விளக்கிலே கடைசிச் சுடராய் எரிஞ்சிக்கிட்டிருந்த இந்தப் படத்தைத்தான் என்னோட அந்தரங்க சுத்திக்குச் சாட்சியாய் நினைச்சுக் கையெடுத்துக் கும்பிட்டுக் காப்பாற்றிக்கிட்டு வந்தேன். இந்தப் படத்தை என் தாலிக்குச் சாட்சி வச்சால், ஊர் நம்புமா? ஆனா, தெரியாத ஊமைச்சி காளி நம்புவா ! பேசத் பேசத் தெரிஞ்ச என் மனச் சாட்சி நம்பும் ! அதனாலே தான் என்னோட கற்பு நெறிக்கு இந்தப் படத்தைக் காணிக்கை வச்சு, என் ஆசை மச்சானோட மானத்தையும் அதன் மூலம் என்னோட மரியாதை மானத்தையும் மானபி மானத்தோட கட்டிக் காத்துக்கிட்டு, நடைப் பிணமாய் இருந்து வந்தேன் !...கடைசிலே அந்த ஆறுதலுக்கும் எனக்கு பொசிப்பு எழுதிப் போடல்லே! ஐயையோ, மச்சானே!... ஐயையோ, தெய்வமே !...

மீனாட்சி விம்முகின்றாள்.

திரை

காட்சி: 14

வீதி; காலை.

'கொக்கரக்கோ' என்ற ஒலியுடன் காட்சி தொடங்குகிறது.

ஊர்ச் சனங்கள் மாலையும் கையுமாக நடந்து செல்கிறார்கள்.

இக் காட்சியை முத்துவும் வைரமும் பார்த்தவாறு, அதிசயப்பட்டு நிற்கிறார்கள்.

முத்து : பணக்காரனைச் சுத்திப் பத்துப் பேர் என்கிறது எவ்வளவு மெய்யான சங்கதியாய் இருக்குது, கண்டியா, 'டைமண்ட்'?... (வைரம்)

வைரம் : பைத்தியத்தைச் சுற்றிப் பத்துப் பேர் என்கிறது தானப்பா நியாயமான பழமொழி, 'பேர்ள்'!...(முத்து)

தோழர்கள் சிரிக்கின்றனர்.

திரை

காட்சி: 15

காட்டு வழி; காலை.

செம்மறி ஆடுகள் கத்தும் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

பூரணி : (கையில் கழியுடன்) ட்ரியோ !...ட்ரியோ !...

மாட்டுச் சலங்கைகளின் 'ஜல் ஜல்' ஒலி கேட்கிறது.

பூரணி : (குதித்த வண்ணம்) பலே, சபாசு !...அக் கரைச் சீமான் வையாபுரிச் சேர்வையும் அவ ரோட அருமைப் பொண்ணு பவளக் கொடியும் வந்துக்கிட்டு இருக்காங்க போலே !

வண்டிக்கார வேலன் மாட்டை அடக்கி நிறுத்தும் ஒலி எழுப்பி, திரை மறைவி லிருந்து வெளிப்படுகிறான். ஆடுகளின் சத்தம் ஒலிக்கிறது.

வேலன் : (மரியாதையுடன்) எசமான் ! மண்ணைப் பார்த்துக் கால் பாவுங்க. பாதத்தைப் பதமாய் வச்சு இறங்குங்க சின்ன எசமானியம்மா !... நொடி தாண்டினதும் அப்பாலே வண்டியிலே

ஏறிக்கிடலாம் !...(ஆடுகளின் சத்தம்) இந்தா...
ட்ரியோ ! ட்ரியோ !...

சவுக்கை வீசி யடிக்கிறான் வேலன்.

சீமான் வையாபுரிச் சேர்வை, தேள் கொடுக்கு மீசையை முறுக்கி விட்டுக் கொண்டே வந்து நிற்கிறார்.

வையாபுரி : (அதிகாரம்) ஏ குட்டி !... ஆடுகளை மேய்ச்சு விரட்டாமல், வேடிக்கையா பார்த்துக்கிட்டு நிற்கிறே?

பூரணி : (கேலியாக) ஆடுகளை மேய்ச்சுக்கிட்டுத் தானுங்களே வேடிக்கை பார்த்துக்கிட்டு நிற்கிறேன் !

வையாபுரி : (கவலையுடன்) அம்மாடி, பவளம் ! பார்த்து வா... ஆடுகளின் சத்தம் தாங்கலே !...ம்... மேற்கே தள்ளி நடந்துவாம்மா !...

பவளம், செம்மறி ஆடுகளை விலக்கிக் கொண்டு வந்து முன்னே நிற்கிறாள்.

பவளம் : யாரப்பா இந்தக் குட்டி?

வையாபுரி : யார் பெற்ற குட்டியோ? ஏ, குட்டி ! நடுப் பாதையிலே ஆடுகளை மேய்க்கிறியே, இது உன் அப்பன் வீட்டு இடமா, என்ன?

பூரணி : (கைகொட்டி) அட, பரிதாபமே ! அக்கரைச் சீமானுக்கு இது கூட தெரியலையே ! தெரிஞ்சுக் கிடுங்க: இது ராசாங்கத்தோட பாதையாக்கும் !

வேலன் : (ஏளனமாகச் சிரித்தவாறு) நல்லாக் கேட்டீங்க, போங்க ! இந்தக் குட்டிக்கு அப்பன் ஏதுங்க, முதலாளி?

வையாபுரி : (அதிர்ச்சி) அப்படீன்னு...?

பூரணியை உன்னிப்பாகப் பார்வையிடுகிறார் வையாபுரி.

வேலன் : அது ஒரு கதைங்க !... இந்தக் குட்டி பூரணி நம்ம மாங்குடி மண்ணுக்கே ஒரு அவமானச் சின்னமுங்க !

பூரணி : (குறுக்கிட்டு) யோவ் !... யோவ் !

கழியைத் தட்டுகிறாள்.

வையாபுரி : (முகம் சுளித்து) அட, சனியனே !

வேலன் : (சவுக்கை வீசியபடி) கேளுங்க கதையை; எசமான் !... இந்தக் கதையெல்லாம் உங்களுக்குத் தெரிய நியாயம் இல்லேங்களே ! நீங்கதான் பதினாறு வருசத்துக்கு முந்தியே அக்கரைச் சீமைக்குக் கப்பலேறிப்புட்டீங்களே?...

வையாபுரி : சரி, சரி. சொல்லுடாலே !

வேலன் : இந்தப் பூரணிப் பொண்ணோட ஆத்தா பேரு மீனாட்சி !

வையாபுரி : (அதிர்ச்சியுடன்) ஆ!...

பயங்கர இசை.

வேலன் : என்னுங்க அப்படி அதிர்ச்சி அடையுறீங்க? அந்த மீனாட்சி எவனோ ஒரு பணக்காரப் பாவி யோட பேச்சை நம்பி, அவனுக்குத் தலையை நீட்டித் தாலியைக் கட்டிக்கிட்டா. இந்த ரகசிய நடப்பு ஊருக்குத் தெரியாது; உலகத்துக்கும் தெரியாது ! அந்தப் போக்கிரிப் பயமவனுக்கு அந்தச் சாந்தி முகூர்த்த ராத்திரியோடவே அவளை வெறுத்துப் போச்சோ என்னமோ, விடியறதுக்குள்ளாற, மீனாட்சியோட மானத் தைக் கப்பலேற்றி விட்டுப்புட்டு, அந்தத் தட்டுக்கெட்ட பாவியும் கப்பலேறிட்டான் !... சீமான் வீட்டுப்பிள்ளை கேவலம் தோட்டக்காரன் மகளைக் கண்ணாலம் கட்டிக் கிட்டானேன்னு ஊர் ஏசிப் பேசுமோன்னு பயந்தோ என்னமோ, பதினாறு வருசத்துக்கு முந்தி மாய மாய் மறைஞ்சவன்தான், இன்னிக்கு வரைக் கும் அந்தப் பாவியோட அட்ரஸையே காணோம் !... எசமான், என்ன, பேச்சு மூச் சையே காணோம்? கேட்கிறீங்களா கதையை?

பூரணி ஆத்திரத்துடன் கழியைத் தரை யில் அடிக்க, வேலன் சவுக்கை அடித்து வீசுகிறான்.

வையாபுரி : அப்புறம்...?

வேலன் : அந்த இடுசாமத்திலே போட்ட குட்டிதானுங்க இந்தப் பூரணி !

பூரணி : (வீறுடன்) யோவ் !...

வேலன் : நீங்க கேளுங்க மிச்சத்தை ! அந்த நாறச் சிறுக்கி புருசன் இல்லாமல் குட்டிபோட்ட தாலே, மீனாட்சியையும் மீனாட்சி வயிற்றிலே

பிறந்த குற்றத்துக்காக இந்தப் பூரணியையும் நம்ப ஊரிலே தள்ளிவச்சிட்டாங்க !

பவளக்கொடி : பலே...!

வையாபுரி : பிறகு...?

வேலன் : பொறகு என்னுங்க? இந்தக் குட்டியோட அப்பன் பதினாறு வருசத்துக்கு ஓடிப் போயிட்டு, பதினாறு வருசம் கழிச்சு, இனி மேலுங்களா இங்கிட்டு வந்து குதிக்கப் போறான்? அப்படியே காளிக்குப் பயந்து இங் கிட்டு வந்து குதிச்சாலும், மீனாட்சி மேலே இருக்கிற பழியை அந்தப் பாதகனா துடைக்கத் துணியப் போறான்? அப்படியே மனச் சாட்சிக்குப் பயந்து மீனாட்சி பேரிலே இருக்கக் கூடிய பழியைத் துடைக்கத் துணிஞ்சாலும், அவன் மூஞ்சியிலே அப்பவே காறித் துப்பி, அவனோட மானத்தை இந்தச் சமூக மக்கள் வாங்கு வாங்குன்னு வாங்கிப்புட மாட்டாங் களா? என்ன சொல்றீங்க, முதலாளி?

வையாபுரி : சரி...சரிடா. நாங்க இப்படியே நடந்து போயிடுறோம். நீ ஓடிப் போய் வண்டியை நொடியை விலக்கி ஓட்டிக்கிட்டு வாடா, வேலா !

பூரணி விம்முகிறாள்.

பவளக்கொடி : தூவே ! அப்பன் பேர் தெரியாத ஈனப் பிறப்புக்கு மானம் ஒரு கேடாட்டமில்ல விம்முது குட்டி ! தூவே...!

எச்சிலைக் காறித் துப்புகிறாள்.

பூரணி பதிலுக்கு எச்சில் துப்புகிறாள்.

வையாபுரி : அம்மாடி பவளம்! கூறுகெட்ட இந்த நாறச் சனியன் கிட்டே நீ வாய் கொடுக்காதேம்மா !,.. ஏ குட்டி! இங்கே ஏன் அழுகிறே? காளி கிட்டே ஓடிப் போய் அழு !

பவளம் பதிலுக்கு எச்சிலைக் காறித் துப்பியவாறு, தந்தையைத் தொடர, சதங்கை யொலி எதிரொலிக்கிறது.

பூரணி விம்முகிறாள்.

காட்சி: 16

காளிகோயில்; காலை.

மீனாட்சி பூவும் பொட்டுமாக வந்து நின்று காளியைக் கும்பிடுகிறாள்.

மீனாட்சி : ஆத்தா, மூத்தவளே! ஊருக்கு ஓசந்தவளே! உலகாளும் காளியம்மை!..நீ மூடின கண்ணைத் திறக்கிறதுக்குப் பதினாறு வருசமா தேவைப் பட்டுச்சு? தூங்கினது போதும்! இனி நீ கல் இல்லே!...மறந்திடாதே!

பூரணி விம்மலுடன் காளி சந்நிதியில் வந்து நிற்கின்றாள்.

பூரணி : மறந்திடாதே! காளி இல்லே அவள்; அவள் கல், ஆத்தா, கல்! ..பதினாறுவருஷம் அக்கரைச் சீமைக்கு வனவாசம் போயிருந்த புண்ணிய வான் வையாபுரிச் சேர்வையும் அவரோட அன்பு மகளும் கொஞ்சமுந்தி அவங்களோட பங்கையும் விட்டு வைக்காமல் என்னை வாய்க்கு வந்தபடி ரொம்பவும் கேவலமாய் ஏசிப் பேசிப் புட்டாங்க, ஆத்தா!...

மீனாட்சி : (அதிர்ச்சியுடன்) ஐயையோ, அப்படியா ஆத்தா! அந்தச் சீமானா அப்படி ஏசினார்?

பூரணி : (விம்மல்) ஆமா! நான் அப்பன் பேர் தெரியாத அவமானச் சின்னமாம்! நீ நாறச் சிறுக்கியாம்!

மீனாட்சி : (அழுதபடி) ஐயையோ!...காளி ஆத்தா!

தலை மயிரைப் பிய்த்துக் கொண்டு, தாலியை எடுத்து நீர்த் திரையிட்ட கண்களிலே ஒற்றிக் கொள்கிறாள் மீனாட்சி.

பூரணி : ஆத்தா, இனியாச்சும் என்னோட அப்பன் பேரைச் சொல்லப்புடாதா? (கெஞ்சுக் குரலில்) என் அப்பன் பேர் என்ன, ஆத்தா?

மீனாட்சி : (நாணமும் வைராக்கியமும் கலந்த தொனியில்) நீ உன் அப்பன் பேரை மட்டுமில்லே, உன் அப்பனையே இனம் புரிஞ்சுக்கக் கூடிய வேளை நெருங்கி வந்திடுச்சு, மகளே! ஆக்கப் பொறுத்தவள் ஆறப் பொறுக்கப்படாதா? (கெஞ்சும் குரலெடுத்து) அகழ்வாரை நிலத் தாயே தாங்கிக்கிடுறா; இகழ்வாரை நீ பொறுத்துக்கிடத்தான் வேணும், பூரணி!

மகளின் கண்ணீரைத் துடைக்கிறாள் அன்னை மீனாட்சி. அப்போதுதான், பூவும் பொட்டும் அதிசயமாகத் திகழத் தாய் நிற்பது கண்டு, ஆச்சரியப்படுகிறாள் பூரணி.

பூரணி : (கேலியாக) ஆத்தா! தேர்த்திருநாள் மாதிரி, ஊர்ப் பொண்டுக புதுசு உடுத்தி, பூ முடிச்சு, பொட்டு வச்சு, அக்கரைச் சீமைச் சீமானைப் பார்க்கப் போறாங்களே, அது

கணக்கிலேதான், நீயும் போயிட்டு வந்தியா ஆத்தா ?

மீனுட்சி : (நாணத்துடன்) போடி போ, போக்கிரிப் பொண்ணே ! ,..என்னமோ தோணுச்சு. கூட்டத்தோட கூட்டமாய் நின்னு, அந்தச் சீமானை எட்டி நின்னு பார்த்திட்டு வந்தேன் ! அது தப்பாடி, ஆத்தா?

பூரணி : (உறுதியுடன்) தப்புன்னு நான் எப்படிச் சொல்லுவேன், ஆத்தா !...ம்...தூ ர த் து ப் பச்சை எப்பவுமே கண்ணுக்குக் குளிர்ச்சியாய்த் தான் இருக்கும் !...

மீனுட்சி : (பதட்டம்) பூரணி !...என்ன சொல்லுறே நீ?

பூரணி : (வேதனை) நான் ஒண்ணும் தப்பாய்ச் சொல்லலையே, ஆத்தா !—

பூரணி 'டக்'கென்று பேச்சை நிறுத்தி விட்டு வெளியேறுகிருள்.
மீனுட்சி மலைக்கிருள்.

மீனுட்சி : (பெருமூச்சுடன்) காளி ஆத்தா !...

தூண்டில் மீன் துடிக்கிறது !

திரை

காட்சி: 17

சீமான் வையாபுரியின் மாடி வீடு; அதே காலை.

அங்கே ... வையாபுரிக்கும் அவரது புதல்வி பவளக்கொடிக்கும் பெண்கள் ஆரத்தி சுற்றி வரவேற்கிறார்கள். எல்லோருக்கும் இனிப்புக்கள் வழங்கப் படுகின்றன. மாலைச் சுமை தாளாமல், சீமான் வையாபுரி திண்டாடுகிறார். காரியஸ்தர் அய்யர் மாலைகளை ஏந்திக் கொள்கிறார்.

அப்போது, வைரத்தோடு முத்து அங்கு வருகிறான்.

முத்துவின் தந்தை அருணாசலச்சேர்வை குடுமியைத் தட்டி முடிந்து கொண்டே வந்து நிற்கிறார். பிறகு மிட்டாய்த் தட்டை எடுத்துக் கொள்கிறார். ஆனால் முத்துவோ, அக் கூட்டத்தில் மீனாட்சியையும் பூரணியையும் மட்டுமே காணாமல் இருக்கக் கண்டு, வருந்துகிறான்.

முத்து : வைரம் ! உலகத்திலே ஏழைகளாய்ப் பிறக்கிறது பாவம்னு, பணக்காரங்களாகப் பிறக்கிறது குற்றமாக்கும் !

வைரம் : (அதிசயமாக) பணக்காரங்களாகப் பிறக்கிறது குற்றமா?

முத்து : ஆமா, வைரம் ! பணக்காரங்களாய்ப் பிறந்த காரணத்தினலே தானே, அவங்க ஏழை பாழைங்களையெல்லாம் சுளுவாய் ஒதுக்கி உதாசீனப் படுத்திடுருங்க ! அதனலே தானே, ஏழை சொல் அம்பலம் ஏற முடியாமலும் போயிடுது ! இப்படிப்பட்ட அவல நிலைக்குக் காரணமான பணங்காரங்க குற்றவாளிங்க தானே, வைரம்?

அப்போது ஒதுங்கி நிற்கும் சேரிச் சிறுவர்கள் கத்துகிறுர்கள்.

சிறுவர்கள் : எங்களுக்கு மட்டும் மிட்டாய் இல்லீங்களா' ஆண்டே?

வையாபுரி : (ஆத்திரத்துடன்) மச்சான், யாருங்க அந்தப் பயலுக? ஏன் அப்படிக் கூச்சல் போடுறுனுங்க?

அருணசலம் : எல்லாம் சேரிப் பட்டாளம், மச்சான் ! அவங்களுக்கும் மிட்டாய் வேணுமாம்?...

வையாபுரி : உங்ககிட்டே அந்தப் பயலுக மிட்டாய் கொடுத்து வச்சிருக்கானுங்களா?

அருணசலம் : (தட்டு நடுங்க) ஊகூம் ! இல்லையே மச்சான் !

வையாபுரி : அப்படின்ன அந்த வாண்டுகளையெல்லாம் அடிச்சு விரட்டுங்கய்யா !

தேள் கொடுக்கு மீசையைத் தடவி விட்டுக் கொள்கிறார். முத்து ஆத்திரத் துடன் சீமான் வையாபுரியைப் பார்த்து விட்டு, தந்தையின் கையிலிருந்த மிட் டாய்த் தட்டைப் பறித்து, சேரிப் பிள்ளைகளுக்கு மிட்டாய் வழங்குகிறான். பிறகு வையாபுரியை நெருங்கி வரு கிறான் அவன்.

முத்து : *நீங்கதான் என்னோட அக்கரைச் சீமை மாமான்னு நினைக்கிறேன்.*

வையாபுரி : (ஆச்சரியத்துடன்) ஓ! மாப்பிள்ளையா? நான் தான் உங்க அம்மான்! (மகளை நோக்கி) அம்மாடி பவளம்! உன் அத்தை மகனைத் தேடிக்கிட்டிருந்தியே, வந்து பாரம்மா!

பவளக்கொடி ஆவல் துள்ள ஓடி வரும் போது, முத்துவின் மீது மோதிக் கொள்கிறாள். உடனே, முத்து அவளைக் கோபத்தோடு பார்க்கிறான். முத்துவின் தாய் பொன்னம்மா ஓடி வருகிறாள்.

பொன்னம்மா : (கெஞ்சியபடி) தம்பி, தம்பி! அப்படிப் பார்க்காதேப்பா அது தாங்காது!—சின்னப் பொண்ணு!

முத்து : (கேலியாக பவளக்கொடியைச் சுட்டிக் காட்டிய வாறு) இதுவா சின்னப் பொண்ணு? ...

வைரம் குறுக்கே பாய்ந்து, பவளக் கொடியை 'டேப்'பிஞல் அளக்க முயல் கிருன். பொன்னம்மா குறுக்கிட்டுத் தடுக்கிருள்.

பொன்னம்மா : பட்டணத்து வைரம்! என் தம்பி மகள் பவளம் என் மகனுக்குச் சொந்தம்! தொட்டுப் புடாதீங்க!

வைரம் : ஓகோ! அக்கரைச் சீமைச் சீமான் உயர்திரு வையாபுரிச்சேர்வை மகள் பவளக்கொடி என்பது இதுதாஞ?

முத்து : ஊஸ்!...

பவளம் : (முத்துவை நோக்கிக் கைகூப்பி) வணக்க முங்க!

முத்து : (சுவாரஸ்யம் இல்லாமல்) ம்...வணக்கம்!

வையாபுரி : (எழுந்து நடந்தபடி) மாப்பிள்ளை!...
வைரம் திரும்பிப் பார்க்கிருன்.

பொன்னம்மா : ஐயா, பட்டணத்து வைரம்! சொந்தத்துக் குள்ளேயும் பந்தத்துக்குள்ளேயும் அந்நியம் அசலான நீர் ஏனய்யா அஞவசியமாய் தலையை நீட்டுறீங்க?...(பிறகு மகனை நோக்கி) முத்து, அம்மான் உன்னைத்தானப்பா கூப்பிடு கிருர்.

முத்து : மாப்பிள்ளைன்னு அம்மான் கூப்பிட்டால், அது என்னைத்தான்னு எப்படி அர்த்தமாகும். ஆத்தா? நான் மாப்பிள்ளை இல்லையே? நான் முத்து தானே?

வையாபுரி : ஊருக்கு நீங்க முத்துதான்! ஆனா, எனக்கு நீங்க மாப்பிள்ளை தானே?

முத்து : (திகைப்புடன்) எனக்கு ஒண்ணும் புரியல்லீங்களே?

அருணாசலம் : தை பிறந்தாச்சின்னா, எல்லாம் தன்னாலே புரிஞ்சிடும், தம்பி!

முத்து : மார்கழியிலே புரியாதது, தையிலே மட்டும் எப்படிப் புரியும், அப்பா?

பொன்னம்மா : போடா போக்கிரிப்பயலே! முதலிலே நீ உன் வாயை மூடு!...உன் அம்மான் மகள் பவளத்தை ஒரு வாட்டி வாஞ்சையோட பாரப்பா, முத்து! அயித்தை மகனை உன்னைப் பார்க்கிறதுக்கு எவ்வளவு துடிச்சுது, தெரியுமா இந்தப் பவளம்?...அம்மான் மகளும் அயித்தை மகனும் இதுவரை ஒருத்தரை யொருத்தர் போட்டோ படத்தின் மூலமாகத்தான் பார்த்து கிட்டு இருந்தீங்க!...இப்பத்தான் பதினாறு வருசம் கழிச்சு, முதன் முதலாக ஒருத்தரை யொருத்தர் சந்திச்சிருக்கீங்க!...

முத்து, பவளக்கொடியைப் பார்க்காமல் வேறெங்கோ பார்த்தபடி நிற்கிறான். யாரையோ தேடுகிறான்.

வையாபுரி : பவளம்தான் உன் பக்கத்திலேயே ஒற்றைக் கால் தவம் செஞ்சு நின்னுகிட்டு இருக்குதே? பின்னே, யாரைத் தேடுறீங்க, மாப்பிள்ளை?

முத்து தன் தாய் மாமனை கேலிக் குறிப் போடு பார்க்கிறான்: வைரம் இடை மறிக்கிறான்.

வைரம் : ஐயா சீமானே! இவன் மாப்பிள்ளை இல்லே; முத்து அப்படின்னு இப்பத்தானே உங்களுக்கு நினைப்பூட்டினேன்? அதுக்குள்ளே மறந்திட்டீங் களே?

முத்து கூட்டத்தில் யாரையோ தேடு கிறான்.

பொன்னம்மா : முத்து, யாரைத் தேடுறே, தம்பி?

முத்து : வாய் பேசத் தெரியாத ஒரு தாய்ப் பசுவையும் அதோட பசுங் கன்றையும் நான் தேடுறேன், ஆத்தா!

வையாபுரி : தாய்ப் பசுவும் கன்றும்தான அதோ, மூலையிலே வாயடைச்சுப் போய் நின்னுகிட்டிருக்குதே, முத்து?

முத்து : (வேதனையுடன்) ஐயா வே!......அன்பான மாமாவே! நான் இப்ப தேடுற பசுவுக்கும் அதோடகன்றுக்கும் பேச வாய் இருந்தும், பேச வாய் இழந்து இருக்குதுங்க, பாவம்;... அவங்க ரெண்டு பேரையும் இந்தப் பாழும் சமுதாயம் முச்சந்தியிலே நிறுத்தி வச்சு வேடிக்கை பார்க் குது; வேடிக்கை காட்டுது!... ஆனா, இதே சமு தாயத்தை அந்த நிரபராதிங்க ரெண்டு பேரும் ஒரு நாளைக்கு முச்சந்தியிலே நிறுத்தி வைக்கக் கூடிய பொன்னான விடிபொழுது விடிகிற அன் றைக்குத்தான் என்னோட சமுதாயக்கடமை பூர்த்தியடைய முடியும்!

பொன்னம்மா : (பீதியுடன்) என்னப்பா பேசுறே, முத்து?

முத்து : (எரிச்சலுடன்) தமிழ் பேசுறேன், ஆத்தா !

வைரம் : (சிரிப்புடன்) பலே, பாண்டியா !

கேலிச் சிரிப்பின் பயங்கர இசைக்கு ஊடாக, சீமான் வையாபுரி நழுவத் தலைப்படுகிறார்.

பொன்னம்மா தவிக்கிறாள்.

முத்து சிரிக்கிறான் !

திரை

காட்சி: 18

காளிகோயில். அந்திசந்தி.

மீனாட்சி தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றியபடி காளி சந்நிதியில் வந்து நிற்கிருள். சுற்றுமுற்றும் பார்த்தபடி, காளியை உற்று நோக்கிப் பேசுகிருள்.

மீனாட்சி : (மெல்லிய குரல்) ஆத்தா! உன்னைக் கல்லுன்னு சொல்ருங்க ஆனு, என்வரை நீ கல் இல்லே ! நீ கல்லாக இருந்திருந்தால், பதினுறு வருசமாய் கல்லாக இருந்த என் நேசமச்சாஞேட மனசை மடைமாற்றி இங்கிட்டுக் கொண்டாந்து சேர்த்திருப்பியா ? என்னேட ஆசை மச்சானைக் கொண்டு என் பேரிலே பதினுறு வருசமாய் விழுந்து இருக்கிற வீண் பழியைத் துடைச்சு, அதன் மூலம் அந்த அன்பு மச்சானைக் கொண்டே என் கண்ணீரையும் துடைச்சிடச் செஞ்சால்தான், நீ கல் இல்லே என்கிற உண்மையை இந்த ஊர்ச் சமூகம் வசமாய்ப் புரிஞ்க்கிட வாய்க்கும், தாயே !.

கண்ணீரைத் துடைத்துக் கொள்கிருள் மீனுட்சி.

பூரணி முகத்தைத் துடைத்தபடி தாயின் பக்கத்தில் வந்து நிற்கிருள்.

பூரணி : ஆத்தா ! காளிகிட்டே பேசிக்கிட்டு இருந்தியா ?

மீனுட்சி : (கவலை) ஆமா, பூரணி, இந்தப் பதினறு வருசமாய் எனக்கும் நீயும், உனக்கு நானும் தான் பேச்சுக்குத் துணையாய் இருந்திக்கிட்டு வாரோம்! இப்பத்தான் ஆத்தா மூத்தவ நம்பளுக்குத் துணை இருக்க மனசு இளகியிருக்கா!...

பூரணி : (ஆர்வம்) அப்படின்னு, நம்ப கஷ்டமெல்லாம் சோற்றைக்கண்ட பசியாட்டம் பறந்திடுமா, ஆத்தா ?

மீனுட்சி : (உணர்ச்சிப்பெருக்குடன்) கட்டாயம் பறந்திடும், பூரணி !

பூரணி : நம்பளோட இருண்ட வாழ்க்கையிலே கூட விடிவெள்ளி முளைச்சிடுமில்லே, ஆத்தா !

மீனுட்சி : நிச்சயம் முளைச்சிடும், பூரணி !

பூரணி : எப்படி ஆத்தா, இம்புட்டு நிச்சயமாய்ச் செப்புறே ? காளி ஆத்தா ஏதாச்சும் துப்பு சொன்ளை ?

மீனுட்சி : (மலர்ச்சியுடன்) ஊம் !...

பூரணி : (ஆசையுடன்) என்ன ஆத்தா, சொன்ளு ?

மீனுட்சி : ஊகூம் ! அந்த ரகசியத்தை இப்ப நான் சொல்லமாட்டேன் !

பூரணி : (பொய்க் கோபத்துடன்) சொல்லாட்டிப் போயேன்!... உன்கிட்டே ரகசியம் பேசிய இதே காளி ஆத்தா, உன்னோட மகளான என் கிட்டே மட்டும் ரகசியம் பேசாமல் இருப்பாளா?

மீனாட்சி : (ஆர்வம் பொங்க) உன்கிட்டே என்ன ரகசியம் சொன்னு, பூரணி?

பூரணி : ஊஹூம்! அந்த ரகசியத்தை இப்ப நான் சொல்ல மாட்டேன்!

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துப் புதிரான புன்னகையைப் பரிமாறிக் கொள்ளும் போது, சுவர்மறைவில் இருவர் பேசிக் கொள்ளும் பேச்சு கேட்கிறது.

குரல் : 1 ஆமா, அண்ணே! தைபிறந்ததும் நம்ப பண்ணைச் சீமான் வையாபுரிச் சேர்வைகாரர் மகள் பவளக் கொடிக்கும் ஊருக்கு உழைக்கிற நம்ப முத்துவுக்கும் கண்ணாலம் நடக்கப் போகுதாம்!...

குரல் : 2 அப்படியா? பலே!... நமக்கு ஒரு வேளைக் கண்ணாலச் சாப்பாடு காத்துக்கிட்டு இருக்குன்னு சொல்லு, தம்பி!

சிரிப்பொலி கேட்கிறது.

இப் பேச்சைக் கேட்கும் பூரணி திகைத்துத் தடுமாறுகிறாள். இம் மாற்றத்தை மீனாட்சி காண்கிறாள்.

மீனாட்சி : (கோபமாக) பூரணி! பாதையிலே முழிச்சுப் பார்த்து நட! அப்பத்தான் நேர்ப் பாதை நல்லாய்ப் புரியும்!

இருவரும் நடக்கத் தொடங்கும் போது, தண்டோராவுடன் ஒருவன் சத்தம் போட்டு வருகிறான்.

தண்டோராக்காரன் : நம்ப ஊர்ச் சீமான்வையாபுரிச் சேர்வைகாரர் வார வெள்ளிக்கிழமை யண்ணைக்கு காளியம்மனுக்கு நேர்த்திக் கடன் செலுத்தப் போறாங்க! ஊர்ச் சனங்க எல்லாரும் விசேஷத்துக்கு வந்திருந்து சிறப்பாய் நடத்திக் கொடுக்க வேணுமனு கேட்டுக்கிடுறாங்க!

தண்டோராச் சத்தம் கேட்கிறது—மீண்டும்.

திரை

காட்சி: 19

முத்துவின் வீடு. நிலவு வேளை.

வீட்டு வாசலில் நிலவில் நின்றபடி முத்துவும் வைரமும் பேசுகிறார்கள்.

வைரம் : ஊம், ஏன் நிறுத்திட்டே, முத்து ? பேசு. நீ பேசுற ஒவ்வொரு பேச்சுக்கும் ஒவ்வொரு ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம்னு தோணுது !

முத்து : வைரம் ! பணத்தை நீ இன்னைக்குக்காப்பாற் றினால் தான், பணம் நாளைக்கு உன்னைக் காப் பாற்றும். உன்னோட பேரிலே இருக்குதே வைரம், அந்த வைரம் உன்னோட நெஞ்சிலே யும் இருக்க வேணும் !

வைரம் : பேஷாய் இருக்குதோ, முத்து !

முத்து : ஆறு ஒண்ணு !

வைரம் : என்னப்பா, எடுத்த சிவப்புக் கொடியை கீழேயே பொடமாட்டேங்கிறியே, முத்து !

முத்து : இதோ போட்டுகிறேன், வைரம் ! உன் நெஞ் சிலே இருக்கிற வைரத்தைத் தப்பித் தவறி முழுங்கிடப் போறே ! ஜாக்கிரதை !

வைரம் : நான் ரொம்ப ரொம்ப ஜாக்கிரதையாய் இருப்பேனப்பா !

முத்து : (தட்டிக்கொடுத்து) பேஷ், பேஷ் ! அப்படிச் சொல்லு ! வாழ்க்கையிலே எச்சரிக்கைப் பண்ணாபோடே இல்லாதவங்க எல்லாம் பாவம், மீனாட்சி மாதிரிதான் இந்தச் சமுதாயத்துக்கு மத்தியிலே அல்லல்பட்டு அவதிப்படநேரிடும் !

வைரம் : என்னப்பா முத்து ! சதா சர்வ காலமும் அந்த மீனாட்சி அம்மாளைப் பத்தியே பேசிக்கிட்டு இருக்கியே ? உன் ஒருத்தனாலே அந்த அபலைத்தாயோட கண்ணீரைத் துடைச்சிட முடியும்னு நீ நம்புறியா ? உங்க ஊர்ச் சமுதாயத்தைச் சேர்ந்த அத்தனை சனங்களும் ஒட்டு மொத்தமாய்க் கச்சைகட்டிக்கிட்டு பாவம் அந்த மீனாட்சி அம்மாளை ஒதுக்கி வச்சும் விலக்கி வச்சும் சோதிச்சுக்கிட்டு இருக்கிற இந்த நெருக்கடியான நிலைமையிலே, நீ என்னதான் அந்த அம்மாளுக்காகச் சாதிக்க முடியும்னு நினைக்கிறே ?

முத்து : (ஏக்கப் பெருமூச்சு) வைரம் ! அந்த மீனாட்சி அம்மாளோடே கண்ணீரைத் துடைச் செறிஞ்சுப்புடவேணும்னு கங்கணம்கட்டிக்கிட்டு அந்த அம்மாளுக்காக நான் எவ்வளவோ நினைக்றேன். ஆனா, நினைக்கிறது பெரிசில்லே. நினைக்கிறதைச் செஞ்சு காட்டுறதுதான் பெரிசு !

வைரம் : மெய்தான், முத்து !

முத்து : அந்த மெய்தான் அதாகப்பட்டது, அந்த உண்மைதான் இப்போ இத்தச் சமுதாயத்தின் மத்தியிலே விடுகதை போட்டுக் கிட்டு இருக்குது !

வைரம் : விடுகதைக்கு உரிய விடையை இன்றைக்கு இல்லாவிட்டாலும், என்றைக்காவது ஒருநாள் இதே சமுதாயம் கொடுத்துத் தானே தீர வேணும் ?

முத்து : வாஸ்தவம்தான், வைரம், வாஸ்தவம்தான் ! இந்தச் சமுதாயம் இருக்கே இதுக்கு விடுகதை போடுறது அல்வா சாப்பிடுறதுமாதிரி. ஆனால் விடுகதைக்கு நடுவிலே உயிருக்கும் மானத்துக்கும் மன்றாடிக்கிட்டு இருக்கிற மீனாட்சிக்கும் அந்த அம்மாளோட அருமைப் பொண்ணு பூரணிக்கும், விடுகதை போட்ட சமுதாயமே விடுகதைக்கான விடையையும் சொல்லிட்டா, கஞ்சிக்கு உப்புக் கிடைச்சதாட்டம் சந்தோஷப் படுவாங்க இல்லையா ?

வைரம் : ஆமாம், முத்து !

முத்து : ஆனா, அப்படி நடந்துக்கிடுதா இந்தச் சமுதாயம்?

வைரம் : (கைகளை விரித்தபடி) ஊகூம் !

முத்து : ஏன் தெரியுமா?,..,ஒய்யாரக் கொண்டையும் தாழம்பூவுமாய் டம்பாச்சாரித்தனமாக விளங்கிக் கிட்டு இருக்குது நம்ப அருமைத் தமிழ்ச் சமு தாயம் !

வைரம் : உள்ளே வெறும் ஈரும் பேனும் மண்டிக் கிடக்குதுன்னு சொல்லுறே நீ ! அப்படித் தானே?

முத்து : ஊம் !

வைரம் : ஈரையும் பேனையும் ஒழிக்கிறதுக்கு வழி?

முத்து : ஈரையும் பேனையும் ஒழிக்கிறதுக்கு மருந்துக் கடைகளிலே மருந்து இருக்குது, வைரம்! ஆனால்...?

வைரம் : ஆனால்?...

முத்து : சமுதாயத்தின் உள்ளே ஈறும் பேனுமாக மண்டிக்கிடக்கிற அதர்மங்களையும் அநீதிகளை யும் அம்பலப்படுத்திக் களையெடுத்தாக வேணும். இதுக்கு 'ஏ, தாழ்ந்த சமுதாயமே!' அப்படின்னு வசனம் பேசினால், சீரழிஞ்ச சமுதாயம் ஒண்ணும் சீரடைஞ்சிட முடியாது!

வைரம் : பின்னே?...

முத்து : செயல்பட வேணும். உன்னைப் போலவும் என்னைப் போலவும் நம்ப மாதிரியான இன்னும் பலப் பல சனங்களைக் கொண்டதுதான் சமுதாயம் என்பது! ஆகச்சே, சமுதாயம் வாழ்ந்தால்தான் சமுதாயத்திலே அங்கம் வகிக்கிற மனித ஜாதி வாழ முடியும்!

வைரம் : உண்மைதான், முத்து!

முத்து : அந்த உண்மையை நம்பி, மதிச்சு, வழிபட்டுக்கிட்டு வந்தால் அப்பாலே பொய்க்கு வேலை ஏது? குற்றத்துக்கு அலுவல் ஏது? அநீதிக்குச் சோலி ஏது? அதனாலே உண்மையை அம்பலப் படுத்த வேணும்னு, உண்மைக் குற்றவாளி யார்னு இனம் கண்டு பிடிச்சாக வேணும்!

வைரம் : இது நடக்கக் கூடிய காரியமாப்பா, முத்து?

முத்து : ஏன் நடக்காது? ஏன் நடக்க முடியாது!.. சொல்!...சொல் தோழா, சொல்!

வைரம் : (கவலை) இப்போ பூரணியோட அம்மா மீனாட்சிக்குத் துரோகம் பண்ணிட்டு ஓடின அந்த அயோக்கியன்—அந்தச் சமுதாயப் புல்லுருவி ஓடி பதினாறு வருஷம் ஓடிடுச்சு ! இனி அவனைக் கண்டு பிடிக்கிறது என்கிறது லேசிலே நடக்கக் கூடிய காரியமா?

முத்து : அந்தச் சமுதாயத் துரோகியை இனம் கண்டு பிடிச்சிடலாம் !

வைரம் : எப்படி?

முத்து : அந்தத் துருப்புச் சீட்டை மீனாட்சி அம்மா கையிலே மறைச்சு வச்சிருக்கிறாங்க ! அந்த அயோக்கியன் பெயரையே பெற்ற மகள் கிட்டே கூட இன்று வரை சொல்ல மறுத்திட்டாங்களாம் அந்தப் புண்ணியவதி. ஏன் தெரியுமா? தன்னை வஞ்சித்த அந்தப் பாவியின் பெயரை அம்பலப்படுத்த நேர்ந்தால், அதன் மூலம், தனக்குக் காளியைச் சாட்சிவச்சுத் தாலி கட்டினவன் மானம் மரியாதை எல்லாம் நடுச் சந்தியிலே சிரிப்பாய்ச் சிரிக்குமே என்கிற தமிழ்ப் பண்பினாலே, அந்த மகா லட்சுமி தன் ஆசைக் கணவன் பேரை வெளியிடக் கூட மன சொப்பாமல் போராடிக்கிட்டு இருக்காங்க, வைரம் !

வைரம் : (துள்ளலுடன்) அப்படியானால், மீனாட்சி அம்மாளை ஏய்ச்சிட்டுப் போன அந்த அயோக்கியப் பாவி, இந்தச் சுற்று வட்டாரத்திலே எங்கோ ஒரு மூலை முடுக்கிலே இருக்க வேணும்னு தானே அர்த்தம்?

முத்து : ஆமாம் வைரம் ! உன் மாதிரிதான் நானும் அப்படிப்பட்ட முடிவுக்கு வந்திருக்கேன் !

வைரம் : ஆனால் அந்தச் சமுதாய எதிரியை இனம் கண்டு பிடிச்சாகணுமே? அபலையைக் குற்ற வாளிக் கூண்டிலே நிறுத்தி வேடிக்கை பார்க்குது இந்தப் பொல்லாச் சமூகம். ஆனால், குற்ற வாளியோ எங்கேயோ உண்மையைப் போலே தூங்கிக்கிட்டிருக்கான்!

முத்து : அந்த உண்மையைத் தூங்கவிடக் கூடாது, வைரம்! தூங்கவும் விடமாட்டேன். அதுக்கு ஒரு வழியையும் கண்டு பிடிச்சிட்டேன்!

வைரம் : என்ன வழி அது, முத்து?

முத்து : கடமை வழி அது! சமுதாயக் கடமையின் பாற்பட்ட நல்ல வழி அது! நேர்வழி அது!

வைரம் : (ஆர்வமாக) சொல்லேன், முத்து!

முத்து : முதல் அலுவலாக, எப்படியாவது மீனாட்சி அம்மாளின் நல்லெண்ணத்தையும் நல்ல நம்பிக்கையையும் பெற்றுக்கிட்டு, பூரணியை அதே காளி சந்நிதியிலே தாலி கட்டி என்னோட மனைவியாக ஆக்கிக்கிடவேணும்! அப்பறம், சிறுகச் சிறுக, மீனாட்சி அம்மாளின் மனசைத் தெளியவச்சு, அந்தச் சமுதாயக் குற்றவாளியை இனம் கண்டு, அவன் மூலமே அந்தச் சீதேவியோட கண்ணீரைத் துடைச்சுப்பிட வேணும்!

வைரம் : (ஏக்கம்) வெந்து நொந்து ஏமாற்றத்தின் உச்சியிலே நின்னு போராடிக்கிட்டு இருக்கிற நிரபராதியான மீனாட்சி அம்மாள் உன் லட்சியக் கனவு வெற்றியடைய கை கொடுப்பாங்கன்னு நீ எதிர்பார்க்கிறியா, முத்து? திருடன், "திருடாதே!" அப்படின்னு உபதேசம்

செஞ்சுக்கிட்டு இருக்கிற இந்த உலகத்திலே, உன்னேயோ, அல்லது உன் பேச்சையோ எப்படி மீனுட்சி அம்மாள் நம்பப் போருங் கனோ?

முத்து: பரீட்சை செஞ்சு பார்!

வைரம்: ஆமு, அது விஷப் பரீட்சையாக முடிஞ்சிடாமல் இருக்க வேனும்! பாவம், மீனுட்சி! தன்னே வஞ்சித்து ஓடிய தன்னுடைய அயோக்கியக் கணவன் பேரிலே—தனக்கு பதினுறு வருஷ மாய் நீங்காப் பழியை உண்டு பண்ணிட்டு ஓடிட்ட தன்னுடைய துரோகிக் கணவன் பேரிலே தான் மீனுட்சிக்கு எத்தனே அன்பு!

முத்து: (விம்மலுடன்) அது தானே நம்ப தமிழச்சிப் பரம்பரையின் வீரப் பண்பு, வைரம்?

வைரம்: (கைதவித்து) மீனுட்சி தன் புருஷன் பேரைக் காட்டிக் கொடுத்து, எப்போதோ அவள் தன் பேரிலே சுமத்தப்பட்டிருக்கிற வீண் பழியைத் துடைச் செறிஞ்சிருக்க வேண்டாமான்னு ஊர் உலகம் கேட்கலாம்! ஆமு, அந்த அயோக் கியன் அம்பலத்தில் நிறுத்தப்பட நேர்ந்தால், அந்தத் துரோகி அபலே மீனுட்சியிடம் தாலி கட்டினதுக்குச் சாட்சி கேட்பானல்லவா? அவள் தாலி கட்டிக் கொண்டதுக்கு இருக்கக் கூடிய ஒரேயொரு சாட்சியான காளியம்மன் தான் கல்லாகி நிற்கிருளே, பாவம்! வேறு சாட்சிக்கு எங்கே போவாங்க, மீனுட்சி அம்மாள்?

முத்து : (உணர்ச்சியிடன்) மனச்சாட்சிதான் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் உண்மையான சாட்சி! ஆமா. இந்தத் தருமத்தையும் உண்மையையும் சத்தியத்தையும் ஆற்றவாளிகள் உணர நேரும் போதுதான்; உண்மை பிழைக்கும் ; சத்தியம் செயிக்கும்; தருமம் வெல்லும்! ஆமா, வைரம்!...

பின்னணி இசையின் பின்னணியில் நடக்கிறார்கள்!...

திரை

காட்சி: 20

வையாபுரியின் மாடி வீடு. மாலை.

தன் அருமை அத்தை மகனை புரட்சி வாலிபன் முத்துவை எதிர்பார்த்து வாச லில் காத்திருக்கிறாள் பவளக்கொடி. அப் போது, முத்து அங்கு வருகிறான்.

பவளக்கொடி : (காதல் ததும்ப) வாங்க! வாங்க!

முத்து : (சுரத்து இல்லாமல்) ஊம்!...

பவளக்கொடி : (ஏக்கம்) என்னைத் தேடி ஓடி வருவீங்க, வருவீங்கன்னு எத்தனை நாள் உங்களுக்காக நான் காத்துத் தவம் கிடந்தேன், தெரியுங் களா, அத்தை மகனே ?

முத்து : (சுவாரஸ்யம் இல்லாமல்) ஓகோ!...

பவளக்கொடி : (ஏக்கம்) அத்தான்! ஊருக்காகக் கவலைப் படுறவங்க நீங்கன்னு ஊரிலே பேசிக்கிடுறாங்க. என்னைப் பற்றியும் நீங்க கவலைப்பட படாதுங்களா?

முத்து : (அதிசயத்துடன்) கவலைப்பட வேண்டியவங் களுக்காகக் கவலைப்பட வேண்டியது நியாயம்

ஆனால், நீயோ சீமான் பெற்ற செல்லப் பெண். உனக்காக நான் கவலைப்பட என்ன இருக்குது, பவளம்?

பவளக்கொடி : (வேதனையுடன்) என்னைப் பற்றிக் கவலைப் பட ஒண்ணுமே இல்லீங்களா?

முத்து : (தலையை ஆட்டி) ஊகூம் !

பவளக்கொடி : (மகிழ்வுடன்) அப்படின்னா, நீங்க என்னைக் கலியாணம் பண்ணிக்கச் சம்மதம்னு சொல்லு நீங்கன்னு அர்த்தம் தானுங்களே?

முத்து : (திகைப்புடன்) என்ன சொல்லுறே, பவளம்?

பவளக்கொடி : (நாணத்துடன்) சொல்லித் தெரிவதில்லீங் களே இந்தச் சங்கதி !... அத்தான் ! எங்க அப்பா நம்ப கல்யாண விஷயமாகக் கேட்ட துக்கு நீங்க பிடி கொடுத்தே பேசலையாம் ! அதே மாதிரி, உங்க ஆத்தாளும் அப்பாவும் கேட்டதுக்கும் சரியான பதில் சொல்லலையாம் நீங்க. அதனாலேதான் உங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். நல்ல காலம், நீங்களும் அத்தி பூத்தாப்பிலே வந்தீங்க ! நல்ல வாக்கும் கொடுத்தீங்க.

முத்து : பவளம், நீ தப்புக் கணக்குப் போடுறே !

பவளக்கொடி : கணக்குப் போடுறதிலே என்கிட்டே எல்லா ரும் பிச்சை வாங்கணுமுங்க, அத்தை மகனே !

முத்து : அப்படியானால், எனக்கொரு பிச்சை போடு வியா, பவளம்?

பவளக்கொடி : (திகைப்புடன்) என்னைங்க அத்தான், பெரிய சொல்லாய்ப் போடுறீங்க?

முத்து : பெரிய சங்கதிக்குப் பெரிய சொல்லாய்த் தானே போட வேணும்?

பவளக்கொடி : ஆமா, ஆமா. கல்யாணம் பெரிய சங்கதி தானே, அத்தான்!

முத்து : கல்யாணம் என்கிறது பெரிய சங்கதின்னு உனக்குப் புரியுதல்லவா?

பவளக்கொடி : ஓ!...

முத்து : அதனாலேதான் சொல்ல வந்தேன், அம்மான் மகளே!

பவளக்கொடி : என்ன சொல்ல வந்தீங்க, அத்தை மகனே?

விரைந்து வரும் சீமான் வையாபுரி இடை மறிக்கிறார்.

வையாபுரி : தை பிறந்ததும் கொட்டு மேளம் கொட்டிப் புடுங்கன்னு சொல்ல வந்திருப்பாங்க மாப் பிள்ளை!

முத்து : (பதட்டத்துடன்) மாமா!...

வையாபுரி : மாப்பிள்ளை! நீங்க தை பிறக்கிற வரை பொறுமையாய் இருங்க. உங்க இஷ்டப் பிர காரமே கல்யாணத்தைத் தடபுடலாக நடத்திக் காட்டிப்பிடுறேன்! ...... அப்பத்தானே என் மனசும் நிம்மதிப்படும். என்னோட மங்களத்தின் ஆவியும் நிம்மதி யடையும்!...பனிவாடையிலே இனி மேலும் நீங்க நின்னுகிட்டிருந்தால், என்

நெஞ்சு பொறுக்காது. நீங்க புறப்படுங்க. உங்க பவளமும் சினிமா பார்க்க ஆவணத்தாங் கோட்டைச் சாலைக்கு அதோட ஆயா கூடப் புறப்படப் போகுது !...

பவளக்கொடி : பனிவாடை கெட்டாப்பிலே வீசுது. நீங்க கிளம்புங்க, அத்தான் ! நாளைக்கு காளிக்கு அப்பா ஆடு பலி கொடுத்துப் பிரார்த்தனை செலுத்தப் போறாங்க. கட்டாயம் வந்திடுங்க. டா...டா !

பவளக்கொடி உட்புறம் செல்ல, முத்து தயக்கத்துடன் மெல்ல நகர முனையும் தருணத்தில், அவன் கையிலிருந்து காகிதம் ஒன்று நழுவி விழுகிறது. அதைச் சந்தடியின்றி எடுத்துப் பிரிக்கிறார் வையாபுரி. படிக்கத் தொடங்குகின்றார் சீமான் வையாபுரிச் சேர்வைகாரர்.

வையாபுரி : "அன்புப் பூரணி !...(தொடர்ந்து முத்துவின் குரல் ஒலிக்க வேண்டும்) உன்னைப் பெற்ற புண்ணியவதியான மீனாட்சியை நிரபராதி என்று இதே சமுதாயம் உய்த்துணரக் கூடிய காலம் தூரத்தில் இல்லை. உன் அன்னைக்குக் காளியைச் சாட்சி வைத்துத் தாலிகட்டி விட்டு, பதினறு வருஷங்களாக ஓடி ஒளிந்து கொண்டிருக்கும் உன் தந்தையை — தந்தையாகிய பாவியை இனம் கண்டு, அவர் மூலம், உன் தாய்மீது இச் சமுதாயம் சுமத்தியுள்ள அநியாயப் பழியை விலக்கச் செய்யும் நாளும் நெருங்கி..."

அரவம் கேட்டு, கடிதத்தைப் படிப்பதை நிறுத்துகிறார் சீமான்.

அப்போது முத்து ஓடி வருகிறான்.

முத்து : (கோபமாக) மற்றவங்க தபாலை கள்ளத்தனமாய்ப் படிக்கிறது நியாயமில்லிங்க; பண்பு இல்லிங்க! இப்படிக் கொடுங்க!

பேசிக் கொண்டே, கடிதத்தைப் பறித்துக் கொண்டு விரைகின்றான் முத்து.

வையாபுரி திகைக்கிறார்!...

திரை

காட்சி: 21

குடிசை : இரவு ; நிலவு.

மீனாட்சியும் பூரணியும் சாப்பிட்டு விட்டு வெற்றிலை போட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

அப்போது, தூரத்தில் மாட்டுச் சதங்கை ஒலி கேட்கிறது ; வண்டியின் விளக்கு சன்னமாகத் தெரிகிறது. எழுந்து போய் எட்டிப் பார்த்து விட்டு வரு கிறாள் பூரணி.

பூரணி : ஆத்தா, சீமான் வையாபுரி மகள் பவளக் கொடி வண்டியிலே சினிமாவுக்குப் போயிக் கிட்டு இருக்குது !

மீனாட்சி : போனால் போகட்டுமே ? நமக்கென்ன வந் திச்சு, பூரணி ?

பூரணி : நமக்கு ஒண்ணும் வரல்லே, ஆத்தா ! கன்னி கழியாப் பொண்ணை யாரோ ஒரு கிழவி யோடே அனுப்பிச்சிட்டு, அந்தச் சீமானுக்கு எப்படித்தான் நிம்மதியோடே வீட்டிலே படுத் துக்கிடக்க முடியுதோ ? தெரியலையே ?

மீனாட்சி : அவங்க பணக்காரங்க. தங்களோட இருப்புப் பெட்டகத்துக்குள்ளாறதான் இந்தச் சமூகமே அடங்கி முடங்கிக் கிடக்குதின்னு நினைச்சுக்கிறாருங்க. அதே நினைப்புக்கு ஏற்றமாதிரி தாளம் போடத்தான் இந்த சமுதாயமும் தயாராய் காத்துக் கிடக்குதே ? அப்பாலே இருந்தச் சமுதாயத்தைப் போர்வையாக்கி இழுத்து மூடிப் போர்த்திக்கிட்டு நிம்மதியாய்த் தூங்கக் கேட்கவா வேணும் ? பழியோ இல்லே பாவமோ, எதொண்ணுமே பணக்காரங்களாட வீட்டு வாசல் படியைக் கூட தாண்டி உள்ளே போக முடியாது, மகளே—ஏன் தெரியுமா ? அவங்க வீட்டு வாசலிலேதான் இந்தக் சமுதாயம் காவல்நாயாகக் கிடக்குதே ?... ஒரு பாவமும் அறியாத நான் ஏழையான ஒரு காரணத்தினாலே என் பேரிலே வீண் பழியைச் சுமத்திட்டு என்னைக் குற்றவாளியாக்கி வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கிற இதே சமுதாயம், உண்மையிலேயே குற்றவாளிகளாகத் திரியும் பணக்காரங்களை எதிர்த்து ஒரு வார்த்தை கேட்கத் துணியுமா? ஊகூம் ! ஒருக்காலும் இல்லை !...

பூரணி : ஏற்றத் தாழ்வும் பாரபட்சமும் பாராட்டுற இந்தச் சமுதாயம் எப்படித்தான் திருந்தப் போகுதோ? எப்பத்தான் திருந்தப் போகுதோ, ஆத்தா?

மீனாட்சி : பழி பாவத்தைச் சமுதாயத்தின் பேரிலே போட்டுட்டு சமுதாயத்தை ஏசிப் பேசுறதிலே, ஒரு நியாயமும் இருக்க முடியாது, பூரணி !

பூரணி : பின்னே?

மீனுட்சி : சமுதாயம் என்கிறது என்ன? நாலு பேர் சேர்ந்தால், அதுதான் சமுதாயம்! சமுதாயத்தை உருவாக்கிற மனுசங்க மெய்யாலுமே திருந்தி மனுசங்களாகவே ஆகிட்டால், அப்பறம் சமுதாயமும் தன்னுலே திருந்திடும்; மனுசங்களையும் திருத்திடுமே!...

பூரணி : வாழ்க்கை எம்புட்டுப் பயங்கரமான போராட்டமாக இருக்குது, ஆத்தா?

கொட்டாவி விடுகிருள்.

மீனுட்சி : ஆமா, பூரணி. வாழ்க்கைன்னு போராட்டமே தான்! சரி; சரி. நீ உள்ளே போய் கதவைக் கெட்டியமாய் நாதாங்கி போட்டுக்கிட்டுத் தூங்கு. நான் சேரிப்பக்கம் போய் அறுவடை சம்பந்தமாய் பேசி அச்சாரம் கொடுத்திட்டு ஓடியாரேன்!

பூரணி : காலம்பறவேதான் நான் அறுவடைக்கு அச்சாரம் கொடுத்திட்டேனே, ஆத்தா?

மீனுட்சி : ஆமா, ஆமா. மறந்து போச்சு. மனசு ஒரு நிலைப்படாமல் தவிக்கையிலே புத்தியும் தடுமாறிப் போகுது!

நாய் குரைக்கிறது.

மீனுட்சி ஆவலோடு வெளியே எட்டிப் பார்த்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்புகிருள்.

பூரணி : நாய் குரைச்சடியும், அப்பாதான் புத்தி தெளிஞ்சு திரும்பி வந்திட்டாரோன்னு நினைச்சு ஓடிப் போய்ப் பார்த்தியா, ஆத்தா?

மீனாட்சி : (கண் கலங்க) பூரணி! உன்னோடை கெட்டி யாருக்கு வரும்? சரி, நீ உள்ளே போ. நான் வெளியே காலாறப் போயிட்டு நொடியிலே ஓடியாந்திடுறேன்!

பூரணி உள்ளே சென்று, கதவின் தாழைப் போடும் சத்தம் கேட்கிறது. உடனே மீனாட்சி வெளியேறுகின்றாள்

திரை

காட்சி: 22

முத்துவின் வீடு ; இரவு.

வாசல் நிலவில் நின்றவாறு, கையிலிருக்கும் கடிதத்தைப் பிரித்தபடி காட்சியளிக்கிறான் முத்து.

முத்து : (குரல்) " அன்புப்பூரணி ! பாவிகளை ரட்சிக்க ஏசுவருவாரென்று சொல்கிறார்கள். ஒருவேளை, அதனால்தான் காளிஆத்தாளும் வழி விட்டு ஒதுங்கிக் கொண்டாளோ, என்னவோ? அதன் விளைவாகவே, குற்றவாளியின் சுயரூபமும் இது வரை அம்பலமாகாமல் தப்பி விட்டதோ, என்னவோ? குற்றவாளியே நீதிபதியானால், தர்மம் எப்படிப் பிழைக்கும்? சத்தியம் எப்படி வாழும்? உன் தாய்க்குத் துரோகம் இழைத்த பாவியை இனம் கண்டு கொண்டால்தான் எனக்கு நல்ல மூச்சு வரும் ! அந்தப் பொறுப்புக்கு நீதான் எனக்குக் கை கொடுக்க வேண்டும் !... ஆமாம், உன் கைகளை மட்டுமல்லாமல், உன் இதயத்தையும் எனக்குக் கொடுக்க வேண்டும். நீயும் நானும் இந்தச் சமுதாயத்தின் முன்னே மனைவியும் கணவனும் ஆகிவிட்டால், அப்பால், அந்தப் புதிய பந்தத்தின் மூலம் என் லட்சியக் கனவும்

சித்தியடைய முடியும் என்று நான் கருதுகிறேன்!.... பூரணி, நான் தப்புக் கணக்குப் போடவில்லையே?....''

கடிதத்தைப் படிப்பது தடைப்படுகிறது. எங்கோ யாரோ நடந்து செல்லும் காலடி யோசையைத் தொடர்ந்து, பெண் உருவம் ஒன்று நடந்து செல்லும் நிழல் தென்படவே, முதது அவ்வுருவத்தைப் பின் தொடர்கிறுன்.

திரை

காட்சி: 23

சீமான் வையாபுரியின் மாடி வீடு; இரவு.

வீட்டின் மாடியில் அலைந்த மனத் துடன் சீமான் வையாபுரி பட்டு மெத் தையில் படுத்துப் புரள்கிறார். அருகே மேஜை மீதிருந்த மதுப்புட்டியை எடுத்து ஒருவாய் மது அருந்துகிறார். மறுபடியும் படுக்கையில் சாய்ந்து புரண்டவர் திடு திப்பென்று எழுந்து உட்கார்ந்து விடு கிறார். வேர்வை வழிகிறது. விளக் கொளி சுழல்கிறது, அவரது முகத்தில். காளி சந்நிதியில் மீனாட்சிக்குத் தாலி பூட்டின சம்பவம் மனத்திரையிலே பட மாக நிழலாடுகிறது.

வையாபுரி : *(கலவரத்துடன் தனக்குத் தானே)* மீனாட்சி!... மீனாட்சி!...

கட்டிலை விட்டிறங்கி, அங்குமிங்கும் சலனம் கொண்ட நெஞ்சைப் பிடித்தபடி நடக்கிறார். ரதி மன்மதன் படம் அவரது

நெஞ்சின் மோகத்தைக் கிளறி விடு கிறது. தவிக்கருர்.

வையாபுரி : மீனுட்சி !.... கட்டிக்கரும்பே !.... மீனுட்சி !.... அன்றைக்கு— ஆமாம், பதினுறு வருஷத்துக்கு முந்தி நீ என் நெஞ்சைத் தொட்டே ! நான் உன்னைத் தொட்டேன். காளி சந்நதியிலே உனக்குத் தாலி கட்டினேன். அந்த முதல் இரவிலே நீ எனக்குச் சொர்க்கத்தைக் காட்டி ஞய். அந்தச் சொர்க்கத்தை இப்போது இரண்டாவது தடவையாக நீ எனக்குக் காட்ட மாட்டாயா, மீனுட்சி?.... ஆகா, மீனுட்சி !...

தேள் கொடுக்கு மீசையைத் தடவி விட்டபடி, ஜரிகை அங்க வஸ்திரத்தை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு மீனுட்சியைச் சந்திக்க புறப்படும் சமயம், பயங்கரச் சிரிப்பொலி எதிரொலிக்கிறது !

வையாபுரி : (நெஞ்சைப் பற்றியபடி) ஐயையோ ! யார் இப்படிச் சிரிப்பது? இப்படிப் பயங்கரமாகச் சிரிப்பது யார்? ... மீனுட்சி ! ... நீதான் சிரிக்கிருயா? !... ஐயையோ ! சிரிக்காதே ... மீனுட்சி ... சிரித்தது போதும் ! என் நெஞ்சு வெடிச்சிடும் ! இனியும் சிரிக்காதே !... ஒரு வேளை, விதிதான் சிரித்திருக்குமோ?...

பீதியுடன் வெளியேறத் துடிக்கும் வையாபுரி, கதவைத் திறக்கும் போது, அங்கே, மீனுட்சி பூவும் பொட்டுமாக நிற்கிருள்.

மீனாட்சியைப் பின்தொடர்ந்த முத்து ஒரு மறைவில் ஒதுங்கி நிற்கிறான். அவன் அதிர்ஷ்டம், ஜன்னல் கதவு ஒன்று திறந்து கிடக்கவே, உள்ளே நடக்கும் கூத்தைக் காண முடிகிறது.

வையாபுரி ஃ (கனிவுடன்) வா, மீனாட்சி, வா !

உணர்ச்சிப் பரவசத்துடன் நிற்கிறாள் மீனாட்சி. கதவைத் தாழிட்டு விட்டு அவளை மெள்ள மெள்ள நெருங்குகிறார் வையாபுரி.

வையாபுரி ஃ தெய்வத்தைக் கும்பிடப் புறப்பட்டேன் !

மீனாட்சி ஃ (துடிப்புடன்) காளியையா?

வையாபுரி ஃ (நயமாக) ஊகூம் !

மீனாட்சி ஃ (குழப்பம்) பின்னே?

வையாபுரி ஃ (சாகசம்) உன்னை !

மீனாட்சி ஃ (பதட்டம்) ஃ என்னையா?

வையாபுரி ஃ ஆமாம். என்வரை நீதானே எனக்குத் தெய்வம்?

மீனாட்சியை மிக அருகில் நெருங்குகின்றார் வையாபுரி !

மீனாட்சி ஃ (தவிப்புடன்) நான் தெய்வமா?...வெறும் நடைப் பிணமான என்னைத் தெய்வமாக்கி

தெய்வத்தோட மதிப்பைக் குறைச்சிடாதீங்க, மச்சான் !

விம்முகின்றாள் மீனாட்சி.

வையாபுரி : (பொய் நடிப்புடன்) தங்கத்தோட மதிப்பு தங்கத்துக்குத் தெரியாது, மீனாட்சி !

மீனாட்சி : (ஏக்கம்) தங்கத்தோட மதிப்பு தங்கத்துக்குத் தெரிய வேணும்; மற்றவங்களுக்காவது தெரிய வேணுமில்லீங்களா?

வையாபுரி : (குரலை உயர்த்தி) ஏன் தெரியாது? தங்கத் தோட மதிப்புத்தான் நாளுக்குநாள் விஷம் மாதிரி ஏறிக்கிட்டு இருக்குதே, மீனாட்சி?

மீனாட்சி : (செருமலுடன்) மெய்தானுங்க; நீங்க தங்கம்னு மதிக்கிற இந்த மீனாட்சியோட மதிப்பு இந்தச் சமுதாயத்தின் சந்நதியிலே விஷமாய்த் தானுங்க ஏறிடுச்சு, மச்சான் !

வையாபுரி : (சமாளித்தவாறு) மீனாட்சி ! மச்சான், மச்சான்னு சொல்லாதே, மீனாட்சி ! கேட்கிற துக்கு அசிங்கமாய் இருக்குது !

மீனாட்சி : உண்மையான பாசத்தையும் நேசத்தையும் எப்படி அழைச்சால் என்னுங்க? இதிலே என்னுங்க அசிங்கம் இருக்குது?

வையாபுரி : அத்தான் அப்படின்னு முத்து உதிர்கிறமாதிரி ஒருவாட்டி அழையேன் !

மீனாட்சி : ஊகூம் ! உங்களை மச்சான்னு அழைக்கத்தான் நான் ஆசைப் படுறேன் !

வையாபுரி : அந்த மச்சான்தான் கப்பலேறிப்போய் பதினாறு வருஷமாச்சுதே, கண்ணே !

மீனாட்சி : போன மச்சான்தான் பதினாறு வருசம் கழிச்சு இப்போ திரும்பி வந்திட்டீங்களே, பூ மணத் தோடே !...

வையாபுரி : சரி, சரி. என் தங்கக் கட்டியில்ல !... ஒரு வாட்டி... ஒரேயொரு வாட்டி அத்தான்னு ஆசை பொங்க, நேசம் பொங்க, பாசம் பொங்க அழை, மீனாட்சி !

மீனாட்சி : (பரவசத்துடன்) அ...த்...தான் !

வையாபுரி : (அதே நிலையில்) ஆஹா !...

மெய்ம் மறந்த நிலையில் மதுவை ஒரு மிடறு பருகி விட்டு, மீனாட்சியை அணைக்க முயல்கிறார் வையாபுரி. மீனாட்சி பாம்பைக்கண்ட மாதிரி பதறிப் போய் விலகிக் கொள்கிறாள்.

மீனாட்சி : (அழுதபடி) என்னைத் தொடாதீங்க, அத்தான் !

வையாபுரி : (தயவாக) அன்றைக்கு உன்னைத் தொட்ட வனாச்சே நான், மீனாட்சி ?

மீனாட்சி : (செருமல்) அந்தப் பாவத்தின் சுமையைச் சுமக்க முடியாமல் சுமக்க வச்சு, இந்தப் பதி னாறு வருஷமாய் இந்தப்பாவியைத் தத்தளிச்சுத் தவிக்கப் பண்ணிச் சோதிச்சுப்புட்டீங்களே, அத்தான் ! ஐயையோ, காளி ஆத்தா!...

தலையில் அடித்துக் கொண்டு மீனாட்சி கதறித் துடிக்கின்றாள்.

வையாபுரி : (தடுமாறியபடி) ஊஸ்... நேரம் கெட்ட நேரத்திலே காளியை ஏன் அழைக்கிற, கண்ணே !

மீனாட்சி : பயப்படாதீங்க, அத்தான் ! கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வர அவள் ஒண்ணும் வேலைக்காரி இல்லீங்களே!

வையாபுரி : (சலனம் தெளிந்து) ஓ.... ஆமா, ஆமா! ... காளி வேலைக்காரி இல்லேதான்! அவள் பாவம், கல் !

மீனாட்சி : (திடுக்கிட்டு) கல்லா ? காளி கல்லா?...(சமாளித்து) ஆமாங்க, காளி கல்லுதான்! வெறுங் கல்லே தான்! அதனாலே தானே, நீங்க அந்தக் காளியைச் சாட்சி வச்சு எனக்குத் திருப்பூட்டின சத்திய தருமத்தைக்கூட காற்றிலே பறக்க விட்டுட்டு, நீங்க என்கிட்டேகூட ஒரு வார்த்தை சொல்லாமல் கோழை கணக்கிலே அக்கரை சீமைக்குக் கப்பலேறிட்டீங்க! நீங்க கப்பலேறின அதே சடுதியிலேயே இங்கே என்னோட மானமும் உங்களோடே கப்பலேறிடுச்சு என்கிற துப்பு உங்களுக்கு இந்தப் பதினாறு வருசத்திலே ஒரு நாளாச்சும் புரிஞ்சுதுண்டா?

வையாபுரி : (தவிப்புடன்) ஐயையோ, மீனாட்சி ! என்னை உயிரோடவே கொல்லுறியே, மீனாட்சி?

மீனாட்சி : நீங்கதானே இந்தப் பதினாறு வருசகாலமாக என்னை உயிரோடு கொன்றிட்டீங்க, அத்தான் ! இந்தப்பதினாறு வருசத்தையும் பதினாறு யுகமாய்க் கழிச்ச உண்மையை நீங்க எப்படி அறி

வீங்க?...உங்களோட பாசமும் நேசமும் என்னோட வயிற்றிலே கருவாக உருவெடுக்கத் தலைப்பட்டதும், புருசன் இல்லாமல் கரு உண்டாக்கிக்கிட்டவள் அப்படின்னு என்னை ஏசிப் பேசின பயங்கரத்தை நீங்க என்ன கண்டீங்க? நான் நம்ப பொண்ணு பூரணியைப் பெற்றெடுத்ததும், அப்பன் இல்லாத அவமானச் சின்னம்னு நம்ப மகளை இந்த ஊரும் ஊர்ச் சனங்களும் ஏசினதையும் பேசினதையும் நீங்க புரிஞ்சுக்கிட ஏலாதுதான்!...ஏன்னா, நீங்க ஆண்பிள்ளை!... ஆனா, நான் பொண்ணாப் பிறந்திட்டேனே! ஐயையே! காளி ஆத்தா!

அலறிப் புடைத்துக் கதறுகிறாள் மீனாட்சி. அவள் கண்ணீரைத் துடைக்க முயற்சி செய்கிறார் வையாபுரி. மீனாட்சி விலகுகிறாள்.

வையாபுரி : மீனாட்சி! சும்மா சும்மா காளியை நம்ப பள்ளியறைக்குக் கூப்பிடாதே! அப்புறம் அவள் கோவிச்சுக்கப் போறா!...என்கிட்டே ஓட்டி வா, மீனாட்சி! உன்னோட கண்ணீரை இந்தச் சரிகை துவாலையினாலே துடைச்சு விடுறேன்!

ஜரிகை அங்க வஸ்திரத்தை எடுத்து அவளை நெருங்கி அவளது கண்ணீரைத் துடைத்து விட மறுபடியும் முயற்சி செய்கிறார் வையாபுரி.

ஆனால், மீனாட்சியோ விலகிக் கொள்கிறாள்.

மீனாட்சி : (சடங்கையுடன்) உங்களோட விலையுயர்ந்த சரிகைத் துவாலையினாலே துடைச்சிட்டால் மட்டும், என் கண்ணீர் நின்னுடுங்களாக, அத்தான் ?...

மீனாட்சியின் விம்மல் தொடர்கின்றது.

வையாபுரி : (தவிப்புடன்) மீனாட்சி, இனியும் அழாதே ! என்னாலே தாங்க முடியாது ! நீ அழுதால் இனி என் நெஞ்சு வெடிச்சிடும், மீனாட்சி !

மீனாட்சி : (வேதனைச் சிரிப்பு) நெஞ்சுன்னு ஒண்ணு உங்களுக்கு இருக்குதா, அத்தான்?

வையாபுரி : (விம்மியபடி) இதுவரை நெஞ்சில்லாப்பாவியாக நான் இருந்திருக்கலாம். ஆனா, இப்போ எனக்கு நெஞ்சு இருக்குது ; அந்த நெஞ்சிலே நீ இருக்கிறே ! அந்த நெஞ்சுக்கு நீதியாக நீ இருக்கிறே !......

மீனாட்சி : (ஆவலுடன்) மெய்யாகவா, அத்தான்?

வையாபுரி : சத்தியமாக !...

மீனாட்சி : (மெய்ம்மறந்து) ஆகா !... மெய்யாலுமே நான் கொடுத்து வச்சவதானா?

வையாபுரி : (சிரிப்புடன்) சந்தேகமென்ன? நீ கொடுத்து வச்சவள் தான் ! அதனாலேதான் உன்னை மறுபடியும் எடுத்துக்கிடப்போறேனுக்கும் !... மீனாட்சி... மீனாட்சி !...

உணர்ச்சி வயப்பட்ட நிலையில் பேசிக் கொண்டு, மீனாட்சியை அணைத்துத் தழுவ முயல்கிறார் வையாபுரி.

மீனாட்சி திகைப்புடன் விலகி விடுகின்றாள்.

மீனாட்சி : (ஆணைக்குரலில்) அத்தான்! நில்லுங்க அப்படியே!...

வையாபுரி : (பயத்துடன்) மீனாட்சி!

மீனாட்சி : (ஆணைக்குரலில்) ஊம், நில்லுங்க!

வையாபுரி : (அச்சம்சூழ) ஊம்!

ராணுவக் கட்டுப்பாட்டுடன் நிற்கிறார் வையாபுரி.

மீனாட்சி : (விம்மல்) அத்தான்! கடுகத்தனை மனுசத் தன்மையோட நின்னு நிதானமாய் நான் சொல்லுறதை காதாலே, இல்லே, மனசாலே கேளுங்க!

வையாபுரி : (பதறியபடி) பேசிப் பொழுதைக் கழிக்கிறதுக்கு உண்டான நேரமா இது? சரி, பேசு, மீனாட்சி!

மீனாட்சி : (ஆவேசத்துடன்) அத்தான்! பதினாறு வருசத்துக்கு முன்னே காளியைச் சாட்சிவச்சு உங்களை நம்பி, நீங்க கட்டின தாலியை ஏந்தினேன். நான் செஞ்ச அந்தப் பாவத்துக்காக இந்தப் பதினாறு வருசமாய் என்னை வீணான பழியைச் சுமக்க வச்சிட்டீங்க! இந்த அவமானத் தண்டனை போதும்! இனியும் நான்

மறுதரமும் ஏமாற மாட்டேன்! நீங்களும் என்னை ஏமாற்றவும் முடியாது!

வையாபுரி : (இடைமறித்து) மீனாட்சி! நான் பழைய பாவி இல்லை!

மீனாட்சி : (வேதனையுடன்) அப்படின்னா, நீங்க புதுப் பாவின்னு சொல்றீங்களா?

வையாபுரி : (விம்மல்) உன்னைச் சந்திக்கிறவரை மெய்யாலுமே நான் பாவியாகத்தான் இருந்தேன்! ஆனா, உன் தரிசனம் கிடைச்சதுமே என் பாவமெல்லாம் ஓடிடுச்சு, மீனாட்சி!

மீனாட்சி : (செருமலுடன்) உங்க பாவம் ஓடியிருக்கலாம். ஏன்னா, நீங்க ஆண்சிங்கம். ஆனா, என்னைச் சூழ்ந்துக்கிட்டுப் பயமுறுத்திக் கிட்டிருக்கிற பழி பாவம் ஓடவேண்டாமா? அந்தப் பழி பாவத்தை நீங்க ஓட்டவேண்டாமா? அபலையான—நிரபராதியான என் பேரிலே அநியாயப்பழி சுமத்தக் காரணமாயிருந்த நீங்களே என் பழிபாவத்தை யெல்லாம் பேயை விரட்டுற தாட்டம் விரட்டிப்புட வேண்டாமா?

வையாபுரி : (நயமாக) வாஸ்தவந்தான்! அதுக்காக, இப்போ என்னை என்ன செய்யச் சொல்லுறே, மீனாட்சி!

மீனாட்சி : (விம்மலுடன்) உங்களைத் தெய்வம்னு நம்பினேனே நான், அந்தப் பாவத்துக்குத்தான், பதினாறு வருசமாய் நான் படாத அவமானமெல்லாம் இந்த ஊரிலே பட்டுப் புட்டேனே! சிலுவைச்சாமி ஊர் உலகத்துக்காகச் சிலுவையைச் சுமந்தாராம்! அதொத்து, உங்களுக்

காக—உங்களோட மானம் மரியாதையைக் காப்பாற்றுறதுக்காக நான் அநியாயப் பழி பாவச்சுமையை யெல்லாம் இந்தக் கையகல நெஞ்சுக்குள்ளேயே போட்டுச் சுமந்துக்கிட்டு இந்தப் பதினாறு யுகமாய் வெறும் நடைப் பிணமாய் உலாவிக்கிட்டிருக்கிற ரகசியம் உங்களுக்குத் தெரியாது; புரியாது! ஆனா ஆத்தா காளிக்குத் தெரியும்; புரியும்! அந்தக் காளிதான் ஊர்ச் சனங்களுக் கெல்லாம் வாயைக் கொடுத்திட்டு, அந்தப்பாவி காளி வாயடைச்சுப் போய் வெறும் கல்லாக நின்னுக் கிட்டிருக்கிறாளே?

வையாபுரி : (துடித்து) மீனாட்சி, இனியும் நீ பேசினால் என்னோட நெஞ்சு வெடிச்சுச் சிதறிப்போயிடும். மீனாட்சி!

மீனாட்சி : (ஆத்திரத்துடன்) அப்படின்னா, உங்களுக்கு நெஞ்சின்னு ஒண்ணு இருக்குதுங்களா. அத்தான்?

வையாபுரி : (துயருடன்) ஐயோ, சோதிச்சது போதும், மீனாட்சி!

வையாபுரி விம்முகிறார்.

மீனாட்சி பத்ரகாளியாகச் சிரிக்கிறாள்.

மீனாட்சி : (ஆவேசமாக) என்னைத் தலையை நிமிர்த்திப் பார்த்துச் சொல்லுங்க! நானா—உங்களைச் சோதிக்கிறேன், அத்தான்?

வையாபுரி : (பயத்துடன்) மீனாட்சி, நான் பாவி!... என்னை மன்னிச்சிடு!... இனி நீ வெறும்

மீனாட்சி இல்லே! இனி, என்னுடைய ஆசை மீனாட்சி நீ!... என்னை நம்பு!... தர்மத்தின் பேரிலே சத்தியம் வச்சுச் சொல்லுறேன். காளிமேலே ஆணைவச்சுச் சொல்லுறேன், மீனாட்சி!

விம்முகிறார் வையாபுரி.

மீனாட்சி: (கோபச் சிரிப்புடன்) அத்தான், இந்த நாலு சுவர்களுக்கு உள்ளே மாத்திரம் ஊர் உலகம் இல்லேங்க!

வையாபுரி: (ஆச்சரியமாக) அப்படியா?

மீனாட்சி: (ஏக்கத்துடன்) இதுக்கு வெளியேயும் ஊர் உலகம் இருக்குதுங்க, அத்தான்!

வையாபுரி: (கலக்கத்துடன்) நிசமாகவா?

மீனாட்சி: (ஆவேசம்) நான் பொய்பேசிப் பழகவில்லே, அத்தான்!... நல்லாய்க் கேட்டுக்கங்க: எந்தக் காளியைச் சாட்சிவச்சி நீங்க என்னைத் தொட்டுத் தாலி கட்டினீங்களோ, அந்தக் காளி சந்நிதானத்திலே என்னை—இந்த அபலே மீனாட்சியை—அபாக்கியவதி மீனாட்சியை உங்களோட அன்பு மனைவியாக—அருமை மனைவியாக, ஊரறிய—உலகமறிய நீங்க ஏற்றுக்கிட்டால்தான், இந்தப் பதினறு வருசமாய் ஒரு பாவமும் அறியாத என்மேலே இந்தப் பொல்லாச் சமூகம் அநியாயமாய்ச் சுமத்தி வேடிக்கை பார்த்துவந்த வீண்பழி பாவம் தீர்ந்தொழிய முடியும்! அப்பத்தான் நீங்க உண்மையான மனிதராக இந்தச் சமுதாயத்தின் முன்னிலேயிலே தலை நிமிர்ந்து நிற்க

முடியும்!—இது மட்டும் கேள்விக் குறியாக இந்தச் சமூகத்தின் நடுவிலே நின்னுக்கிட்டிருந்த நானும் ஆச்சரியக் குறியாக மாறித் தலை நிமிர்ந்து நிற்க முடியும்!... (விம்மல்) அத்தான்! தர்மத்தின் பேரால் கேட்கிறேன்; சத்தியத்தின் பேரால் கேட்கிறேன்!... ஆத்தா காளி பேராலே கேட்கிறேன்!— இந்த ஒரேயொரு வரத்தை மட்டும், நாளைக்கு நீங்க காளி கோயிலிலே செலுத்தப்போற பிரார்த்தனையோடு பிரார்த்தனையாய் நிறைவேற்றித் தருவீங்களா, அத்தான்?... ஊம், சொல்லுங்க அத்தான், சொல்லுங்க! ஊம், பேசுங்க அத்தான, பேசுங்க!...

கம்பீரமாகப் பின்னணி இசை ஒலிக்கிறது!

மீனாட்சி ஆவேசமாகப் பேசி விம்மி வெடிக்கிறாள்.

ஆனால், சீமான் வையாபுரியோ பேயாகச் சிரிக்கிறார்.

வையாபுரி : (அட்டகாசமாக) அடி பாவி!... தசரத மகாராஜாகிட்டே கைகேயி ரெண்டு வரம் கேட்டாளாமே? நீ ஏன் ஒரே யொரு வரத்தோடு நிறுத்திக்கிட்டே?.. அருமை பெருமையான இந்த அழகான சமூதாயத்தின் நடுவிலே ஊருக்கு ஒசந்து ஒய்யாரமாய் நின்னுக்கிட்டு இருக்கிற என்னோட மானம் மரியாதை கவுரவம், அந்தஸ்து, பணம் காசு சகலத்தையுமே கால் தூசுக்கும் கேடாய்த் தூக்கி எறிஞ்சு, அதுகளுக்கு மேலே, என்னை—இந்தச் சீமான்

வையாபுரிச் சேர்வையை சமுதாயக் குற்ற வாளியாய் நிறுத்தி வச்சு, என்னை நீ உசிரோடவே சாகடிச்சு வேடிக்கை பார்க்கவா சதித் திட்டம்... போட்டிருக்கே? அடி, பழிகாரி!...ஏலே, மீனாட்சி! இனியும் நான் மனுசனாய் இருக்க முடியாது! காளி முன்னாடி உன்னைத் தொட்டுத் தாலி கட்டின புருசன் நான்! ஆகையினாலே, என்னைத் தட்டிக் கேட்கவோ, இல்லே, தடுத்து நிறுத்தவோ, அந்தக் கல்லுக்கு—நல்லான காளிக்கேகூட இனி அதிகாரம் கிடையாது! ஆமா!...

பயங்கர இசை எழும்புகிறது.

மதுவை அருந்திக் கொண்டே, வெம் புலியாகச் சீறும் சீமான் வையாபுரி அபலை மீனாட்சியைக் கடைசி எத்தன மாகப் பலாத்காரம் செய்கிறார்.

மீனாட்சி : (கதறி அலறியபடி) ஐயையோ! ... காளி ஆத்தா!...

அலறித் துடிக்கிறாள் மீனாட்சி.

வையாபுரி : (எக்காளச் சிரிப்பு) அடி, பைத்தியக்காரி! இன்னமுமா நீ அந்த வெறுங்கல்லை நம்புறே? —அடி, பைத்தியக்காரி!...

அவர் அவளைப் பலாத்காரம் செய்ய, அவள் அவரிடமிருந்து விடுபட முயல, அவள் தாலியை அவர் பறிக்க, அவள் மீண்டும் அந்தத் தாலியைக் கைப்பற்ற,

கடைசியில் நடைப் பிணமாகி, கதவுத தாழைச் சாமர்த்தியமாக விலக்கிக் கத வைத் திறந்து கொண்டு வெளியே தலை குப்புற விழுகிறான். ரத்தம் நெற்றியில் பீறிட எழுந்து அங்கிருந்து வெளியேறி, வெளிப்புறத்தில் வந்து நிற்கிறாள் அபாக்கியவதி மீனாட்சி.

எச்சரிக்கையாக, முத்து மறுபுறத்தில் மறைகிறான்.

திரை

காட்சி: 24

வையாபுரியின் மாடி வீட்டின் கொட்டகைப் பகுதி; அதே இரவு நேரம்.

மீனாட்சி சோகச் சிலையாக, கண்ணீரும் கம்பலையுமாக வந்து நிற்கிறாள். ரத்தம் வழிகிறது! அவள் முன்னே, அவளது அருமை மகள் பூரணி தோன்றுகிறாள்.

புரட்சி வாலிபன் முத்து ஒரு முடுக்கில் ஒளிந்து நிற்கிறான்.

மாடியில் ஒளி உமிழ்ந்த வாழைத்தண்டு விளக்கின் ஒளி கீழே சன்னமாக நிழலாடுகிறது.

பூரணி : (ஆத்திரத்துடன்) ஆத்தா!...

மீனாட்சி அதிர்ச்சி யடைந்து தலையை நிமிர்த்துகிறாள்.

மீனாட்சி : (விம்மலுடன்) பூரணி!...

பூரணி : (ஆவேசமாக) நீ ஏன் இங்கிட்டு வந்தே, தாயே?

மீனாட்சி : (நிதானத்துடன்) மகளே, நீ ஏன் இங்கிட்டாலே வந்தே?

பூரணி : (சோகத்துடன்) நெஞ்சிலே ஈரம் இல்லாமல், நாக்கிலே நன்னி இல்லாமல், உன்னையும், அதன் மூலமாய் என்னையும் ஏசிப் பேசின அந்தப் பாவியான சீமான் வையாபுரிக்கு உண்டான கூலியைக் கைக்கு மெய்யாய் வட்டியும் முதலுமாகக் கொடுக்கத்தான் நான் வந்தேன்! இந்தப் பாவியை ரட்சிக்க மட்டும் ஏசுநாதர் வரவே மாட்டாராக்கும்! சரி, நீ இந்த ராத்திரி வேளையிலே இங்கிட்டு ஏன் வந்தே, ஆத்தா?

மீனாட்சி சோகமே உருவாகி மௌனக் கண்ணீர் சொரிகிறாள். கையில் ஊசலாடிய தாலியைக் கழுத்தில் அணிந்து கொள்கிறாள் அவள்.

மீனாட்சி : (விம்மலுடன்) ம...க...ளே!

பூரணி : (கோபாவேசத்துடன்) மகளும் ஆச்சு; மகனும் ஆச்சு! முதலிலே என் கேள்விக்குப் பதில் சொல்லிட்டுச் சொந்தம் கொண்டாடு! நம்பளுக்கு எந்த வகைச் சம்பந்தமும் கிடையாத இந்தச் சீமான் வையாபுரிச் சேர்வைகாரரைத் தேடிக்கிட்டு, வேளை கெட்ட இந்த ராத்திரி வேளையிலே எதுக்கு வந்தே நீ, ஆத்தா? உன்னை இப்போது இந்த நேரத்திலே, இந்த இடத்திலே யாராச்சும் பார்க்க நேர்ந்தால் என்னதான் நினைக்க மாட்டாங்க? இந்தச் சமுதாயம் பதினறு வருசமாய் உன் பேரிலே சுமத்தி வந்திருக்கிற பழி பாவம்

எல்லாம் அநியாயம் இல்லே !—எல்லாம் நியாயமே தானே ?... நீ அடிக்கொருவாட்டி எனக்காக அனுதாபப் படுவியே, அதுமாதிரி, உன்னோட பாவி வயிற்றிலே நான் பிறந்தது மெய்யாலுமே பாவம்தான் ஆத்தா !...

மண்டையில் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டு பூரணி விம்முகின்றாள்.

மீனாட்சி : (ஆத்திரத்துடன்) அடி, பாவி !... அடி, பாவி மகளே !

அன்னை மீனாட்சி அருமைப் புதல்வி பூரணியை ஓங்கி அறைகிறாள்.

பூரணி : (விம்மியபடி) ஆத்தாளே !...

மீனாட்சி : (வேதனையுடன்) அப்பன் யாரு, அப்பன் யாருன்னு இப்புட்டுக் காலமாய் அடிக் கொரு தக்கம் சதா நேரமும் என்னை நச்சரிச் சுக்கிட்டு வந்தியே, அந்த அப்பன்— உன்னோட அருமை அப்பன் இந்தச் சீமான் தான், மகளே !...

பயங்கரப் பின்னணியில் மீனாட்சியின் ஓலம் கலந்து கரைகிறது.

பூரணி : (அதிர்ச்சியுடன்) ஐய்யய்யோ ! ... இந்தப் பாவியா என்னோட அப்பன்?...

பூரணி விம்மிப் புடைக்கின்றாள்.

மீனாட்சி : (தேம்பியவாறு) ஊம் !

பூரணி : (மெய் மறந்து) அப்பா !...அப்பா !... ஆஹா ! ஆத்தா, என் அப்பனை—என்னைப் பெற்ற அப்பனை ஒருவாட்டி, ஒரேயொரு வாட்டி, அன்பு மகளாக நின்னு, அன்பு பொங்க—ஆசை பொங்கப் பார்த்திட்டு ஓடியாந்திடுறேன் !—உத்தரவு தா, ஆத்தா !...

சோகம் பின்னணி இசைக்கிறது !

மீனாட்சி : (கடுத்தபடி) ஊகூம் ! உன் அப்பனை நீ இப்போ பார்க்கக் கூடாது ! பார்க்கவே கூடாது !

பூரணி : (ஏக்கத்துடன்) ஆத்தாளே !

மீனாட்சி : (நலிவுடன்) பூரணி ! இந்த மாடி வீட்டுச் சீமான்தான் உன் அப்பன் என்கிற துப்பை நானாக அம்பலப் படுத்தும்வரை, மூணும் மனுசங்க யார்கிட்டவும் நீயாகச் சொல்லவே கூடாது ! ஏன் தெரியுமா? இது நம்ப குடும்பத்தோட மானப் பிரச்சனையாக்கும் !

பூரணி : (அலறியபடி) ஐயோ, ஆத்தா !...

மீனாட்சி : (நெகிழ்வுடன்) அந்நியர் வீட்டிலே நின்னு அழக்கூடாது, மகளே !

அப்போது மாட்டுச் சதங்கை ஒலி தெருக்கமாகக் கேட்கிறது.

பூரணி : (மெல்லிய குரலில்) சினிமாவுக்குப் போன தங்கச்சிப் பொண்ணு பொட்டி வண்டியிலே திரும்பி வந்துகிட்டிருக்குப்போலே !

மீனாட்சி : (தாழ்குரலில்) ஆமா, உன் தங்கச்சி பவளக் கொடிதான் திரும்பிக் கிட்டிருக்கவேணும். சரி, சரி, புறப்படு. வரும் விதி ராத்தங் காதின்னு சொல்லுவாங்க. இங்கீட்டு இனியும் நாம் தங்கப்படாது !... புறப்படு !...

மீனாட்சியும் பூரணியும் ஒரு புறமும், முத்து இனனொரு புறமுமாகப் பிரி கிறார்கள் !

திரை

காட்சி: 25

காளிகோயில் ; இரவு.

பகல் போன்ற ஒளி வெள்ளத்தில், கோயில், அலங்காரங்களோடு விளங்கு கிறது.

பெண்கள் மாவிளக்குச் சட்டிகளோடு நிற்கிறார்கள்.

ஆண்கள் மாலைகளோடு நிற்கிறார்கள்.

முத்து நண்பர்களுடன் அந்தரங்கம் பேசுகிறான்.

அப்போது :

“ நாங்க புதுசாய்க் கட்டிக்கிட்ட
ஜோடிதானுங்க...!”

இந்தப் பாட்டின் இனிய இசை ஜன ரஞ்சகமாக முழங்கிட, வைரமும் ராக்கம்மாவும் நரிக்குறவன் - நரிக்குறத்தி வேடம் புனைந்து ஆடி முடிக்கிறார்கள்.

ஓங்காரக் காளி ஒய்யாரமாகப் புன்னகை செய்து கொண்டிருக்கின்றாள்.

வையாபுரி : (அதிகாரமாக) பூசாரி ஐயா! காலம் ஓடிக் கிட்டிருக்குது; பிரார்த்தனையை நடத்தி வைக்கிறீங்களா?

பூசாரி : ஆகட்டுங்க, ஐயா! முதலிலே, உங்க பிரார்த்தனையை நிறைவேற்ற, பலி ஆட்டை காளிக்கு முதலிலே காவு கொடுத்திட்டுத்தான், பூசையை ஆரம்பிக்கோணுமுங்க. இதுதான் வளமை!

வையாபுரி : அப்படின்னு, பலி கொடுக்கிறதுக்கு ஏற்பாடு பண்ணுங்க!

பூசாரி : உத்தரவுங்க!

பூசாரி, பலி ஆட்டைக் குறி வைத்து, அரிவாளை ஓங்கும் போது, அவரைத் தடுத்து நிறுத்துகிறான் முத்து.

பலி ஆடு கும்மாளமிட்டுக் கத்துகிறது.

முத்து : (உணர்ச்சிவசப்பட்டு) பூசாரி ஐயா? காளி ஆத்தா படைச்ச ஜீவ ராசிகளிலே ஒண்ணு தான், வாயில்லாச் சீவனான இந்த ஆடும்!... ஆகச்சே, அவளோட குஞ்சை அவளே பலி கேட்கமாட்டா!... ஆத்தா காளி நல்லவள். என்னமோ போதாத காலம், பொல்லாத மனுசங்களுக்கு மத்தியிலே கல்லா நின்னு, தப்பிச்சுக்கிட்டு இருக்கா! ஆனா. அவள் கல் இல்லே! வாய்ப் பேசத் தெரியாத ஒரு ஜீவனைக் காப்பாற்றின புண்ணியத் தோடவும்

வெறும் தேங்காய் பழத்தோடவும் நீங்க பிரார்த்தனையை நடத்தி வையுங்க, பூசாரி !... நல்ல மனசைத்தான் காளி ஆசீர்வதிப் பாளாக்கும் !...

புரட்சி முத்து அந்தப் பலி ஆட்டை விடுதலை செய்து விடுகிறான் !

ஆடு குதூகலத்துடன் கும்மாளமிட்ட படி ஓடி விடுகிறது !...

வையாபுரி : (மலைப்புடன்) மாப்பிள்ளை ! என்ன புரட்சி இது?

முத்து : (அன்புடன்) இதுக்குப் பேர்தானுங்க அன்புப் புரட்சி, மாமா ! அன்பு எதையும் கேட்பதில்லை என்கிற காந்தி வாக்கை இப்பவாச்சும் புரிஞ்சுக்கிடுங்க, ஐயாவே !...

வையாபுரி : (கோபமாக) மாப்பிள்ளை !...

முத்து : (சாந்தமாக) நான் உங்க மாப்பிள்ளை இல்லே ! நான் முத்து !

முத்து இள மீசையைத் தடவிக் காட்டு கிறான்—ஆத்திரம் பொங்க.

பவளக்கொடி : (பதறி) அத்தை மகனே !

முத்து : (ஆணை) அம்மான் மகளே, நீ உன் தடத் திலேயே நில்லு !

அப்போது பூரணியும் மீனாட்சியும் மாவிளக்குச் சட்டிகளோடு வருகிறார்கள்.

முத்து : (கனிவுடன்) வா, பூரணி, வா! வாங்கம்மா

பவளக்கொடி : (கனிவுடன்) அத்தான்!

முத்து : (வெறுப்புடன்) நான் உன்னைக் கூப்பிடலையே, அம்மான் மகளே!

சீமான் வையாபுரியின் மானம் தரை மீளுகத் தத்தளிக்கிறது!

வையாபுரி : (தவிப்புடன்) அம்மாடி பவளம்! இங்கிட்டாலே அப்பாகிட்டே வாம்மா!... ம் ... பூசாரி ஐயா! பிரார்த்தனையை நடத்திவைங்க!

பூசாரி : எல்லாரும் மா விளக்குச் சட்டிகளைக் கொண்டாங்க.

பெண்களோடு பெண்களாகப் பூரணியும் மாவிளக்குச் சட்டியைப் பூசாரியிடம் கொடுக்கும் போது, பூசாரி அதை வாங்க மறுத்து விடுகிறார்.

முத்து : (உரிமைக்குரலில்) பூசாரிஐயா! பூரணியோட மா விளக்குச் சட்டியை வாங்கி அம்மன் பாதத்தடியிலே வையுங்க!

பூசாரி : நான் வாங்கமாட்டேன்! அந்தக் குட்டி பூரணி சாதிமுறிக்கு ஆளானதாக்கும்!...

முத்து : (குறுக்கிட்டு) அதோ, விளையாடுது ஆட்டுக் குட்டி! சரிதான்; வாயை மூடுங்க, பூசாரி!... பூரணி குட்டி இல்லே; சமைஞ்சபொண்ணு! தர்மத்துக்குப் பிரதிநிதியாக இருக்க வேண்டிய நீங்க, அநீதிக்குத் துணை நின்னு, அப்புறம்

காளி உங்களைச் சும்மா விடமாட்டா, ஜாக்கிரதை ! எங்குமே நிறைஞ்சிருக்கிற ஆத்தா மூத்தவளோட திருக் கோயிலிலே எல்லோருக்கும் இடம் உண்டு ! —நான் சொல்லலே ! — மகாத்மா சொல்லி யிருக்கார் !... ஓய், பூசாரி ! வழியை விட்டு முதலிலே, ஒதுங்குங்காணும் !

பூரணியின் மாவிளக்குச் சட்டியை முத்து வாங்க முனையும் போது, மீனுட்சி பாய்ந்து வந்து பூரணியிட மிருந்து மாவிளக்குச் சட்டியை வாங்கி, அதைக் காளி அம்மன் காலடியில் கொளுத்தி வைத்து வணங்குகிருள். தாயும் மகளும் பக்தியுடன் கும்பிட்டு, விபூதி பூசிக் கொள்கிருர்கள்.

முத்து ஆனந்தக் கூத்தாடுகின்ருன் !

முத்து : (களியுடன்) சபாஷ் ! சமூக நீதிக்குப் பிழைக்கத் தெரிஞ்சிட்டுது ! இனி தர்மமும் சத்தியமும் கட்டாயம் பிழைச்சிடும் !

வையாபுரியின் கறுத்த முகத்தில் அசடு சொல்லிச் சொல்லி வழிகிறது !

வையாபுரி : (காழ்ப்புடன்) முத்து ! அப்பன்பேர் தெரியாத ஒரு அறைக் குட்டிக்காகவா நீங்க பரிஞ்சு கிட்டுப் பேசுறீங்க?

முத்து : (ஆத்திரத்துடன்) மாமா, என்ன சொன்னீங்க? அன்புப் பூரணிக்கா தன்னேட அப்பன் பேர் தெரியாதின்னு சொல்லுறீங்க? உங்க அருமைத் திருமகள் பவளக்கொடிக்கே தன் அப்பன் பேர் தெரியறப்போ, பூரணிக்கு மட்டும் தன் அப்பன் பெயர் தெரியாமல் போய்விடுமா? மாமா!... கண்ணைத் திறந்து பாருங்க! பூரணியைத் தன் அப்பன்பேரைச் சொல்லச் சொல்லட்டுமா? கேட்டுக்கிடுறீங்களா?...(பூரணியை நோக்கி) பூரணி, உன் அப்பன் பேரை ஒரு வாட்டி மட்டும் இந்தப் புண்ணியவான்கிட்டே சொல்லிப்பிடு, பூரணி!

கொஞ்சுகிருன் முத்து.

பூரணியோ, தன் தாயை ஏக்கத்துடன் பார்த்து விட்டு, 'முடியாது' என்கிற பாவனையில் தலையை ஆட்டுகிருள்.

வையாபுரி அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டே, அக்கினிச் சட்டி எடுத்து ஆடுகிருர்.

முத்து : (சூளுரையாக) ஊம், ஆடுங்க, வையாபுரிச் சேர்வைகாரரே!—நல்லா ஆடுங்க! இன்னிக்கு இல்லாட்டியும், என்னிக்காச்சும் ஒருநாளைக்கு இதே பூரணி, உங்க திருச்சந்நிதானத்திலேயும் இந்த மாங்குடிச் சமுதாயத்தின் முன்னிலையிலேயும் தன் அப்பன் பேரை அம்பலப் படுத்தாமல் தப்பாது என்கிற சங்கதியை நெஞ்சிலே முடிச்சுப் போட்டு வச்சுக்கிட்டு ஆடுங்க!...

மணி ஓசை முழங்குகிறது ; பூசை நடைபெறுகின்றது. தூபமும் தீபமும் சிலிர்க்கின்றன !

கூட்டம் விழிக்கிறது !

முத்து கைகூப்புகிருன் !

மீனுட்சியும் பூரணியும் கை தொழு கின்றனர் !

காளி மாமூல்படி விடுகதைப் புன்னகை புரிகிருள் !

காட்சி: 26

முத்துவின் வீடு ; உச்சி வேளை.

சீமான் வையாபுரி, பவளக்கொடி, முத்துவின் பெற்றோர்களான அருணாசலச் சேர்வை—பொன்னம்மா ஆகியோர், முற்றத்திலே விரிக்கப்பட்டிருந்த சிங்கப்பூர்ப் பாயில் உட்கார்ந்திருக்கிறார்கள். பவளக்கொடி — முத்து திருமணத்தை நடத்தி வைப்பதில் தீவிரமாக முனைந்திருக்கின்றனர் !

வையாபுரி : (பரிவுசூழ) அக்கா! நம்ப முத்துவை நினைச்சால், பவளத்துக்கு மட்டுமல்லே, எனக்கும்தான் கவலையாய் இருக்குது. உள்ளங் கையிலே இனிக்கிற மல்கோவா மாம்பழத்தை வச்சுக்கிட்டு, கசந்து தீர்க்கிற எட்டிக்காயைச் சுத்திக்கிட்டு, அலைஞ்சுக்கிட்டு இருக்குதே என் அருமை பெருமையான மாப்பிள்ளை முத்து?

பொன்னம்மா : (தயவாக) தம்பி, இளங்கன்று பயம் அறியாதின்னு சொல்றதில்லையா?—முத்து சின்னப்பிள்ளைதானே? ஊர் உலகம் புரியல்லே ! இந்தத் தை கடைசீலே, நம்ப திட்டப்

படி ஒரு நல்ல முகூர்த்த நேரம் பார்த்து நம்ப முத்துவுக்கு ஒரு கால் கட்டு, கை கட்டுப் போட்டுப்புட்டா, எல்லாம் தன்னைப் போலே சரியாகிப்பூடும் ! தம்பி, பழம் தின்னு கொட்டை போட்ட வில்லாதி வில்லன் நீ ! பினங்கு, சிங்கப்பூர்ச் சீமையிலேயும் எட்டுக்கண் விட்டெறியக் கொடிகட்டி ஆண்டவன் நீ ! இந்தச் சின்னச் சங்கதிக்குப் போய் உன்னோட பொன்னான மனசை அலட்டிக்கிடலாமா... தம்பி?...

பவளக்கொடி : (குரல்கம்ம) ஆமாங்கப்பா. அத்தை சொல்றது நூத்திலே ஒரு சேதிதான். அத்தான் என்னை விட்டுட்டு எங்கே போயிடப் போகுது? எனக்கு இப்போ நம்பிக்கை வந்திடுச்சி !... அதனாலே, நீங்களும் கவலைப் படாதீங்க. நானும் கவலைப்படல்லேங்க அப்பா !

பொன்னம்மா : (சோகத்துடன்) சீதேவிப்பொண்ணு வீடு தேடி, வாசல் தேடி, வாரேன்—வாரேன்னு ஒத்தைக் காலிலே நின்னு தவம் செஞ்சிக் கிட்டிருக்கிறப்போ, மூதேவியை வா—வான்னு வெற்றிலை பாக்கு வச்சு அழைக்கப் போறானே முத்து?...ஊரிலே விலக்கித் தள்ளி வச்சிருக்கிற ஒரு நாறச் சிறுக்கியோட மகளையா நான் மருமகளாக ஏற்றுக்கிடுவேன் ? ஊகூம் ! ஒருக்காலும் இல்லே !...

அருணாசலம் : (வைராக்கியத்துடன்) ஆமா, ஆமா !... அந்தப் பூரணிக்குட்டி நம்ப வீட்டுத் தலைவாசலைக்கூட மிதிக்க முடியாது, பொன்னம்மா ! தெரு நாயைக் குளிப்பாட்டி

ந்டு வீட்டிலே வைக்க நான் போக்கணும்கெட்ட ஆள் இல்லை !

பொன்னம்மா : (மகிழ்வுடன்) பலே, அப்படிச் சொல்லுங்க அத்தான்! இப்பத்தான் நீங்க என்னுடை புருஷனுய் நிற்கிறீங்க !...

கணவனின் முதுகிலே தட்டிக் கொடுக் கிருள் பொன்னம்மா !

வையாபுரி : (எரிச்சலுடன்) அப்பன் பேர் தெரியாத ஒரு நாறச் சிறுக்கியோட அறுதைக் குட்டி பேரிலே என்னதான் மயக்கமோ உன் பிள்ளைக்கு?... அந்தக் குட்டி நல்லாய்ச் சொக்குப் பொடி போட்டு உன் மகனை மயக்கியிருக்கிறு, அக்கா !... அந்தக் குட்டி மெய்யாலுமே உப்பு போட்டு கஞ்சி குடிச்ச ரோசக் காரியாக இருந்திருக்கும் பட்சத்திலே, எப்ப அப்பன் பேர் தெரியாமல் போச்சோ, அப்பவே கண்டிக்கங் காணித் தோப்புக் கேணியிலே விழுந்து செத்துப் போயிருக்க மாட்டாளா அந்தப் பூரணிக் குட்டி !...

முத்து : (ஆவேசமாக) மாமா, பூரணிக்கா தன்னுடை அப்பன் பேர் தெரியாதின்னு மகாநாடு கூட்டிச் சதியா லோசனை பண்ணிக்கிட்டு இருக்கீங்க? இந்தாங்க, தண்ணீ ! முதலிலே உங்க வாயைக் கழுவிக்கிடுங்க !...

தண்ணீர்க் குவளையை நீட்டுகிருன் முத்து.

வையாபுரி : (ஆணவத்துடன்) ஆமா, மாப்பிள்ளே! பூரணிக் குட்டிக்குத்தான் தன்னைப் பெற்ற

அப்பன் பேர் தெரியாதின்னு சொல்லிக் கிட்டிருக்கேன். நான் மட்டும் சொல்லலே. இந்த ஊரே சொல்லுது. இந்தச் சமுதாயமே சொல்லுது. இன்னிக்கு நேத்துச் சொல்லலே; பதினாறு வருசமாய்ச் சொல்லிக்கிட்டு இருக்குது!...

முத்து : (வேதனையுடன்) ஊரும் ஆச்சு; உலகமும் ஆச்சு; சாதியும் ஆச்சு; சமுதாயமும் ஆச்சு! அதுக்கென்ன தெரியும் உண்மைக்கதை? அது பணங்காசுக்கு பல்லை இளிக்கும்; அதிகார ஆடம்பரத்துக்குத் தலையை ஆட்டும்; போலிக் கவுரவத்துக்கும் பொய் வேஷத்துக்கும் தாளம் போடும்! ஆனா, உண்மை தெரியுமா இந்தஊர்ச் சமுதாயத்துக்கு? ... ராமர் பதினாலு வருசம் வனவாசம் செஞ்ச மாதிரி, சத்தியமும் தர்மமும் பதினாலு வருசமாய் எங்கே எப்படி வனவாசம் செஞ்சுக்கிட்டு இருக்கு என்கிற துப்பு, துப்புக் கெட்ட இந்தச் சனங்களுக்குப் புரிஞ்சிருந்தால், குற்றவாளி ஒருத்தன் நீதிபதி வேஷம் போட்டுக்கிட்டு ஊருக்கு மத்தியிலே உயர்ந்து நிற்கிறதாக நடிச்சுக்கிட்டு இருக்க முடியுமா, மாமா? பூரணிக்குத் தன் அப்பன் பேர் தெரிஞ்சிட்டுது, மாமா!... மறுதரமும் நினைப்பூட்டுவேன் : பூரணி, தன்னோட அப்பன் பேரை ஊர் உலகத்துக்கு முன்னே, கூடிய சீக்கிரம் அம்பலப் படுத்தத்தான் போகுது, சேர்வைகார ஐயா!

வையாபுரி : (திகைப்புடன்) அப்படியா?

முத்து : (கம்பீரமாக) ஆமாம்!...

பொன்னம்மா : (ஆவலுடன்) பூரணிக் குட்டியோட அப்பன் யாராம்? அந்தப் படுபாவியின் பேர் என்னவாம்?

பவளக்கொடி: (ஆர்வத்தோடு) ஊம், சொல்லுங்க அத்தான்!... அந்தத் துரோகி யார்னு தெரிஞ்சுக்கிடலாமே!

அருணாசலம் : (கெஞ்சி) சொல்லுடா, தம்பி!

முத்து : (சிரித்தவாறு) இதோ, சொல்லிடுறேன்!... தும்பை விட்டுட்டு வாலைப்பிடிக்கிறதாட்டம், மெய்யான குற்றவாளியை நீதிபதியாக வேஷம் போடவிட்டிட்டு, ஒரு அபலையை— ஒரு நிரபராதியை குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி வச்சு வேடிக்கை பார்த்து இந்தப் பதினறு வருஷமாக ரசிச்சுக்கிட்டிருந்த இதே சமுதாயத்தைக் காளி சந்நதியிலே கூட்டிவச்சு, பூரணியின் அப்பன் பேரைச் சொல்லவேணும்னு கங்கணம் கட்டிக்கிட்டு இருந்தேன்! ஆனா, இப்போ, இங்கேயே, நான் நினைக்கிற அந்தச் சமுதாயம் கூடியிருக்கிறதாகவே நினைக்கிறேன். ஆத்தா காளியும் பொய்யான மனிதர்களுக்குத் தட்டுப்படாமல் இருக்கிருள்! பூரணியின் அப்பன் பேரை— நீங்க எல்லாருமே தெரிஞ்சுக்கிட ஆசைப் படுறதினலே இங்கேயே சொல்லிடுறேன். சொல்லட்டுமா மாமா, ஊகூம், சேர்வைகாரரே?

வையாபுரி : (தடுமாற்றம்) ஓ, சொல்லுங்களேன், மாப்பிள்ளை!

முத்து : (கர்வத்துடன்) மாமா, நான் உங்க மாப்பிள்ளை இல்லே! நான் முத்து! — இனிமேலாவது தர்மத்தையும் சத்தியத்தையும் மறந்திடாதீங்க!

பொன்னம்மா : (கனிவாக) முத்து, நீ தங்கமில்ல! பூரணிக் குட்டியோட அப்பன் பேர் என்ன? இந்த ஊருக்கே அவமானச் சின்னமாய் இருந்துக் கிட்டு வருற அந்தப் பூரணிப் பொண்ணோட அப்பன் யாராம்? அந்தப் படுபாவி யாரப்பா? சொல்லுடா, ராசாவே!

முத்து : (எக்காளம்) சொல்லிடட்டுமா, மாமா?

வையாபுரி : (கலவரத்துடன்) என்ன, பூச்சாண்டி காட்டு றீங்க? சொல்லுங்களேன்!

முத்து : பூரணியோட அப்பன் பேர் உங்களுக்குத் தெரி யாதா, மாமா?

வையாபுரி : ஊகூம்!

முத்து : சத்தியமாகத் தெரியாதா, மாமா?

வையாபுரி : ஊகூம்!

சீமான் முகத்தில் ஆடிப்புனலென வேர்வை ஓடுகிறது!

முத்து : (வேதனையுடன்) நிரபராதி மீனாட்சியின் அருமை மகள் பூரணியின் தகப்பனார் சீமான் வையாபுரிச் சேர்வை என்கிற உண்மையின் ரகசியம்—ரகசியத்தின் உண்மை உங்களுக்குத் தெரியாதா? தெரியவே தெரியாதா? ஏன், அப்படிச் சிலை கணக்கிலே மலைச்சுப் போயிட் டீங்க?ம்...சொல்லுங்க ஐயாவே!...

வையாபுரி : (அதிர்ச்சியுடன்) முத்து! என்ன விளையாடுறீங்க?...ஊர் பேர் தெரியாத ஒரு நாறச் சிறுக்கி பெற்ற அவமானச் சின்னமான பூரணிக்கு அப்பன் நானு?...நெருப்போடே விளையாடுறீங்க, முத்து!—மறந்திடாதீங்க!—ஆமா, சொல்லிப்பிட்டேன்!...

பவளக்கொடி : (கலக்கத்துடன்) அப்பா!... அத்தான் சொல்றது நிசம் தானு? பூரணியோட அப்பா நீங்களா? பேசுங்க அப்பா! வாய் திறந்து, மனம் திறந்து பேசுங்களேன், அப்பா!

முத்து : (இடைமறித்து) ஆமாம், பவளம்! நான் சொல்லுறேன்—பூரணியோட அப்பா...சாட்சாத் உன் அப்பாவேதான்!

வையாபுரி : (தைரியத்துடன்) நான்தான் பூரணியின் அப்பா என்கிறதுக்குச் சாட்சி என்ன?

பொன்னம்மா : ஆமா, சாட்சி என்ன?

அருணாசலம் : மெய்தான்!—சாட்சி எங்கே?

முத்து : (மிடுக்குடன்) ஊராளும் காளி சாட்சி இருக்கா!

வையாபுரி : (அட்டகாசமாக) பூரணியின் அப்பன் நான் தானுனு அந்தக் காளியைச் சாட்சி சொல்லச் சொல்லுங்களேன்!...

முத்து : (ஆவேசத்துடன்) காளி சாட்சி சொன்னால் தான், பூரணியின் அப்பா நீங்க என்கிற உண்மையை—சத்தியத்தை—தருமத்தை நீங்க அங்கீகரிச்சு, ஏற்றுக்கிடுவீங்களா, மாமா?...

வையாபுரி : (ஆணவமாக) பின்னே என்னவாம்?...சாட்சி இல்லாமல் உண்மை எப்படி அம்பலம் ஏற முடியுமாம், முத்து?

முத்து : (சோகம்) மனச் சாட்சியை மதிக்காத உங்க மாதிரி இதயமில்லாத பாவிகளுக்குச் சாட்சி சொல்ல ஆத்தா காளி கல்லே உடைச்சிக்கிட்டு வெளியே வர்ற காலம் கிட்டணியிலேயேதான் இருக்குது, மாமா! இந்தச் சத்தியத்தையும் மறந்திடாதீங்க!...

உணர்ச்சி கொப்புளிக்க முழங்குகிறான் புரட்சி முத்து.

பவளக்கொடி : (விம்மலுடன்) அத்தான்!...அத்தான்!

முத்து : (வைராக்கியத்துடன்) பவளம்! உன் அருமை அப்பா உண்மையை மறந்திட்டார்; நீ என்னை மறந்திடு, பவளம்!

சோகப் பின்னணி தவழ்கிறது!

பவளக்கொடி : ஐயையோ!...அத்தான்!

சோகப் பின்னணி தொடர்கிறது!

வையாபுரி : (ஆவேசமாக) முத்து!...என் அன்பு மகள் பவளக்கொடி கையிலே உன்னை ஒப்படைக்கா விட்டால், நான் சீமான் வையாபுரி இல்லே!

முத்து : (எக்காளச் சிரிப்புடன்) பாவம், மனப்பால் குடிக்கிறீங்க, மாமா !

வையாபுரி : (செருக்குடன்) நான் மனப்பால் குடிக்கிறவன் இல்லே ! பசும்பால் குடிக்கிறவன் இந்த வையாபுரி! முத்து, நெஞ்சிலே எழுதி வச்சுக்க !—வருகிற தை மாசம் இருபத்தஞ்சாம் தேதி உனக்கும் என் அருமை மகள் பவளக் கொடிக்கும் ஜாம் ஜாம்னு கொட்டு மேளம் முழங்கிடக் கல்யாணம் நடந்தே தீரும் ! ஆமாம், இந்த வையாபுரிச் சீமான் சொன்னால் சொன்னது தான் !

தேள் கொடுக்கு மீசையைச் செருக்குடன் நீவி விட்டுக் கொள்கின்றார் அக்கரைச் சீமான் வையாபுரி !

முத்து : (கேலியுடன்) சும்மா பகல் கனவு காணுதீங்க, மாமா !

வையாபுரி : மாப்பிள்ளை ! நான் பகலிலே கனவு காணுறவன் இல்லே ! ராத்திரியிலே தான் கனவு காண்பேன் !...ஊம், புறம்படம்மா, பவளம் !

பவளக்கொடி : (சிணுங்கியவாறு) அத்தான்...அத்தான்

முத்து : பவளம், அசகாயசூரரான உன் அப்பா உனக்கு ஒரு அத்தானைக் கட்டாயம் தேடிப் பிடிச்சித் தந்திடுவார் !—கிலேசம் காட்டாமல், போ, பவளம் !

வெஞ்சினம் தூள்பறக்க, அருமைத் திரு மகளின் கரங்களைப் பற்றி இழுத்துக் கொண்டு புறப்படுகிறார் வையாபுரிச் சேர்வை !

விதிக்கே சவால் விடுகிற பாவனை யிலே மனிதத் தன்மையுடன் சிரிக்கிறான் அழகன் முத்து !

காட்சி: 27

சவுக்கைத் தோப்பு ; பகல் நேரம்.

'மேரே தில்ரூபா' பின்னணி இசையுடன் திரை உயரும் போது, பூரணி கையில் முத்துவின் கடிதத்தைப் பிரித்தபடி நிற்கிருள். அருகே, முத்துவும் நிற்கிருன்.

முத்துவின் அக் கடிதத்தை வாய்விட்டுப் படிக்கத் தொடங்குகிருள் அழகுப் பூரணி.

பூரணி : (நாணத்தோடு) அன்புப் பூரணி!...சமுதாயம் மனத்தோடும் மனச்சாட்சியோடும் வாழ்ந்தால்தான், சமுதாயத்தின் மனிதர்களின் மனமும் நல்லபடியாக விழித்துக் கொள்ள முடியும்: மனச்சாட்சியும் நல்லதனமாக விழிப்புப்பெற முடியும். இப்படிப்பட்ட சுமுகமான சமூகத்தின் பண்பாடு வளரவேண்டுமானல், சமுதாயத்தின் ஒவ்வொரு மனிதனும் தன் கடமையை கண்ணியத்தோடும் கட்டுப்பாட்டோடும் செய்து காட்ட வேண்டும்! ஆகவே, எனக்கென்று இருக்கும் என் மனமும்

நன்மானமும் எனக்கென்று ஒரு சமுதாய கடமையைச் செயல் படுத்த ஆணையிட்டிருக்கிறது!... எதையும் தாங்கும் இதயம் எனக்கு உண்டு! எதையும் சமாளிக்கும் இதயமும் எனக்கு இருக்கிறது!... பூரணி, நான் காளியை நம்புகிறவன். ஆகவே, நீ என்னை நம்பு. நாம் நம்புகின்ற காளி ஆத்தா சந்நிதியிலேலே வருகிற தை மாதம் இருபத்தைந்தாம் தேதி நான் உனக்குத் திருப் பூட்டப் போகிறேன்! பயமும் பயங்கரமும் மண்டின சூறைக் காற்றுக்கு நடுவிலே எரியும் அகல் விளக்கைப் பாதுகாப்போடு ஏந்தி, எதிர் நீச்சல் போடப் போகிறேன்!—காளி எனக்குத் துணை நிற்பாள்! நீயும் எனக்குத் துணை நிற்பாயல்லவா?

இப்படிக்கு,
முத்து."

முத்துவின் குரல் 'முத்து' என்று ஒலிக்கிறது.

பூரணி கடிதத்தைப் படித்து முடித்து விட்டு, ஆனந்தக் கண்ணீருடன் முத்துவை ஏறிட்டுப் பார்க்கின்றாள்.

முத்து : (பரவசத்துடன்) பூரணி!

பூரணி : (லயிப்புடன்) அத்தான்!...

முத்து : (உறுதியுடன்) பூரணி! காளி ஆத்தா வெறும் கல் இல்லே. அதனாலேதான், உன்னோடை ஆத்தாளைக் காளியைச் சாட்சி வச்சுத் தாலி கட்டிக்

கல்யாணம் கட்டிக்கிட்ட உன் அப்பனை—உன் ஆத்தாளை ஏமாற்றிப்பிட்டுப் பதினாறு வருசம் உன் ஆத்தா பேரிலே வீண் பழி விழச் செஞ்சிட்டு பேடியாய் ஓடிப் போன அந்தப் பாவியான உன் அப்பனை காளியம்பன் எனக்குக் காட்டிக் கொடுத்திட்டா !...

பூரணி : (அதிர்ச்சியுடன்) என் அப்பன் யார்னு உங்களுக்குத் தெரியுங்களா?

முத்து : (நயமுடன்) உனக்கு மட்டுமில்லே, எனக்கும் உன் அப்பன் யார்னு தெரிஞ்சு போச்சு !... அந்தச் சமுதாயத் துரோகியை இதே சமுதாயத்தின் முச்சந்தியிலே நிறுத்தி வச்சு, இந்தக் காளி ஆத்தா அந்தப் பாவியைப் பேச வச்சால் தான் உன் ஆத்தா நல்ல மூச்சு விடுவாங்க; நீ நல்ல மூச்சு விடுவாய் ; நானும் நல்ல மூச்சு விடுவேன் !...சாட்சியாய் இருந்த காளி சாட்சி சொல்லாமல் தப்பவே மாட்டாள், பூரணி !...

பூரணி : (பரவசம்) அத்தான் !...

முத்து : (பரவசம்) பூரணி !...நான் கொடுத்து வச்சவன்; அதனால் தான் உன்னை எடுத்துக்கிடப் போறேன். அன்பு எதையும் கேட்காது: அது கொடுக்கவே செய்யும்—அப்படின்னு மகாத்மா சொல்லி யிருக்கார். ஆனால் என் அன்போ உன்னைக் கேட்டது. உன் அன்போ உன்னையே என் கையிலே கொடுத்திட்டுது !... நீ புண்ணியவதி !

பேசிக் கொண்டே, பூரணியை வாரி மார்புடன் அணைத்துக் கொள்கிறான் முத்து. இருவரும் இணைப் பூஞ்சிட்டுக்

களாக, 'மேரே தில்ரூபா' பின்னணி இசையில் பரவசமாகி மகிழ்ந்தவாறு நிற்கின்றார்கள்.

அப்போது, மீனாட்சி அங்கே வந்து நிற்கிறாள், ஆத்திரத்தோடு.

மீனாட்சி : (கொடுஞ்சினத்துடன்) அடி, பாவி !...

பூரணியின் கன்னத்தில் பளாரென்று அறைந்து விட்டு, மகளை முத்துவிடமிருந்து பிடித்திழுத்துப் பிரித்து விடுகிறாள் மீனாட்சி !

பூரணி : (கன்னங்களைத் தடவியபடி) ஆத்தா !...

மீனாட்சி விம்மிக் கொண்டே, பூரணியின் கைகளைத் தன் கன்னங்களிலே வீசி அறைந்து கொண்டே, முத்துவை நோக்கிப் பேசுகிறாள் :

மீனாட்சி : (தேம்பியவாறு) ஐயா ! நான்தான் பைத்தியக்காரி !—ஏமாந்திட்டேன் ! ஒரு தெய்வத்தையும் ஒரு மனுசனையும் நம்பினேன்; ரெண்டு பேருமே என்னை ஏமாத்திட்டாங்க; நம்பிக்கை மோசம் பண்ணிப்புட்டாங்க ! ஆனா, என் மகள் பூரணி கெட்டிக்காரி ! அவளை நீங்க பைத்தியக்காரியாக்கிப்புடாதீங்க, ஐயா ! உங்களைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சிக் கேட்டுக்கிடுறேன் !... உங்க காலிலே வேணும்னாலும் விழுகிறேனுங்க, ஐயா !...

அபலைத்தாய் மீனாட்சி, கும்பிட்ட கைகளோடு முத்துவின் கால்களில் விழப் போகையில், முத்து பதறித் துடித்தவனாக, அந்தத் தாயைத் தடுத்து விடுகிறான்.

முத்து : (சோகத்துடன்) அரண்டவங்க கண்களுக்கு இருண்டதெல்லாம் பேயாய்த்தான் தோணும். அது இயற்கை, ஆனா, நான் பேய் இல்லேங்கம்மா !

மீனாட்சி : (இரக்கத்துடன்) நீங்க நல்லவங்க என்கிறதை நான் எப்பவோ புரிஞ்சுதான் வச்சிருக்கேன் ; நல்லவங்களுக்குத்தான் இது காலம் இல்லீங்களே, தம்பி?

முத்து : (வேதனையுடன்) காலம் ஒரு செப்பிடு வித்தைக்காரன். அதனாலேதான் பொய், மெய்போலவும், மெய், பொய்போலவும் மயங்கித் திரியுது !... குற்றவாளி, நீதிபதியாகி எங்கேயோ ஒளிஞ்சுக்கிட்டு இருக்கான் ! ஒரு குற்றமும் அறியாத நிரபராதியான நீங்க சமுதாயத்தின் முச்சந்தியிலே குற்றவாளியாகி நின்னுக்கிட்டிருக்கீங்க !... அம்மா ! உங்களுக்குக் காளியைச் சாட்சிவச்சுத் தாலி பூட்டிட்டு ராவோடுராவாக ஓடி ஒளிஞ்சு, பதினறு வருசங் கழிச்சு திரும்பி ஓடி வந்திருக்கிற அந்தக் குற்றவாளியை நானும் இனம் கண்டுகிட்டேன், ஆத்தாளோட புண்ணியத்திலே !... ஆனா, அந்தப் பாவிக்கு காளி ஆத்தா சாட்சி சொல்லவேணுமாம் ! மனச்சாட்சியே சாட்சியாக இருக்கையிலே, வேறே ஒரு சாட்சி வேணுமாம் ! காளி எங்கே

பேசப் போறு என்கிற ஆணவத்திலே இதயத்தை மட்டு மல்லாமல் கண்களையும் மூடிக்கிட்டுப் பேசுருள் ! உங்களோட நல்ல மனசைப் புரிஞ்சுக்கிட அந்தப் பழிகாரனுக்கு மனசின்னு ஒன்று இருந்தால்தானே?... ஒழுக்க உணர்வும் பொறுப்புணர்ச்சியும் இல்லாதவனுக்கு நம்ப தமிழ்ச் சமுதாயத்திலே இடம் கொடுக்கலாமா? கூடாது, கூடவே கூடாது !... நீங்க ஒருதரம் உங்க மகள்கிட்டே சொல்லிக்கிட்டிருந்தமாதிரி, ஊர் உலகத்துக்காக ஏசுநாதர் சிலுவையைச் சுமந்ததாட்டமே, நீங்க உங்க நெஞ்சிலே தழும்பேறிப்போன உங்க புருசனுக்காகவும் அந்த ஆளோட மானம் மரியாதையை உத்தேசம் பண்ணியும் அந்தத் துரோகியை இந்தச் சமுதாயத்துக்குக் காட்டிக் கொடுக்காமல், அந்தப் பாவியால் ஏற்பட்ட அநியாயப் பழியையும் நீங்களே சுமந்துக்கிட்டும் இருக்கீங்களே... அம்மா?...

முத்து விம்முகிருன்.

மீனுட்சி : (கம்மிய குரலில்) என் விதி அது ! என் மனச்சாட்சியோட விதி அது !

முத்து : (குறுக்கிட்டு) நீங்க நினைச்சால் அந்தச் சமுதாய எதிரியை நீங்க காட்டிக் கொடுத்திடலாம்; மனுநீதி விசாரணை நடத்த நம்ப அரசு காத்துக்கிட்டிருக்கும். சாட்சி கேட்பானே அந்தப் பாவின்னு நீங்க நினைக்கலாம். சாட்சி சொல்ல, காளிதான் கல்லாகி நிற்கிருளேன்னும் நினைக்கலாம். காளி கல் இல்லே ! ஆனாலும் அவள் பேசமாட்டாதாள் ! ஆனால், கல்லேயும் கனிய வச்சு, கல்லான அந்தப் பாவியையும் ஒரு நாளைக்குப் பேச

வைக்காமல் காளி தப்ப விடமாட்டாளுங்கம்மா! நீதி தூங்கவே தூங்காதுங்க! தர்மத்தைச் சூது கவ்விஞலும், முடிவிலே தர்மம் தானுங்க வெல்லும்! அதுதானுங்க அம்மா வாழ்க்கை யோட வரலாறு! அது தானுங்க சத்தியத்தின் நியதியுங் கூட!...தர்மத்தோட கதையும் அதுவே தானுங்க, அம்மா! அதே தானுங் களே தாயே, கீதை!...

மீனாட்சி : (ஏக்கத்துடன்) தம்பி! நீங்க இந்த அனு தைங்க பேரிலே வச்சிருக்கிற நல்லன்புக்கும் நல்லெண்ணத்துக்கும் ரொம்ப ரொம்ப நன் றிங்க!... நீங்க ஆண் பிள்ளை. அதிலேயும் பெரிய இடத்துப் பிள்ளை; ஓசந்த இடத்துக்குப் போய்ச் சேர வேண்டிய மாப்பிள்ளை! ஆனா, என் மகள் பூரணி பாவம் செஞ்ச பொண்ணு! இந்தப் பாவி வயிற்றிலெ வந்து பிறந்திட்டா! எங்களை மனுசங்களோடே தெய்வமும் சேர்ந்து கிட்டுச் சோதிச்சுக்கிட்டிருக்கிற நேரம் கெட்ட நேரம் இது. நீங்களும் சோதிக்காதீங்க! நீங்க புறப்படுங்க! என் மகள் பூரணி கன்னி கழியாத் தங்கம் என்கிறதை நிசமாவே நீங்க உணர்ந்தால், இந்தச் சந்திப்பே கடைசிச் சந் திப்பாய் இருக்கட்டும்!...பெண், விதை நெல் போன்றவள். அவளுக்கு முன்னே ஒரு சரித் திரம் இருக்கும். அவளுக்குப் பின்னேயும் ஒரு சரித்திரம் இருக்கும். அந்தச் சரித்திரத்தை நாங்க வாழ வைக்கக் கடமைப்பட்டவங்க; அப்ப தான் சரித்திரமும் எங்களை வாழ வைக்கும்! ...ம்......புறப்படுங்க!

முத்து : (உணர்ச்சியுடன்) அம்மா! இந்தச் சமுதாயத்திலே நானும் ஒரு அங்கம் என்கிற காரணத்தினாலே, எனக்கென்று இரண்டு கடமைகள் உண்டு. ஒன்று, சத்தியத்தின் தலைமகளான உங்களை இந்தச் சமுதாயத்தின் முன்னே தலை நிமிர்ந்து நடக்க வைக்க வேணும்; அடுத்தது, தர்மத்தின் தாயான உங்களோட அன்பு மகள் பூரணியை நான் காளி ஆத்தா முன்னிலையிலே திருப்பூட்டி மனைவியாக ஏற்றுக்கிட வேணும் இந்த இரண்டு சமுதாயக் கடன்களையும் நான் நிறைவேற்றிக் காட்டினால் தான். நானும் ஒரு மனிதனாக—பலமும் பலவீனமும் கொண்ட ஒரு சராசரி மனிதனாகவாவது இந்த ஊர் நாட்டிலே நிமிர்ந்து நடக்க முடியும்!...எல்லாத்தையும் யோசிச்சுப் பார்த்து நல்ல முடிவு சொல்லுங்கம்மா!...

மீனாட்சி : (விரக்தியுடன்) உங்க பேச்சு சாடாவுமே சுத்தம் தானுங்க! ஆனாலும்...?

முத்து : (குறுக்கிட்டு) ஆனாலும்...?

மீனாட்சி : (சோகமுடன்) காலொடிஞ்ச நொண்டி கொம்புத் தேனுக்கு ஆசைப்பட முடியுங்களா? ஆனா, நீங்க நொண்டி இல்லீங்க, முத்து!... எங்களைப் பெரிய மனசு பண்ணிச் சமிச்சுப் பிடுங்க! நாங்க போயிட்டு வாரோம்... இல்லேங்கச் போறோம்!......

முத்து : (கதறி) அ...ம்...மா!

சோகத்தின் பிம்பங்களாகத் தாய் மீனுட்சியும், மகள் பூரணியும் புறப் பட்டு மறைகிருர்கள் !

முத்துவோ, சிலையாகி — விடுகிருன் ! பூரணியின் பேசும் நயனங்களிலே பேசாமல் சிலிர்த்திட்ட அந்தக் கண் ணீர்ப் பூக்கள் அவனது கண்ணீரில் மணக்கிறது !

திரை

காட்சி: 28

வையாபுரி வீடு ; வெளி முகப்பு ; இரவு.

வாழைத் தண்டு விளக்கொளியில், சீமான் வையாபுரிச் சேர்வை, பாய்ந் திடத் துடிக்கின்ற வரிப் புலியாகக் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டே யிருக்கிருர் !

மைத்துனர் அருணுசலம் தொங்கிய முகத்தோடு, சிந்தனைக்கு இலக்காகி, வந்து நிற்கின்ருர் !

வையாபுரி : (ஆசையுடன்) மச்சான், போன காரியம் காயா, பழமா? இல்லே, அரைக்காயா, அரைப்பழமா? இல்லாட்டி, சங்கதி முச்சூடுமே முழுக்காயா, முழுப்பழமா?

அருணுசலம் : (ஈனத்தொனியில்) அந்த வயிற்றெரிச்சலே ஏன் கேட்கிறீங்க, மச்சான்? ரொம்ப அவ மானமாய்ப் போச்சுங்க !

வையாபுரி : (நிரத்தாட்சண்யமாக) இந்த ஊருக்கே அந்த ஒத்தைக் குடிசையே ஒரு அவமானச் சின்ன

மாய் இருக்கிற லட்சணத்திலே, உமக்கு ஏன் அவமானமாகப் போகணும்? மானம்—அவமானத்துக்கெல்லாம் பயந்தா, லோகத்திலே மனுசங்க உயிரோட வாழமுடியுமா? —அப்படியொரு சோதனை நிலைமை தொடர்ந்து வந்திருந்தால், மக்கள் தொகைப் பெருக்கப் பிரசனையே எழுந்திருக்காதே, மச்சான்?

அருணசலம் : கேளுங்க கதையை !

வையாபுரி : உங்க கண்டிச் சீமைக் கதையையா? சொல்லுங்க !

அருணசலம் : இல்லீங்க, மச்சான்.

வையாபுரி : பின்னே? ஊம், நான் சிங்கப்பூர்ச் சீமையிலே பதினறு வருஷம் கேட்காத கதையாக்கும்? சரி, சொல்லுங்க.

அருணசலம் : இந்தக்கதை நவீன ராமாயாணக் கதையுங்க !—அந்த நாளையிலே, சீதையைத் தேடி ராமர் அலைஞ்சாராம் ! இந்த நாளையிலே, ஒரு ராமரைத் தேடி ஒரு சீதை—ஊகூம், ஒரு மீனாட்சி அலைகிற கதையுங்க, மச்சானே !

வையாபுரி : (முகம்மாற) ஓ, மீனாட்சி கதையா? துருசு பண்ணிச் செப்புங்களேன் !

அருணசலம் : இந்த மீனாட்சிச் சிறுக்கி சட்டம் படிக்கிறாளுங்க, சேர்வை மச்சான் !

வையாபுரி : (ஏளனமாக) ஏன், அவள் வக்கீலாகப் போருளா?

அருணாசலம் : தாடி பற்றி எரிகையிலே எவனோ பீடிக்கு நெருப்பு கேட்டானாம்!—அந்தக் கதைபோல, நீங்க இப்பத்தான் விளையாடுறீங்க, மச்சானே!...

வையாபுரி : (நைச்சியமாக) மச்சான், தைரியமாய் இருங்க. எனக்குத் தாடியும் கிடையாது! நான் பீடியும் குடிக்கிறது இல்லே! நான் ரொம்ப ரொம்ப யோக்கியமானவன்; உயர்ந்த குடிகாரன்! அதாகப்பட்டது, நான் உயர்ந்த குடியிலே பிறந்தவனாக்கும்!

அருணாசலம் : (அச்சத்துடன்) அதெல்லாம் எனக்குத் தெரியாதாங்காட்டி?

வையாபுரி : (கம்பீரமாக) நான் அக்கரைச் சிங்கப்பூர்ச் சீமையிலே தொட்டுத் தாலி பூட்டின என் பெண்டாட்டியைத் தவிர, வேறே ஒருத்தியை யும் ஏறெடுத்தும் பார்க்காத சதிவிரதன்

அருணாசலம் : (பீதியுடன்) உங்க பேச்சிலே ஓச்சம் இருக்குமுங்களா, மச்சான்? நம்மவன் முத்து நம்ம வீட்டிலே அண்ணைக்கு என்னமோ உளறிக் கொட்டிப்புட்டான்! நீங்கதான் அந்தக் கேடுகெட்ட கழிசடை மீனாட்சிக்கு வஞ்சனை பண்ணி ஏமாத்திட்டவங்க அப்படின்னு, நான் என் ராஜா முத்து கணக்கிலே உங்கமேலே சம்சயப்படுவேனா?

வையாபுரி : (திமிராக) ஓய், மச்சானே! நீங்க என்னுங் காணும் இந்த வையாபுரிச் சேர்வை பேரிலே சந்தேகப் படுகிறது!—இல்லே, அதுக்கு உண்டான உரிமை நீங்க பெற்ற முத்துவுக்குத் தான் உண்டா என்கிறேன்? எனக்கு நான்

தான் முக்கியம்: அப்பாலே, என் குடும்பம் ஓசத்தி. என்னோட குடும்பத்திலே மிஞ்சி யிருக்கிற என் ராசாத்தி பவளம்தான் எனக்கு ஊர் உலகம், சாதி சனம், சொந்தம் பந்தம் சகலமும் !—அண்ணைக்கு உம் மகன் என்னை வம்புக்கு இழுத்து, மீனாட்சிச் சிறுக்கியையும் என்னையும் சம்பந்தப்படுத்தி, சம்பந்தம் இல்லாத எதை எதையோ தூண்டித் துருவிக் கேட்ட சங்கதியை எல்லாம் என் பொண்ணும் காதிலே வாங்கிக்கிணு தான் இருந்திச்சு !— ஆனா, இந்த மினிட் வரை அதைப்பற்றி எங் கிட்டே மூச்சுக் காட்டினது உண்டாங்கிறேன்? —ஊகூம், மூச் !...எனக்கு அந்த நம்பிக்கை— அதாவது, என் மகள் என் மீது கொண்டிருக்கக் கூடிய அந்த நம்பிக்கைதான் எனக்கு உயிர் !

வையாபுரி உணர்ச்சிக் கொந்தளிப் புடன் வாக்கு வாதம் செய்கிறார்.

மைத்துனருக்குப் பீதி மூள்கிறது !

அருணாசலம் : ஓங்க வாய் வார்த்தைங்க ஓட்டுக்குமே, ஓட்டு மொத்தமான மெய்ப் பேச்சுத் தானுங்க மச் சான் காரவுகளே! முத்துக்கு உண்மை எப் படித் தெரிய இயலும் ?—ஓடுகிற விரியனைத் தாண்டுற விடலை அவன் ! அவன் கிடக் கான் !... விசயத்துக்கு வருவோமே ?

வையாபுரி : ஊம், வாங்க !

அருணாசலம் : மாங்குடிக் கதாநாயகி மீனாட்சி கிட்டே நையம் பாட நாம நம்ம கையாளுங்களைக் கூ முக்கமாய் அனும்பிச்சு வச்சோமுங்களா ?

வையாபுரி ஃ ஊம் !...

அருணசலம் ஃ அவங்க மீனாட்சியைக் கண்டுதண்டி, எட்டடிக் குச்சை அட்டி சொல்லாமல் காலி பண்ணிக்கிட்டு, வேறே கண்காணுத தொலைவுக்கு எங்காச்சும் ஓடிப் போயிடும்படி மீனாட்சி காதிலே இதம் பதமாய்க் கெஞ்சியிருக்காங்க; ஆனு, அவளோ மிஞ்சியிருக்காலாம்! கடைசிலே, நம்ப ஆளுங்க—அதாவது, உங்க கை ஆளுங்க அவளைப் பூச்சாண்டி காட்டினுங்களாம் ! அப்பத்தான் அந்தப் பாழத்தமுண்டம் நம்ம ஆளுங்களைப் பயமுறுத்தச் சட்டம் படிச்சிருக்கா !—வீடு இல்லாத ஏழைபாழைங்களுக்கெல்லாம் நம்ப ராசாங்கம் மனைப்பட்டா வழங்குதாம் !— இந்த நிலவரத்திலே, குடிக்காணியாட்சிப் பாத்தியம் கொண்ட அவளைக் குடிசையைக் காலி பண்ணும்படி மறுதக்கம் யாராச்சும் மூச்சுப் பறிஞ்சால் கூட, உடனே அறந்தாங்கிந்தாணுவுக்குப் பறிஞ்சு, புகார் மனு கொடுத்துப்புடுவாளாம் இந்த மீனாட்சிப் புறம்போக்கு ! தன்னேட ராமரைத் திரும்ப அடைகிற மட்டுக்கும் இந்த மண்ணை விட்டு, அங்கிட்டு இங்கிட்டு நகரவே மாட்டாளாம் !...

வையாபுரி ஃ (கிண்டலாக) இந்த மீனாட்சி கெட்டகேட்டுக்கு ராமர் கிடைக்க வேண்டியதுதான் குறைச்சல் !

அருணசலம் ஃ (சிரிப்புடன்) பாவம் !...

வையாபுரி ஃ (சினத்துடன்) கேடுகெட்ட அந்தப் பழிகாரி மீனாட்சிக்கு இம்மாம் வாய்க் கொழுப்பும் சவடாலும் வந்தாச்சாக்கும்?... ம் !

அருணசலம் ஃ ஆமாங்க !

வையாபுரி : (எரிச்சல்) மீனாட்சியோட திமிரை அடக்கி ஒடுக்கத்தான் நான் ஒரு திட்டம் போட்டேன்! அப்பன்பேர் விளங்காத அந்தக்குட்டி பூரணி, நம்ப தோட்டக்காரப் பயலோடு கள்ளத் தொடுப்பு வச்சுக்கிட்டு இருக்கிறதாய் ஒரு பொய்க் கதையைச் சோடிச்சு, ஒரு பொய்க் கூத்தையும் ஆடவச்சு, அதைத் தத்ரூபமாக மெய்ப்பிச்சுக்காட்டிஞல், அதன் விளைவாக, முத்து மாப்பிள்ளையோட வெள்ளி மனசைத் தங்கமாக மாற்றிப் பிடலாம்னு மூணு நாள் திட்டம் தீட்டினேம்!—ஆனா, என் மாப்பிள்ளை யும் உம் மகனுமான புரட்சிக்கார முத்து, நம்ப ரகசியப்பேச்சை ஒட்டுக்கேட்டுக்கிட்டு இருந்து, கடைசியாய்க் காரியத்தையே கெடுத்துத் தொலைச்சிடுச்சே? ... சே!... ஆனாலும், இந்த முத்து சுத்த மோசம்!...

அருணசலம் : (நயவாக) மச்சான், வெண்ணெய் திரண்டு வருற நேரத்திலே, நீங்க இப்படி அதைரியப் படக்கூடாதுங்க!

வையாபுரி : (கோபத்துடன்) அதுதான் தாழியையே போட்டு உடைச்சிட்டுதே என் மாப்பிள்ளை? —உங்க பிள்ளையாண்டான்?...

அருணசலம் : (கனிவுடன்) தாழி உடைஞ்சிட்டாலும், வெண்ணெய்க்கு ஒரு கேடும் இல்லீங்களே?

வையாபுரி : (உற்சாகமாக) ஓஹோ?—அப்படீங்களா?

அருணசலம் : (சிரிப்புடன்) ஆமாங்க; என் மகஞன முத்துவை உங்க மகளான பவளத்தோட தங்கக் கையிலே சுபயோக சுபதினத்திலே ஒப்படைச்சிட்டா, அப்பாலே, அவனேட

வெள்ளி மனசைப் பொன் மனசாக மாற்றிப் போடாதுங்களா, எம் மருமகள் பவளம்?...

வைபாபுரி : (நம்பிக்கையுடன்) பலே!... சொன்னலும் சொன்னீங்க, நெல்லுக்குள்ளே அரிசி இருக்கிறதாட்டம், கச்சிதமாய்ச் சொன்னீங்க! —ம்...! பவளத்தின் வசத்திலே முத்துவை—மஞ்சி விரட்டுக்காளையான முத்துவை வசம் கணிச்சு, வசப்படுத்தி ஒப்படைச்சுப் பிடத்தானே, அந்த எச்சில் இலையான மீனாட்சியையும் அவன் பெற்றுப் போட்டிருக்கிற பூரணிச் சனியனையும் ஊரைவிட்டே துரத்தியடிக்கப் பாடுபட்டேன்! அப்பத்தான், அப்பன் பேரை இன்னமும் புரிஞ்சுக்கிட லாயக்கில்லாத அந்தத் துப்புக்கெட்ட பூரணியை அடியோடு முத்து மறந்துப்புட வாய்க்கும்னும் நான் நம்பியிருந்தேன்!... ஆனா, அந்தப் பாதகி காளி என் ஆசையிலே குருவிமணலை அள்ளி வீசிக் கிட்டே இருக்காளே?

அருணசலம் : (துடிப்புடன்) நாலும் தெரிஞ்சவ காளி: அவள் பேரிலே ஆத்திரப்படப் படாதுங்க, மச்சான்!

வையாபுரி : (குழப்பத்துடன்) என்ன சொல்றீங்க, அருணசலம்?

அருணசலம் : (பணிவுடன்) இந்தாலே, சொல்லிப் பிடுறேனுங்க: உங்களை நாளும் பொழுதும் சோதிச்சுக்கிட்டு இருக்கிற மீனாட்சியையும் பூரணியையும் இந்த ஊரை விட்டு இனி ஒருக்காலும் துரத்தியடிக்க முடியாது!...

வையாபுரி : (பீதியுடன்) பின்னே?

அருணசலம் : (ரகசியமாக) ஆத்தா—மகள் ரெண்டு பேரையும் இந்த உலகத்தை விட்டே துரத்தி

யடிச்சிட்டா, அப்பாலே, இந்தச் சென்மத்துக்கு நமக்குத் திருகுவலியே இல்லாமல் போயிடுமே, மச்சான்?

வையாபுரி : (தாழ்குரலில்) ஊஸ்...ச த் த ம் கா ட் டா தீக, மச்சானே? இது அயனான ரோசனைதான். ரோசிக்கலாம் !—முதலிலே நீங்க போய், நம்ப பவளக்கொடி—மூதது கலியாணத்தைப்பத்தி அமர்க்களமான ஒரு திட்டத்தைத் தீட்டுங்க !—ஊர் வெற்றிலே பாக்கு, ஆட்டுக்கறி—கோழிக் கறியோட ஊர் விருந்து எல்லாம் கருராக இருக்க வேணும்; ராசாமடம்தான் மேளம்; திருக்கோகர்ணம் கிளிமொழிதான் டான்ஸ் !... சரி, சரி ! என் சோலியை நான் சல்தி பண்ணிக் கவனிக்கிறேன். பணம் பாதாளம் வரையிலும் பாயும்னு கிழம் கட்டைங்க சொல்லுருங்களே, அந்தப் பேச்சு கவைக்கு உதவுமான்னு கைக்கு மெய்யாகச் சுண்டிப் பார்த்திட நான் இதோ, இப்பவே அந்த மீனாட்சியைச் சந்திக்கப் போறேன் !...என்னோட இந்தக் கடைசி எத்தனத்துக்கு மசியாமல் அந்த ஈனச் சிறுக்கி மீனாட்சி எப்படித் தப்ப முடியுமாம்...? நான் வையாபுரியா? இல்லே, கொக்கா?...

வையாபுரி கொக்கரிக்கிறார் !

அருணாசலம் : (கனிவுடன்) நீங்க வையாபுரிங்க !—வெறும் வையாபுரிங்களா?—சீமான் வையாபுரிங்க !

வையாபுரி : (களிப்புடன்) பேஷ், பேஷ் ! —அப்படிச் சொல்லுங்க! திரும்பி வந்து உங்க வாய்க்கு ஜினி போடுறேன் !...ஞாபகமூட்ட வேணும் ! சரி, சரி; நேரமாச்சு; நான் புறப்பட்டேன்,

மச்சான்! இப்போதைக்கு இந்த நடப்பு பவளத்துக்குத் தெரியாமல் இருக்கணும்!

சில்க் ஜிப்பாவின் பையிலிருந்து கத்தை கத்தையான 'கரன்ஸி' நோட்டுக்களை வெளியே எடுத்துக் காண்பிக்கிறார் சீமான் வையாபுரி.

இக் காட்சியை, அடுப்படியிலிருந்து திரும்பியதும், தற்செயலாகக் கவனித்து விடும் பவளக்கொடி, மீண்டும் கலவரம் அடைகிறாள்!

அருணாசலம் : (மலர்ச்சியுடன்) உங்க நல்ல காரியம் கெலிக்க ஆத்தா காளி மகமாயிதான் நல்ல கருணை காட்டவேணுமுங்க, அருமை மச்சானே!

வையாபுரி : (நையாண்டி) நீங்க ஒண்ணு! என் திட்டம் வெற்றியடைய இப்போதைக்கு அந்தப் பாவி மீனாட்சிதான் கருணை காட்டவேணுமாக்கும்!— ஏன், தெரியுமா, மச்சான்?—மீனாட்சிக்குத்தான் பேசத் தெரியும்!—காளிக்குப் பேசவே தெரியாதே?—பாவம், காளி!...பாவம், மீனாட்சி!...

அதிர்வேட்டுச் சிரிப்பை உமிழ்ந்து சக்கியவராகத் தலையை நிமிர்த்தி நிற்கிறார் சீமான் வையாபுரி.

பின்புலத்தே, வேறொரு சிரிப்பு — விதியின் சிரிப்பாக ஒலிக்கிறது; எதிரொலிக்கிறது!

மறுபடி, சிலையாக மலைத்தாலும், வீறுப்புடன் வீறு கொண்டு கிளம்பி விடுகின்றார் சீமான்!

அருணாசலத்தின் நடுங்கும் கைகள் சூன்ய வெளியில் குவிகின்றன!...

திரை

காட்சி: 29

வையாபுரியின் வீட்டுக் கூடம் ; அதே இரவு.

மின் ஒளியின் புது வெள்ளத்திலே, தன் உயிருக்குயிரான ஆசை அத்தானை முத்துவின் புகைப் படத்தை தொடுத்த விழி எடுக்காமல், பாசத்தோடும் நேசத்தோடும் பார்வை பரப்பிக் கொண்டிருக்கிருள் கன்னிப் பூஞ்சிட்டு பவளம். சுடு நீர் சுட்டெரிக்கிறது.

வாசல் தொழுவத்தைத் தாண்டி, நிலவைத் தாண்ட முடியாமல், உள் நடையைக் கடக்கும் முறைமைக்காரன் முத்து, பவளக்கொடியின் அழகு சொட்டும் முதுகுப்புறம் நலியாமல் வந்து நின்று, முறைப்பெண் பவளத்தின் அவலக் கோலம் கண்டு, மனிதாபிமானம் கொண்டு கண் கலங்குகின்ருன்.

முத்து : (பரிவுடன்) பூ ர ணி !...ஓ ...ப வ ள ம் !... பவளக்கொடி !...

பவளக்கொடி : (ஆற்றாமையுடன்) யார், அத்தானு?... வாங்க, வாங்க, பூரணியோட ஞாபகத்தோட வந்திருக்கீங்க போலே!

முத்து : (அனுதாபம்) மெய்தான், பவளம்! என் நெஞ்சிலே பூரணி குந்தியிருக்கிறது பொய் இல்லேதான்; ஆனா, இப்ப நான் வந்திருக்கிறது உன்கிட்டேதானே? ஆனால், என்னோட படத்தை வச்சுக்கினு நீ கண் கலங்கிக்கிட்டு இருக்கிறதைப் பார்க்கையிலே, பாரதி பாடின தொப்ப, என் நெஞ்சும் தூண்டில் புழுவைப் போலத்தான் தத்தளிக்குது, அம்மான் மகளே!

பவளக்கொடி : (ஏக்கம்) உங்க மனசு எனக்கோசரம் சும்மா தத்தளிச்சு என்னுங்க புண்ணியம், அயித்தை மகனே? ஆனா, அந்த மனசான மனசிலேதான், பூரணி குடியிருக்குதுங்களே? என்னதான் ஊர் நாட்டிலே அவப்பேர் மூண்டிருந்தாக் கூட, ஒரு வகையிலே பார்த்தால், பூரணி புண்ணியவதியேதான்! இல்லாட்டி, உங்களோட நல்ல உள்ளத்திலே அந்தப் பூரணிக்கு ஒரு நல்ல இடம் கிடைச்சிருக்க ஏறுமா?

முத்து : அது சரி; மாமன்காரர் அதுக்குள்ளாறவா கோழித் தூக்கம் போடத் தொடங்கிட்டாங்க?

பவளக்கொடி : அப்பனுக்கு ஏதுங்க தூக்கம்? அவங்க இப்ப உள்ளே இல்லே; சொல்லுறேன்!— ஆமா, அப்பனை ஏதுக்கு இப்பத் தேடுறீங்க? அன்றைக்குப் பூரணியோட அப்பன் விசயமாய் விட்ட குறையைத் தொட்டுக்காட்டி, மறுவாட்டியும் விவகாரம் பண்ணவா என் அப்பாவைத் தேடுறீங்க?—அது போகட்டும்!—

பூரணியோட அப்பன்காரன் யாருங்க அத்தை மகனே?

முத்து : (சுரத்தின்றி) ஊம், சொல்லுறேன்!

பவளக்கொடி : (ஆவலாக) ஊம், சொல்லுங்க!

முத்து : இப்பவேயா?

பவளக்கொடி : ஆமாங்க!

முத்து : கூடிய சீக்கிரத்திலே பூரணியோட அப்பன் பேரைச் சொல்லிக் காட்டிப் பிடுவேன், பவளம்!

பவளக்கொடி : ப்பூ! இம்புட்டுத்தானா கதை? உங்களுக்கே பூரணியின் அப்பன் பேர் சரிவரத் தெரியாமல் இருக்கையிலே தானா, ஒரு நாள் உங்க வீட்டிலே என் அப்பாவை அடியும் இல்லாமல், நுனியும் இல்லாமல் சந்தேகப்பட்டு மல்லுக்கு இழுத்தீங்க, அத்தான்? நல்லவேளை, நானும் என் அப்பனைச் சந்தேகப்பட்டுவைக்கல்லே!... காளிதான் எம்மனசைத் தடுத்திருக்கணும்!

முத்து : (ஆவலாக) பூரணி!......

பவளக்கொடி : (வேதனை) நான் பூரணி இல்லே! நான் பவளக் கொடி!

முத்து : (உறுதியுடன்) ஆமா, ஆமா; பவளமே தான்! பவளம், பூரணியோட அப்பன் யார் என்கிற அந்தச் சத்தியத்தின் ரகசியத்தை நீ மட்டுமில்லே, இந்த மாங்குடிக் கிராமமே தெரிஞ்சுப் புரிஞ்சுக்கக் கூடிய காலம் தொலைவிலே இல்லேன்னு மட்டும்தான் என்னாலே இந்த நிமிஷம்

சொல்ல முடியும்!—மற்றப்படி, இதுக்கு மேலே என்னைத் தூண்டித் துருவாதே, பவளம்!

பவளக்கொடி : எல்லாமே ஒரே மூடு மந்திரமாக இருக்குதுங்களே?

முத்து : மூடுமந்திரம், சிதம்பர ரகசியமாக ஆகிறத்துக்கு, வேளை கூடி வந்தாச்சின்னு, ஒரு நொடி—ஒரே நொடி பற்றுதா, பவளம்?

பவளக்கொடி : (கலக்கம்) அப்படீன்னு, அந்தத் துப்பு உங்களுக்குத் தெரியும் தான் போலே!—அத்தான்!...ப்ளீஸ், அத்தான்!

முத்து : என்னை மன்னிச்சிடு, பவளம்!

பவளக்கொடி : அது போகட்டும்; பூரணிக்காச்சும் அதோட தகப்பன் பேர் தெரியுங்களா?

முத்து : (குதூகலமாக) ஓ! கொட்டு முழக்கோடே தெரியும்!...ஆனா, அந்தப் பேர் ஊர் உலகத்துக்குத்தான் தெரியாது. பூரணி தன்னோட பெற்ற அப்பன பேரை அந்நியம் அசலான மூணாம் பேர் யார்கிட்டவும் மூச்சுக் காட்டப் புடாதின்னு, பூரணியைப் பெற்ற மீனாட்சி ஆணை வச்சிருக்காங்களாக்கும்!—சத்தியம் கட்டியிருக்காங்களாக்கும்! ஆமா!

பவளக்கொடி : அதிசயக் கூத்தாயிருக்குதே, அத்தான்?

முத்து : வாஸ்தவம் தான்! பதினாறு வருசத்துக்கு முன்னாடி காளி ஆத்தா திருச் சந்நிதானத்திலே ஆரம்பிச்ச அந்த அதிசயக் கூத்து, முடியக் கூடிய காலம் கிட்டணியிலேயே நெருங்கிக் கிட்டு இருக்குது, பவளம்! பூரணியேடா

தாய் மீனாட்சி அம்மாளின் அதிசயமான பொறுமைக்கும் ஒரு நல்ல விடி பொழுது இனி கட்டாயம் விடிஞ்சே தீரும்!

பவளக்கொடி : (அதிசயம்) கடிக்க வர்ற நச்சரவத்தைத் தடி கொண்டு அடிக்கிறதுதான் ஊர் வளமை; ஆனா, இந்த மீனாட்சியோ, தன்னைப் பல்லுப் போட்டுத் தீண்டிக் கடிச்சிட்ட ஒரு கண்டங் கருவளைப் பாம்பையே அடிக்காமல் கொள்ளாமல், இரக்கப்பட்டு, விரட்டிவிட்டிருக்காங்களே? அப்படீன்னா, மெய்யாலுமே, பூரணியோட அம்மா மீனாட்சி பாவி இல்லீங்களா?—பழிகாரி இல்லீங்களா?

முத்து : (கனிவுடன்) ஊகூம்!... இல்லே! இல்லவே இல்லே, பவளம்!

பவளக்கொடி : (வியப்புடன்) அப்படியானால், பூரணியின் ஆத்தா மீனாட்சி மெய்யாகவே நல்ல புண்ணியவதி தானா?

முத்து : (புன்னகையுடன்) ஆமாம், பவளம்!

பவளக்கொடி : (துடிப்புடன்) அத்தான்! அப்படின்னா பூரணியோட அப்பன் பேர் என்னன்னு இப்பவே சொல்லுங்களேன்!... அந்தப் பழிகாரத் துரோகியோட பேரைத் தெரிஞ்சுக்கிட மனசு துடிக்குதே, அத்தான்!

முத்து : (சிரிப்புடன்) அடி ஆத்தே! நான் சொல்லப் புடாது, பவளம்! அந்தப் பாவப் பட்ட பெயரை என் வாயினாலே நான் இப்ப சொல்லப் புடாது, பவளம்!

பவளக்கொடி: அந்தப் பேரை உங்களுக்கு மட்டும் பூரணி காதும் காதும் வச்சாப்பிலே சொல்லிப்புடுச்சுங்களா, அத்தான்?

முத்து: (நிதானமாக) பூரணி சொல்லலே; நான் உளவு வேலை செஞ்சு அறிஞ்சிக்கிட்டேன், பவளம்!

பவளக்கொடி: (திகைப்பு) என்ன சொல்றீங்க, அத்தான்!

முத்து: (கவலையுடன்) நடந்த அநியாயத்தைச் சொல்றேன்!

பவளக்கொடி: (குழப்பம்) ஒண்ணுமே விளங்கலையே, அத்தான்?

முத்து: (சடையுடன்) விளங்கியிருந்தால்தான், எப்போதோ தர்மம் பிழைச்சிருக்குமே, பவளம்? அப்படித் தர்மம் பிழைச்சிருந்தால்தான், நான் என் சமுதாயக் கடமைக்காக அபலை பூரணியைக் கல்யாணம் பண்ணிக்கிடுற திட்டத்தைக் கைவிட்டு இருப்பேனே—ஒரு நிறைவோடே? அப்பாலே, முறைப்பெண்ணான உன்னையே நான் கட்டிக் கிடவும் ஒப்பியிருப்பேனே—ஒரு ஆசையோடு?...

பவளக்கொடி: வேடிக்கையாய் இருக்குதுங்க உங்க பேச்சு!

முத்து: (பெருமையுடன்) அந்த வேடிக்கைக்கு இன்னொரு பேர்தான் சமுதாயக் கடமை, பவளக்கொடி: சமுதாயம் செய்யத்தவறின கடமைக்குத்தான் நான் தலை கொடுக்கப் போறேன்! அதே சமுதாயக் கடன்தான் அபலை பூரணியை என் நெஞ்சிலே பாயவும் வச்சிடுச்சு! இனிமே

பூரணியோட அப்பனே வந்து சதிபண்ணித் தடுத்தால் கூட, எங்கிட்டேயிருந்து என் அருமைப் பூரணியை— ஆசைப் பூரணியை— அன்புப் பூரணியைப் பிரிக்கவே இயலாதாக்கும்! ஏன், கண்ணுக்கு ஒளிஞ்சுகிட்டு ஜாலம் பண்ணுற அந்த விதியே கூட இனிமே எங்க இரண்டு பேரையும் பிரிக்கவே வாய்க்கா தாக்கும்!

பவளக்கொடி : (பெருமூச்சுடன்) பூரணி கொடுத்து வச்சவள் தான்!...

முத்து : (நமட்டுச்சிரிப்பு) அப்படியா, பவளம்?

பவளக்கொடி : (தவிப்பு) வாஸ்தவம் தானுங்க, அத்தான்! —பூரணிக்குத் தன் அப்பன் யார்னு இனம் புரிஞ்சிடுச்சு. பூரணியின் தாயாரும் தனக்குத் தாலி கட்டிட்டு, பதினறு வருஷம் ஒடி ஒளிஞ் சிருந்து அஞ்ஞாத வாசம் செஞ்ச புருஷனை கண்டு தெளிஞ்சிட்டாங்க! கட்டினவன் மானம், சமுதாயத்தின் மத்தியிலே ஆலாய்ப் பறந்திடுமேன்னு அந்தத் துரோகியின் பெயரை அம்பலப் படுத்தாமல் இருக்கிற சங்கதியும் விளங்கிடுச்சு! ஆனல், அந்தப் பாவி, தானே மீனுட்சிக்குத் தாலி கொடுத்தவன் என்கிற உண்மை நடப்பை ஒத்துக்கிட்டானு, அத்தான்? அந்தத் தருமச்சத்தியத்தை அந்தப் பழிகாரப்பாவி மனசார ஏற்றுக்கிட்டானுங்களா அத்தான்?

முத்து : (ஏளனச்சிரிப்புடன்) எப்படி ஒத்துக்கிடுவான், பவளம்? அப்படி ஒத்துக் கிட்டால்தான், அவனை, காளிக்குப் பதிலாகக் கோயிலிலே நிறுத்தி வச்சு நாமெல்லாம் கும்பிடலாமே?

அந்தப் பாவி, மனச்சாட்சிக்கோ, அல்லது காளிக்கோ பயந்து உண்மையை ஒத்துக்கிட மறுக்கிறதினலேதான், அந்தச் சமூகத் துரோகியை சமுதாயத்தின் முச்சந்தியிலே நிறுத்திவச்சு நீதி விசாரணை செய்யுறதுக்கு, உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக் காட்டம் நேரம் காலத்தை எதிர்நோக்கிட்டு இருக்கேனுக்கும் நான்!

பவளக்கொடி : (கெஞ்சுதலாக) நீங்க தங்க அத்தான் இல்லீங்களா? பூரணியின் அப்பா யார்னு பெரியமனசு பண்ணிச் சொல்லப்புடாதுங்களா, அத்தான்? ஏனே என் மனசு என்னென்னமோ எண்ணி எண்ணிப் பயந்துக்கிட்டே இருக்கு துங்களே?...

முத்து : (வேதனையுடன்) நான் அந்தப் பெயரைச் சொன் னல், நீ மட்டும் நம்பிடுவியா? உன் தகப்பன் அன்றைக்கு என் கையிலே கேட்ட மாதிரி, நீயும் சாட்சி கேட்க மாட்டியா? மீனுட்சியோட தாலிக்குச் சாட்சி இருக்கிற காளிதான் ஊமை யாகிட்டாளே? அந்தப் பாவிக்குச் சாட்சி இருக்கிற அவனேட மனச்சாட்சியைத்தான், அந்தப் பாதகன்—வஞ்சகன் மீனுட்சியை ஏமாற்றினது மாதிரி, அல்லும் பகலும் ஏமாற்றிக்கிட்டு இருக்கானே, பவளக்கொடி?

பவளக்கொடி : பாவம், மீனுட்சி அம்மா!

முத்து : (உணர்ச்சிப் பெருக்குடன்) மனிதத்தன்மையோடே, கச்சிதமாகச் சொல்லிட்டியே, பவளம்?

பவளக்கொடி : இனியாச்சும், பூரணியோட நயவஞ்சக அப்பன் யார்னு என் காதிலே அந்தரங்கமாக

ஓதப்புடாதுங்களா?—நான் மூணும்பேர் யார் கிட்டேயும் மூச்சுக் காட்ட மாட்டேனுங்க!... அத்தான்!...அத்தான்!...

முத்து : (போதனையுடன்) பூரணியோட அப்பன் யார் என்கிற அந்தரங்கத்தை நீயும் தேடு, பவளம், தேடு!—உண்மை கிடைக்கும்! உண்மையைத் தேடு!—பூரணியோட அப்பன் கிடைப்பான்! உனக்குப் பாசம் கிடைக்கும்; அன்பு கிடைக்கும்; புண்ணியமும் சேர்ந்து கிடைக்கும்!...அதோட, இந்தச் சமுதாயத்தின் நல்வாழ்த்தும் கிடைக்கும்!...சரி, சரி; மாமா எங்கேயாம்?...சொல்லவே இல்லையே, பவளம்?

பவளக்கொடி : (சஞ்சலத்துடன்) என்னோட அன்பான அப்பா கத்தை கத்தையாய்ப் பண நோட்டை அள்ளிக்கிட்டு எங்கேயோ ராவோடு ராவாகப் புறப்பட்டுப் போயிருக்காங்க!—அநேகமாய், மீனாட்சி அம்மா குடிசையைத் தேடித்தான் போயிருக்கவேணும், அத்தான்! உங்க அப்பாவும் எங்க அப்பாவும் கொஞ்ச முந்தி என்னமோ சதி ஆலோசனை நடத்தினாங்க, அத்தான்!

முத்து : (பதறியபடி) ஐயையோ!...இப்பவே நான் அங்கே ஓடவேணும், பவளம்!

பவளக்கொடி : (கெஞ்சியபடி) நானும் உங்க பின்னாடி ஓடியாறேனுங்க, அத்தான்!

முத்து : (துடிப்புடன்) பேஷாக வா, பவளம்! அசந்து தூங்கிக்கிட்டிருந்த விதி இப்பத்தான் சுரணை வந்து விழிச்சுக்கிட்டு, விளையாடப் போகுது!

அந்த வேடிக்கைக் கூத்தை நீயும் பார்க்க வேணுமா? வா, பவளம் ! வா !...

இருவரும் விதியின் விதியாகவும், விதிக்கு விதியாகவும் ஓடுகின்றனர் !

பின்னணி 'சஸ்பென்ஸ்' கூட்டி இசைக்கிறது !''

திரை

காட்சி: 30

மீனாட்சியின் குடிசை ; அதே இரவு.

மீனாட்சியின் கையிலிருந்த குங்குமச் சிமிழ் கைநழுவி விழுந்து, குங்குமம் பூராவும் கொட்டி விடுகிறது. பதை பதைக்கிறது தாய் உள்ளம். கை விளக்கின் சன்னமான வெளிச்சத்தில் 'சிகப்பு' சிரிக்கிறது !

பூரணி : (தவிப்புடன்) ஐயையோ ! குங்குமம் அத்தனை யும் கொட்டிடுச்சுதே, ஆத்தா !

மீனாட்சி : (நெட்டுயிர்ப்புடன்) குங்குமம் இருக்கிற மட்டும்தான், குங்குமச் சிமிழுக்கு மதிப்பு, மரியாதை எல்லாம் என்கிறதை எனக்கு நினைப்பூட்டத்தான், குங்குமம் பூராவும் கை நழுவி மண்ணிலே கொட்டிடுச்சுப் போலே

பூரணி : (விம்மலுடன்) இனி நம்ப கதி?...

மீனாட்சி : (விரக்தியுடன்) கதி என்ன, கதி? அதோ கதி தான், பூரணி !...உன் அப்பன், அதாவது என் புருசன், சமுதாயம் என்மேலே அநியாய மாய்க் களங்கம் சுமத்திப் பதினறு வருசமாய்

வேடிக்கை பார்த்துக்கிட்டிருக்கிற அந்தப் பொல்லாத வீண் பழியைத் துடைச்சு வீசிப் பிடுவார், அப்பாலே ஊர் உலகத்தைப் போல நானும் உன்னை மாலையும் கழுத்துமாய்க் கண்டுப் பிடலாம்னு ஏங்கித் தவிச்சுக் கிட்டிருந்தேன் !... ஆனா, நான் கொடுத்து வைக்காத கொடும் பாவி ஆகிப்புட்டேனே, மகளே?...பாவியே, காளியே ! இனி எங் களுக்கு என்ன கதி?...தூ !...நீ காளி இல்லே ! —வெறும் கல் !...

பூரணி : (கதறியபடி) ஆத்தா !...ஆத்தாளே !

அப்போது காவல் நாய் குரைக்கும் சத்தம் எழுகிறது.

வெளியில் தலையை நீட்டி மீனாட்சி எட்டிப் பார்க்கிறாள்.

பூரணியும் அக் காட்சியைக் கண்டு திகைக்கிறாள் !

அங்கே, வாசல் நிலவில் 'செண்ட்' மணக்க, புது மாப்பிள்ளை போலே, அக் கரைச் சீமான் வையாபுரி காட்சி யளிக் கின்றார்—புது மலர்ச்சியுடன் !

வையாபுரி உள்ளே நுழைவதற்கும், பவளக்கொடியும் முத்துவும் ஆளுக் கொரு பக்கமாக மறைந்து நிற்பதற்கும் சரியாக இருக்கிறது !

பயங்கர இசை ஒலிக்கிறது !

தாயும் மகளும் வையாபுரியை வரவேற் காமல், மௌனம் காத்து நிற்கிறார்கள். வையாபுரி நெஞ்சைத் தடவி விட்டுக் கொண்டே, பாசம் கொண்டதாகவும் பரிவு கொண்டதாகவும் நடிக்கத் தலைப் படுகிறார் !

காவல் நாய், வையாபுரியை மோப்பம் பிடித்துச் சுற்றுகிறது !...

வையாபுரி : (நடிப்பு) மகளே !...

பூரணி : (பாசம் பொங்க) அப்பா !...

வையாபுரி : (போலியாக) பூரணி ! உன்னை மகளேன்னு அழைக்க நான் இத்தனை நாளாய் எப்படித் துடிச்சிட்டு இருந்தேன், தெரியுமா?

பூரணி : (சிலிர்ப்புடன்) நிசமாகவா, அப்பா ?—நானும் தான் பெற்ற உங்களை அப்பான்னு வாய் கொள்ளாத அன்போடும் மனம் கொள்ளாத பாசத்தோடும் அழைக்க வேணும்னு எத்தனை வருஷமாய்த் தவம் கிடந்து தவிச்சுக்கிட்டு இருந்தேன், தெரியுங்களா? பாசம் ஒரு பூ விலங்கின்னு சொல்வாங்க. சரியாயிடுச்சு. அந்தப் பாசவிலங்குக்கு இன்னிக்குத்தான் காளி ஆத்தா விடுதலை கொடுத்திருக்கா !

பூரணி விம்முகிறாள்.

வையாபுரி : மகளே, அழாதே !— இனி நீ அழவேண்டிய தேவையே கிடையாது !...கழிஞ்ச காலம் கண்ணீரோடு தொலைஞ்சிடட்டும் !... இனி நீ சிரிச்சிக்கிட்டே இருக்கலாம் !...உன் அப்பனை நீ யாச்சும் மன்னிக்க மாட்டியா, பூரணி?...

பூரணி : அ...ப்...பா ! நீங்க ஆத்தாளுக்குச் செஞ்ச பாவத்தை மனப்பூர்வமாக உணர்ந்து கிறதுக்குப் பதினறு வருசம் தேவைப் பட்டிருக்குதே, அப்பா ?

வையாபுரி : (கண்ணீருடன்) ஊர் உலகத்துப் பயந்து பாவியாகிட்டேன், பூரணி !...உன் அன்பு ஆத்தா—என் அருமை மீனாட்சிதான் என்னை என்றைக்கு மன்னிப்பாளோ, தெரியலே! அவள் மனப்பூர்வமாய் என்னை மன்னிக்கிறப் பதானே நான் உண்மையான மனுசனுக ஆக முடியும்?

பூரணி : நெஞ்சை ஒளிச்சொரு வஞ்சகம் இருக்க முடியாதுதான் !

வையாபுரி : நான் இப்ப வஞ்சகன் இல்லே !—நான் உன் அன்பு அப்பன் !...பூரணி, உன் ஆத்தாளோட கோபம் இன்னும் ஆறல்லே போலே ! வீடு தேடி வந்தவனை 'வான்னு' கூட அழைக்காமல் இருக்கிருளே, பார்த்தியா, ஆத்தா?

பூரணி : (பரிவுடன்) ஆத்தா ! அப்பா புது அப்பா வாக வந்திருக்காங்க. அப்பாவோட பேசு, ஆத்தா !

வையாபுரி : (நயமாக) மீனாட்சி !...என்னோட அன்பு மீனாட்சியாச்சே நீ ! என்னோட அருமை மீனாட்சியாச்சே நீ !...

மெல்ல நெருங்கி மீனாட்சியைத் தொட முயல்கிறார் வையாபுரி.

அவள் தீயைக் கண்ட மாதிரி தடுமாறி விலகி விடுகிறாள்.

காலடியில், 'புலந்திரன் களிவு மாலை' சிரிக்கிறது !

மீனாட்சி : நீங்க நடிக்கிறீங்க !...

வையாபுரி : (போலியாகத் துடித்தபடி) நான் நடிக்கிறேனா? ஐயோ, எனக்கு நடிக்கவே தெரியாதே, மீனாட்சி ?...

மீனாட்சி : நீங்க மெய்யாகவே நம்ம பூரணியின் அப்பாவாக இங்கே வந்திருந்தால், நம்ப பவளத்தையுமில்ல கூட அழைச்சிட்டு வந்திருக்க வேணும்?...

வையாபுரி : உங்கிட்டே நல்ல வாக்கு வாங்கிக்கிட்டு நம்ப பவளத்தைக் கூட்டிக்கிட்டு வரணும்னு நினைச்சிருந்தேன், மீனாட்சி !...

மீனாட்சி : பாசம், சொல்லிக் கொடுத்து வர்றதில்லையே, அத்தான் ?

வையாபுரி : ஆகா ! எத்தனை பெரிய உண்மையை எத்தனை சுருக்கமாகச் சொல்லிக் காட்டிட்டே மீனாட்சி !... பவளக்கொடி பேரிலே நீ இத்தனை பாசம் வச்சிருப்பேன்னு எனக்குப் புரியாமல் போயிடுச்சே, கண்ணே !

மீனாட்சி : பூரணி மாதிரி பவளமும் எனக்கு மகள் தானுங்களே?

வையாபுரி : மெய்தான், மீனாட்சி, மெய்தான் !...பவளக் கொடி சம்பந்தமாய்ப் பேசத்தான் இந்த வேளை கெட்ட ராத்திரி வேளையிலே உன்னைத் தேடி வந்திருக்கேன் !

மறுபடியும் மீனாட்சியைத் தொட முயல, அவள் சாமர்த்தியமாக விலகிக் கொள் கிறாள்.

மீனாட்சி : மேலே பேசுங்க, மச்சான் !

வையாபுரி : மச்சான்னு சொல்லாதே ! — அத்தான்னே சொல்லு ! மீனாட்சி, நம்ப பவளம், என் அக்கா மகன் முத்துவோட கையினாலே தாலி கட்டிக்கிட முடியாமல் போயிட்டா, உயிர்தரிக்காது போலிருக்குது, மீனாட்சி !

பூரணி திகைக்கிறாள் !

பின்னணி ஓங்காரமாக ஒலிக்கிறது !

மீனாட்சி : அப்படின்னா, பவளத்தை அது இஷ்டப் பிரகாரம் உங்க அக்கா மகனுக்குக் கட்டி வைக்கிறது தானுங்களே, அத்தான்?

முத்து : கட்டி வச்சிடலாம்தான் ! ஆனால், முத்து நம்ப பூரணியைத்தான் கல்யாணம் கட்டிக்கிடப் போறானாமே?

மீனாட்சி ஓகோ !... அப்படீங்களா?

வையாபுரி : ஊம் !

மீனாட்சி : அதுக்கு இப்ப என்னை என்ன செய்யச் சொல்றீங்க?

வையாபுரி : (தயக்கம்) என் மகள் பவளத்துக்கும் என் மாப்பிள்ளை முத்துவுக்கும் கல்யாணம் எப்படியும் நடந்தாகணும்! இப்ப அதுதான் என்னோட முதல் கவலை!

மீனாட்சி : (வேதனையுடன்) கட்டின பெண்டாட்டியைக் கைவிட்டுட்டு நீங்க ஓடி ஒளிஞ்சிக்கிட்டு இருந்ததாலே, இந்தப் பொல்லாச் சமுதாயம் இந்தப் பதினறு வருசமாய் என் மேலே அநியாயப் பழியைச் சுமத்தி நான் அணு அணுவாகச் செத்து மடிஞ்சுக்கிட்டு இருக்கிறதை வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கையிலே, அந்தப் பழி பாவத்தை நான் சுமக்கக் காரணமாயிருந்த நீங்களே, அந்தப் பழி பாவத்தை ஊரறிய—உலகமறிய நீங்களே துடைச்சாக வேணும் என்கிறது உங்களுக்கு முதல் கவலையாகத் தோணலீங்களா, அத்தான்?

விம்முகிருள் மீனாட்சி.

வையாபுரி : (பொய் நடிப்பு) உன் பேரிலே சுமந்திருக்கிற வீண் பழியை நானே இறக்கி வச்சிடுறேன். முதலிலே நம்ப பவளத்தோட கல்யாணத்துக்கு வழி விடு, மீனாட்சி!

மீனாட்சி : (தடுமாற்றம்) நம்ப பவளத்தோட கண்ணாலத்துக்கு நான் வழி விடவா? என்ன சொல்றீங்க, அத்தான்?

வையாபுரி : (நயந்து) என் கனவுப்படி, பவளத்தை என் அக்கா மகன் முத்து கையிலே ஒப்படைக்க வேணும்னு, முதலிலே...?...

மீனாட்சி : (பயந்து) முதலிலே...?

வையாபுரி : (அதிகாரமாக) முதலிலே நீயும் பூரணியும் இந்த ஊரை விட்டே ஓடியாக வேணும் !

இசை அதிகாரத் தொனியில் உருவாகிறது !

மீனாட்சி : (ஆவேசமாகச் சிரித்தபடி) ஊரை விட்டென்ன, உலகத்தை விட்டே வேணும்னாலும் நானும் என் மகளும் ஓடிப் போயிடுறோம் !—ஆனா, முதலிலே நீங்க என்னை இந்தச் சமுதாயத்தின் ஊடாலே, தலை நிமிர்ந்து நடக்கச் செஞ்சிடவேணும் !...எந்தக் காளி சந்நதியிலே, எந்தக் காளியைச் சாட்சி வச்சு எனக்கு நீங்க தாலி கட்டினீங்களோ, அதே காளி சந்நதியிலே, நீங்களே சாட்சியாக நின்னு, நீங்க எனக்கு உண்டாக்கின அவப்பழியை நீங்களே துடைச்செறிஞ்சிடுங்க !...அப்புறம், நானும் நம்ப மகள் பூரணியும் உங்க பார்வையை விட்டே கண் காணாமல் மறைஞ்சி போயிடுறோம், அத்தான் !...

வையாபுரி : (ஆத்திரத்துடன்) காளியைச் சாட்சிவச்சு நான் உன் கழுத்திலே தாலி பூட்டினதுக்கு அந்தக் காளி சாட்சி செல்ல துப்புக்கெட்டுப் போனதாலே, இப்ப என்னை உனக்கும் உன் தாலிக்கும் சாட்சி சொல்லக் கெஞ்சிறே நீ? அப்படின்னா, உனக்கு—இந்த ஊரிலே ஒதுக்கி விலக்கி வச்சிருக்கிற உனக்கு நானே சாட்சி சொன்னால்தான், நீ என் இஷ்டப்படி இந்தக் குடிசையைக் காலி பண்ணுவீயா, மீனாட்சி?

மீனாட்சி : (வைராக்கியத்துடன்) ஆமாம் !...

வையாபுரி : (கோபமாக) இல்லாட்டி?...

மீனாட்சி : (ஆவேசமாக) இல்லாட்டியும், நான் இந்தக் குடிசையிலேயேதான் இருந்துக்கிட்டிருப்பேன்! ...என் பேரிலே சுமந்திருக்கிற அநியாயப் பழி கழியறவரைக்கும், நானும் என் மகள் பூரணியும் இந்த மண்ணிலே, இந்தக் குடிசையிலேயேதான் இருந்துகிட்டிருப்போம்! ஆமா; வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டான சங்கதியாக்கும் இது!

வையாபுரி : (வைராக்கியமாக) என் பேச்சைத் தட்டிப்புட்டு, எனக்கு எதிரியாய் நீயும் உன் மகளும் இந்த ஊரிலேயே—இந்தக் குடிசையிலேயே இருந்திட்டால் மட்டும், உன் மேலே யுள்ள பழி நீங்கிடுமா?—இல்லே, அந்தப் பழி பாவத்தை, நான்தான் மனமிரங்கித் துடைச்சிடுவேனா?

மீனாட்சி : (நம்பிக்கையுடன்) இன்றைக்கு இல்லாட்டியும், என்றைக்காச்சும் ஒரு நாள் நீங்களே மனசிரங்கி என் மேலேயுள்ள வீண்பழியை—அதுவும், உங்களோட துரோகத்தினாலே என் நெஞ்சிலே விழுந்திட்ட அந்த வீண் அபவாதப் பழியை துடைச்செறிய மாட்டீங்களான்னு ஒரு நப்பாசையினாலேதான் நான் இந்தப் பாழும் உயிரை இந்தப் பதினாறு வருசமாய்ச் சுமக்க முடியாமல், சுமந்துக் கிட்டிருக்கேனுங்க, அத்தான்!

மீனாட்சி விம்முகிறாள்!

சோக இசை சுருதி கூட்டுகிறது!

வையாபுரி : (சிரித்தபடி) ஒகோ?...என்னை — ஊருக்கு மத்தியிலே உயர்ந்து, தலைநிமிர்ந்து நின்னுக் கிட்டிருக்கிற என்னை, உயிரோடவே கொன்னு, என் மானம் மரியாதையைப் பழிக்குப் பழியாக

வாங்க வேணுமின்னு நீ சதித் திட்டம் போட்டிருக்கே என்கிற துப்பு எனக்கு இப்ப நல்லாய்ப் புரிஞ்சிட்டுது !...சரி, காளியம்மன் சந்நதியிலே, நான்தான் உனக்குத் தாலி கட்டினேன் என்கிறதுக்கு என்ன சாட்சி இருக்குது சொல், மீனாட்சி?

விதியென, எக்காளமாகச் சிரிக்கின்றார் வையாபுரி !

மீனாட்சி கதறித் துடித்துத் தவிக்கிறாள் !

மீனாட்சி : (கதறியபடி) காளி சாட்சி இருக்கா !—ஆனா, அவ கல் ! பேசமாட்டாள் ! நீங்க கல் இல்லே. ஆகவே, பேசுவீங்க. எனக்குத் தாலி கட்டின நீங்கதான் என் தாலிக்குச் சாட்சி !...உங்க மனச்சாட்சிதான் சாட்சி !...இதுக்கு மேலே, இந்த லோகத்திலே, எனக்கு வேறே என்ன சாட்சி வேண்டிக் கிடக்குது?...

வையாபுரி : (ஆணவத்துடன்) நான் சாட்சியாய் நிற்க லேன்னா, உன் கதி என்னாகும்னு தெரியுமா, மீனாட்சி?

மீனாட்சி : (சோகத்துடன்) நல்லாய்த் தெரியும்; பதினாறு வருசமாய்த் தெரிஞ்ச கதைதானே?...உங்களாலே எனக்கு ஏற்பட்ட அபாண்டப் பழியை நீங்களே துடைச்சு வீச மறுத்திட்டால், நான் அணு அணுவாகச் செத்து மடிஞ்சிட வேண்டியதுதான் என் விதி என்கிற ரகசியத்தை நான் புரிஞ்சுதான் வச்சிருக்கேன்; தெரிஞ்சுதான் வச்சிருக்கேன், சோர்வைகாரரே !...

வையாபுரி : (செருக்குடன்) சபாஷ்!—அப்படியே செய்!... அப்பத்தான் என் மனசு ஆறும்!

காவல் நாய் வையாபுரியை மீண்டும் பிராண்டிவிட முனைகிறது.

தடுமாறுகிறார் சேர்வை.

மீனாட்சி : (கோபக் கனல் தெறிக்க) அட, பாவி! நான் செத்திட்டா, என் பிணத்தின் மேலே நின்னு தலையை நிமிர்த்திக் கொக்கரிக்கலாம்னு கனவு காணுறீங்களா? என் கனவை மண்ணுக்க நீங்க துணிஞ்சப்புறம், உங்க கனவை மட்டும் வாழ வைக்க விட்டுப்பிடுவேனா, நான்? நீங்க எனக்குச் சாட்சி சொல்ல உங்க மனச் சாட்சியை நீங்க தூண்டிவிட மறுத்தால், அப்பறம், அதன் விளைவாக, உங்க மனச்சாட்சி உங்களை அணு அணுவாகச் சாகடிக்காமல் தப்பிக்க முடியுங் களா? நீங்க எனக்குச் செஞ்ச பாவத்துக்குத் தான் உங்க மங்களத்தை நீங்க பலி கொடுத் திட்டீங்களே? அந்த உண்மையையுமா உங்க மனச்சாட்சி மறந்திடுச்சு?...

வையாபுரி : (கேலிச் சிரிப்புடன்) என்னை மீறி, என் மனச் சாட்சி என்னை என்ன செஞ்சிட முடியுமாம்?

மீனாட்சி : (வயிற்றெரிச்சலுடன்) ஐயையோ, மச்சான் காரரே!...நீங்க மிருகமா? அதனாலே தான், நீங்க பதினறு வருசமாய் ஏய்ச்சுக்கிட்டு இருந் திருக்கீங்க! அத்தான், நீங்க என்னை ஏமாற் றிடலாம்!—நான் பெண்ணாய்ப் பிறந்திட்ட பாழும் சென்மம். அதிலேயும் ஏழையாய் பிறந் திட்ட பாவி நான்! ஆனா, நீங்க காளி ஆத்

தானே ஏமாற்றிப்பிட முடியுமா? உங்க பாவத்துக்கு— நீங்க எனக்குச் செஞ்சிட்ட பாவத்துக்கு, என்றைக்கானும் ஒருநாள், அந்தக் காளி ஆத்தாளுக்கு நீங்க பதில் சொல்லாமல் உங்களாலே தப்பிக்க வாய்க்குமா? அப்படி நீங்க தப்பிச்சிட்டால், அப்பறம் தர்மம் எப்படிப் பிழைக்க முடியும்? சத்தியம் எப்படி உயிர் தப்பிக்க முடியும்?...உண்மை எப்படி மண்ணிலே வாழவும், வாழ்ந்து காட்டவும் ஏலும்?...

வையாபுரி : (கொக்கரித்தபடி) மீனாட்சி! நான் புத்திமதி கேட்க வரல்லே!—புத்திமதி சொல்லத்தான் வந்தேன்! சரி, எனக்கு நேரமாகுது. அங்கே என் அருமை மகள் பவளம் தனியாய்த் தவிச்சுக்கிட்டு இருக்கும்!...கடைசியாய் சொல்லிடுறேன்!...(பண நோட்டுக்களை விசிறியடித்து) மீனாட்சி! இந்தப் பணத்தையெல்லாம் பொறுக்கிட்டு, விடியறதுக்குள்ளே, ஆத்தாளும் மகளும் நல்லதனமாய் இந்தப் பாழும் எட்டடிக்குச் சைவிட்டு, எங்காச்சும் தலை மறைஞ்சு ஓடித் தொலைஞ்சிடுங்க!...என் பேச்சைத் தட்டினுல், அப்பாலே உன்னையும் உன் அருமை மகளையும் மண்டையிலே தட்டி, உங்க ரெண்டு பேரையும் விடியறதுக்குள்ளே கூண்டோடு கைலாசம் அனுப்பிடுவேன், ஜாக்கிரதை!...

கடிக்கத் துடிக்கும் காவல் நாயைத் தடுத்துச் சமாளிக்கிறுர் சீமான்!

மீனாட்சி : (குளுரைத்தவாறு) உப்புப் போட்டுச் சோறு தின்ன ஆண் பிள்ளையாய் இருந்தால், உங்க சவால்படி செஞ்சு காட்டுங்க, பார்க்கலாம்!

மெய்யாலுமே, நீங்க உப்புப் போட்டுக் கஞ்சி குடிச்சிருந்தால் — மெய்யாலுமே ஆண்மை கொண்ட ஆண் பிள்ளையாய் இருந்திருந்தால் என்னுடை மானத்தை, நீங்க காளி சந்நதியிலே தொட்டுத் தாலி கட்டின என்னுடை மானத்தை ரோசத்தோட காப்பாற்றியிருக்க மாட்டீங்களா? என்பேரிலே வீண்பழி விழக் காரணமாயிருந்த நீங்களே அந்தப் பழியைத் துடைச்சு வீச மனம் துணிஞ்சிருக்க மாட்டீங்களா?...உங்களுக்கு உங்க பவளக்கொடி மட்டும்தான் மகளா? பூரணி—நம்ப பூரணி உங்களுக்கு மகள் இல்லையா?...வறட்டுச் சம்பத்துக்கும், பொய் வாழ்க்கைக்கும், போலித்தனமான கவுரவத்துக்கும் அடிமையாகி, உங்க மனச்சாட்சியையும் அடிமைப் படுத்திக்கிட்ட கொடும் பாவியான நீங்களா என்கிட்டே சவால் போடுறீங்க?...நான் வீரத் தமிழச்சி! பண்புத் தமிழச்சி! — இந்த மீனாட்சி நினைச்சால், பொழுது விடியறதுக்குள்ளே, உங்க பேராசையிலே மண்ணைத் தூவிட்டு, என் மகள் பூரணிக்கும் உங்க அக்கா மகன் முத்துவுக்கும் கண்ணாலம் பண்ணி வச்சுப்புடுவேனாக்கும்!...

பயங்கரப் பின்னணி வீரமுழக்கம் செய்கிறது!

மீனாட்சிக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்குகிறது!

ஆனால், வையாபுரிக்கோ மூச்சே நின்றுவிடும் போலிருக்கிறது!

வையாபுரி : (வெஞ்சினத்துடன்) ஓஹோ!—நாலு நாட்டுத் தண்ணியைக் குதிகால்ப் பாய்ச்சலாய்த் தாண்டிக் குடிச்சு ஏப்பம் விட்டிருக்கிற இந்தச் சிங்கப்பூர்ச் சீமானை வையாபுரிச் சேர்வையோட சவாலுக்கு, எதிர்ச் சவால் விடுற அளவுக்கு, வாய்க் கொழுப்பு அம்புட்டுத் தொலைக்கு மிஞ்சியிருச்சா?—எங்க வீட்டு மசப்பிள்ளை மூத்து எனக்கா, இல்லே. உனக்கா என்கிற சங்கதி வெட்ட வெளிச்சமாகப் போற அதிசயக் கூத்தைப் பொழுது விடியட்டும், பாரடி !

மீனாட்சி : (வன்மத்தோடு) நீங்க சொல்லுற தோரணையை நோட்டமிட்டால், ஒரு வேளை, பொழுதே விடியாமல் போயிடுமோன்னுகூட தோணுதுதான்; ஆனாலும், பொழுதை விடியப்படாதின்னு சாபம் போடுறதுக்கு நீங்க பாவம், அனுசூயா இல்லே ! ஆனபடியாலே, பொழுது விடிஞ்சதும், உங்க சவாலோட அந்த அதிசயக் கூத்தை நிணமும் உயிருமா நின்னு பார்க்கத்தான் போறேனுங்க, இக்கரைக்கு வத்திட்ட அக்கரைச் சீமானே !

வையாபுரி : (பெருமையாக) நீ சொன்னாலும், சொல்லாட்டியும், இந்தப் பனங்காட்டு நரி சீமான் தாண்டி, மீனாட்சி !

மீனாட்சி : (ஏளனமாக) நீங்க சீமானாய் இருக்கிறது எனக்கும் பெருமைதானுங்களே? ஆனா, பாவம், நீங்களே உங்களைப் பனங்காட்டு நரியாக ஆக்கிக்கிடுற கதைதான் என்னைத் தலையைக் குனிய வைக்குதுங்க, பாவம் !

வையாபுரி: (உக்கிரத்துடன்) ஏய், கிண்டலா பண்ணுறே நீ? மெய்யாகவே நீ தலைக் குனிவுக்கு அஞ்சின ஒரு பெண் சென்மமாக இருந்திருந்தால், நீ நாக்கைப் பிடுங்கிக்கிட்டு என்றைக்கோ செத்து மடிஞ்சு சிவலோகம் போயிருக்க மாட்டியா?

மீனாட்சி: (வேதனையுடன்) ஐயாவே! நான் அப்படிச் செத்து மடிஞ்சிருந்தேன்னா, தருமத்துக்கு ஏதுங்க மதிப்பு?—சத்தியத்துக்கு ஏதுங்க மரியாதை? உண்மைக்கு ஏதுங்க செலிப்பு? அப்படி நான் அன்னைக்கே மண்டையைப் போட்டிருந்தால், அப்பவே நீங்க ஆடு வெட்டி, கோழி தட்டி விருந்து சாப்பிட்டிருக்க மாட்டீங்களா? நான் பிணமாக ஆகாமல், ஆனால், வெறும் நடைப் பிணமாக ஆகி, இம்புட்டுக் காலமாய் உயிரைக் கையிலே பிடிச்சுக்கிட்டு இருக்கிறதுக்கு உண்டான ஒரே காரணத்தை —ஒரேயொரு காரணத்தை இன்னமும் கூடவா உங்களாலே இனம் புரிஞ்சுக்கிடுறதுக்குத் துப்பு இல்லாமல் போயிடுச்சு?—என்னை அநியாயமாய்ப் பழி வாங்கின உங்களை நியாயமாகப் பழி வாங்கிறதுக்காகவேதான், நான் இன்னமும் எம்புட்டு உயிரைச் சுமந்துக்கிட்டு இருக்கேனுக்கும்!— மற்றப்படி, வாழறதுக்குத்தான் எனக்குத் தடம்புரியலே; ஆனா, சாகிறது என்கிறது என் வரைக்கும் ரொம்ப ரொம்பச் சுளு! ஆனா, ஒண்ணு! — நீங்க உளறிக் கொட்டிப் எனக்குப் பூச்சாண்டிப் பயம் காட்டுறதுக்கெல்லாம் நானே, இல்லே, அந்தச் சட்டமோ, இல்லே, சட்டத்தோட விதியோ ஒண்ணும் விரல் சப்பத் தெரியாத பச்சைக் குழந்தை இல்லே!...

வையாபுரி ஃ (காழ்ப்புடன்) அத்தோடே உம் பேச்சை நிறுத்தடி!—இப்ப என்ன சொன்னே நீ? என்னைப் பழிக்குப் பழி வாங்கிறதுக்காகத் தானு நீ உன் உயிரைச் சுமந்துக்கிட்டு இருக்கிறீயா?

மீனுட்சி ஃ (ஆங்காரமாக) ஆமா!... ஆமா!

வையாபுரி ஃ (ஆத்திரத்துடன்) என்னைப் பழி வாங்கிறத்துக்கு நீ யாரடியோ?...

பொங்கும் சினத்துடன் மீனுட்சியை அடிக்கக் கையை ஓங்குகிறுர் சீமான் வையாபுரி.

ஆனுல், தாய்க்குத் துணையாக எச்சரிக்கைப் பண்புடன்—கனல் கக்கும் ஆத்திரத்துடன் நின்று கொண்டிருக்கும் பூரணி, மௌனமாகப் பாய்ந்து, வையாபுரியைத் தடுத்து விடுகிறுள்!

மீனுட்சி ஃ (தன்னம்பிக்கையுடன்) நான் உங்க பெண்டாட்டிங்க, நேச மச்சானே!

வையாபுரி ஃ (கோப வெறியோடு) என்னடி சொன்னே?—தட்டுக்கெட்ட தேவடியாச் சிறுக்கியான நீயா என் பெண்டாட்டி?...

பூரணி தலையில் அடித்துக் கொண்டு கதறுகிறுள்!

உள்ளமும் உயிரும் நடு நடுங்கிக் கண்ணீர் வடிக்க, ஆத்திரத்தின் உச்சி

யில் நிற்கும் மீனாட்சி உச்சாடனத் தோடு, வையாபுரிச் சீமானை அண்டி நெருங்குகிறாள் !

மீனாட்சி : (ஆவேசமாக) அட, பாவி ! பாழும் மிருகமே ! அந்தக் காளியின் முன்னிலையிலே நீங்க தொட்டுத் தாலி கட்டின இந்தப் புண்ணியவதியைப் பார்த்தா, தேவடியாச்சிறுக்கின்னு நாக்கிலே நரம்பில்லாமல் ஏசினீங்க?...உங்களை நம்பி, உங்களை மதிச்சு, உங்களுக்கு அன்றைக்கு ஒரு ராத்திரி முந்தானை விரிச்ச இந்தச் சீதேவியைப் பார்த்தா, நெஞ்சிலே ஈரம் இல்லாமல் தேவடியாச் சிறுக்கின்னு பேசினீங்க?... என்னை உசிரோடே விட்டு வைக்கப் போறதில்லைன்னு நீங்க கொக்கரிச்சீங்க !—ஆனா, இப்ப நான் உங்களை உசிரோட விட்டு வைக்க மாட்டேன் ! ஆமா !...

சீமான் வையாபுரிச் சேர்வையை ஓங்கி அறையக் கைகளை ஓங்குகிறாள் மீனாட்சி !—நீதியைக் காத்திடும் பத்ர காளியைப் போலே !

பூரணி மௌனமாகப் பாயந்து, இப்போது மீனாட்சியைத் தடுத்து விடுகின்றாள் !

பூரணி : (விம்மியபடி) ஆத்தாளே ! சாது மிரண்டால், காடு கொள்ளாது தான் ! ஆனாலும், நீ கோபத்தை ஆற்றிக்கிடு !—ஏன் தெரியுமா?— அவர்— அந்தச் சீமான் உன்னோட நேச மச்சானுக்கும் ! அன்பு மச்சானுக்கும் !...

ஆடு திருடின கள்ளன் மாதிரி சேர்வை விழித்துத் தடுமாறுகிறார்.

மீனாட்சி அடங்குகிறாள்.

அப்போது—

இதுதான் சமயமென்று, அதுவரை ஒளிந்து மறைந்திருந்து நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த முத்துவும் பவளக்கொடியும் ஆளுக்கொரு முடுக்கி லிருந்து ஓடி வந்து, அங்கே நின்று விடு கிறார்கள் !

வையாபுரி, ஈரல் குலை நடுக்கமெடுக்கத் தவிக்கிறார் ; தடுமாறுகிறார் ; தத்தளிக் கிறார் !...

பூரணி ஆச்சரியப்படுகிறாள் !

பின்னணி, அந்தப் பரிதாப நிலையை— நெருக்கடி நிலையைப் பிரதிபலித்து ஓல மிடுகிறது !

மீனாட்சி, விதியாகச் சிரிக்கிறாள் !...

பவளக்கொடி : (உணர்ச்சி வசப்பட்டு) பெரியம்மா !... பெரியாத்தா !...

மீனாட்சி கண்ணீரை ஆறாகப் பெருக்கிய வண்ணம், உணர்ச்சி வயப்பட்ட நிலை

யில், பாசத்தால் கட்டுண்ட பவளக் கொடியை அன்புடன் ஆரத் தழுவப் பாசத்தோடு கரங்களை அகல விரித்த வாறு ஆசையாக நிற்கிறுள் !

ஆனால், திருடனுக்குத் தேள் கொட்டின பாவனையில் தலைகுனிந்து, முகம் மேலும் கறுத்துச் சிறுத்து நின்ற சீமான் வையா புரிச் சேர்வைகாரர், தன் அன்பு மகள் பவளக்கொடியை, மீனுட்சியின் பாசமிகு அரவணைப்புக்கு ஆளாகத் துடித்துப் பாய்ந்த தன் அருமைப் புதல்வி பவளக் கொடியைக் குறுக்கே மறித்துத் தடுக் கிறுர் !...

வையாபுரி ஃ (கர்ஜனையுடன்) ஏ, பவளம் !...தட்டுக் கெட்டுத் தடுமாறி, ஒண்டி ஒடுங்கிறதுக்கு ஒரு புகல் கிடைக்காதின்னு சொறி நாயாட்டம் அலைஞ்சு திரிஞ்சிக்கிட்டு இருக்கிற இந்த நாறத் தேவடியாளா உனக்குப் பெரிய அம்மா ...பெரிய ஆத்தா?—கட்டிக்கிட்ட தாலிக்கு ஒரு சாட்சி வச்சு, ருசுப்பிச்சுக் காட்ட யோக்கியதை இல்லாத இந்தத் துப்புக் கெட்ட ஈனச் சென் மத்தையா நீ பெரியம்மா—பெரியாத்தான்னு சொந்தம் கொண்டாடத் துணிஞ்சிட்டே?... தான் கெட்டலைஞ்சு ஏமாந்து போயிட்ட துர்ப் பாக்கியமான ஒரு பாவத்தை அசல் பட்டுப் படுதாவாலே போர்த்தி மூடி மறைக்கிறதுக் காக, ஒரு பாவமும் அறியாத என்னை— ஊருக்கு ஒசந்து உச்சாணிக் கிளையிலே குந்திக்கிட்டிருக்கிற பெரிய மனுசனை, சிங்கப்

பூர்க் கோமாளுன என்ஃன — அதாவது, உன்ஃனப் பெற்ற அப்பஃன, சூதான ஒரு கபட நாடகம் ஆடிச் சந்தி சிரிக்க வைக்க வேணு மென்கிற ஒரு கெட்ட எண்ணத்திலே, பேயாய்க் கூத்து அடிச்சுக்கிட்டுச் சுத்திக்கிட்டி ருக்கிற இந்தப் புறம்போக்குக் கிறுக்கச்சியைப் பெரியம்மா — பெரியாத்தா அப்படீன்னு விளிச்ச உன்ஃனச் சும்மா விடவே மாட்டேன்! ...இந்தக் கழுசடையான மீனுட்சிச் சிறுக்கியின் பேச்சுப் பிரகாரம், நானே அவள் கழுத்திலே காளியைச் சாட்சி வச்சுத் தாலி கட்டின சங்கதி நிஜமாக இருந்திருந்தால், இந்நேரம் அந்தக் காளி, கல்ஃல உடைச்சுக்கிட்டு வெளியிலே வந் தாச்சும், அவளுக்குச் சாட்சி சொல்லி மூதலிச்சி ருக்க மாட்டாளா என்கிற சின்ன நாயத்தைக் கூடப் பகுத்தறிஞ்சுப் புரிஞ்சு தெளிஞ்சுக்கிடா மல், அந்தத் தேவடியாளோட வாக்குமூலம் தான் வேதவாக்கின்னு நம்பியும் மதிச்சும், இவஃள—கால் தூசுக்கும் கேடு கெட்ட கீழ்ப் பிறப்பான இந்த மீனுட்சித் தேவடியாஃளப் பெரியம்மா—பெரியாத்தான்னு கூப்பிட்ட உன்னோட அந்தச் சூடுசுரஃண இல்லாத வாயைக் கிழிச்சு உப்புக்கணம் கோத்துப் போடாட்டி, என் பேர் சீமான் வையாபுரி இல்லே!...

குறி வைத்த இரை கிடைக்காமல் தோல்வியைத் தழுவிய சிங்கத்தின் ஆத்திர வெறியுடன், அருமை மிகு திரு மகள் கன்னி பவளக்கொடியைத் தஃல முடி பற்றி இழுக்க முஃனகிருர் செல்வச் சீமான் வையாபுரி.

பவளம் திமுறுகிறாள்.

மீனாட்சி ஓலமிடுகிறாள் !

புரட்சி முத்துவை முந்திக் கொண்டு, புதுமைப் பெண்ணாகப் பூரணி பாய்ந்து, சேர்வையின் உடும்புப் பிடியி னின்றும் பவளத்தை விடுதலை செய் கிறாள் !

பூரணி : (தீ உமிழ) ஐயாவே, சேர்வை காரப் பெரிய மனுசரே !...என்னைப் புயலுக்கு மத்தியிலே பெற்றெடுத்து, சூறைக்கு நடுவிலே வளர்த்து, எரிமலைக்கு ஊடாலே ஆளாக்கின புண்ணிய வதியான என் தாயாருக்கு சமூகப் பாவியான நீங்க, புருஷனாகவும், இந்த அதிருஷ்டக் கட் டைக்கு அப்பனாகவும், ஊர் அறியாமல் போனா லும், ஆத்தா காளி அறிய, அதாவது, நாங்க நம்புற அந்த மாகாளி அறிய அமைஞ்சிருக்கிற அந்த ஒரேயொரு காரண காரியத்தை உத் தேசிச்சுத்தான்; உங்க பிற்போக்குத்தனமான ஏச்சுக்கும் பேச்சுக்கும் நான் மாப்பு விட்டுப் பிட்டு, இம்மாம்பொழுதுக்கு சும்மா அடங்கி நின்னுக்கிட்டிருந்தேன். இனி ஒரு கடுத்தம். என்னோட ஆத்தாளான கண்கண்ட தெய் வத்தை 'தேவடியாள்' அப்படி இப்படின்னு ஏடாகூடமாய் வாயை நீட்டி முழக்கினீங்களோ, அப்பவே, அந்த நொடிப் பொழுதிலேயே, நானே காளி ஆகிப்பிடுவேன் !—அப்பாலே, உங்களை இதே பெரிய மனுசக் கோலத் தோடவே ஊர் முச்சந்தியிலே நிப்பாட்டி வச்சு, நீதி விசாரணையும் நடத்திக் காட்டிப்பிடு வேன் !—அன்றைக்கு—பொய்யான உம்மோட

நேசத்தை மெய்யின்னு நம்பி, பண்புள்ள ஒரு தமிழச்சியாகி, உங்க காலடியிலே தன்னோட மானத்தையே அடைக்கலம் வச்சு தன் கழுத்தை உங்ககிட்டே நீட்டிக் காளி சந்நதியிலே தாலியை ஏந்திக்கிட்ட அந்தச் சத்தியத் தருமத்துக்கு, இன்றைக்கு சாட்சி கேட்டுக் கொக்கரிக்கிற உம்மோட இதே நாற வாயினலேயே, அந்த உண்மையை—அந்தச் சத்தியத்தை—அந்தத் தருமத்தை—அந்த நீதியை இதே காளி அறிய, இதே ஊர் அறிய, இதே சமூதாயமும் அறிய ஒப்புக் கொள்ளாமல், இந்தப் பிறப்பிலே நீங்க ஒரு நாளும் தப்பவோ, தப்பிக்கவோ முடியாது !—முடியவே முடியாதாக்கும் ! உம்மோட மனசிலேயும் மனச் சாட்சியிலேயும் எழுதிப் பலக்க முடிச்சுப் போட்டுக்கிடுங்க !...: ஆமா !...

குனிந்த தலையை நிமிர்த்திட முயன்ற சேர்வை, புரட்சிக்குமரி பூரணியின் மீதுள்ள கொடுஞ்சினத்தில், மகள் பவளக்கொடியின் தலைமுடியை திரும்பவும் நிர்த்தாட்சண்யமாக பற்றிக் கொள்கிருர் !

ஆனல், இப்போது, பவளம் தந்தையின் பிடியிலிருந்து தானே விடுபட்டு விலகுகிருள் ! நேரே ஓடி மீனுட்சியின பாதங்களிலே நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்குகின்ருள் !

பின்னணி பரபரப்படைகிறது !

சேர்வையின் காலடியில் சுழல் ற உலகம், இப்போது அவரது தலைமீது சுழலத் தொடங்குகிறது !

வையாபுரி : (குரல் துடிக்க) பவளக்கொடி !...ஏ, பவளக் கொடி !...

பவளக்கொடி : (ஆங்காரமாக) என்னுங்க, சேர்வை காரரே !

வையாபுரி : பவளம், நான் உன் அப்பா !

பவளக்கொடி : (விம்மலுடன்) என் அப்பா மடிஞ்சு போயிட்டாங்க !...

இசைப் பின்னணி ஓலமிடுகிறது.

வையாபுரி : (திடுக்கிட்டு) மகளே !...

பவளக்கொடி : (செருமலுடன்) உங்க மகளும் செத்துப் போயிடுச்சு !...

சோக முழக்கம் விண் முட்டுகிறது.

வையாபுரி : (அதிர்ச்சியோடு) ஏம்மா என்னை இப்படிச் சோதிக்கிறே ?

பவளக்கொடி : ....

பவளக்கொடி மௌனம் சா க்கிறாள்— ஒரே வைராக்கியமாக !

பூரணியும் மீனாட்சியும் அதிசயப்பட்டு மலைக்கிறார்கள்.

முத்து அதிர்ந்த நமட்டுப் புன்முறுவலுடன் குறுக்கிடுகிறான் !

கைவிளக்கு பின்னணியாகிக் கண் சிமிட்டுகிறது !

முத்து : (கேலியுடன்) ஐயா, பெரியவரே !... உங்க பொண்ணு பவளம் இனிமே உங்ககிட்டே மூஞ்சி கொடுத்துப் பேசாதாக்கும் !...

வையாபுரி : (கோபமாக) மாப்பிள்ளை !...

முத்து : (கிண்டலாக) உங்க மாப்பிள்ளையை எங்கானும் காடுகழனிப் பக்கம் சல்லடை போட்டுத் தேடிப் போய்க் கூப்பிடுங்க !

வையாபுரி : (திகிலுடன்) முத்து !...

முத்து : (ஆத்திரமாக) வையாபுரிச் சேர்வைகாரரே !... நீங்க வில்லாதி வில்லன், சூராதி சூரன்தான் ! அட்டி இல்லே; துட்டி இல்லே ! — ஆனா, மேலே, உங்க அமெரிக்கன் கிராப்புத் தலைக்கு மேலே, கண்ணுக்குப் புலப்படாமல் தெய்வம்னு ஒரு அற்புதமான — அதிசயமான — அதீதமான சக்தி இருக்குது என்கிறதை மட்டும் மறந்திடாதீங்க ! — அந்தத் தெய்வத்துக்கு ஒருநாள் இல்லாட்டி ஒருநாள் நீங்க கட்டாயம் — நிச்சயம் பயப்பட்டே தீரணும் ! — பதில் சொல்லியே ஆகணும் ! — இது நியதி மட்டுமில்லே; விதியும் கூட ! — உங்க விதியும் அதுதானுக்கும் ! ஐயா, பெரிய ஆம்பளையே ! நீர் அபலை மீனாட்சி அம்மாளுக்குத் தாலிகட்டின உண்மைக்குச் சாட்சி கேட்கிறீங்களே ? சரி; ஆனா, நீங்க இந்த மீனாட்சி அம்மாளுக்குத் தாலி கட்டல்லே

என்கிறதுக்கு என்ன சாட்சி வச்சிருக்கீங்களாம்? ஊம், சொல்லுங்க, மிஸ்டர் வையாபுரிச் சேர்வை!...

சுவையான திருப்பத்தைப் பிரதிபலிக்கிறது இசை!

சீமான் வையாபுரி கதிகலங்கி, மதி கலங்கிக் குமுறுகிருர், குமைகிருர்; கொந்தளிக்கிருர்!

வையாபுரி : (குரோதமாக) மாப்பிள்ளை, விளையாடுறீங்களா?

முத்து : (விசாரமாக) நான் உங்க மாப்பிள்ளையாக இருந்தால்தானே, உங்களோடு விளையாடு வேணும்?...

வையாபுரி : (சுவாதீனமாக) நீங்கதான்... நீங்களேதான் எனக்கு மாப்பிள்ளை ஆகப் போறீங்க!

முத்து : (தீர்மானமாக) அது இந்த ஜென்மத்திலே நடக்காது; நடக்கவும் போறதில்லே!

வையாபுரி : (சவாலாக) பார்த்துக்கிடலாமா?

முத்து : (வைராக்கியமாக) ஓ...தாராளமாகப் பார்த்துக்கிடுவோம்!—சின்ன மனசு கொண்ட பெரிய மனுசரே!... நான் யார், தெரியுதுங்களா?—புண்ணியவதியான மீனாட்சி அம்மாளோட மாப்பிள்ளை!—ஸ்ரீமான் வையாபுரியின் முதல் சம்சாரமான இதே சாட்சாத் மீனாட்சி அம்மாளோட மாப்பிள்ளை!...

வையாபுரி : (கிடுகிடுக்க) பகற்கனவு !

முத்து : (சிடுசிடுக்க) எல்லாம் ராத்திரிக் கனவேதான் !

வையாபுரி : (ஏளனம்) உன் அப்பன் நான் ஆட்டிப் படைக்கிற கைப்பொம்மை !

முத்து : (கேலி) ஒய் ! — சொல் தவறுது, உஷார் ! கைப்பொம்மையையும் கால் பொம்மையையும் வச்சுக்கினு சென்னப் பட்டணக்கரையிலே — கூவம் நதிக்கரையிலே 'ஷோ' நடத்துங்க; துட்டு கிடைக்கும் ! ம் !...என் அப்பன் உங்களுக்குக் கைப்பொம்மையாய் இருந்தாக்க, நான் உங்களுக்குக் கால்பொம்மையாக ஆகிடுவேன்னு சொப்பனம் காணுறீங்களாக்கும் ? —ஐயாவே, முடிஞ்ச முடிவாச் சொல்லிட்டேன். இந்தச் சென்மத்திலே உம்மோட கனா எதுவுமே பலிக்காது ! — பலிக்கவே பலிக்காது ! நல்ல பாம்பை சீமிண்டி விட்டுப்புட்டால், மறுகா, அது தீண்டாமல் சும்மா விடாது !— என்கிட்டே இனியும் வாய் கொடுக்காமல், மரியாதையாய் இந்த இடத்தைவிட்டு நகர்ந்திடுங்க !— இல்லாட்டி, என்னோட பங்குக்கும், மிச்சம் மீதியிருக்கிற உம்மோட மானம் மரியாதையைத் தவிடுபொடி ஆக்கிப்பிடுவேன் !

சமுதாய புரட்சிவாதி முத்துவின் தயவு தாட்சண்யமற்ற பேச்சைக் கேட்ட சேர்வைக்கு உண்மையிலேயே பயம் பீறிடுகிறது ! எனவே, அங்கிருந்து தலைதப்பியது தம்பிரான் புண்ணியமென்று நழுவிவிடத் துடிக்கிறார் !

வையாபுரி ః (குழைவாக) பவளம், ராப்பொழுது பலார்னு விடிகிறதுக்குள்ளாற, நான் கைய்யும்மெய்யு மாய் ஊர்ப்பட்ட காரியங்களை நடத்தி முடிச்சுக் காட்ட வேணுமாக்கும் !...ஊம்...வெரசாய்க் கிளம்பு, மகளே !...

பவளக்கொடி வாய்திறந்து மறு பேச்சாடாமல், தந்தையுடன் புறப்பட ஆயத்தம் செய்கிருள்.

பவளக்கொடி ః (பாசச் சிலிர்ப்புடன்) நான் போயிட்டு வாரேன், பெரியாத்தா !

மீனுட்சி ః (பாசச் செறிவுடன்) மகராசியாய்ப் போயிட்டு வா, மகளே !

பவளக்கொடி ః (அன்புடன்) அக்கா, போய் வரட்டுமா ?

பூரணி ః (பாசத்துடன்) நல்லபடியாய்ப் போய்வா, தங்கச்சி !

சீமானின் வேதாள மனம் மறுபடி முருங்கை மரம் ஏறிவிடவே, தாங்க முடியாத கோப வெறியுடன் அருமைச் செல்வி பவளக்கொடியைப் பிடித்து இழுத்துக்கொண்டு, அக் குடிலைத் துறந்து, பதட்டத்துடன் வெளியேறு கிருர் !

சீமானைத் துறத்துகிறது காவல் நாய்.

ஆரவாரப் பின்னணி அடங்குகிறது.

முத்து விடைபெற்றுச் செல்லத் தயாரா கிறான் !

முத்து : (பரிவுடன்) அம்மா, காலம் ஓடிப் போயி டுச்சு ; இந்நேரத்துக்கு என்னைக் காணுமல், ஆத்தா தவிச்சு உருகிக் கரைஞ்சுக் கிட்டிருக் கும், பாவம் ! நான் புறப்படுறேனுங்க !— நீங்க இனியும் எதையும் மனசிலே சேர்த்து வச்சு உழப்பிக்கிடாப்படாதுங்க; நிம்மதியாக உறங்குங்க ; சத்தியந்துக்கும் தர்மத்துக்கும் தலை கொடுக்கக் கட்டுப்பட்ட காளி ஆத்தா ளோட கருணையினுலே, பொழுது நல்லபடி யாகவே விடிஞ்சிடுமுங்க ! நான் உங்க மாப் பிள்ளையாகப் புறப்படுறேனுங்க ! போயிட்டு வாரேனுங்க !...

மீனுட்சி : (கண்ணீருடன்) பத்திரமாகப் போயிட்டு வாங்க, மாப்பிள்ளை !

முத்து : (நெகிழ்வுடன்) போயிட்டு வரவா, பூரணி?

பூரணி : (பாச நேசத்துடன்) தடத்தைப் பார்த்துப் போய் வாங்க, அத்தான் !

முத்து : (எச்சரிக்கையாக) ராத்திரி முச்சூடும் ஆத்தா ளும் மகளும் காளியை நேந்துக்கிட்டு, ரொம்ப ரொம்ப விழிப்போடவும் எச்சரிக்கையோடவும் தீவிரக் காபந்தோட இருந்தாக வேணுமுங்க!— ஜாக்கிரதை...ஜாக்கிரதை !...நான் போயிட்டு வாரேன் !

மீனுட்சி வழி காண்பித்த சுவரொட்டிக் கைவிளக்கின ஒளிநிழலில் எட்டடிக்

குச்சின் வாசலை அடையும் முத்து, அங்கே சொக்க வெள்ளிப் பாற்குடம் கவிழ்ந்தாற்போன்று சிந்தாமல்சிதருமல் கோலம் போட்டிருந்த ஊமை நிலவிலே, தடம் கணித்துத் தடம் பார்த்துச் சிந்தனை வசப்பட்டவனுக நடந்து செல்கிருன் !

குச்சுக்கு நன்றியறிவுடன் திரும்பும் காவல் நாயின் கோரப் பற்களில், பயங்கரக் காளியின் நெற்றித் திலகம் போல ரத்தத்துளிகள் பளிச்சிடு கின்றன !

மண்குடிசையின் கதவு கவனமாக நாதாங்கி போடப்படும் சத்தம், அமரிக்கையான இசைலயத்தில் உருகு கின்றது !...

காட்சி: 31

வையாபுரியின் வீடு; அதே இரவு; சாமம்.

சிங்கப்பூர்ச் சீமான் வையாபுரிச் சேர்வை இரண்டாம் கட்டில் குறிச்சியில் சாய்ந்து கிடக்கிருர்; மங்கல் ஒளி; மின் விசிறியும் வேப்பங்கன்றும் வெண்சாமரம் வீசுகின்றன ; ஆனுல், அவருடைய நாவற்பழக் கண்களினின்றும் சுடுநீர் ஆடிப்புனலாக ஓடிக்கொண்டேயிருக்கிருக்கிறது ! சுயப்பிரக்கினை கொண்டு, மீண்டும் ஒருதரம் சமாதானம் செய்து பார்க்க, மகளை நாடி விரைகிருர்; தேடி நடக்கிருர்.

வையாபுரி : (தேம்பிக் கூவி) பவளம் !... அன்பான மகளே பவளக்கொடி !...கருமணியே, பவளம் !...

முகப்பு, நடை, பின்கட்டு, தாழ்வாரம், அடுப்பங்கரை எங்கும் தேடிவிட்டார் சீமான். பவளக்கொடியைக் காணோம் ! பதற்றமும் பரிதவிப்பும் கொண்டு, பைத்தியம் பிடித்தவராக மகளைக்

கூவிக்கூவி அழைக்கிறார்; கேவிக்கேவி அழுகிறார்.

கடைசியாக, அத்திபூத்த மாதிரி திறந்து கிடந்த தாய் வீட்டில் 'நல்ல விளக்கு' எரிந்து கொண்டிருப்பதைக் கண்டு, ஆவலாக ஓடுகிறார் அவர்.

அங்கே அன்பான அன்னையின் பாசம் நிறைந்த கழலடியில் தஞ்சமடைந்து வீழ்ந்து கிடக்கிறாள் சமைந்த கன்னி பவளக்கொடி!

பவளக்கொடி: (விம்மியவாறு) அம்மா! உன்னைத் தரிசனம் பண்ணி ரொம்பக் காலமாயிடுச்சு; ஆனதாலே, உன்னை மறுபடி நேருக்கு நேராகப் பார்க்க வேணும்னு ஆசையாய் இருக்குது; விடிகிற மம்மல் பொழுதுக்கு நல்ல நேரமாம்; அந்த நேரத்திலே, நான் உங்கிட்டே வந்திட்றேன், அம்மா!...

பூகம்பம் ஏற்பட்டுவிட்டாற் போன்று, வையாபுரியின் மேனி 'கிடுகிடு'வென்று நடுநடுங்குகிறது; விம்மி வெடிக்கிறார்; வெடித்துக் கதறுகிறார்; கதறி உருகுகிறார்!

வையாபுரி: (கதறியபடி) பவளம்! இன்னொரு மூச்சு அப்படியெல்லாம் சொல்லாதே; அப்பாலே, என் மூச்சு நின்னுப்பிடும். உன்னை ஈரைஞ்சு மாசம் தவமிருந்து பெற்ற உன் ஆத்தா மங்

களத்தை நான் பறிகொடுத்த பாவம் பத்தாதா? முப்பத்தெட்டு வாட்டி உன்னைச் சோறு உண்ணச் சொல்லிக் கெஞ்சிக் கூத்தாடிப்பிட்டேனே?—இன்னமுமா உம் மனசு இளகல்லே? —எனக்குப் பசி காதடைக்குதே?—நீ ஒரு பிடி சாதம் சாப்பிட்டாக்க, நான் ஒரு படி சாதம் சாப்பிடுவேனே, ராசாத்தி தங்கமே!...

நீ அந்தச் சூன்யக்காரி மீனாட்சியோட குடிசை மண்ணிலே என்னை எப்ப கண்டியோ, அப்பவிலேயிருந்து, உன்னைப் பெற்ற அன்பு அப்பன்கிட்டே முகம் கொடுத்து ஒரு வார்த்தை கூடப் பேசாமல், வைராக்கியமாய் இருக்கிறியே, தாயே?...நான் ஜனிச்சதிலேருந்து முடிஞ்ச மட்டுக்கும் சுத்தவாளியாய் இருந்துக்கிட்டு வந்திருக்கிற என்னை மாரியோ, காளியோ, இல்லே, கறுப்பரோ, சிகப்பரோ ஏன் தான் இப்படிச் சோதிக்கிறாங்களோ?—நான் அவங்க சொத்தையா கொள்ளையடிச்சேன்?—மகளே பவளக் கொடி! முப்பத்தொன்பதாவது தடவையாகவும் சத்தியப் பேச்சாய்ச் சொல்லிப்பிடுறேன்!—எனக்கும் அந்த மூதேவி மீனாட்சிக்கும் அன்றையிலேருந்து இன்றைய வரையிலும் யாதொரு சொந்த பந்தமும் கிடையவே கிடையாது! பெற்ற உன்னோட அப்பனையே நீ நம்பாமல் இருந்தால், பின்னே என்னோட அந்தஸ்தும் கவுரமும் செல்லாத மலேயா காசாக ஆகிப்புடாதா?...எழுந்திருச்சு வா; எனக்குத் தலைக்கு மேலே சோலி கிடக்குது. கருக்கலிலே உனக்கும் உன் ஆசை அத்தான் முத்துவுக்கும் கல்யாணம் நடக்கப் போகுதே, மகளே!—உன் அம்மாவோட வைர அட்டிகையை நீ போட்டுப் பார்க்கவேணுமா? இந்தச் சங்க

ராத்திக் கெடுவுக்கு உனக்குப் பண்ணிப் போட்ட தென்னம்பாளை ரெட்டைவடச் சங் கிலியை நீதான் இருப்புப் பெட்டகத்தைத் திறந்து எடுத்து வைக்க வேணும். விடிகிறதுக்கு இன்னம் கொஞ்ச நாழிதான் இருக்கும்; உன் மாமன் கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடு களைச் செஞ்சு முடிச்சிட்டு இங்கிட்டுத் திரும் பிடப் போருன், உனக்குக் கோடிப் புண்ணியம் கிடைக்கும்; எழுந்திரு, தாயே, எழுந்திரு !...

மௌனப் புரட்சி நடத்திக் கொண் டிருந்த கறிவேப்பிலைக் கொழுந்தான புதல்வியைக் கையைப் பிடித்துக் கெஞ்சு கிறுர் தந்தை.

மகள் திமிறிக் கொள்கிருள் !

அவர் கடைசி ஆயத்தமாகக் கையெடுத் துக் கும்பிடுகிருர் !

ஆனுல், பவளக்கொடியோ வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து, நேராகத் தன்னுடைய ஏகாந்தப் பள்ளி அறைக் குள் ஓடிக் கதவைத் தாழிட்டுக்கொண்டு விடுகின்ருள் !

பின்னணி தாளம் போடுகிறது !

சீமான் வடித்த ரத்தக்கண்ணீர் ஏழை அழுத கண்ணீராக வற்றிக் காய்கிறது. எதையோ 'சட்'டென்று நினைவுகூர்ந்த

வராக, ஓர் அரைக்கணம் சிலையாக மலைக்கிருர் !—ஐம்பொன் சிலையொன்று நெஞ்சிலே நிழலாடுகிறது ! மறு இமைப்பில், வேறு ஏதோ நினைவில் படம் எடுக்கிறது ! — மனத் திரையில் மஞ்சள் தாலி ஊசலாடுகிறது!—ஆனால், அடுத்த நொடியில், அவர் விதிக்கே சவால்விடுகிற மாதிரி நிட்டூரமாகவும் அட்டகாசமாகவும் சிரிக்கத் தலைப்படு கிருர் ! மாடிக் கடிகாரப் பூஞ்சிட்டு பன்னிரண்டு முறை, 'முறை' வைத்துக் கூவும் ஒலி கேட்கவே, அவரது நினைவுகளெல்லாம் மடை மாறத் தொடங்கி விடுகின்றன !

அவர் எதிர்பார்த்திருந்த அருணாசலச் சேர்வை அவர் நெஞ்சில் பால்வார்க்க, அந்தச் சமயத்தில் முகப்பில் வந்து நின்று அலட்டுகிருர் !

அருணாசலம் : (கூக்குரலிட்டு) மச்சான், மச்சான் !

வையாபுரி : (கண்டிப்புடன்) என்னங்காணும் மச்சானே ! ஏதுக்கு இப்படி வாலறுபட்ட நரியாட்டம் ஏழு கட்டை சுரம் போட்டு அலட்டித் தீர்க் கிறீங்க ?

அருணாசலம் : (நயந்து) கோபிச்சுக்கப்படாதுங்க, மச்சான் காரரே ! நீங்க சீமையிலேருந்து திரும்பினதும் நான் சொன்னதுமாதிரி, செண்பகம் கண்ணாலப் பந்தலிலே உங்க...... உங்களை

மச்சான் முறை கொண்டாடிக்கிட்டு அலேகிற அந்த மீனாட்சி மகள் பூரணியை விரட்டி அடிக்க ஆரம்பிச்ச இந்தப் பெரிய தொண்டை இன்னமும் கம்மிபடக் காணுமே! நான் என்ன இனிச் செய்யட்டும்? ஆறு ஒண்ணுங்க!...

வையாபுரி ஃ (கோபமாக) ஒண்ணு என்னுங்க, ஒன்பதாய்த் தான் செப்புங்களேன்!

அருணுசலம் ஃ (பயந்து) உங்களுக்குக் கோபம் கூடிட்டப் போகுது!

வையாபுரி ஃ (முறைப்பாக) போகாது!

அருணுசலம் ஃ (தாழ்மையாக) எனக்கு நீங்க வாலே ஒட்ட வச்சாலும் பரவாயில்லே; ஆனு, என்னே நரியாக்கிப்பிடாதீங்க. ஏன்னு, நான் அதுக்கு லாயக்கில்லாதவன்! வேணும்னு, நம்ப ஆவுடையார் கோயில் மாணிக்கவாசக சாமி கணக்கிலே என்னேப் பரியாக ஆக்கிப்பிடுங்க! நான் உங்க கைம்பொம்மைதானே?—மறுதளிக் கல்லே! — ஆறு, நரிப் பட்டத்துக்கிண்ணே அவதரிச்சவங்க நீங்களேதான்!

வையாபுரி ஃ (ஐயத்துடன்) நெசமாத்தான் சொல்லுறீங் களா, அருணுசலச் சேர்வை?

அருணுசலம் ஃ (மருண்டு) அச்சாவும் முழுசாவும் ஒங்க ளாட்டம் இல்லாமல் போனலும், நானும் கொஞ்சநஞ்ச அரிச்சந்திரன் மாதிரி தானுங்க!...

வையாபுரி : (மிரண்டு) சரி, சரி. மாப்பிள்ளை என்ன பண்ணுதாம் ?

அருணாசலம் : (விழித்து) எனக்கு மாப்பிள்ளை உண்டாகிற துக்கு பொண் குட்டியே கையிலே மடியிலே கூட இல்லீங்களே ?—சீமான் மச்சான் இன்னமும் மீனாட்சியோட ஒலைக் குடிசையிலேயே தான் நின்னுக்கிட்டு இருக்கீங்களாக்கும் ?

வையாபுரி : (அதிர்வுடன்) ஓப், நான் என் மாப்பிள்ளையைக் கேட்டேன் !

அருணாசலம் : (தெளிந்து) ஓகோ, என் மகனைச் சொல்லுறீகளா ?

வையாபுரி : (சினத்துடன்) ஊம்...ப் ! உம்மக்கிட்டே ஒரு விசயத்தைக் கறக்கிறதுக்குள்ளாற, குன்னக் குடிக்கே காவடி தூக்கிட்டு வந்திடலாம் !

அருணாசலம் : (பதமாக) நீங்க இனி ஒண்ணும் காவடி கீவடி தூக்க வேண்டி வராதுங்க, சிங்கப்பூர்க் காரவுகளே ! உங்க மாப்பிள்ளையும் என் தலை மகனுமான இளையராஜா முத்துச் சேர்வை கும்பகருண அவதாரம் எடுத்திட்டாருங்க !

வையாபுரி : (தெளிந்து) சபாசு ! உமக்குப் பாரதக் கதை கூடத் தெரியுதே ? மாப்பிள்ளை தூங்கிடுச்சு தானே ?

அருணாசலம் : (இணக்கமாக) ஊம் !

வையாபுரி : (ஆறுதலுடன்) நல்லகாலம், நான் பிழைச்சிட்டேன் !

அருணாசலம் : (விழித்தபடி) அப்பன்னு, கெட்டகாலமாய், மறந்து போய் செத்து வச்சிட்டீங்களா ?

வையாபுரி : (கள்ளச் சிரிப்புடன்) நல்ல ஆளய்யா !—என் மாப்பிள்ளை முத்து, மீனாட்சி போட்ட சொக்குப் பொடியிலே மதிமயங்கி, அந்த ஓட்டைக் குடிசையிலேயே தங்கிடுச்சோன்னு பயந்துக் கிட்டிருந்தேன் ! — இப்ப நீங்க குடுகுடுப்பைக் காரனுக்கு நேராய் நல்ல வாக்குக் கொடுத்ததனாலே, நான் செத்துப் பிழைச்சிட்டேன்னு பேசினேன்.

அருணாசலம் : (கவலையுடன்) என் மருமகக் கிளி பவளக் கொடியைக் கண்ணுப்புறத்திலேயே காணலையே, மச்சானே ?

வையாபுரி : (போலி அமைதி) அது கண்வளர்ந்துகிட்டு இருக்குது: அதோட கல்யாணம் பொழுது விடிய நடந்தாகணுமே ? நெஞ்சு வழிஞ்சு நிற்கிற தன் நேசமச்சான் முத்துவை நினைவிலே குந்த வச்சிக்கிட்டுத் தூங்கிக்கிட்டிருக்கும் ! அதுசரி ! மீனாட்சியைக் கண்டுக் கிட்டுத் திரும்புகையிலே, நான் உங்க காதைக் கடிச்சதுக்கு ஒப்ப, சகலத்துக்கும் ஏற்பாடு செஞ்சிட்டீங்க, இல்லியா, அருணாசலம் ?

அருணாசலம் : (உறுதியுடன்) அம்புட்டையும் உங்க ஆணைப் பிரகாரமே செஞ்சு வச்சிருக்கேனுங்க, மேல வளவுக்காரவுகளே !

வையாபுரி : (ஆர்வமாக) நம்ப முத்துவுக்கு நம்ப கண்ணாலச் சங்கதி, அதாங்க, அதோட கண்ணாலச் சேதி தெரியுமில்லையா ? பவளத்துக்கும் முத்துவுக்கும் விடிகாலம்பற

கல்யாணம் நடக்கப்போகுது என்கிற இனிப்புச் சமாச்சாரத்தை உங்க மகன் முத்து காதிலே ஓதிப்பிட்டீங்கதானே ?

அருணாசலம் : அந்தப் பய மகன் கேட்டால்தானே சொல்லுறதுக்கு ? — பொன்னம்மாகிட்டே மட்டுக்கும் தான் சேதியைச் சொல்லியிருக்கேன் !—முத்துவைப் பற்றி இத்தனை தூரத்துக்குப் பயந்து சாகிறீங்களே, மச்சான் ? அவன் யாராம் ?—என் மகன் !—நான் பெற்ற, அதாவது, என் பெண்சாதி, அதாகப்பட்டது உங்க உடன் பிறந்தாள் பெற்ற மகன் ! நாங்க போட்ட கோடுதான் அவன் வரையிலும் லட்சுமணன் கோடு !...

வையாபுரி : ஓய், மச்சான் சேர்வை ! பதினாறு வருசத்துக்கு முந்தி இந்த அழகான—அருமையான மாங்குடிப் பட்டிக்காட்டு மண்ணைத் துறந்தும் மறந்தும், ஓசந்த வைராக்கிய லட்சியத்தோடே ராவோடு ராவாக அக்கரைச் சீமைக்குக் கப்பலேறினதிலேருந்து இன்றையத் தேதி மட்டும், எத்தனை எத்தனையோ சங்கதிங்களையெல்லாம் தைரியத்தோடு எதிர்கொண்டு சந்திச்சுப் பழக்கப்பட்ட நான் இந்தச் சில்லறைத்தனமான நடப்புக்கெல்லாமா என் மனசான மனசைப் போட்டு அநாவசியமாய் அலட்டிக்கிடுவேன் ?...சும்மா ஒரு ஒப்பனைக்குக் கேட்டு வச்சேன் !...

அருணாசலம் : (இயல்புடன்) முத்து — பவளம் கண்ணாலத்தை எந்தக் கோயிலிலே நடத்தலாம் ? எட்டியத்தளி அகிலாண்டேசுவரி ஆலயமா ?—இல்லே, நம்ப ஊர் ஆத்தா காளி சந்நிதானத்திலேயே நடத்திப்புடலாமா ?

'எட்டியத்தளி அகிலாண்டேஸ்வரி' மற்றும் உள்ளூர்க் காளியம்மன் ஆலயங்களைப்பற்றி அருணுசலம் குறிப்பிட்டதைக் கேட்ட மாத்திரத்தில், வையாபுரியின் உள்மனத்திலே விளைந்த ஒரு ரசாயன மாற்றம் இன்னமும் அவரை விடுவிக்கவில்லை; வேர்த்து விறுவிறுத்துப் போய்விடுகிருர் !

வையாபுரி : (துணிவுடன்) மச்சான், சுத்த மோசம் நீர் ! தலைக்கு மேலே வெள்ளம் போய்க்கிட்டு இருக்கையிலே, நேரம் தப்பின இந்தப் பாதிச் சாமத்திலே, எட்டியத்தளி அகிலாண்டேசுவரியையும் நம்ப ஊர் காளியையும் நினைவுபடுத்தலாமா ?... நம்ப குடும்பத்தின் இந்தத் திருமண வைபவம் நம்ம ஜாதி முறைப்படியே திருமணப் பெண் வீடாகிய என் வீட்டு மாடிப் பந்தலிலேயே நடந்திடட்டும்; நமக்கு அனுசரணையான நாட்டாண்மைக்காரன், ஆறு தலைக்கட்டுப் புள்ளி இப்படி ஒரு அஞ்சாறு பேருங்களைக் கூப்பிட்டுக்கிடுவோம். பஞ்சாயத்து பிரசிடெண்டு தேவையில்லை. எங்க நல்லத்தா, ஆச்சிமகள், உங்க ஆயா இப்படி நாலு பொம்பளைங்க இருக்தாலே போதும் !— ஆக, பொழுது பலார்னு விடியறதுக்குள்ளவே திருப்பூட்டு நடந்து முடிஞ்சாகவேணும் ! ஆகச்சே, உம் மகன் முத்துவைக் கண்ணிலே விளக்கெண்ணெய் ஊத்திக்கிட்டு கண்காணிக்க வேண்டியது உம்மோட பொறுப்பு ! மற்றப்படி காப்பிக்கடை அய்யர்சாமி மந்திரம் ஓதி, கெட்டி மேளம் தட்டி, என் அருமை ராசாத்தி பவளம் கழுத்திலே உம் மகன் முத்து திருப்பூட்டி மூணு

முடிச்சைப் பலக்க முடிஞ்ச கையோடவே, ஊர் விருந்துக்கும் ஏற்பாடு செஞ்சிட்டால் போகுது! இன்னொரு சங்கதியையும் தெரிஞ்சுக்கிடுங்க. மாப்பிள்ளைக்கு முகூர்த்தவேட்டி, ஜரிகை துப்பட்டா எல்லாம் அக்கரைச் சீமையிலேயே ரெடியாயிடுச்சு: உங்க தரப்பிலே நீங்க ஊர் வளமைப்படி எடுத்தாக வேண்டிய தாலிக் கூறைப் பட்டு வகுருவும் தாலியும்கூட என் கைவசத்திலே தயார்!—நீங்க எதுக்கும் கிலேசப் படத் தேவையில்லை. உம்ம லேவாதேவிக்கு இன்னம் ஒரு ஆயிரம் வேணும்னாலும் தரச் சித்தமாயிருக்கேன். ஆனா, எந்த ஒரு சங்கதிக்கும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலேயும் நீங்கதான் எனக்கு நம்பிக்கையாய்த் துணை நிற்கவேணும், மச்சானே! திரும்பியும் ஒரு பாட்டம் அழுதிடுறேன்: என் மகள் பவளக்கொடிக்கும் உம் மகன் முத்துவுக்கும் பொழுது விடியக் கலியாணம் நடந்து முடிஞ்சு, நான் ராத்திரி அந்தத் தேவடியாள் மீனாட்சி முன்னே விட்ட சவால் கெலிப்பு அடைஞ்சால்தான், எனக்கு நல்ல மூச்சு வருமுங்க, மச்சினரே! அப்பாலே, நான்கூட இரண்டாம்தாரம் கட்டிக்கிடவும் தயாராகிப் பூடுவேனுக்கும்!...

கண்களின் சிவப்பு கனமடையப் பேசிய வையாபுரியின் நெஞ்சில், பதறிய நிலையில் கையை வைத்துப் பார்க்கிறார் 'ஆனாருனா'!

அருணாசலம்: (இயல்புடன்) மச்சான்காரரே, இப்பவே உங்களுக்கு மூச்சு நல்லாய்த்தானே வந்துகிட்டிருக்குதுங்க!—நான் இருக்க, உங்களுக்குப் பயம் ஏனுங்க?...

வெளி வாசல் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்கவே, சிந்தனை வசப்பட்டவராக முகப்பிலிருந்து எழும்புகின்றார். மூக்குக் கண்ணாடி கிடைக்கவில்லை ! ஒருவேளை பவளம வீட்டைத் துறத்து வெளியேறு கிறாளோ என்ற பயம் அவரை உள்ளூற ஆட்டிப் படைக்கிறது.

வையாபுரி : (குயுத்தியுடன்) யாரு வாரது, யாருங்க, அருணாசலம் !—உங்க பையன் முத்து இங்கிட்டு பவளத்தைத் தேடி வந்திருக்குமோ ?

அருணாசலம் : (நடந்தபடி) எம் மகன் நேர் பாதைக்கார னுங்க !

வையாபுரி : (சமாளிப்புடன்) ஆமா, என்னை மாதிரி !

அருணாசலம் : (சிரிப்புடன்) ஆமா, ஆமா, ஆமாங்க !...

அருணாசலம் வாசலுக்குப் புறப்பட்டு, வண்டிக்காரன் வேலனுடன் உட்புறம் திரும்புகிறார் !

அருணாசலம் : (தயவாக) மச்சான், முன் நிலா பறிஞ்சிட்டா பின் இருட்டு பயமுறுத்துது. வந்தது நம்ப—ஊைகும், உங்க வண்டியோட்டி வேலன் ! இதே நேரத்துக்குக் கச்சிதமாய் வரச் சொல்லி உத்தரவு போட்டீங்களாமே ?

வையாபுரி : (அதட்டியபடி) அருணாசலம், சத்தம் காட்டா தீங்க. உள்ளே பவளம் உறங்குது. அப்படியே நில்லும். கண்ணாடி இல்லாட்டியும் எனக்கு அங்கிட்டு வந்திடத் தெரியும்.

வேலன் : (கும்பிடு போட்டு) எசமான், நான் இங்கிட்டாலே இனிப்புப் புளித் தூரிலே நிற்கிறேனுங்க !

வையாபுரி : (நடைபயின்று) தில்லுடாலே !—எனக்குப் புரியுதுடா, வேலா !... ஒய், அருணசலம், வாருமய்யா என் பின்னுடி !

முகப்பின் மண்டப வெளியிலே என்னவோ அரவம் கேட்கிறதேயென்று உன்னிப்புடன் திரும்பிப் பார்த்த அருணசலம், சீமான் மைத்துனரின் ஆணைக் குரலுக்குப் பயந்து வெளி வாசலுக்கு நடைபோடுகிருர்.

இந்த இடைவேளைக் கணப்பொழுதிற்குள், பவளக்கொடி முகப்பைத் தாண்டி, மேற்திசைத் தடத்தின் இருட்டில் நடந்து, மாட்டுக் கொட்டகையைக் கடந்து, இனிப்பு புளியமரத்தின் ஒரமாக இருந்த ஆளுயரக் கோழிக் கூண்டின் மறைவிலே வசமாக ஒளிந்துகொண்டு, கவனிக்கத் தலைப்படுகின்ருள் !...

மென்மையான பரபரப்பைக் கூட்டுகிறது சூழல் இசை.

வையாபுரி : (ஆவேசமாக) டேய், வேலா ! இப்பிடிக் கிட்டக்க வாடாலே !... நான் செப்புறதைக் காது கொடுத்து நல்லாக் கேட்டுக்கிடவேணும்: என் அருமைப் பொண்ணு பவளத்துக்கும் என்

அக்கா மகன் முத்துவுக்கும் விடிஞ்சால் கலியாணம் நடக்கப் போகுதாக்கும் !...ஆன படியினலே, நீ இப்பவே—இந்த நிமிஷத்திலேயே ஒரு காரியம் செஞ்சாகணும் !—பவளம் சுரணைத் தப்பித் தூங்கிக்கிட்டிருக்குது; சரியாகக் கேட்டுக்க சங்கதியை !— வேலா !... ஊருக்கு எல்லையிலே இன்னமும் உயிர் தறிச்சிருக்கிற அந்தத் தேவடியாள் சிறுக்கி மீனாட்சியையும் அவளோட அவமானச் சின்னமான அவள் மகள் பூரணிக் குட்டியையும் எச்சில் துப்பிக் காய்கிறதுக்குள்ளே கூண்டோட கைலாசத்துக்கு அனுப்பிச்சாக வேணும் ! ஆகச்சே, இப்பவே அங்காலே ஓடி ஒளிஞ்சிருந்து, இருட்டுச் சாமத்தின சாமத்திலே, சமயம் பார்த்து, மீனாட்சியும் பூரணியும் அசந்து தூங்கிக்கிட்டு இருக்கிற அந்தவேளை தப்பின நேரத்திலே, மீனாட்சியோட குடிசைக்குத் தீ வச்சுப்பிட்டு, மூணும் பேருக்குத் தெரியாமல், நலியாமல் நழுவி எங்காச்சும் ஓடிப் போயிட்டு, பொறகாலே மறுகி இங்கிட்டு வந்து, என்கிட்டே அந்த நல்ல தாக்கலைப் போட்டுப்பிடுடா, வேலா !...ஊம், இந்தா, அனுமத்து அச்சாரம் !—ரூவா பத்து இருக்கு; அசல் தாளாக்கும். பாக்கியை விடியட்டும் வந்து வாங்கிக்கலாம்!—இந்தக் காரியத்திலே ஒசடக்கு ஏதானும் ஏற்பட்டுச்சோ, அப்பாலே உன் தலையையே வாங்கிப்பிடுவேன் !...ஜாக்கிரதை ! ...ம்...ஓடுடா !

இசையின் பரபரப்பு பயங்கரமாக எழுந்து, அடங்குகிறது !

அருணாசலம் : (வீரத்துடன்) டேய், வேலா ! எங்க சீமான் மச்சானோட சாண் அளவு நெஞ்சின் மானமே அந்த அபாக்கியவதி மீனாட்சியோட எட்டு அடிக் குச்சிலேதான் ஊசலாடிக்கிட்டு இருக்குது !... நீ செய்யப்போற இந்த நல்ல காரியம் கைகூட, எங்க மச்சான்காரருக்குப் பிடித்தமான சாமிபூதம் ஏதாச்சும் மிஞ்சியிருந்தால், அது தான் உனக்குக் கைகொடுக்க வேணும் ! சரிதாண்டா, ஓடுடாலே, வேலா !

வேலன் மீசையும் கிருதாவும் இருட்டில் சிரிக்கத் தலையை அழுத்தமாக ஆட்டிக் கொண்டே, அச்சாரத்தை சாயக் கிழிசல் துணியில் முடிந்தவாறு, இடுப்பில் செருகியிருந்த வீச்சரிவாள் ரகசியமாகப் பளபளக்கப் புறப்படுகிறான் !...

பவளக்கொடி வெகு ரகசியமாகவும், மிக விழிப்புணர்ச்சியோடும் அங்கிருந்து வெளியேறிப் பாய்ந்து, தன்னுடைய பள்ளிஅறையில் பள்ளி கொள்கிறாள்!... எங்கேயோ வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்த அருணாசலத் தேவரை முதுகில் தட்டுகிறார் வையாபுரிச் சேர்வை.

அருணாசலத்தின் குடுமி, அதிர்ச்சியில் அவிழ்ந்து பறக்கிறது.

அருணாசலம் : (கலவரத்துடன்) வலிக்குது, மச்சான் !

வையாபுரி : (கோபமாக) பின்னே, என்னய்யா நீர்?— சும்மா வெண்டைக்காய்த்தனமாய் வளவளன்னு பேசிக்கிட்டே இருக்கிறீரே?—உம்மோட பேச்சு ஒரு மாதிரியாய் தடம்கெட்டு நீளுதே?—சரி, சரி. நாலுகால் பாய்ச்லாக உங்க வீட்டுக்கு ஓடி, உங்க இளைய ராஜா முத்துவை விடி வெள்ளி முளைக்கிற அரிதியிலே கண்காணிச்சு, அப்பறம் இங்கிட்டு மாப்பிள்ளை முத்துவாக அழைச்சுக்கிட்டு வந்திடுங்க!...இனி நான் வெறும் சீமான் மாத்திரம் இல்லே!—நான் இனிமேல் ராஜாதி ராஜாவாக்கும்!...ஊம். ஆகாயக் கப்பல் கணக்காப் பறங்க, மச்சானே!...

அருணாசலம் : (பயந்து) உத்தரவுங்க, ராசா மச்சான்!...

'வெள்ளைவாய்' அருணாசலத்தை அனுப்பி விட்டு, தாளமுடியாத மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மிதந்தவராகத் திரும்பும் வையாபுரி, தன் அருமை மகள் பவளக்கொடியின் அறை பத்திரமாக முன் போலவே அடைபட்டிருக்கக் கண்டு, மேலும் கூடுதலான ஆனந்தம் அடைந்தவ ாக, தூக்கம் விழிக்கும் நல்ல நோக்கம் கொண்டு தனது அந்தரங்க அறைக்குள் அடியெடுத்து வைத்து, மூக்குக் கண்ணாடியைத் தேடி எடுத்தபின், மதுவை நாடுகிறார்!

பின்னணி இசை போதையுடன் 'மோடி' கிறுக்குகிறது!

திரை

காட்சி: 32

மீனாட்சியின் குடிசை; அதே இரவுகள் பின் சாமம்.

மீனாட்சி உறக்கம் பிடிக்காமல் உடலில் ஊசலாடிய அசதியோடும், இதயத்தில் ஊடாடிய அச்சத்தோடும், சுவரொட்டி விளக்கின் தலைமாட்டிலே ஹைதர் காலத்துக் கோரைப் பாயில் புரண்டு கொண்டிருக்கிறாள்; அருகில் துயில் கொண்டிருந்த அன்புச் செல்வி பூரணி யின் விலகிக் கிடந்த மாரகச் சுங்கடி யைச் சீராக்குகிறாள்.

காவல் நாய் ஊளையிடுகிறது.

மீனாட்சி : (நடுக்கத்துடன்) ஐயையோ, நாய் ஊளை யிடப்புடாதின்னு எங்க பூவத்தக்குடிப் பொன்னுயி அப்பத்தா சதா பயங் காட்டுமே? ....

மீனாட்சியின் நடுங்கும் மனத்தில், முன் இரவில் சீமான் வையாபுரி சவால்விட்ட பயங்கரச் சொற்கள் படம் எடுத்துப் படம் விரித்து எதிரொலிக்க தொடங்கு கின்றன!

மீனாட்சி : (தனக்குத் தானே) அடியே, காளி! என்னோட பாவி மச்சான்காரர் இந்தப் புண்ணிய வதியைப் பார்த்துப் பல்லு மேலே பல்லுப் போட்டு, நாக்கு மேலே நாக்கு வச்சு, தேவடியான்னு ஏசின ஏச்சும் பேசின பேச்சும் உனக்குக் காதிலேயே விழல்லையாங்காட்டி? உனக்கு எப்படி விழும்? பதினாறு வருசத்துக்கு முந்தி, உன்னைச் சாட்சி வச்சு எனக்குத் தாலிச் சரடு கட்டின அந்தச் சீமானை பதினாறு வருசம் கழிச்சு நீ கொண்டாந்து சேர்த்ததைப் பார்த்து, நீ கல் இல்லேன்னுதான் நம்பி யிருந்தேன். ஆனா, அந்தத் துரோகி, என்னோட தாலிக்கு உன்னைக் கூட்டியாந்து சாட்சி சொல்லச் சொன்னடியும், நீ கல்லை உடைச்சுக்கிட்டு மானம் ரோசத்தோட வெளியே வந்து மெய்யானதொரு அதிசயமாக நீ வந்து எனக்குச் சாட்சி சொல்லிடுவாய்னு தான் நான் நம்பி யிருந்தேன். நான் பைத்தியக்காரி!—உன்னை நம்பினேனே?—உன்னை நம்பாத அந்தச் சிங்கப்பூர்க் காரருக்குப் பயந்து, கல்லுக்குள்ளேயே அடங்கி முடங்கிக்கிட்டு இருக்கே!— தூ!...பொண்ணுக்குப் பொண்ணை நீயே இரக்கம் காட்டாமல் கடைசி மட்டுக்கும் கல்லாகவே போயிட்டியேடி! கேவலம், ஒரு பேயாச்சும் எங்க மேலே பச்சாதாபப்படக் காணோமே, காளியே?... ஆத்தாடியோ! அந்தப் பாவிச் சீமான் வச்ச ஆணைப்படி, எங்களைக் கூண்டோடு கைலாசத்துக்கு அனுப்பிப்பிடுவாரோ?—அப்பத்தானே, அவர் என்கிட்டே விட்ட சவால்படி, தன் மகள்—ஊம், எங்க பொண்ணு பவளத்தைத் தன் அக்கா பிள்ளைக்குக் கண்ணாலம் கட்டி வைக்கத் தோதுப்பட வாய்க்கும்?...ஐயோ!...தலை ஆல

வட்டம் சுத்துதே?...நெஞ்சு வெடிச்சிடும் போலிருக்குதே? மகளை எழுப்பலாமா?— வேணும்; அது தூங்கட்டும்; நல்லாத் தூங் கட்டும்!—நான் அந்தக் கோமான்கிட்டே போட்ட சவால்படி, என் மகள் பூரணியை பொழுது விடியுமுன்னே அந்தத் தங்கக் கம்பி முத்துவுக்கு வாழ்க்கைப்பட வைக்கவா என் னாலே முடியப் போகுது?—பாவம், இந்தப் பாவி விட்ட சவாலை மெய்யின்னு நம்பி, என் னென்ன கனுக் கண்டுக்கி' டிருக்குமோ என் சொக்கப்பச்சை?...அந்தக் கனவுப் பாக்கியத் தையுமா நான் தட்டிப் பறிக்க வேணும்? ஊகூம், கூடவே கூடாது!...தாலிப் பொசிப்பு ஆத்தாளுக்கும் மகளுக்குமே வாய்க்காமல் பூடுச்சே? ... மானத்தைப் பறிகொடுக்கிறதுக் கும், தோற்றுப்போய் மண்ணைக் கவ்வுற துக்குமே என்னைப் பிடிச்சுப் போட்டியாடி, காளி ஆத்தாளே? ஆனா, கடைசி கடைசியாய் உனக்கு ஒரு புத்தி சொல்லி வைச்சுப்பிட வேணும்!—என் வரையிலும், இந் நேரத்துக்கு நீ கூட தோற்றுத்தான் போயிருக்கே? இத்த வகையிலே, உன்னோட மானமும் ஆலாப் பறந்துகினுதான் இருக்குது!—மறந்துப் புடாதேடி, பாவி!...ஐயையோ, மறந்திடாதே, தாயே!...ஆனா, ஒண்ணு! நாங்க மானரோசத் துக்குக் கட்டுப்பட்டவங்களாக்கும்!—வரும் விதி ராத்தங்கவா போகுது?—எது வந்தாலும் வரட்டும்!—பார்த்துக்கிடுறேன், ஒரு கை!...

காவல் நாய் இப்பொழுது அச்சுறுத்திக் குரைக்கத் தொடங்குகிறது.

இசை ஓசை மேலும் அச்சுறுத்துகிறது!

கை விளக்கைத் தூண்டி விட்டவளாக, குடிசைக் கதவுப் படலின் தாழ்ப்பாளை விலக்கி, உச்சமடைந்த எச்சரிக்கைப் பண்புடனும், எல்லை தொட்ட மன வல்லமையுடனும் திட்டி வாசலில் ஒட்டி நின்று, சுற்றிச் சூழ விளக்கை ஏந்திப் பார்வை யிடுகிறாள் ஏந்திழையாள். கும்மிருட்டிலே, சந்தேகத்திற்கான தடயம் எதுவுமே தட்டுப்படாமற் போகவே, வாய் எச்சிலைக் காறி உமிழ்ந்தபின், இனம் விளங்காத பயத்தின் உணர்வுகளோடு குடிசைக்குள் பாய்ந்து, பதட்டத்துடன் நாதாங்கியைப் போட்டு விட்டு, மீளவும் வெற்றிலைக் குட்டானைத் தஞ்சமடைகிறாள் மீனாட்சி !...

ஆனால்—?

வண்டிக்கார முரடன் வேலன் அதோ, அந்தச் சனி முடுக்குக் கருவேலம் பத்தையினின்றும் தீப்பெட்டியும் கையுமாக வெளிப்படுகிறான் !

அடடே, இந்தச் சமயத்தில் தானா அவனது இரண்டு பாதங்களிலும் நச்சுக் கருவேலமுள் ஆழமாகத் தைத்துத் தொலைய வேண்டும்?

பாவம் !...

திரை

காட்சி: 33

வையாபுரியின் மாடி வீடு; முகப்பு; அதே இரவின் பின்சாமம்.

மகுடியின் பின்னணியில், மதுவுக்குக் கட்டுப்பட்டு, மதுவில் இந்நேரமாக மயங்கிக்கிடந்த சீமான் வையாபுரி இப் பொழுது தன்னுணர்வு பெற்று, விழுந் தடித்துக் கொண்டு எழுந்து சுற்றிலும் பார்க்கிறார்; விடிவெள்ளி இன்னமும் முளைக்க வில்லை. ஓர் அமைதியுடன் பார்வையைத் திருப்பும் போது, அச்ச மும் பதட்டமும் அவரை ஆட்கொள்ள, மகளைத் தேடி உள்ளே ஓடுகிறார்.

பவளக்கொடியின் சயனக் கூடத்தின் வெளிப்புறத்தில் சிந்திக்கிடந்த ரத்தத் துளிகளுக்கு மத்தியிலே சிதறிக்கிடந்த செவ்வந்திப் பூ மடல்களை ஏற்றி மிதித்தவாறு, சாவித் துவாரத்தின் இடைவெளியின் வழியே நோட்ட மிடுகையில், குப்புறப் படுத்திருந்த பவளக்கொடியைக் காண்கின்றார்

வையாபுரி. வெளியில் நின்று பேச ஆரம்பிக்கிறார்:

வையாபுரி : (அவசரமாக) மகளே, பவளம்! விடி முளைச்சிடும் போல இருக்கே?—நீ இன்னமும் வைராக்கியப் பிண்டமாய் கதவை அடைச்சுக்கிட்டுக் கிடந்தால், ஆரம்பிச்ச கதை எப்படித் தான் முடியும்?—எழுந்திருச்சு வந்து கதவைத் திற; சுருக்கண தலை முழுகிட்டு, பட்டுக் கண்டாங்கியை உடுத்திக்கிடு. பொழுது விடிஞ்சால், நீ உன் ஆசை அத்தான் முத்துவோட அருமைப் பெண்சாதியாக்கும்! கலியாணத்தை நடத்தி வைக்க, நம்ம சொந்தக்காரங்களை அழைச்சுக்கிட்டு வாரேன்; மாப்பிள்ளை முத்துவும் இனி வந்திடுவாங்க! நான் போட்ட சபதப்படி உன் தங்கக் கழுத்திலே தங்கத்தாலி ஏறினடியும், ஊர் உலக வழக்கப் பிரகாரம் மற்ற விசேஷங்களையெல்லாம் ஒண்ணு பாக்கி வைக்காமல், உன் இஷ்டப்படியே நடத்திக் காட்டிப்பிடுவேன்! ம்...கதவைத் திற பவளம்! வெண்ணெயைத் தின்னு பார்க்கிறதுக்குள்ளாற, தாழியைப் போட்டு உடைச்சுப்பிடாதேடி, ராசாத்தி பவளக்குட்டி!

பவளத்திடமிருந்து ஒரு விளைவும் ஏற்படாமல் போகவே, அறைக் கதவைத் தட்டுகிறார் சேர்வைகாரர்.

அவர் கொக்கல்லவே! — ஆகவே போட்ட புள்ளி தப்ப வில்லை!

எழுந்து வந்து கதவைத் திறக்கும் பவளக்கொடி, மறுகணம் கதவைப்

படீரென்று அடைத்துக் கொண்டு உள்ளே ஓடிப் பட்டு மெத்தையில் விழுந்து, விம்மி வெடிக்கிறாள்!...

கொட்டாவி தொடர் சேர்த்துப் பறிய, தள்ளாடிக் கொண்டு, சினம் பொங்க, நடை வழியாக நடை பயிலும் போது, விளக்கு வெளிச்சம் வண்டிக்காரன் வேலனைக் காட்டிக் கொடுக்கிறது. சமிக்ஞை மூலம் அவனை வாயடைத்து நிற்குமாறு பணித்தவராக, வேலனை இலக்கு வைத்து, வெற்றி நடை போட்டு வந்து நிற்கிறார்.

வேலன் தன்னுடைய வேட்டிக் கிழிசலின் அடிமடியிலிருந்து பொட்டணம் ஒன்றை எடுத்து நீட்டுகிறான்

வையாபுரி வாங்கிப் பிரிக்கிறார்.

ஓலை குடிசையின் சாம்பல் விதிக்கும் மேலாகப் புன்னகை செய்கிறது!...

வேலன் : (எக்காளமாக) முதலாளி! இம்மாம் பொழுதுக்கு உங்க ஜென்ம வைரியான அந்தத் தேவடியாள் மீனாட்சியும், அவள் அவமானச் சின்னமாகப் பெற்றுப் போட்ட பூரணிக் குட்டியும் நான் தீ மூட்டின நெருப்பிலே குடிசையோடவே கைலாசம் பறிஞ்சிருப்பாங்க; அவங்க ரெண்டு பேர் உடம்பும் இந் நேரத்துக்கு வெந்து சுண்ணாம்பாகி யிருக்குமுங்க!...

வையாபுரி : (குதூகலமாக) பலே, பாண்டியா!—போட்டுப்புட்டியே பகடை பன்னிரண்டு!... இனி நான் சர்வ நிச்சயமாய் ராஜாதி ராஜாவே தான்!—இனி என்னை இந்தக் காளிகூட ஒண்ணுமே செய்ய முடியாது! ஏன், அந்த அகிலாண்டேசுவரியாலே கூட என்னை இனி மேலே அசைக்கவும் முடியாது!...என்னை அல்லும் பகலும், நாளும் பொழுதும் சோதிச்சு, என் மானத்தையும் கவுரவத்தையும் சந்தி சிரிக்கக் கங்கணம் கட்டிக்கிட்டிருந்த அந்தத் தேவடியாள் சிறுக்கி மீனாட்சி குடிசையோடே கைலாசம் பறிஞ்சிட்டா! ஆமா மெய்யாலுமே இனி நான் ராஜாதி ராஜனே தான்!...டே, வேலா! நீ கட்டிக்கிட்ட புண்ணியத்துக்கு இந்தாடா கூலி!...

சீமான் மகிழ்வின் பெருக்குடன் பெரும் மனம் வைத்து நீட்டிய பதினைந்து ஒரு ரூபாய் நோட்டுக்களை ஒரு தரத்துக்கு இரண்டு தரமாக எண்ணிப் பார்க்கும் வேலன் முகம் சுளிக்கிறான்!

வேலன் : (ஏமாற்றத்துடன்) தரும துரையே! என் சாமியே! உங்க மானத்துக்கு உண்டான கொள் முதல் விலை வெறும் இருபத்தஞ்சு ரூவா தானுங்களா? உங்க மீனாட்சி, பொண்ணு பூரணி ஆகிய இந்த ரெண்டு ஜீவன்களோட உயிர்களுக்கு நீங்க போட்ட புள்ளி மதிப்பு இந்தப் பிச்சைக்கார இருபத்தஞ்சு ரூவா தானுங்களா? நான் என்னோட உயிரையே உங்க காலடியிலே பணயம் வச்சிட்டு, நச்சுக் கருவேல முள்ளுங்க என் காலு ரெண்டையும்

பதம் பார்த்திட்ட பாழும் வேதனையைக் கூடச் சட்டை பண்ணாமல், அந்தக் குடிசையைத் தீக்கு இரையாக்கினேனே, அந்தத் துணிச் சலுக்கு—பாவத்துக்கு விலை வெறும் இருபத் தஞ்சே ரூவா தானுங்களா?

வையாபுரி : (சமாளித்து) டேய், வேலா! நீ எவ்வளவு தான் காசு கேட்கிறே?

வேலன் : (ஆசையுடன்) குறைஞ்சது ஒரு ஆயிரமாவது நீங்க கட்டாயம் தந்துதான் தீரணும், தர்மப் பிரபுவே!

வையாபுரி : (சூட்சுமத்தோடு) ப்பூ! இம்புட்டுத்தானேடா? —இந்தா, வாங்கிக்க!...

சீமான் இடுப்பில் செருகி யிருந்த பிஞங்குப் பட்டாக் கத்தியை எடுத்து வேலன் மீது வீசப் போகும் தரு ணத்தில், பவளக்கொடி குறுக் கிட்டுத் தடுத்து விடுகிருள்!

பவளக்கொடி : (ஆணையிட்டு) ஏ, வேலா! அப்படியே நில்லு! நீ கடைசிப் பட்சமான துளியத்தனை ஈவிரக்கம் கூட இல்லாமல், நீ செஞ்சிட்ட இந்த அநியாயப் பாவத்துக்கு நானே உனக்குக் கூலியை அள்ளி அள்ளித் தந்திடுறேன்!— இப்பவே உன்னை சட்டத்தின் கையிலே ஒப் படைச்சுப்பிட்டுறேன்!...

வேலன் : (கைகூப்பித் துடி துடித்து) ஐயையோ! தாயே!...அப்படிச் செஞ்சிடாதீங்க. நான் பிள்ளை குட்டிக்காரப் பாவி! தெரியாத்தன

மாய்த் தப்புத்தண்டா பண்ணிப் பாவத்தைச் சம்பாதிச்சுக்கிட்டேனுங்க !... இதோ, ஓடிப்பிடுறேனுங்க !...

வேலன் 'கடலே கதி' என்று ஓடத் தலைப் படுகிறான் !

வையாபுரி : (திகிலுடன்) மகளே, நீ எப்போ இங்கிட்டு வந்தே?...நீ ஏன் இங்காலே வந்தியாம்?...

பவளம் விம்மி வெடிக்கின்றாள் !

பவளம் : (கதறியபடி) ஐயையோ, மீனாட்சிப் பெரியத்தா !...ஐயையோ, பூரணி அக்கா ! உங்களை இனி மறுபடியும் எந்தப் பிறப்பிலே நான் காணப் போறேன்? ஐயையோ, தெய்வமே !...

வையாபுரி : (வர்மத்துடன்) ஏலே, பவளம் !...என்னோட மானமும் மரியாதையும் இப்பத்தான் நல்ல மூச்சு விடப் பார்க்குது !—இந்தச் சமயம் பார்த்து, நான் பெற்ற மகளான நீயே மறுபடியும் என் மானத்துக்கும் மதிப்புக்கும் உலை வைக்கப் போறியா? மயிலே, மயிலேன்னு சொன்னா, இறகு போட மாட்டே நீ !—ஏ, பவளம் ! இப்படி வா ! பொழுது விடிகிறதுக்குள்ளே, உனக்கும் உன் அன்பு அத்தான் முத்துவுக்கும் கல்யாணம் நடந்து முடிய வேணும் ! மாப்பிள்ளை முத்து இங்கிட்டு புறப்பட்டு வார நேரமாயிடுச்சு !...நீ குளிச்சு முழுகிட்டு, கல்யாணப் பெண்ணாக புதுசு உடுத்தி, புது நகை போட்டு, பூவும் பொட்டுமாய், என் முன்னே வந்து நில்லு ! சல்தியாய்க் கிளம்பு !...ம் !

பவளக்கொடி மறு பேச்சாடாமல், அருமைத் தந்தையின் ஆணைக்குப் பணிந்து அங்கிருந்து கிளம்பி, வேக மாக நடந்து, நேராகத் தன்னுடைய அந்தரங்க அறைக்குள் ஓடிக் கதவை மாமூல் பிரகாரம் தாழிட்டுக் கொண்டு விடுகின்றாள் !...

வையாபுரி : (கோப வெறியுடன்) அட, பாழும் காளியே !...

சீமான் வையாபுரியின் ஆத்திரக் கூப் பாடு விண்ணை முட்டி, மண்ணை முட்டிக் கொண்டிருக்கிறது !

திரை

காட்சி: 34

மீனாட்சியின் மனை; வைகறை.

நெஞ்சை ஈர்க்கும் சோகம், சுருதி கூட்டிக் கொண்டிருக்கிறது !...

நிலம் தெளியும் நேரம்.

மீனாட்சியின் காணியாட்சி உரிமை பூண்ட எட்டடிக் குச்சு, இப்போது இருந்த இடம் தெரியாமல், 'அலகிலா விளையாட்டுடையவன்' பூசிக் கொண்டானுமே சுடலைப்பொடி, அதைப் போன்று பிடிசாம்பலாகத் தரிசனம் தந்து கொண்டிருக்கிறது !...

பறைச்சேரிப் பெருங்குடி மக்கள் அங்கங்கே குய்பல் கும்பலாகக் கூடிக் கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சி யளிக்கின்றனர் !

மங்காத்தா : (விம்மலுடன்) பல்லுப் போயிட்டாலும், சொல்லுப் போகாமல் என்னோடை வாழ்க்கைத் தடத்

திலே தொண்ணூறு தொலைக் கல்லைத் தாண்டி வந்திட்ட நான் அறிஞ்ச மட்டும் இந்த மாதிரி யான ஒரு அநியாயக் கொடுமை நடந்ததாகக் கேள்விப்பட்டதே இல்லையே! கொல்லுக் கொலைக்கு அஞ்சாத எந்தக் கல்லு நெஞ்சக்காரப் படுபாவி, ராத்திரியோட ராத்திரியாய் இந்த ஓலைக் குடிசைக்குத் தீ வச்சு, நம்ப மீனாட்சி அக்காளையும் அக்கா மகள் பூரணியையும் கூட்டோட கைலாசத்துக்கு அனுப்பிச்சிப்புட் டானோ?— சாமியாவது, பூதமாவது?— நம்ம மீனாட்சி அக்கா நொடிக்கு நூறுதரம் கொஞ்ச நாளாய்ச் செப்பி வந்தாப்பிலே, ஆத்தா மகமாயி தெய்வம் இல்லை; வெறும் கல்லேதான்! காளி கல்லாகவே இருக்கிற துப்பைப் புரிஞ்சுக் கிட்டதாலேதான், அந்தப் போகுடிப்பாவி இந்த அடாத அநியாயத் தீவினைப் பாவத்தை மனம் துணிஞ்சு செய்ய மனம் துணிஞ் சிருக்கான்!...

பொன்னுயி : (தேம்பியபடி) ஆயா, ஆத்தா மூத்தவளை அப்படியெல்லாம் தப்புத்தனமாய்ப் புள்ளி போட்டு, எடைபோட்டுப்புடலாமா? வினை விதைச்சவனை அந்தப் பயங்கரி காளி வினை அறுக்க வைக்காமல் தப்பவிடவே மாட்டாள்!

சின்னம்மா : (கதறியவாறு) மனித சாதிக்கு மையத்திலே, காளியே ஒரு பெண் சென்மமாய் அவதாரம் எடுத்ததாட்டம் தப்பிப் பொறந்த நம்ப மீனாட்சி அக்காளையும் அதோட பொண்ணையும் இனி எப் பொறப்பிலே நாம காணக் கொடுத்து வைக்கப் போறோமோ?

சாம்பான் : ஒரு பாவமும் அறியாது, ஆறு, எல்லாப் பாவத்தையும் மண்டையிலே போட்டுச் சுமந்து

கிட்டு, தன்னைத் தள்ளி வச்ச இந்த மாங்குடிக் கிராமத்தையும், கிராமத்துச் சனங்களையும் பதிலுக்குத் தள்ளி வச்சு, ஒண்டியாய் எதிர்த்துச் சமாளிச்சிக்கிட்டு வந்த ஆத்தா மீனாச்சியும் அதோட வைராக்கியத் தங்கமான பூரணியும் எந்தப் பாவியோ குடிசையிலே வச்ச நெருப்பிலே எரிஞ்சு வெந்து, சாம்பலாகிப் போயிட்டாங்களே ?...ஐயையோ, நினைச்சாலே நெஞ்சு வெடிச்சிடும் போலிருக்குதே ?

காந்தி ⁘ (ஆத்திரமாக) ஊருக்கு ஒசந்த பெரிய மனுசங்களாய்ப் பகல்வேசம் போட்டுத் திரிஞ்சுக்கிட்டு இருக்கிற மோசக்கார ஆளுங்களைத்தானே கையும் களவுமாகப் பிடிச்சு, காளி தண்டிசிருக்க வேணும் ?

மங்காத்தா ⁘ தெய்வம் நின்னு கொல்லும்னு சொல்லுவாங்க; அதுகூட பொய்தான் ! ஏன்னா, இப்ப மனுசங்க தான் நின்னு கொன்னுப் போட்டிருக்காங்க ஆத்தாளையும் மகளையும் ! குடிசையும் குடிசைக்குள்ளாற இருந்த மீனாட்சியும் பூரணியும் நெருப்புக்குப் பலியாகி எம்மாம்பொழுது ஆயிடுச்சு ? — யாராச்சும் நல்ல மனுசங்க வந்தாங்களா இந்தப் பக்கம் ?...

சாம்பான் ⁘ (தீவிரமாக) இந்த அநீதியைச் சும்மா விட்டுப்புட ஏலாது !

காமராஜ் ⁘ (உறுதியுடன்) மெய்தான் !—யாராச்சும் அறந்தாங்கிக்கு ஓடிப் போய், தாணாவிலே இந்த இடுசாமச் சங்கதியைப் பத்தி கால் கடுதாசி எழுதிக் கொடுத்துப்பிடவேணும். அப்பத்தான் நீதியாச்சம், மீனாட்சி பூரணி கணக்கிலே

செத்துப் போயிடாமல், உயிர் பிழைக்க வாய்க்கும் !

நேரு : (அழுதவாறு) பாவப்பட்ட ஜென்மங்களுக்குப் பச்சாதாபப்பட ஒரு காந்திச் சாமி கூட இல்லாமல் போயிட்ட காலம் கெட்ட கலிகாலமாக ஆயிடுச்சே?

மங்காத்தா : (ஓலமிட்டு) ஊம் ! சேரித் தலைக்கட்டுப் புள்ளிங்க மூணு பேர் இப்பவே அறந்தாங்கித் தாணாவுக்கு ஓடிப் போய், புகார் மனு கொடுத்திட்டு ஓடியாங்க !...

சேரி மக்கள், கிழவி மங்கத்தாவின் ஆலோசனையை ஏகோபித்த குரலெடுத்து ஆமோதிக்கவே, சாம்பான், காமராஜ், மூக்கன் ஆகியோர் 'லேஞ்சை' முண்டாசு கட்டிக் கொண்டு கிளம்புகிறார்கள்.

பிறகுதான், பூவை மாநகர் ஊராட்சித் தலைவர் சுப்பையா செட்டியாரும், மாங்குடி நாட்டாண்மைக்காரர் ஆவுடை அம்பலமும், பூவத்தக்குடி கிராம அதிகாரி ராமசாமி ஐயரும் மேல் மட்டக் கூட்டம் புடைசூழ 'ஜம்'மென்று நிதானமாக வந்து நிற்கிறார்கள்; அபலை மீனாட்சியின் குடிசை, கடைசி வரை அம்பலம் ஏறாமல் போய்விட்ட ஏழையின் சொல்லைப் போன்று, வெறும் மண்

ணுகக் காட்சியளித்த பயங்கரக் கோலத்தையும், அந்த ஏழைக் குடிசை, அநித்தியத்தின் நித்திய விதியைப் போலப் பிடி சாம்பலாக; சட்டத்திற்கும் நீதிக்கும் பிடி கொடுக்காத நிலையிலே காட்சியளித்த அநியாய அலங்கோலத்தையும் மங்கிய ஒளியிடையே பார்வை யிடுகின்றனர்!

சுப்பையா : பாவம், அநியாயமாய் ரெண்டு நல்ல ஜீவனை நெருப்புக்குக் காவு கொடுத்திட்டானே எவனோ ஒரு சமுதாயப் பாவி! தீ வச்ச மிருகம் யார் என்கிற தடயம் தெரிஞ்சால்தான், சட்டம் வாய் திறந்து பேச வாய்க்கும். இல்லாட்டி, நீதியும் காளி மாதிரி வாயடைச்சுக் கல்லாகத் தான் இருக்க நேரிடும்!—ஆனாலும், நீதியும் தெய்வமும் தூங்கிடாது!...நாம் முதல் அலுவலாய் இப்பவே அறந்தாங்கி போலீஸ் ஸ்டேஷனிலே இந்த அநியாயத்தைப் பற்றி எழுதி வச்சாக வேணும்!...

ராமசாமி : ஊம்; கிளம்புங்க!

ஆவுடை : ஊர்ப் பெரும் புள்ளியான சீமான் வையாபுரிச் சேர்வைகாரரையும் எதுக்கும் கலந்துக்கிட்டுப் போங்க!

சுப்பையா : நீங்க நடங்க, சாமி!

சேரி மக்களின் ஒருமித்த விம்மலின் ஓலம் எதிரொலிக்கிறது.

உடன் வந்த உயர்மட்ட இளவட்டங்கள், தாங்களே சமூகத்தின் அதிகார பூர்வ

மான பிரதிநிதிகள் என்ற நினைவில், ஆத்திரத்துடன் இடைமறிக்கின்றனர்!

முத்தையன் : நம்ம ஊர்ச் சுற்று வட்டத்தைப் பிடிச்ச நல்ல காலம், எண்ணிப் பதினறு வருசமாய் இந்த மாங்குடிக்கு அவமானச் சின்னமாய் இருந்துக்கிட்டு வந்த மீனட்சியோட, பாழத்த குடிசை, காளி அம்மனுக்கே பொறுக்காத காரணத் திறலேதான், இப்படித் தீக்கு இரையாகியிருக்குது!

தங்கராசன் : ஆமா, ஆமா! அவமானச் சின்னங்க ஆத்தா மகள் ரெண்டு பேரையும் உசிரோடவே அழிச்சு ஊரோட மானத்தைக் காப்பாற்றிட்ட அந்தப் புண்ணியவான் யார்னு தெரிஞ்சா, அவனுக்கு ஒரு கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் செஞ்சிடலாம்!

அச் சமயத்தில், கூட்டத்திலிருந்து ஆத்திரம் சூடு பறக்க, வைரமும் ராக்கம்மாவும் சோகமே உருவாக, ஜோடி சேர்ந்து வெளிப்படுகிறார்கள்!

வைரம் : (எரிச்சலோடு) பழி பாவத்துக்கு அஞ்சிப் பழகாத உங்களையெல்லாம் ஓசந்த குடியிலே ஏன் தான் காளி பிடிச்சுப் போட்டிருக்காளோ? நல்ல மனத்திறலேதானே மனுசங்க உயர்ந்தவங்க ஆக முடியும்? ஒரு பாவமும் அறிஞ்சிடாத இந்தச் சமுதாயப் பிரதிநிதிகளான மீனட்சி—பூரணி ரெண்டு பேரையும் வேணும்னே சதி பண்ணி நெருப்புக்குப் பலியாக்கிட்டு, போலிப் பெரிய மனுசனுக உலாவிக்கிட்டிருக்கிற சமூகக் குற்றவாளியை இனம் கண்டு தேடிப்பிடிச்சு

சட்டத்தின் கையிலே ஒப்படைக்க வேணுமே என்கிற சேவை உணர்ச்சி ரவைகூட இல்லாத நீங்க மனுச சென்மங்களேதானு? தூவே!... எங்க தோழர் புரட்சி முத்து ஊரிலே இருந் திருந்தால், இந் நேரம் பம்பரமாகச் சுற்றி, அந்தச் சமூகப் புல்லுருவியைக் கண்டு பிடிச்சு, இந்த முச்சந்தியிலே நிறுத்தி வச்சு, மூஞ்சி யிலே காறி உமிழ்ந்து பின்னி எறிஞ்சிருக்க மாட்டாரா?...செயல் வீரர் எங்க முத்துவை எந்த ரகசியப் பாவி காடு மாற்றிப்பிட்டாஞே என்னமோ, அது வேறே புரியலேயே?

ராக்கம்மா : (கவலையாக) வாங்க, டைமண்ட்! முதலிலே நம்ப முத்து அண்ணச்சியைத் தேடிக் கண்டு பிடிப்போம். அடிபட்ட பெரிய இடத்து நாய்ங்க குலைச்சிட்டுக் கிடக்கட்டும்!—உலகம் தான் இருட்டறையிலே தடுமாறுது!...சட்டம் ஒண்ணும் இருட்டறை இல்லே!...ஆமா!

வைரம் : (தேம்பியபடி) மிஸ்டர் பிரசிடெண்ட்!...பஞ் சாயத்துத் தலைவர் ஐயா! ம்...பாவத்துக் கூலி கொடுக்கக் கிளம்புங்க! அப்பத்தான், தெய்வங் களாகிட்ட மீனுட்சி—பூரணி ரெண்டு பேரோட ஆவி உங்களை வாழ்த்தும்! வாழ்விக்கும்!

ஊராட்சித் தலைவர் புறப்பட, அவரைத் தொடர்கிருர் ராமசாமி.

அவர்கள் செல்லும் திசைக்குக் கை கூப்புகிருர்கள் சேரி மக்கள்!

வைரமும் ராக்கம்மாவும் புதுமைச் சேவகன் முத்துவைத் தேடிப் புறப்படுகிறார்கள் !

சோகம் மீண்டும் 'லயம்' கூட்டுகிறது.

ஆனால்—

விதியும் வினையும் அதனதன் போக்கிலே ஒன்றுக்கொன்று 'சவால்' ஆகி, விளையாட்டுக் கேந்திரத்தைக் 'குறி' வைத்து, ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு கள்ளச் சிரிப்புடன் ஓடிக்கொண்டிருக்கின்றன !...

திரை

காட்சி: 35

வையாபுரியின் பெரிய வீடு; உதயவேளை.

சீமான் வையாபுரி தன் ஜன்ம எதிரிகளான மீனாட்சியும் பூரணியும் பிடி சாம்பலாகப் போய் விட்ட 'நல்ல சேதி' யைக் கேட்ட களிப்பில் சற்றே கண்ணயர்ந்து விட்டார். துயில் கலைந்து எழுந்ததும், முத்துவை மாப்பிள்ளைக் கோலத்தில் இன்னமும் மைத்துனர் அருணாசலம் அழைத்து வரக் காணோமே என்ற பீதி எழுந்தது. குழப்பத்துடன் அங்குமிங்கும் முகப்பில் சுற்றிக் கொண்டிருந்தவர், மகள் பவளக் கொடியைச் சமாதானப் படுத்தப் பயந்த நிலையில், மகளின் அறைக் கதவு 'நல்ல படியாக' அடைத்திருக்கக் கண்ட நிம்மதியுடன் முகப்புக்குத் திரும்புகிறார்.

அப்போது, உடன் பிறந்தாள் பொன்னம்மா மாத்திரம் தலைவிரி கோலமாக வந்து நிற்கிறாள்!

வையாபுரி : அக்கா, மாப்பிள்ளை முத்து எங்கே?

பொன்னம்மா : அதைக் கேட்கிறதுக்குத் தானே தம்பியை நாடி ஓடியாந்தேன்!

வையாபுரி : எனக்கென்ன தெரியும், பொன்னம்மா அக்கா?

பொன்னம்மா : தம்பிக்குத் தெரியாமல் இந்த ஊர்ப் பக்கம் கேவலம் ஒரு காக்காய் கூட கரைய முடியாதே?

வையாபுரி : முத்து மாப்பிள்ளையைக் கருக்கலோட அழைச்சிட்டு வந்திடுறதாகச் சொல்லிப் போனார் மச்சான்! நானும் நம்பி, மாப்பிள்ளையை ஆசையாக எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன்!—அது சரி; மச்சான் எங்கேயாம்?

பொன்னம்மா : அவுக மகனைத் தேடிக்கிட்டுப் போனவங்க தான்!...இன்னம் திரும்பக் காணோம்!

வையாபுரி : அட, பாவமே!...

பொன்னம்மா : (அனுதாபம்) அந்தப் பாவச் சங்கதி தம்பிக்கு நிச்சயம் எட்டியிருக்க வேணுமே?

வையாபுரி : (சாமர்த்தியம்) என்னவாம் அது?

பொன்னம்மா : (வருத்தம்) தம்பியை இம்மாங் காலமாய் காளி ஆத்தாளாக நின்னு ராவும் பகலும் சோதிச்சுக்கிட்டு வந்த மீனாட்சியோட குடிசைக்கு எந்தக் கல் நெஞ்சுப் பாவியோ பின் சாமத்திலே நெருப்பு மூட்டி, அந்த நெருப்பிலே தாயும் பொண்ணும் தூக்கத்தோடு தூக்கமாய்ப் பொசுங்கிப் பிடி சாம்பலாகிட்டாங்களாம், பாவம்!...

வையாபுரி : (களிப்புடன்) அப்படியா? பலே, பலே!

பொன்னம்மா : (திகைப்பு) தம்பியோட நம்பகமான கையாளான வேலன் கூடவா இந்தப் பாவச் சேதியை இந் நேரத்துக்குச் சொல்லலே?

வையாபுரி : (அதிர்ச்சி) ஊகூம் !...

பொன்னம்மா : (மலைப்பு) அதிசயமா யிருக்குதே?

வையாபுரி : (சாதுர்யம்) உன் தம்பி மகா அரிச்சந்திரன் என்கிற சத்தியம் இப்பவாச்சும் உன் மனசுக்குப் பட்டிருக்கும் !...சபாசு !... அந்தக் காளி சிலைக்கு இந்த வாட்டி உண்மையான பக்தியோடவே ஆடு வெட்டிப் பள்ளயம் படைச்சுப்புட வேண்டியதுதான் !...

பொன்னம்மா : (விசனம்) தம்பிக்கு இன்னமும் என்னோட கஷ்டம் புரியலையே?

வையாபுரி : (நிதானம்) அக்கா !...

பொன்னம்மா : (நப்பாசை) மகன் ஒரு சமயம் இங்கிட்டு நம்ப பவளத்தைத் தேடி வந்திருக்கலாமோன்னுதான் ஆசையாய் ஓடியாந்தேன்' ஆமா, பவளம் எங்கேயாம்?

வையாபுரி : (சாகசம்) அன்பான அத்தான் முத்து, தீட்டின திட்டப்படி, இன்னமும் மணக் கோலத்தோடு வரக் காணோமே என்கிற மனக் குமைச்சலிலே, கோபமாய்க் கதவை அடைச்சுக்கிட்டு உள்ளாற, அதோட தனி அறையிலேயே கிடக்குது, அக்கா !

பொன்னம்மா : (ஓலம்) ஐயையோ, தெய்வமே ! அப்பமடன்று, நான் ஐயம் கொண்டாப்பிலே, அந்த

மீனுட்சி—பூரணியோடே என் தங்க மகன் முத்துவும் தீக்குத்தான் பலியாகி இருக்க வேணும் போலே !...ஐயையோ, மகனே முத்து !...

பெற்ற வயிற்றிலே அடித்துக் கொண்டு கதறியபடி அங்கிருந்து ஓடுகிருள் பொன்னம்மா.

வையாபுரி பிரமை பிடித்தவராக நின்று விடுகிருர்; பின்னர் அவசரம் அவசரமாக அருமை மகளது அறையை அடைந்து, 'தட தட'வென்று கதவைத் தட்டுகிருர்; அலட்டுகிருர். பிறகு, கதவின் சாவித் துவாரத்தைத் தேடிப் பிடித்து, அந்த இடுக்கின் வழியாக உள்ளே பார்க்கிருர்: தீயை மிதித்துவிட்ட பாவனையில் துடிக் கிருர் !

உள்ளே, பவளக் கொடியைக் காண வில்லை !...

இசை அதிர்கிறது !

கதவு பத்திரமாகப் பூட்டப்பட்டி ருந்த துப்பும் அப்போது தான் அவருக் குப் புலனுகிறது !—இதுவரை அனுப வித்தறியாத புதிய பயம் பல்வேறு வடி வில் விசுவரூபம் எடுக்கத் தொடங்கி விடுகின்றது !

வையாபுரி ៖ (தன்னை மறந்து) ஐயையோ, மகளே !... தீக்கிரையான அந்தக் குடிசையிலே, மூணு பேரோடே நாலாவதாக நீயும் ஒருவேளை அந்தத் தீக்கு இரையாகிப் போயிருப்பியோ? அடி, பாழும் காளியே !—பதினாறு வருஷம் பொறுத்திருந்த நீ, கடைசியிலே என்னைப் பழிக்குப் பழி வாங்கிறதுக்காக, என் மகளையே பலி வாங்கியிருப்பியோ, என்னமோ?...ஐயோ, மகளே பவளம் !...

காளி மாதிரி சிலையாகி விடுகிறார் சிங்கப் பூர்ச் சீமான் வையாபுரிச் சேர்வை; கண் ணீர் காட்டாற்று வெள்ளமாகப் பெருகு கிறது; அருமை மகளைத் தேடிப் புறப் படுகிறார் !

திகிலின் கொடுமையைத் தாங்காமல் பின்னணி இசை நெஞ்சைப் பிடித்துக் கொண்டு வீரிடுகிறது !

காட்சி: 36

காளிகோயில்; இளங்காலை.

அறம் வளர்த்து, அன்பு பேணி, நீதி காத்து; பூதலத்தின் திக்கனைத்தும் பரி பாலனம் செய்து கொண்டிருக்கும் அகில லோக நாயகியாம் காளி அம்மன் திருச் சந்நிதி !

உதயப் பூ மடலவிழ்ந்து புன்னகையுடன் மணம் பரப்பத் தொடங்கும் வேளை.

தேர்த் திருவிழாக் கூட்டமென, ஊர் மக்கள் ஆண்களும் பெண்களுமாகக் கூடிக் கொண்டிருக்கின்றனர்.

ஓர் ஓரத்திலே, அரச மரத்தடியில் சேரி மக்கள் கால் கடுக்க ஒதுங்கி நின்று கொண்டிருக்கின்றனர் !

கன்னி கழியாப் பூஞ்சிட்டு பவளக்கொடி உணர்ச்சி வசப்பட்ட கோலம் ஏந்தி வேர்க்க விறு விறுக்க அம்மன் சந்நிதா

ணத்திலே வந்து நின்று மனம் இருத்திக் கைதொழுகின்ருள்! சுடுநீர், பூத்தூற லாக நயனங்களினின்றும் சிதறிச் சிந்திச்கொண்டே யிருக்கிறது.

பவளக்கொடி ः (மெய்ம்மறந்து) ஆத்தா பெரியவளே, காளி ஆத்தா! பதினறு வருசத்துக்கு முத்தி ஒரு புனிதமான தர்ம கைங்கரியத்துக்குச் சாட்சி யாய் நின்ன புண்ணியவதி நீ! பதினறு வருச மாய் நீ ஆடிக்கிட்டிருக்கிற இந்தக் கண்ணு மூச்சி விளையாட்டை நல்லபடியாக முடிச்சு வைக்க இன்னமுமா உனக்கு மனசு வரல்லே?—கல்லாக இருந்து ஆடினது போதும்; கல் லாகி ஆட்டி வச்சதும் போதும்!—கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிருக்கும் படியளக்கும் தெய்வத்தாய் நீ!—இந்த நியதியை மறந் திடாதே, ஆத்தா! தருமத்தைக் கவ்வியிருக்கிற சூதை விலக்கி, தருமத்தை நிலை நாட்டும் வேளை வந்திடுச்சு; கல்லை உடைச்சுக்கிட்டுக் காளியாக வெளியே ஓடிவர மாட்டியாடி, மூத்த வளே, காளியே?

வழிந்த விழி நீரை வழித்து விடக் கூடச் சிந்தை இழந்தவளாக, கசிந்து கொண்டேயிருந்த நெஞ்சின் ஈரம் உருகிச் சிலிர்த்துப் பொலிய, நீர்த் திரை யிட்ட விழிகளால் தெய்வத்தாய் காளியை ஊடுருவுகிருள் பவளம்.

இப்போதும், அந்த மாகாளி, சிருஷ்டி யின் விடுகதையாக ஒரு புதிர்ச்

சிரிப்பை விளையாடவிட்டவளாகவே தரிசனம் கொடுத்துக் கொண்டிருக்கின்ருள் !...

பவளக்கொடி ஆனந்தக் கண்ணீரை ஆனந்தமாகத் துடைத்த வண்ணம், வண்ணச் சீரடி பதித்து, சந்நிதியின் நிலைப்படியை மிதிக்கிருள்; சுற்றிச் சூழ உற்று நோக்குகிருள்.

ஒருபுறம் செண்பகம் — மாணிக்கம் தம்பதியும், மறுபுறம் வைரம்—ராக்கம்மா இணையும் ஓடி வந்து நிற்கிருர்கள்.

பவளக்கொடி : (குதூகலத்துடன்) அக்கா ! ... பூரணி அக்கா !...

காளி கோயிலின் உட்பிரகாரத்திலிருந்து பூரணி மாலையும் கழுத்துமாக, மஞ்சள் தாலி நல் விதியாகச் சிரிக்க, நெற்றிப் பொட்டு வெல்லப்பட்ட நல்வினையாகச் சிலிர்க்க, வெளிப்படுகின்ருள் !...

பூரணி : (நாணத்தோடு) அத்தான் ! ... அத்தான் ! ...

முத்து, மணமாலை கம்பீரமான ஆண்மையுடன் பளிச்சிட்டு மணத்திட, புரட்சிச் செயல் வீரணுகவும், சமுதாயச் சீர்திருத்தச் செம்மலாகவும் தோன்றுகின்ருன் !...

முத்து : (மகிழ்ச்சிப் பெருக்குடன்) அத்தை! அத்தை!...

உலகாளும் காளியே இந்த மண்ணிலே பெண்மையின் அவதாரம் பூண்டால் போன்று, பூவும் பொட்டும் நலுங்கு பாட, மஞ்சளும் மங்கலத் தாலிச் சரடும் சோபனம் கொட்ட நடந்து வந்து, தலையை மெல்ல மெல்ல நிமிர்த்திய வாறு, வாசல் தளத்தில் வெற்றித் தலைவியாக நிற்கிறாள் அபலை மீனாட்சி!

பவளக்கொடி : (வீரிட்டு) பெரியத்தா!...பெரியாத்தா!...

மீனாட்சியின் காலடியில் உணர்ச்சி வசப்பட்டவளாக அப்படியே விழுந்து வணங்குகிறாள் பவளக்கொடி—சிங்கப் பூர்ச் சீமான் வையாபுரிச் சேர்வையின் செல்வக்குமரி பவளக்கொடி!

மீனாட்சி : (விம்மி வெடிக்க) மகளே...பவளம்!...

எல்லை கோல இயலாத பாசத்தோடும், வேலி போட முடியாத அன்புடனும் பவளக்கொடியைத் தூக்கி நிறுத்தி அப் படியே வாரியணைத்து மகிழ்ச்சிக் கண்ணீர் வடிக்கிறாள் அபலை மீனாட்சி!

பவளம் செருமிக் கொண்டிருக்கிறாள்!...

சேரி மக்கள் வானத்துக்கும் பூமிக்கு மாகக் குதித்துக் கும்மாளமிட்டபடி, சந்நிதியை நெருங்கி விடுகிறார்கள் !

முற்றிலும் எதிர்பாராத இந்த அதிசயத் திருவிளையாடலைக் கண்டு ஊர் மக்கள் பிரமை தட்டி நின்று விடுகின்றனர். நல்ல உள்ளங்கள் ஆனந்தக் கடலாட, தீய மனங்கள் அவமானம் தாளாமல் குமைகின்றன !...

பூரணி : (பாசத்துடன்) தங்கச்சி, தங்கச்சி !...செருமாதே, தங்கச்சி !...

பவளக்கொடியின் கண்ணீர் முத்தங்களைத் தன்னுடைய தாலிக் கூறைப் பட்டின் முன்றானையைக் கொய்து முடிகிறாள் பூரணி.

அப்போது—

அருணாசலச் சேர்வையும் பொன்னம்மாவும் குடல் தெறிக்க ஓடி வந்து, அப்படியே வாயடைத்து நின்று விடுகின்றனர்.

ஊர் நாட்டாண்மை ஆவுடை அம்பலம் பாவம், கால் தடுக்கி விழுந்தார்; பாவம், தட்டுத் தடுமாறி எழுந்தும் விட்டார் !

மீனாட்சி : (செருமலுடன்) ஆத்தாளே பவளம் !...பாவத்துக்கு நடுவிலே கண் திறந்த புண்ணியம் கணக்கிலே நீ நின்னு. உன் அன்பான அத்தான் மூலம், என்னையும் என் மகள் பூரணியையும்—ஆமா, உன் அக்கா பூரணியையும் சாவின் பிடியிலேருந்து கட்டிக் காத்துக் காப்பாற்றிட்டே !—அந்தப் புண்ணியத்துக்கு நன்னி சொல்ல, கட்டாயம் உன் வயிற்றிலேயே வந்து ஜனிச்சிடுவேன், மகளே !...

கூப்பிய கரங்களுடன் மெய்ம்மறந்து நிற்கிறாள் பவளம் !

முத்து : (நிறைவுடன்) அம்மான் மகளே பவளம் ! ஒரு பாவமும் செஞ்சறியாத இரண்டு ஜீவன்களை உயிரோட காப்பாற்றிட்ட உன் நல்ல மனத்துக்குக் காளி மகமாயி நிச்சயமாய் நல்ல வழியைக் காட்டிடுவாள் ! மீனாட்சி அத்தையையும் பூரணியையும் குடிசைக்கு நெருப்பு வச்சுக் கூண்டோட கைலாசத்துக்கு அனுப்பிட வேணும்னு நடந்த அந்தப் பயங்கரச் சதித் திட்டத்தை உளவறிஞ்சு தெரிஞ்சுக்கிட்டதும், பின் சாமத்தையும் அசட்டை செஞ்சிட்டு, நீ என்னைத் தேடி ஓடியாந்து விஷயத்தைச் சொன்னாய் !—அப்பவே, நான் தலைதெறிக்க குடிசைக்கு ஓடி, கண் மூடிக் கண் திறக்கிறதுக்குள்ளே, மீனாட்சி அத்தை—பூரணி ரெண்டு பேரையும் வெகு ரகசியமாகக் காளி கோயில் உட்பிரகாரத்திலே கொண்டு போய்ச் சேர்த்தேன் ! விடிகிற மட்டுக்கும் அந்தக் காளிதான் எங்களுக்குக் காவல் இருந்தாள்; துணை இருந்தாள் !... ஆகா ! ஆத்தா விளையாட ஆரம்பிச்சிட்டா ! ஆரம்பிச்ச விளையாட்டுக்கு ஒரு முடிவு

ஏற்படுற வரையிலும் இனி அவள் சும்மாவே இருக்க மாட்டாள் !

பவளக்கொடி : (எழுச்சியுடன்) மெய்தானுங்க ! — காளி நல்லவங்களுக்கு நல்லவள் !—பொல்லாதவங்களுக்குப் பொல்லாதவள் !...

கசிந்து உருகிக் கொண்டே யிருந்த ஈரத்தை உலர விடாமல் நிற்கும் மீனாட்சி, வெற்றிப் பெருமிதத்துடனும் வீரப் பெருமையுடனும் மகளையும் மாப்பிள்ளையையும் பார்வை யிடுகிறாள் !

அவிழ்ந்து தொங்கி, இளங்காலைப் பொழுதின் மெல்லிய பூங்காற்றில் ஊசலாடிய மீனாட்சியின் தலை முடிகளை அள்ளி முடித்து முடிபோட பவளக்கொடி முயல்கிறாள், பதட்டத்துடன் தடுக்கும் மீனாட்சி, பவளக்கொடியின் கண்ணீரைத் துடைத்து விடுகிறாள் !

இப்போது, பவளமும் கூட்டத்தோடு கூட்டமாக மலைத்து நிற்கிறாள் !

மீனாட்சி : மகளே பூரணி !... நீயும் உன் நேச மச்சானும் ஒரே மனசாக ஆத்தாளைச் சேவிச்சுக்கிடுங்க ! ஆத்தா காளி என்னைத்தான் சோதிப்பா !— உங்க ரெண்டு பேரையும் எப்பவும் நல்லபடியாக வாழ்த்திக்கிட்டே இருப்பாளாக்கும் ! காளியை எனக்குப் புரியாதா?—சரி, ரெண்டு பேரும் ஆத்தாளுக்குக் கும்பிடு போடுங்க !...

முத்துவும் பூரணியும் ஒன்றிய உள்ளங்களோடு—ஒன்றுபட்ட உள்ளங்களோடு தேவியை வணங்குகின்றனர்!

ஆனந்தப் பரவசம், அமுதக் கலசத்தின் தேவாமிர்தத் துளிகளாகச் சிந்திக் கொண்டிருக்கின்றது!

மணக்கோலம் ஏந்தி நின்ற அருமை மகள் பூரணியையும் அன்பு மாப்பிள்ளை முத்துவையும் நெஞ்சம் நெருக்குருகப் பார்த்துக் கொண்டே யிருந்த மீனாட்சியின் பாசம் அத்தனையும் கண்ணீராக உருகி வழிந்து ஆடிப்புனலாக ஓடிக் கொண்டிருக்கிறது!...

மீனாட்சி : (நிதானமாக) தை மாச வெக்கை தலைக்குக் கேடுன்னு பேசுறது உண்டு. மாப்பிள்ளை, பொண்ணுக எல்லாரும் அந்தப் பக்கம் வேப்ப மர நிழலிலே போய்ச் சிலாக்கியமாய் குந்திக் கிடுங்களேன்!...(உள்ளே பார்த்து விட்டு) ஆத்தாடி! பாவம், காளியாத்தா இருட்டிலே திண்டாடப் போறாள்!...நான் கர்ப்பக் கிரகம் வரை போய், அவளோட தூண்டாமணி விளக்கைப் பொருதித் தூண்டி விட்டேன்னு, ஆத்தாளுக்கு வெளிச்சம் கிடைக்கும். அப்பறந்தான் என் நெஞ்சுக்கு நீதியும் அந்த நீதிக்கு ஒரு வெளிச்சமும் கிடைக்க வாய்க்கும்!

மூன்று இதயங்கள் இனம் விளங்காமல், துணுக்குறுகின்றன!...

மீனுட்சி கருவறைக்குள் அடியெடுத்து வைக்கிருள் !

அகில லோக நாயகியான காளியின் புதிர்ச்சிரிப்பை எடுத்துக் காட்டவோ என்னவோ, தூண்டாமணி இப்போது மிகுந்த ஒளியுடன் எரியத் தலைப்படு கிறது !

மறுகணம்—

தீ நாக்குகள் ஜ்வாலையுடன் கோவிலுக்கு வெளியே விரவிப் பரவி நீண்டு சிதறு கின்றன !

பூரணியும் பவளமும் பதறித் துடித்துப் பதை பதைக்கிருர்கள் !

முத்து தவித்துத் துடிக்கிருன் !

பூரணி : (அலறித்துடித்து) ஐயையோ ! ஆத்தா மேலே நெருப்புப் பிடிச்சு எரிஞ்சுக்கிட்டு இருக்குதே? ஆத்தா, ஆத்தா ! வா, வெளியே ! வந்திடு இங்கிட்டு !...ஐயோ, தீ கொழுந்து விட்டு எரியுதே?...என் சீதேவித் தாயே ! வெளியே ஓடியாந்திடு !...

முத்து : (உருகித் தவித்து) அத்தை, ஓடியாந்திடுங்க வெளியே ! அப்பத்தான் நெருப்பை அணேக்க வாட்டப்படும் ! ம்...ஓடியாங்க...அத்தை !...

பவளக்கொடி : (கதறிப் புலம்பி) பெரியத்தா! வெளிப் பக்கம் ஓடி வந்திடுங்க!...பெரியாத்தா! பெரியத்தா!...

நிற்காமல் நிலைக்காமல் உள்ளே பாயும் பவளக்கொடி, எரிந்து கொண்டிருந்த மீனாட்சிப் பெரிய தாயாரின புடவைக்குத் தாவிய தன் கைகளைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு, மீனாட்சியின் தெய்வ மணிக் கரங்களைப் பற்றி இழுந்துக் கொண்டு, தீயோடு தீயாக வெளியேறி வந்து நிற்கிறாள் பவளக் கொடி.

முத்துவுடன் நல்லவர்கள் சிலரும் தீயை அணைக்க ஆயத்தம் செய்கிறார்கள்.

அபலை மீனாட்சி தடுத்து விடுகிறாள்!... சேலையிலே எரிந்த தீ, ரவிக்கையில் பற்ற ஆரம்பிக்கிறது!...

'மனித ஜாதி' பரபரப்பு அடைந்து, அதிர்ச்சி அடைகிறது!

மங்காத்தா : (கும்பிட்டுக் கூவி) ஆத்தாளே மீனாட்சி! நெருப்புக் கங்குகட்டி எரியுது; அந்த நெருப்பை அணைச்சுப்பிடட்டும்; உத்தரவு கொடு, மீனாட்சி ஆத்தாளே!

பூரணி : (கைகூப்பிப் புலம்பி) எண்ணிப் பதினாறு வருசமாய் ஆத்தாளோட அடிவயிற்றிலே பற்றி

எரிஞ்ச தீ, இப்ப ஆத்தாளோட மேனியிலேயே பற்றி எரிஞ்சுக்கிட்டிருக்குதே? அடி பாவியே; காளி! இன்னமும் கல்லாகவே இருக்க உனக்கு எப்படித்தான் மனசு வந்திச்சோ?... ஆத்தா, என்னைப் பெற்ற ஆத்தாளே, மகராசியே!... தீயை அணைச்சுப்புட அனுமதி கொடு!... நம்பளைக் குடிசையோடவே நெருப்பு மூட்டிப் பொசுக்கிப்பிட கண்ணு கண்ட ஈனச் சாதிக்குப் பாடம் படிச்சுக் கொடுக்கத்தான், இப்ப நீயே உனக்குத் தீ மூட்டிக்கிட்டு வைராக்கியச் சிலையாய் நின்னுக்கிட்டிருக்கியா?— ஐயையோ, ஆத்தாளே!...

மீனாட்சியின் சந்நிதியில் விழுந்து புரள்கிறாள் பூரணி.

முத்து : (கைதொழுது) அயித்தை!... நெருப்பை மூத்துப்பிட உத்தரவு கொடுக்க மாட்டீங்களா?

பவளக்கொடி : (துடிதுடித்து) பெரியாத்தா! — காளி கல்லாகவே ஆகிட்டதாலேதான், இப்ப நீங்களே காளியாக ஆகிட்டீங்களா? ஐயோ, எங்க தெய்வமே!...மீனாட்சிப் பெரியாத்தா!...

மீனாட்சி சிரிக்கிறாள்!—பத்ரகாளியாகச் சிரிக்கிறாள்!...

மீனாட்சி : (கோபச் சிரிப்புடன்) எனக்கு நானே வச்சுக்கிட்ட இந்தப் பரிசுத்தமான நெருப்பை யாருமே அணைக்கப்படாது!— இது என் ஆணை!— இந்தப் புனிதமான தீயை யாராலுமே இனிமேல் அணைச்சுப்பிடவும் ஏலாது! (தீக்குள் விரலை வைத்துத் தாலியை எடுத்துக்

காட்டி) இந்தக் காளியைச் சாட்சிக்கு வச்சு, வள்ளிசாகப் பதினறு வருஷத்துக்கு முந்தி ஒரு ராவுப் பொழுதிலே நான் இத்தப் பவித்திரத் தாலியை மனசொப்பி ஏத்திக்கிட்டேன்!—ஆனு இந்தத் தாலிக்குச் சாட்சி சொல்ல, தாலிகட்டின என்னுேட புண்ணியவானும் இதுவரை முன் வரல்லே !— நான் தாலி கட்டிக்கிட்டதுக்குச் சாட்சியாய் இருந்த இந்தக் காளியும் அப்ப இருந்த மாதிரியே இப்பவும் வெறும் கல்லா கவே இருக்கிருள் !... என்னுேட கழுத்துத் தாலிக்கு நானேதான் சாட்சி ! என்னுேட தூய்மைக்குச் சாட்சி சொல்லத்தான் இதோ, தீ பற்றி எரிஞ்சுக்கிட்டிருக்குது !... நான் அன்பைப் பிச்சையாகக் கேட்டேன் !— அந்த அன்பை எனக்குத் தாலி கொடுத்த என் மகராசனும் கொடுக்க மறுத்திட்டார்; என் தாலிக்குச் சாட்சி நின்ன காளியும் அந்த அன்பை வழங்கல்லே ! — அதனலே, அந்த அன்பை இதோ, நானே எனக்கு வாரிவாரி வழங்கிக்கிட்டு இருக்கேன் !... இப்பவும் சொல் லிப்பிடுகிறேன் !— கல் இல்லே காளி ! காளி கல்லே இல்லே ! காளி, காளிதான் !—காளியே தான் !... சீதாப்பிராட்டி அண்ணைக்கு ராம பிரானுக்காகவும் ஊர் உலகத்துக்காகவும் தீக் குளிச்சு, தான் கற்பின் கொழுந்து என்கிற சத்தியத்தையும் உண்மையையும் நீதியையும் மெய்ப்பிச்சுக் காட்டினள் !—நான் இண்ணைக்கு இந்த ஊர் சமுதயாயத்துக்கு மட்டுமில்லாமல், எனக்காகவும் அக்கினிப்பிரவேசம் செஞ்சுக் கிட்டு இருக்கேன் !... காளி வெறும் கல் இல்லே என்கிற மெய்ச்சத்தியத்தை—மெய்யான தரு மத்தை இனியாச்சும் இந்த ஊர்ச் சமுதாயம் மானபிமானத்தோட உணர்ந்துகிடட்டும் !...

அபலை மீனாட்சி 'சிரித்துப் புரம் எரித்த ஈசன்' மாதிரி ஆண்மைக் கம்பீரத்தோடு சிரித்துக் கொண்டே யிருக்கிறாள் !...

மாகாளியோ, மீனாட்சியைப் போலே, அறக் கருணைக் குறுஞ் சிரிப்பை உமிழ்ந்து கொண்டே யிருக்கின்றாள் !...

அப்பொழுது :

சிங்கப்பூர்ச் சீமான் ஸ்ரீமான் வையாபுரிச் சேர்வைகாரர் பட்டு ஜிப்பாவும் ஜரிகை துப்பட்டாவும் குலுங்கிட, நெஞ்சைக் கெட்டியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டு, தலை தெறிக்க ஓடி வந்து, காளியின் சந்நிதியில் மேனி நடுங்க நின்று நாற்புறமும் நோக்குகிறார். செல்வப் புதல்வி பவளக்கொடியை உயிரோடு கண்டு அமைதியடைகிறார். முத்து—பூரணி ஜோடியை மணக் கோலத்தில் காணவும் தவறிவிட வில்லை !—அப்போதுதான், மீனாட்சி யிடம் போட்ட சபதத்தில் தோற்று விட்ட வினையின் விதி அவருக்குப் புரி கிறது !—நெஞ்சில் விளைந்த ரசாயன மாற்றத்தின் விளைவாகப், பயங்கரக் காட்டாற்றின் பேய் வெள்ளமாகச் சுடுநீர், பொங்கி வழிந்தோட, கைகளைக் கூப்பி, மௌனப் பிண்டமாகக் காளி யைக் கைதொழுகிறார் !...

மறுகணம்—

அந்தப் 'பெரிய மனிதர்', செந் தீயின் புனித வடிவமாகத் தரிசனம் தந்த அபலை மீனாட்சியின் கழலடியிலே நெடுஞ்சாண் கிடையாகச் சாய்ந்து விடுகின்றார்!...

அருமைத் தந்தையின் நல்லதொரு மன மாற்றம் கண்டு அமைதி யடைகிறாள் பவளக்கொடி.

வையாபுரி: (கூக்குரலிட்டு) ஐயையோ, மீனாட்சி! என் தெய்வமே, மீனாட்சி!...

வையாபுரி தூண்டில் புழுவாகத் துடி துடிக்கிறார்!...

மீனாட்சி ஓங்காரமிட்டுச் சிரிக்கிறாள்! ...

தீயின் செந்நாக்குகளுக்கு மத்தியில் ஊசலாடிய மங்கலத் தாலியோடும், அவிழ்ந்த கூந்தலோடும், தொழுத கரங்களோடும் மெய்ம்மறந்த — மெய் யுணர்ந்த அதீதமான மோனப் பரவசத் துடன் காளியின் சிலை மாதிரி, மீனாட்சி ஆடாமல் அசையாமல் நின்றுகொண்டே யிருக்கிறாள்! அவளுடைய புனிதத் தாலிச் சரடு, தீக்கதிர்களுக்குப் பிடி கொடுக்காமலும், பிடிபடாமலும் கம்பீர

மாகப் புன்னகை செய்து கொண்டிருக் கிறது !...

வையாபுரி : (விம்மி வெடித்து) ஐயோ, மீனாட்சி ! உன்னோட புனிதத் தாலிக்குச் சாட்சி கேட்ட நானே அந்தப் புண்ணியத் தாலுக்குச் சாட்சி சொல்ல இதோ வந்திட்டேனே !... உன்னோட மேனி யிலே விளையாடிக்கிட்டிருக்கிற நெருப்பை அணைச்சுப்பிட மனசு இரங்கி, இனியாச்சும் உத்தரவு தா, தாயே !...

வையாபுரியின் அவல ஓலம் மண்ணை முட்டிக் கொண்டிருக்கிறது !

மீனாட்சியின் காளிச் சிரிப்பு விண்ணை மோதிக் கொண்டிருக்கிறது !...

வையாபுரி : (கைகூப்பிக் கதறி) மீனாட்சி ! என்னோட பாழும் நெஞ்சு வெடிச்சிடும் !— அப்படிச் சிரிக்காதே ! என் நெஞ்சு வெடிச்சிட்டா, அப்பாலே, நான் குற்றவாளியாகவேதான் செத்து மடிய நேர்ந் திடும் !—அதனாலே, நீ அப்படிச் சிரிக்காதே, தெய்வமே !...நான் செஞ்ச அநியாயப் பாவங் களுக்கெல்லாம் ஆத்தா காளிகிட்டே குற்ற முணர்ந்து 'மாப்பு' கேட்டு மன்னிப்பு வாங்கிக் கிட்டுத்தான் இப்ப உன் சந்நிதானத்திலே கூனிக் குறுகி நின்னுக்கிட்டிருக்கேன் !...... மீனாட்சி, என்ன அப்படிப் பார்க்கிறே ?—நான் வாழ்க்கையை ஒரு விளையாட்டாக நினைச்சு ஆடின ஆட்டத்தைக் கேட்டுக்கஃ பதினறு வருஷத்துக்கு முந்தின ஒரு ராவிலே, எட்டியத் தாளி அகிலாண்டேஸ்வரியோட ஐம்பொன்

சிலையை ரொம்ப ரொம்பச் சாமர்த்தியமாகத் திருடிக்கிட்டு வார வழியிலேதான், உன்னை தனது பண்ணி, உன்னை நம்ப வச்சு, உனக்கு இதே காளி சந்நதியிலே தாலியும் கட்டி, உன்னோடே அந்த ராத்திரி மட்டும் வாழ்ந் பொழுது விடிகிறதுக்குள்ளே பேயாட்டம் அக்கரைச்சீமைக்குக் கப்பலேறிப் பறிஞ்சேன்! அம்மன் சிலை திருடு போனதுக்கு நிரபராதி யான பூசாரியைச் சட்டம் தண்டிச்சுது; ஆனு, நான் தப்பிவிட்டேன். குற்றவாளியான என்னைத் தண்டிக்காமல் விட்டுப்புடுச்சு சட்டம்! —அந்த ஒரு துணிச்சலிலேதான், நான் வாழ்க்கையோட மட்டுமில்லாமல், காளியோட வும், கடைசியாக உன்னோடவும் விளையாடத் துணிஞ்சேன்! அதனுலேதான், உன்னோட குடிசைக்கு தீ வச்சு உன்னையும் மகள் பூரணி யையும் கூண்டோட கைலாசத்துக்கு அனுப்ப வும் பாடுபட்டேன். உன் குடிசை சாம்பலான சங்கதி தெரிஞ்சு அகங்காரத்தோடே ஆடிக் குதிச்சுக்கிட்டு இருக்கையிலேதான், என் மகளை அதோட அறையிலே காணுமல், ஒருவேளை, என் தங்கச் செல்வியும் உன்னைத் தேடி வத்து, அவளும் தீயோடு தீயாக எரிஞ்சு சாம்பலாகி யிருப்பாளோன்னு பதறி மகளைத் தேடிக்கிட்டு ஓடியாந்தேன்; என்னோட மகள் பவளத்தை உயிரோடு கண்டடியும்தான் எனக்கு சிருஷ்டியோட மகத்துவமே புரிஞ்சுது! மீனுட்சி, நீ உன் சவாலிலே ஜெலிச்சிட்டே!... நான் தோற்றுப் போயிட்டேன்!—அன்றைக்கு என் ஆசை மங்களத்தைச் சாகடிச்சு என்னைக் காளி பழி தீர்த்துக்கிட்ட ரகசியம், இப்ப உன் கிட்டே நான் தோற்றுப் போய் மண்ணைக் கவ் வின இந்த நேரத்திலேதான் எனக்கு விளங்

குது ; காளி கல்லே இல்லே!—அவள் காளி !... காளி, காளியேதான் ! நான் செஞ்ச பாவம் பழிக்கெல்லாம் இதுமட்டுக்கும் சட்டத்தோட தண்டனையை அனுபவிக்காமலே தப்பிச்சிட்டு, பெரிய மனுசனாய் வாழ்ந்துக்கிட்டிருந்த நான் இதோ, சட்டத்தை வலியத் தேடிப் போய்ச் சரணம் அடைஞ்சிடப் போறேன் !—நான் புத்தம் புதிய வையாபுரி ! புதிதாகப் பிறப் பெடுத்த—குற்றங்களை உணர்ந்து ஆத்தா ளோட மன்னிப்பை யாசிச்சு வாங்கிக்கிட்ட புதுமையான வையாபுரி நான் !—உன்னைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சி மன்றாடிக் கேட்டுக்கிறேன் ; உன்னோட புனிதமான மேனியிலே கண்ணு மூச்சு ஆடிக்கிட்டிருக்கிற அந்த நெருப்பை அணைச்சுப்பிடுறதுக்கு அனு மதி வழங்கு, மீனாட்சி...மீனாட்சி, நீ புனித மானவள் ! சத்தியமானவள் நீ ! நீ தர்மத்தின் சாட்சி !...நீ என் அன்பான மனைவி !... மீனாட்சி !...தெய்வமே மீனாட்சி !...மீனாட்சித் தாயே !...ஐயோ, அப்படிச் சிரிக்காதே ! காளிக்கும் மேம்பட்டு அப்படி நீ சிரிக்காதே !... ஐயையோ, தெய்வமே !...என் தெய்வமே ! என்னை—இந்தப் படுபாவியை நீ பெரிய மனசு வச்சு மன்னிக்க மாட்டியா?...ஐயோ, காளி !... ஐயோ, மீனாட்சி !...

பயங்கரமான இசை ஓட்டத்திற்கிடையே, தீயிடை அகப்பட்ட கூண்டுப் புழுவாகத் துடிதுடித்துக் கொண்டிருக்கிறார் சீமான் வையாபுரி !

பவளக்கொடி தவிக்கிறாள் !

முத்து பதைக்கிறன் !...

பூரணி கதறி உருகுகிறள் !. .உருகிக் கதறுகிறள் !...

ஜோதி வடிவமாகத் தரிசனம் தந்த அபலே மீனட்சியின் ஓங்காரச் சிரிப்பு விதியாகவும் வினையாகவும் உச்சமடைந்து ஒலிக்கிறது; எதிரொலிக்கிறது !...

ஆலவாய்த் திருநகரிலே நீதி விசாரணே நடத்திய பொற்பின் செல்வியாம் கண்ணகியாக உருக்கொண்டு, மாகாளித் தெய்வத்திடமே நீதிக்கு ஒரு விசாரணே நடத்தத் தலேப்படுகின்றள் அன்பின் செல்வி பூரணி !—அபலே மீனட்சியின் அன்புச் செல்வி பூரணி !...

பூரணி : (அலறிக் கதறி) ஐயையோ. காளியே !—என்னேட புண்ணியவதி ஆத்தா நெருப்பிலே வெந்துகிட்டுச் சாகிறதுக்காக ஏங்கித் தவிச்சு உருகிக்கிட்டிருக்குதே ?—உன் கண்ணுக்குத் தெரியலேயா, காளி? என்னேட தெய்வத்தாய் புனிதவதி என்கிற அந்தச் சத்தியத்துக்கு—தருமத்துக்கு — நீதிக்கு — உண்மைக்கு நீயும் சாட்சி சொல்ல வேண்டாமா?—ஊம், பேசு தாயே, பேசு !...வாய் திறந்து பேசு; மனம் திறந்து பேசு; சாட்சி சொல்லிப் பேசு; நீதி சொல்லிப் பேசடி, காளி !—இல்லாங்காட்டி, ஊரும் உலகமும் உன்னே வெறுங் கல்லாகவே

மதிச்சு, எங்காச்சும் பொட்டல் வெளிக் காட்டிலே அலக்காகத் தூக்கி வீசி எறிஞ்சுப்புட மாட்டாங்களா?—மானப் பிரச்னை ஆத்தாளுக்கும் மகளுக்கும் மட்டிலுந்தானா? தெய்வமான ஒனக்கும் பங்கு உண்டுதானே?...ஆனதாலே, பேசடி காளித் தெய்வமே, பேசு!...தலைக்கு மேலே வெள்ளம் பாய்ஞ்சுக்கிட்டு இருக்கிற இந்தச் சோதனையான சமயத்திலே இனியும் நீ வாயை மூடிக்கிட்டு மௌனம் சாதிச்சியோ, அப்பாலே, நான் உன்னைச் சும்மா விடமாட்டேன்!...ஆனதாலே, எங்களைப் படைச்ச நீ எங்களுக்காகப் பேச வேண்டிய வேளை வந்தாச்சு!—ஊம், பேசடி காளியே, பேசு!...

ஓங்காரமாக ஒலிக்கிறது பின்னணி இசை!

அப்போது:

வானத்தில் இடி ஓங்காரமிட்டு முழங்க, மின்னல் கீற்றுக்கள் வெட்டிப் பாய்ந்து சீற, சத்தியத்தின் ஒலியாகவும் தருமத்தின் ஒளியாகவும் மழை பொழிகிறது!...

பூரணி கரம் கூப்பி மகிழ்கின்றாள்!...

மீனாட்சி ஆனந்தப் பரவசத்தோடு சிரிக்கிறாள்; புதுப் பிறவி கொண்டவளாக, ஈரம் சொட்டச் சொட்டச் சிரிக்கிறாள்; அவிழ்ந்து கிடந்த கூந்தலை அள்ளிச் செருகி முடிந்து கொண்டு, வெற்றிப்

பெருமிதத்துடனும் வீரப் பெருமையுடனும் சிரிக்கிருள்; அகில லோக நாயகியை நமட்டுப் புன்னகையுடன் நோக்கிக் கரங்கூப்பித் தொழுத வண்ணம் சிரிக்கிருள் !...

புனிதத் தாலி, புனிதம் ஏந்திச் சிரிக்கிறது !,..

நெற்றித் திலகம் ரத்தமாகக் கரைந்து சிரிக்கிறது !...

கொண்டைப் பூச்சரம் கும்மாளமிட்டுச் சிரிக்கிறது !...

நெருப்பின் வடிவெடுத்துச் சிரித்த புண்ணியவதி மீனுட்சி, இப்போது நீரின் வடிவெடுத்து விண்ணும் மண்ணும் முழங்கிடச் சிரிக்கிருள் ; சிரித்துக் கொண்டே யிருக்கிருள் !...

மறுகணம் :

சௌபாக்கியவதி மீனுட்சி கழுத்தில் தவழ்ந்த மங்கலத் தாலியுடன் மண்ணிலே சாய்ந்து விடுகிருள் !...

முழங்கிக் கொண்டிருந்த ஆலயமணி 'சடக்'கென்று உயிர்த் துடிப்பை இழந்து விடுகிறது !

மறுபடி காலை வெய்யில் எரிக்கிறது!

சோகம் மீண்டும் சுருதி கூட்டுகிறது!

வையாபுரி : மீனாட்சி!...ஐயோ, மீனாட்சி!

பூரணி : ஐயையோ, ஆத்தாளே, எந் தெய்வமே!...

முத்து : அத்தை!...அத்தை!

பவளக்கொடி : பெரியாத்தா!...மீனாட்சிப் பெரியத்தா!...

ஓங்காரக் காளியாம் அகிலலோக நாயகியின் அன்புக் கண்களிலே இப்பொழுது முத்துக்கள் சரம் தொடுத்து விளையாடுகின்றன!...

ஆழ்ந்த சோகம் துயர இழை பின்னுகிறது!

ஊர்ச் சமுதாய மக்கள் அனைவரும் கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சி யளிக்கின்றனர்—இப்பொழுது.

கணங்கள் பேய்க் கணங்களாகத் தவழ்கின்றன!

அடுத்த இமைப்பில் :

சிங்கப்பூர்ச் சீமான் ஸ்ரீமான் வையாபுரிச் சேர்வை இப்போது ரத்தக் கண்ணீர் பெருகிட, விரக்தியின் வடிவெடுத்து,

ஒரு குற்றவாளியாக—மனச்சாட்சியின் குற்றவாளியாக, நீதியின் சட்டத்தைத் தேடிச் சரணடைய ஓடுகிருர்; இதுவரை யிலும் எந்தச் சட்டம்—எந்தச் சட்டத் தின் விதி தன்னை எட்டிப் பார்க்காம லேயே இருந்து விட்டதோ, அந்தச் சட் டத்தை—அந்தச் சட்டத்தின் நீதியை தானே வலியத் தேடிச் சரண் அடைய அதோ, திருந்திய மனிதராக—திருத்தப் பட்ட மனிதராக ஓடிக் கொண்டே யிருக்கின்ருர், சமுதாயக் குற்றவாளி வையாபுரி !...

படைப்பின் தத்துவமாக அமைந்த இயற்கை நிய யின் விந்தையான ஆனந்தச் சோகத்தைப் பின்னணி இசை உருவகப்படுத்திக் கொண்டிருக்கிறது !

ஓங்காரச் சொரூபிணியாய் நின்று அறம் காத்து, அறம் பேணும் கடன் பூணட காளித் தெய்வம் மீண்டும் சிரிக் கின்ருள் !...சிரித்துக் கொண்டே யிருக் கின்ருள் !...

சிருஷ்டியின் தர்மம் பற்றறுத்து, விதி யின் வினையாகவும், வினையின் விதியாக

வும் அந்தரங்கமாகச் சுழன்று கண்ணுமூச்சி ஆடிக் கொண்டிருக்கும் அலகிலா விளையாட்டை அமைதி கூட்டிப் பிரதி பலிக்கிறது. அழகான பின்னணி இசை.

“ வாழிய செந்தமிழ் ! வாழ்க நற்றமிழர் !
வாழிய பாரத மணித் திருநாடு !”

திரை

ஒரு
சொல்

சிருஷ்டியின் தத்துவத்துக்கு அபலை மீனாட்சி ஓர் அபூர்வ ராகமாக அமைந்து விட்டாள் அல்லவா? அந்த ராகம் சோகமயமானது தான்; ஆனாலும், சோகமும் ஓர் ஆறுதலாக வாழ்க்கையில் அமைந்து விடுவதுதான் வாழ்வின் விதியாக அமைகிறது. மீனாட்சி விதியின் நாயகி; விதிக்கும் நாயகி! — எல்லைகட்டும் யதார்த்த வாழ்வியலில், எல்லை கட்டாமல் விளையாடிவிட்ட புரட்சிப் பிறவி அவள்!—அவள் கதை புதிதல்லதான்!—ஆனால், அவள் நாடகம் புதியது! புதுமையானது!

'இதோ, ஒரு சீதாப்பிராட்டி!' நாடகத்தை மேடையிலோ அல்லது, திரையிலோ அறிமுகப் படுத்த விரும்பும் இலக்கிய ஆர்வலர்கள் என்னுடைய அனுமதியைப் பெற வேண்டும்; இது பண்பு சார்ந்த நெறி முறையுங்கூட!—இந்நாடகத்தை 'அதே கண்கள்' புகழ் வசந்த குமார் அவர்களுக்காக 1974-ம் ஆண்டின் தொடக்கத்திலே உருவாக்கினேன்.

பொதிகைப் பதிப்பகத்தின் உரிமையாளர் உயர்திரு பேராசிரியர் கணசிற்சபேசன் அவர்கள் இலக்கியச் செறிவும் இலக்கிய அழகும் மிளிர இந் நாடக நூலை வெளிப் படுத்தி யுள்ளார்; அவர்களது அன்பு பெரிதுந் தலை வணங்குகிறேன். புனையா ஓவியத்திற்கு ஓவியம் புனைந்த கவிஞர் உயர்திரு அமுதோன் அவர்களுக்கும், எழிலுற அச்சிட்டுத் தந்த 'கடவுள்' ஆசிரியர் உயர்திரு வி. இராமசாமி அவர்களுக்கும் எங்கள் நன்றி உரியது.

மெய்யான இலக்கிய ஆர்வலர்களாகிய உங் களது மெய்யான திறனாய்வுக் கருத்துக்களையும் ஆவலோடு எதிர்பார்க்கின்றேன். வணக்கம்.

பூவை எஸ். ஆறுமுகம்

—o★o—